பக்கங்கள்: முப்பத்து இரண்டு + II

# உதயன்

விலை ரூபா 20.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 சித்திரை 07 புதன்கிழமை (20.04.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 145



02
தொடர்கிறது டெல்லியின் சோகம்



16
காணாமற்போன கடற்படைச் சிப்பாய்கள்



19
வளங்கள் நிறைந்த காரைநகர்



24
ஈழத் தமிழருக்காக இளைஞன் தீக்குளித்து மரணம்

## இலங்கை மீதான போர்க் குற்றச்சாட்டுக்கள் பொஸ்னிய இனக்கொலைகளுக்கு ஒப்பானது



லண்டன், ஏப். 20

இலங்கையில் நடைபெற்றதாக குற்றஞ்சாட்டப்படும் போர்க் குற்றங்கள் சேர்பேனிக்கா இனப்படுகொலைகளுக்கு ஒப்பானது என்று தெரிவித்திருக்கிறார் ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான பேச்சாளராக முன்னர் பதவி வகித்த கோல்டன் வைஸ்.

பொஸ்னியாவில் சேர்பியர்களால் நடத்தப்பட்ட திட்டமிட்ட இனப்படுகொலையே சேர்பேனிக்கா படுகொலை என்று சொல்லப்படுகிறது. இதன்போது 7000 பேர் கொல்லப்பட்டிருந்தனர்.

ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகத்துக்கு ஆலோசனை வழங்கவென நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவினது அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கும் நம்பகத்தன்மை கொண்ட போர்க் குற்றச்சாட்டுக்கள் சேர்பேனிக்கா படுகொலைக்கு ஒப்பானவை என அவர் கூறினார்.

இலங்கை இராணுவமும் வான் படையும் பொது மக்களையும் (29 ஆம் பக்கம் பார்க்க)

# ஐ.நா. பாதுகாப்புச் சபையில் இலங்கை போர்க்குற்றங்கள்

### ரஷ்யா தொடர்ந்தும் கொழும்புக்கு ஆதரவு

நியூயோர்க், ஏப்ரல் 20

இலங்கையின் இறுதிப் போரில் போர்க் குற்றங்கள் நிழ்த் தப்பட்டன என்பதை உறுதிப்படுத்தும் வகையில் வெளியாகி உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் நிபுணர் குழு அறிக்கை குறித்து ஐ.நா. பாதுகாப்புச் சபையில் ஆராயப்பட்டுள்ளது. நிகழ்ச்சி நிரலில் பட்டியலிடப்பட்ட முன்பாகவே இந்த விவகாரம் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. எனினும் இலங்கை விவகாரம் பற்றி பாதுகாப்புச் சபையில் விவாதிப்பதற்கு ரஷ்யா தொடர்ந்தும் எதிர்ப்புக்காட்டி வருகிறது.

ஐ.நாவின் அரசியல் விவகாரங்களுக்கான உதவிச் செயலாளரும் இலங்கை விடயத்தில் ஐ.நா. பொதுச் செயலரின் முதன்மை ஆலோசகர்களுள் ஒருவருமான லியன் பாஸ்கோ, நிபுணர் குழுவின் அறிக்கை தொடர்பில் பாதுகாப்புச் சபைக் கூட்டத் தொடரில் கடந்த திங்கட்கிழமை மாலை சுருக்கமாக விளக்கமளித்தார்

நிபுணர் குழுவின் அறிக்கை இலங்கைப் (32 ஆம் பக்கம் பார்க்க)



யாழ். செயலகத்தில் ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நேற்று நடைபெற்றது. நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் நிகழ்வில் மங்கள விளக்கேற்றுகிறார். அருகில் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும்.

## ஐ.நாவுக்கு எதிராக போர்க்கொடி தூக்க சமயத் தலைவர்களுக்கு அறிவுறுத்து

ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கைக்கு எதிராக கடும் கண்டணத்தை - எதிர்ப்பை - வெளியிடுமாறு சகல சமயத் தலைவர்களையும் அரசு கட்டாயப்படுத்தியுள்ளதாகத் தெரிய வருகிறது.

நாட்டுக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் நோக்குடன் ஐ.நா. வெளியிட்டுள்ள அறிக்கைக்கு ஒட்டுமொத்த கண்டனத்தை சமயத் தலைவர்கள் வெளிப்படுத்த வேண்டும் என்றும் அரசு கேட்டுள்ளது.

பௌத்த, இந்து, முஸ்லிம், கிறிஸ்தவ ஆகிய சமயங்களைச் சேர்ந்த தலைவர்களிடம் இந்த விண்ணப்பத்தை (29 ஆம் பக்கம் பார்க்க)

## 4 மீனவர்கள் உயிரிழப்பும் துரதிஷ்டமானது

### இந்தியா தெரிவிப்பு

சென்னை, ஏப்.20

தமிழக மீனவர்கள் நால்வர் காணாமற்போன பின்னர் சடலங்களாக மீட்கப்பட்டமையை ''துரதிஷ்டமான'' சம்பவம் என்று தெரிவித்துள்ளார் இந்திய வெளிவிவகார அமைச்சின் செயலாளர் நிருபமா ராவ்.

இந்திய மீனவர்களுக்கு எதிராக பலாத்காரம் பயன்படுத்தப் படக்கூடாது என்றும் அவர் தெரிவித்தார். (29 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நா.அறிக்கைக்கு பதிலறிக்கை தயாராகிறது

கொழும்பு, ஏப்.20

ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ - மூனின் நிபுணர் குழு அறிக்கைக்குப் பதில் அளிப்பதற்காக சட்டமா அதிபர் மொஹான் பீரிஸ், முன்னாள் வெளிவிவகார செயலாளர்களான நிஹால் ரொட்ரிகோ, பேர்னாட் குணதிலக, எம்.எம்.ஜீ.எஸ். பலிஹக்கார ஆகியோரைக் கொண்டு குழு அறிக்கை ஒன்றைத் தயாரித்து வருவதாக அரச வட்டாரங்கள் தெரிவித்துள்ளன என செய்திகள் வெளியாகியுள்ளன.

இந்தக் குழு தயாரிக்கும் அறிக்கையில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட கொடூரச் செயல்கள் மற்றும் வன்னி நடவடிக்கை (29 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நா. அறிக்கைக்கு கடும் எதிர்ப்பு நாளை ஆர்ப்பாட்டங்கள், பேரணி

கொழும்பு, ஏப்.20

ஐ.நாவின் நிபுணர் குழுவின் அறிக்கை தொடர்பாக இலங்கை அரசு தனது எதிர்ப்பைக் கண்டன ஆர்ப்பாட்டங்கள் மூலம் வெளிப்படுத்தவுள்ளது. நாளை கொழும்பிலும் பிற இடங்களிலும் இதற்கென பெரும் ஆர்ப்பாட்டங்களையும் பேரணிகளையும் அரசு பெரும் எடுப்பில் ஏற்பாடுகளைச் செய்து வருவதாகத் தெரியவந்தது.

கொழும்பில் உள்ள ஐ.நாவின் அலுவலகம் முன்பாகவும் பெரும் ஆர்ப்பாட்டம் இடம்பெறக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

அன்றையதினம் இலங்கையின் நிலைப்பாடு ராஜதந்திரிகளுக்கு விளக்கப்படுவதுடன், செய்தியாளர்களுக்கும் தெளிவுபடுத்த அமைச்சர்கள் தயார் நிலையில் உள்ளனர் என்று அரச வட்டாரங்களில் இருந்து தெரியவந்தது

மே தினத்தன்று முன்னெடுக்கப்படவுள்ள பெரும் எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கு முன்னோடியாக நாளைய ஆர்ப்பாட்டங்கள் அமையும் எனத்தெரிவிக்கப்பட்டது.

(ஒ-ஐ)

## இராஜதந்திரப் பயங்கரவாதத் தாக்குதலை இலங்கை மீது மேற்கொண்டுள்ளது ஐ.நா.

### நிபுணர் குழுவின் அறிக்கை குறித்து அமைச்சர் சம்பிக்க காட்டம்

கொழும்பு, ஏப் 20

ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கையானது இலங்கைக்கு எதிரான ஒரு இராஜதந்திர ரீதியிலான பயங்கரவாதத் தாக்குதலாகும். இந்த அறிக்கையை அங்கீகரித்துள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களை இறந்த காலத்துக்கு இழுத்துச் செல்கிறது.

- இவ்வாறு மின்சக்தி அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க நேற்றுத் தெரிவித்தார்.

ஜாதிக ஹெல உறுமயவின் ஊடகவியலாளர் மாநாடு கொழும்பு தேசிய நூலகக் கேட்போர் கூடத்தில் நேற்று பிற்பகல் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றிய அமைச்சர் மேலும் தெரிவித்தவை வருமாறு-

பயங்கரவாதிகளால் சட்டத்திற்கு புறம்பாக இலங்கை செயற்படுத்தப்பட்டதால் ஐ.நா. நிபுணர் குழுவானது இராஜதந்திர ரீதியிலான பயங்கரவாதத் தாக்குதலை இலங்கைக்கு எதிராக மேற்கொண்டுள்ளது. ஐக்கிய நாடுகளின் கொள்கைகளுக்கு அமைய இலங்கை ஒரு சுயாதீனமான நாடாகும்.

இலங்கை தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமானால் ஐக்கிய நாடுகளின் சபைக்கு ஒரு நடைமுறை இருக்கின்றது. அந்த நடைமுறைக்கு அமைய நடவடிக்கை எடுக்க வேண்டும். ஐ.நா. சபையின் பாதுகாப்பு சபையில் அனுமதி பெற்று எம்மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இலங்கை மீது நடவடிக்கை எடுக்கும் நோக்கில் முன்னாள் பிரிட் (32 ஆம் பக்கம் பார்க்க)

# தொடர்கின்றது டெல்லியின் சோகம்

சொஹாலின் அதிரடியாட்டம். வீழ்ந்தது டெல்லி 16 ஓட்டங்களால். எழுந்தது மீண்டும் சங்காவின் டெக்கான் சார்ஜஸ்.

நேற்று நடந்தது ஐ.பி.எல்லின் பத்தொன்பதாவது ஆட்டம். சார்ஜஸ் வென்றது நாணயச் சுழற்சியில். எடுத்தது முடிவு துடுப்பெடுத்தாட. சொஹாலுடன் களத்துக்கு வந்தார் தவான். ஆரம்பமானது ஆட்டம் பவுண்டரியுடன். முதலாவது ஓவரிலேயே முழங்கி எடுத்தது சார்ஜஸ். மூன்று பவுண்டரிகள் பறந்தது டின்டாவின் முதலாவது ஓவரில். அடுத்த ஓவரிலேயே அதிர்ச்சி கொடுத்தது டெல்லி. பதான் வெளியேற்றினார் தவானை. எட்டு ஓட்டங்கள் மட்டும் பெற்றுக் கொடுத்தார் அணிக்கு.

சங்கா வந்தார். புதுபிக்கப்பட்டது இணைப்பாட்டம். வேகம் தொடங்கியது ஆட்டத்தில். திணறத் தொடங்கியது டெல்லி. அதிரடிகள் ஆட்டத்தை அலங்கரித்தது. தகர்தெறிந்தனர் டெல்லியின் களத்தடுப்பு வியூகங்களை. நடீமின் ஏழாவது ஓவர் ஏமாற்றம் அவருக்கு. விஸ்பரூபம் எடுத்தார் சங்கா. ஈவு இரக்கமின்றி விளாசித் தள்ளினார் 14 ஓட்டங்கள். சிக்ஸரும், இரண்டு பவுண்டரிகளையும் தாரை வார்த்தார் நடீம். பதினொராவது ஓவரை வீசினார் பதான். அடித்து நொருக்கினர் இருவரும். 12 ஆவது ஓவரில் சரிந்தார் சங்கா. தவறியது ஓர் ஓட்டத்தால் அவரின் அரைச்சதம். இரண்டாவது விக்கெட்டுக்காய் இணைந்து பெற்றனர் 92 ஓட்டங்கள். சங்காவின் வெளியேற்றத்துக்கு உள் நுழைந்தார் கம்ரான் வைட்.

அதிரடியாய் ஆடிய சொஹால் பெற்றுக் கொண்டார் அரைச்சதம். அரைச் சதம் கடந்தும் தொடர்ந்தது சொஹாலின் அதிரடி ஆட்டம். நீண்ட போராட்டத்தின் பின்னர் டெல்லி வீழ்த்தியது சொஹாலை. 41 பந்துகளில் பெற்றுக் கொடுத்தார் 62 ஓட்டங்கள். பின் வரிசையில் வைட் மட்டும் நம்பிக்கையாட்டம். ஏனையோர் சுருண்டனர் ஒற்றை ஓட்டங்களுடன். தனித்து ஆடிய வைட் 25 பந்துகளில் பெற்றார் 31 ஓட்டங்கள். இறுதியில் இருபது ஓவர் முடிவில் பெறப்பட்டது 168 ஓட்டங்கள். இழக்கப்பட்டது 4 விக்கெட்டுக்கள்.



இலக்கை விரட்ட வந்தனர் வோர்னர் - சேவாக். ஸ்ரெய்னின் முதலாவது ஓவரில் அடக்கி வாசித்தது டெல்லி. வீசினார் கிறிஸ்ரெய்ன் இரண்டாவது ஓவர். அதிரடியாய் முழங்கியது டெல்லி. பெற்றுக் கொண்டது 16 ஓட்டங்கள். முற்றுப் புள்ளி வைக்கப்பட்டது சேவாக்கின் ஆட்டத்துக்கு. 12 ஓட்டங்களுடன் முடிந்தது சேவாக் ஆட்டம். தொடர்ந்தது சரிவு. நமன் ஓஜா, வின்ச் வெளியேறினர் அடுத் தடுத்து. இறுகியது டெல்லியின் ஆட் டம். 38 ஓட்டங்களில் இழந்திருந்தது 3 விக்கெட்டுக்கள். வோர்னர் - வேணுகோபால் ராவ் மீட்டனர் அணியை. கடந்தது இணைப்பாட்டம் அரைச்சதம். வீழ்த்தப்பட்டது ராவ்வின் விக்கெட். சிறப்பாய் ஆடி அடித்தார் வோர்னர் அரைச்சதம். தவான் முடித்து வைத்தார் அவரது ஆட்டத்தை. பின் வரிசையில் கலக்கினார் நாகர். ஆட்டத்தின் போக்கே மாற்றமடைந்தது அவரது ஆட்டத்தால். 11 பந்துகளில் பெற்றார் 23 ஓட்டங்கள். முடித்து வைத்தார் அவர் ஆட்டத்தை கிறிஸ்ரெய்ன்.



டெல்லியின் ஆட்டம் அடங்கியது. இருபது ஓவர்களில் 152 ஓட்டங்கள் மட்டும் பெறுகை. இதனால் 16 ஓட்டங்களால் அடைந்தது தோல்வி. சார்ஜஸ்ஸின் வெற்றிக்கு வித்தான சொஹால் தேர்வானார் ஆட்டநாயகனாய்.

-டிலீப்-

## ஐ.பி.எல் பத்தொன்பதாவது ஆட்டம்

ஆட்டம்: டெக்கான் சார்ஜஸ் எதிர் டெல்லி டெயா டெவில்ஸ் — நாணயச் சுழற்சி: டெக்கான் சார்ஜஸ்

முடிவு: 16 டெக்கன் சார்ஜஸ் வெற்றி — ஆட்டநாயகன்: சொஹால்

**டெக்கான் சார்ஜஸ்**

| பெயர் | ஆட்டமிழப்பு முறை | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| சொஹால் | c வின்ச் b நடீம் | 62 | 41 | 08 | 1 |
| தவான் | b இப்ரான் பதான் | 08 | 05 | 02 | 0 |
| சங்கக்கார | c வின்ச் b டின்டா | 49 | 35 | 08 | 1 |
| வைட் | ஆட்டமிழப்பில்லை | 31 | 25 | 02 | 1 |
| கிறிஸ்ரெய்ன் | b ஹோப்ஸ் | 08 | 11 | 00 | 0 |
| சிப்லி | ஆட்டமிழப்பில்லை | 05 | 03 | 00 | 0 |
| ரவி ரேஜா | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| அமிர் மிர்ஷா | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| ஸ்ரெய்ன் | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| ஓஜா | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| ஹர்மீட் சிங் | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| உதிரிகள் | (w 2, lb 2, b 1) | 05 | | | |

| பெயர் | O | R | W | M |
|---|---|---|---|---|
| டின்டா | 04 | 33 | 1 | 0 |
| இப்ரான் பதான் | 04 | 28 | 1 | 0 |
| மோர்னி மோர்கல் | 04 | 31 | 0 | 0 |
| ஹோப்ஸ் | 04 | 36 | 1 | 0 |
| நடீம் | 03 | 24 | 1 | 0 |
| நாகார் | 01 | 13 | 0 | 0 |

TOTAL - 168/4 (20)

1-14 (தவான்), 2-106 (சங்கக்கார), 3-129 (சொஹால்), 4-156 (கிறிஸ்ரெய்ன்)

**டெல்லி டெயாடெவில்ஸ்**

| பெயர் | ஆட்டமிழப்பு முறை | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| வோர்னர் | c ரவிரேஜா b தவான் | 51 | 48 | 05 | 1 |
| சேவாக் | c கிறிஸ்ரெய்ன் b ஹர்மீட் சிங் | 12 | 07 | 03 | 0 |
| நமன் ஓஜா | lbw b கிறிஸ்ரெய்ன் | 02 | 04 | 00 | 0 |
| வின்ச் | c சங்கக்கார b ஹர்மீட் சிங் | 00 | 01 | 00 | 0 |
| வேணுகோபால் ராவ் | c கிறிஸ்ரெய்ன் b மிஷ்ரா | 21 | 23 | 03 | 0 |
| இப்ரான் பதான் | c சிப்லி b ஓஜா | 05 | 09 | 00 | 0 |
| ஹோப்ஸ் | ஆட்டமிழப்பில்லை | 17 | 14 | 00 | 1 |
| நாகர் | b கிறிஸ்ரெய்ன் | 23 | 11 | 01 | 2 |
| மோர்னி மோர்கல் | ஆட்டமிழப்பில்லை | 08 | 03 | 00 | 1 |
| நடீம் | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| டின்டா | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| உதிரிகள் | (w 6, lb 1, b 6) | 13 | | | |

| பெயர் | O | R | W | M |
|---|---|---|---|---|
| ஸ்ரெய்ன் | 04 | 24 | 0 | 0 |
| கிறிஸ்ரெய்ன் | 04 | 38 | 2 | 0 |
| ஹர்மீட் சிங் | 04 | 27 | 2 | 0 |
| ஓஜா | 03 | 21 | 1 | 0 |
| மிஷ்ரா | 04 | 28 | 1 | 0 |
| தவான் | 01 | 07 | 1 | 0 |

TOTAL - 152/7(20)

1-28 (சேவாக்), 2-33 (ஓஜா), 3-38 (வின்ச்), 4-90 (வேணுகோபால் ராவ்), 5-99 (வோர்னர்), 6-112 (இப்ரான் பதான்), 7-144 (நாகர்)

c - பிடியெடுப்பு b - பந்துவீசியவர் st - ஸ்ரொம்

# கங்குலி இட்ட அடித்தளத்திலேயே டோனி கட்டடம் கட்டினார் - அசாருதீன்

கங்குலியால் வளர்த்தெடுக்கப்பட்ட இந்திய அணியையே தற்போதைய அணித்தலைவர் டோனி முன்கொண்டு செல்கின்றார். இவ்வாறு இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் அணித் தலைவர் அசாருதீன் தெரிவித்துள்ளார்.

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் அணித் தலைவர் அசாருதீன் கொல்கத்தாவில் நடந்த ஒரு நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்.

அவர், இந்திய கிரிக்கெட் அணி இக்கட்டான நிலையில் இருந்த போது அணியின் தலைவராக கங்குலி நியமிக்கப்பட்டார். அவருடைய சிறப்பான முயற்சியின் காரணமாக இந்திய அணி வெற்றிகளைக் குவித்தது. அணியை ஒவ்வொரு நிலையிலும் உயர்த்தினார்.

இந்திய அணிக்கு இதுவரை இருந்த அணித் தலைவர்களிலேயே கங்குலி தான் சிறந்த அணித் தலைவர். இப்போது டோனி தலைமையிலான அணியும் சிறப்பான வெற்றிகளை பெற்று வருகிறது. இதற்கு கங்குலி அமைத்து கொடுத்த அடித்தளம் தான் முக்கிய காரணம்.

அதே வேளையில் கங்குலியை ஐ.பி.எல். அணிகள் ஏலம் எடுக்காதது குறித்து நான் எந்த கருத்தையும் கூற விரும்பவில்லை. அணி நிர்வாகிகள் எடுக்கும் முடிவை பற்றி நாம் எதுவும் சொல்ல முடியாது.



கிரிக்கெட் நிர்வாகத்தில் கிரிக்கெட் வீரர்கள் இடம் பெற்று இருப்பது சிறப்பு வாய்ந்தது. கர்நாடக கிரிக்கெட் சங்கத்தில் இருக்கும் வீரர்கள் செயற்பாடு பாராட்டும் படியாக இருக்கிறது. சச்சின் எவ்வளவு காலம் விளையாடலாம் என்பதை நாம் சொல்ல முடியாது. எல்லாம் அவருக்கே தெரியும் என்று அசாருதீன் தெரிவித்தார். (15)

உதயன் நடத்திய கிரிக்கெட் கொண்டாட்டத்தில் லட்சோப லட்சம் பரிசுக் கூப்பன்கள் அனுப்பி எம்மை மூச்சுத் திணறவைத்த வாசக நெஞ்சங்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

கிரிக்கெட் கொண்டாட்டத்தில் வெற்றி பெற்ற அனைவரையும் உதயன் வாழ்த்துகின்றான். வெற்றியாளர்களுக்கான பரிசளிப்பு தொடர்பான விவரங்கள் பத்திரிகை வாயிலாக விரைவில் வெளியிடப்படும்.

# முன்னாள் அணித் தலைவர் மரணம்

மேற்கிந்தியத்தீவுகள் அணியின் முன்னாள் அணித் தலைவர் பிராஞ்கேரி அலெக்ஸாண்டர் (வயது - 83) உடல் நலக் குறைவால் மரணமடைந்தார். மேற்கிந்தியத்தீவுகளின் ஜமேக்கா மாகாணத்தில் கிங்ஸ்டன் நகரில் உள்ள தனது வீட்டில் இறந்ததாக அவரது உறவினர் ஒருவர் தெரிவித்தார்.

கேரி அலெக்ஸாண்டர் கடந்த 1928 ஆம் ஆண்டு பிறந்தார். 1957 ஆம் ஆண்டு முதல் 1961 ஆம் ஆண்டு வரை சர்வதேச போட்டிகளில் விளையாடியுள்ளார். 25 டெஸ்ட் போட்டிகளில் 961 ஓட்டங்கள் எடுத்துள்ளார். இவரது சராசரி 30.3 ஆகும்.

ஆஸ்திரேலியாவுக்கு எதிராக ஒரு சதம்(108) மட்டும் அடித்துள்ளார். மறைந்த கேரி அலெக்ஸாண்டருக்கு மேற்கிந்தியத்தீவுகள் கிரிக்கெட் சபை இரங்கல் தெரிவித்துள்ளது.

இது குறித்து மேற்கிந்தியத்தீவுகள் கிரிக்கெட் வாரியத்தின் தலைவர் ஜூலியன்ஹன்ட் கூறுகையில்,

'கிரிக்கெட் தலைவராக பல விக்கெட் காப்பாளர்களை அலெக்ஸாண்டர் உருவாக்கியுள்ளார். மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு அவர் ஆற்றிய பணி மகத்தானது. மேலும் மேற்கிந்திய தீவுகள் கிரிக்கெட் அணியின் வெள்ளை இனத்தைச் சேர்ந்த கடைசி அணித்தலைவர் இவர் ஆவார் - என்றார். (15)

# என் இளமையின் ரகசியம்

-வோர்ன்-

ராஜஸ்தான் ரோயல்ஸ் அணித்தலைவர் ஷேன் வோர்ன் 41 வயதிலும் இளமையாகத் தோற்றமளிப்பது எல்லோரையும் வியப்புக்குள்ளாக்கி உள்ளது. இதற்காக அவர் 'பேஸ்லிப்ட்/போட்டாக்ஸ்' சிறப்பு சிகிச்சை பெறுவதாகவும் அறுவை சிகிச்சை செய்து கொண்டதாகவும் தகவல்கள் வெளியாகின. இதற்கு மறுப்புத் தெரிவித்துள்ள வோர்ன், இளமைத் தோற்றத்துக்காக 'போட்டாக்ஸ்' சிகிச்சை பெறுகிறேன் என்பதெல்லாம் தவறான தகவல். இப்போது உடல்தகுதியில் அதிக கவனம் செலுத்தி வருகிறேன்.

கடந்த ஐந்து மாதங்களாக தொடர்ந்து உடற்பயிற்சி செய்வதுடன், ஆரோக்கியமான உணவு வகைகளை மட்டுமே உட்கொள்கிறேன். ஏழு கிலோ எடை குறைந்து முழு உடல்தகுதியுடன் இருக்கிறேன். இந்த அளவு உற்சாகமாக நான் இதுவரை இருந்ததே இல்லை. இளமையாகத் தோன்றுவதாக எல்லோரும் கூறுவது மகிழ்ச்சியாக உள்ளது - என்றார். (15)

# மழையால் கைவிடப்பட்டது ஆட்டம்

பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸுக்கும் ராஜஸ்தான் றோயல்ஸ் அணிக்குமான ஆட்டம் மழையினால் எந்தவொரு பந்தும் வீசப்படாமல் கைவிடப்பட்டது.

ஐ.பி.எல்லின் 21 ஆவது ஆட்டமாக இந்த ஆட்டம் பெங்களூர் சின்னச்சாமி மைதானத்தில் நடைபெற ஏற்பாடாகியிருந்தது. இருப்பினும் மழை தொடர்ச்சியாகப் பெய்ததன் காரணமாக ஆட்டம் கைவிடப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. இதனால் இரு அணிகளுக்கும் தலா ஒரு புள்ளிகள் வீதம் வழங்கப்பட்டது.

# எங்களுக்கும் வேண்டும்



மகளிர் பங்கேற்கும் ஐ.பி.எல் கிரிக்கெட் போட்டிகளை நடத்த வேண்டுமென்று இந்திய மகளிர் கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் அஞ்சும் சோப்ரா வலியுறுத்தியுள்ளார்.

டெல்லியில் நேற்று முன்தினம் தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்றார். அவர் இதுகுறித்து, ஆண்கள் பங்கேற்கும் ஐ.பி.எல் போட்டிகளைப் போல மகளிர் பங்கேற்கும் ஐ.பி.எல் போட்டிகளையும் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை (பி.சி.சி.ஐ) நடத்த வேண்டும். இதன் மூலம் மகளிர் கிரிக்கெட்டுக்கு கூடுதல் மதிப்பு கிடைக்கும்.

இந்தியாவில் மேலும் பல கிரிக்கட் வீராங்கனைகள் உருவாக வாய்ப்பு கிடைக்கும். நான் தனிப்பட்ட முறையில் என்னால் முடிந்த அளவுக்கு மகளிர் கிரிக்கெட்டை பிரபலமாக்க முயற்சித்து வருகிறேன். இந்திய அணி உலகக் கிண்ணத்தை வென்ற போது அதனை உற்சாகமாகக் கொண்டாடினேன். இந்த வெற்றி ஒட்டுமொத்த இந்தியாவுக்கே பெரும் உற்சாகம் அளித்துள்ளது என்றார் அஞ்சும் சோப்ரா. (15)

# வெற்றியைப் பறித்துவிட்டது மழை



சென்னை அணி ஆடி கொண்டிருந்த போது மழை குறுக்கிட்டதால் 17 ஓவராக குறைக்கப்பட்டு இருந்தது. இதனால் அந்த அணி 17 ஓவரில் 4 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 131 ஓட்டங்களை எடுத்தது. அடுத்து ஆடிய கொச்சி அணி 15 ஓவரில் 3 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 135 ஓட்டங்கள் எடுத்து எளிதான வெற்றியைப் பெற்றது.

இதுபற்றி சென்னை அணியின் தலைவர் டோனி கூறியதாவது:-

மழை குறுக்கீடுதான் எங்கள் தோல்விக்கு முக்கிய காரணமாக அமைந்து விட்டது. மழை காரணமாக கடைசி 3 ஓவர்களை குறைத்து விட்டனர். இந்த 3 ஓவர்களும் இருந்திருந்தால் நாங்கள் அதிக அளவு ஓட்டங்களை குவித்து இருப்போம். அப்போது கொச்சி அணி எங்களை வெல்வது கடினமாக இருந்திருக்கும். அணி இக்கட்டாக இருந்த நேரத்தில் மழை குறுக்கிட்டது எங்களுக்கு ஏற்பட்ட துரதிர்ஷ்டம் என்றே கருதுகிறேன். அதே நேரத்தில் கொச்சி அணி பந்து வீச்சாளர்களும் சிறப்பாக செயற்பட்டனர்.

கொச்சி அணி வெற்றிக்கு மக்குலம் முக்கிய காரணமாக இருந்தார். அவர் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார் இவ்வாறு அவர் கூறினார்.

கொச்சி அணித் தலைவர் ஜெயவர்த்தன கூறும்போது, மழை குறுக்கீடு ஆட்டத்தின் போக்கை மாற்றி விட்டது என்பதை ஏற்றுக்கொள்கிறேன். ஆனாலும் எங்கள் வீரர்கள் சிறப்பாக ஆடினார்கள். பார்த்திப் பட்டேல், மக்குலம் ஆட்டம்தான் எங்கள் வெற்றிக்கு முக்கிய காரணமாக அமைந்தது -என்றார். (15)



# குட்டைப் பாவாடை கட்டாயம் தேவை

பர்மின்ரன் போட்டிகளில் ஆடும் வீராங்கனைகள் இனிமேல் குட்டைப்பாவாடை அணிந்து ஆட வேண்டும் என்ற புதிய விதிமுறை நடைமுறைக்கு வருகின்றது. இந்த புதிய கட்டுப்பாட்டுக்கு இந்திய வீராங்கனைகள் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

ரெனிஸ் போன்ற பிரபலமான விளையாட்டுப் போட்டிகளில் சானியா மிர்சா போன்ற இந்திய வீராங்கனைகள் குட்டைப் பாவாடை அணிந்து ஆடி வருகின்றனர்.

சானியா மிர்ஸா இப்படி குட்டைப்பாவாடையுடன் ஆடி வருவதற்கு ஒரு தரப்பினர் கடுமையான எதிர்ப்பு தெரிவித்து வருகிறார்கள். இந்த நிலையில் பற்மின்ரன் வீராங்கனைகள் குட்டைப் பாவாடை அணிந்து ஆட வேண்டும் என்ற கட்டாய விதி இந்திய வீராங்கனைகளை அதிர்ச்சிக்கு உள்ளாக்கி இருக்கின்றது.

'இந்திய ஓப்பின் சூப்ப சீரிஸ் பற்மின்ரன்' போட்டி ஆரம்பமாகவுள்ளது. இந்தப் போட்டிதான் வீராங்கனைகள் டிராயர் அணிந்து ஆடும் கடைசிப் போட்டியாகும்.

இதையடுத்து மே 1 ஆம் திகதி முதல் பற்மின்ரன் போட்டிகளில் குட்டைப்பாவாடை அணிந்து ஆட வேண்டும் என்ற விதி அமுலுக்கு வருகின்றது. கடந்த 2009 ஆம் ஆண்டு உலக பற்மின்ரன் பேரவை வீராங்கனைகள் குட்டைப்பாவாடை அணிந்து ஆட வேண்டும் என்ற அறிவிப்பை வெளியிட்டது.

பார்வையாளர்களிடம் அதிக வரவேற்பை பற்மின்ரன் விளையாட்டு பெற வேண்டும் என்ற அடிப்படையில் இந்த அறிவிப்பை உலக பற்மின்ரன் பேரவை வெளியிட்டது.

குட்டைப்பாவாடை அணிந்து ஆட வேண்டும் என்ற விதி குறித்து இந்திய இரட்டையர் போட்டி வீராங்கனை ஜ்வாலா கட்டா கூறுகையில் குட்டைப் பாவாடை அணிந்து ஆடுவது பார்வையாளர்களுக்கு ஆர்வம் தரலாம். ஆனால் குட்டைப்பாவாடை அணிந்து தான் ஆட வேண்டும் என வீராங்கனைகளை நிர்ப்பந்திக்கக் கூடாது என கூறினார். ஜ்வாலா போட்டிகளில் ஆடும்போது குட்டைப் பாவாடை அணிந்து தான் ஆடுவார் என்பது குறிப்பிடத்தக்கது. இவர் கடந்த ஆண்டு கொமன்வெல்த் போட்டியில் அஸ்வினி பொன்னப்பாவுடன் இணைந்து தங்கம் வென்றமை குறிப்பிடத்தக்கது. (15)

# பணத்துக்காக விளையாடுவோம்; ஆனால் நாட்டுக்காக விளையாட..!

## ஓய்வையே விரும்பும் இந்தியாவின் முன்னணி வீரர்கள்

மேற்கிந்தியத்தீவுகளுக்கு எதிரான கிரிக்கெட் தொடரில் மூத்த வீரர்கள் சச்சின், சேவாக், அணித்தலைவர் டோனி, சகீர்கான், ஹர்பஜன் சிங், கௌதம் கம்பீர் ஆகியோர் விளையாட மாட்டார்கள் என்று தெரியவருகின்றது.

ஐ.பி.எல் போட்டிகள் முடிந்த அடுத்த வாரத்திலேயே, அதாவது ஜூன் 4 ஆம் திகதியே இந்திய அணி மேற்கிந்தியத்தீவுகளுக்கு எதிரான தொடரில் ஆட இருக்கின்றது. எனவே தொடர்ந்து விளையாடி வரும் மூத்த வீரர்களுக்கு ஓய்வு அளிக்க இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை (பி.சி.சி.ஐ) முடிவு செய்துள்ளதாகத் தெரிகின்றது.

மேற்கிந்தியத்தீவுகளுக்கு எதிராக இந்திய அணி ஒரு 20 ஓவர் போட்டி, 5 ஒருநாள் ஆட்டம், 3 டெஸ்ட் போட்டிகளில் விளையாடுகின்றது. இதில் ஒருநாள் போட்டியில் மட்டும் சச்சின், டோனி, சகீர்கான், ஹர்பஜன் சிங், கம்பீர் ஆகியோர் விளையாட மாட்டார்கள் என்று தெரிகின்றது. வீரேந்திர சேவாக் இந்த தொடர் முழுவதும் விளையாட மாட்டார்.

தங்களுக்கு ஓய்வு தேவை என்பது குறித்து இந்த மூத்த வீரர்கள் ஏற்கெனவே கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைக்குக் கடிதம் எழுதியுள்ளனர்.

அதில் போதிய ஓய்வு எடுத்தால்தான் இந்த ஆண்டில் அடுத்து நடைபெறவுள்ள இங்கிலாந்து, ஆஸ்திரேலியாவுக்கு எதிரான கிரிக்கெட் தொடரில் சிறப்பாக விளையாட முடியும் என்று அவர்கள் குறிப்பிட்டுள்ளதாகத் தெரிகின்றது. இதனையடுத்து வீரர்களுக்கு ஓய்வு அளிக்க பி.சி.சி.ஐ முடிவு செய்துள்ளது.

டோனி, சேவாக் ஆகியோர் ஆடாததால் மேற்கிந்தியத்தீவுகளுக்கு எதிரான ஒருநாள் ஆட்டங்களுக்கு யுவராஜ்சிங் அணித்தலைவராக அறிவிக்கப்படுவார் என்று தெரிகின்றது. இந்த ஆண்டில் நவம்பர் மாதம் இங்கிலாந்து அணி இந்தியாவுக்கு வருகின்றது. தொடர்ந்து டிசம்பர், ஜனவரியில் இந்திய அணி ஆஸ்திரேலியாவுக்குச் சென்று விளையாடவுள்ளது.

இந்திய அணியில் 6 வீரர்களுக்கு ஓய்வு அளிக்கப்படுவதால் அவர்களுக்கு பதிலாக ஐ.பி.எல்லில் சிறப்பாக விளையாடும் வீரர்களுக்கு வாய்ப்பு வழங்க பி.சி.சி.ஐ முடிவு செய்துள்ளது. கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியில் சிறப்பாக ஆடி வரும் வல்த்தட்டி, மும்பை இந்தியன்ஸ் அணியில் உள்ள அம்பத்தி ராயுடு உள்ளிட்ட வீரர்கள் இந்திய அணியில் இடம் பிடிப்பார்கள் என்று தெரிகின்றது.

முன்னதாக இந்திய அணி வீரர்கள் தொடர்ந்து கிரிக்கெட் விளையாடி வருவதால் அவர்களுக்கு மனரீதியாகவும், உடல் ரீதியாகவும் பாதிப்பு ஏற்படும் என்று அணித்தலைவர் டோனி ஐ.பி.எல் போட்டி தொடங்கும் முன் கருத்துத் தெரிவித்திருந்தார் என்பது நினைவு கூரத்தக்கது.

உலகக் கிண்ணம் முடிந்த அடுத்த வாரத்திலேயே ஐ.பி.எல் போட்டிகள் தொடங்கி விட்டன. தொடர்ந்து சுமார் ஒன்றரை மாதம் வரை ஐ.பி.எல் நடைபெறுகின்றது. அடுத்து இந்திய அணி மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கு எதிரான போட்டியில் கலந்து கொள்ள வேண்டியுள்ளது. இதனால் இந்திய வீரர்களுக்கு ஓய்வு இல்லை என்ற கருத்தும் பரவலாக ஏற்பட்டது குறிப்பிடத்தக்கது. (15)

# துடுப்பாட்டத்தில் சொதப்பி விட்டோம்



- ஷேன் வோர்ன்

கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணிக்கு எதிராக துடுப்பாட்டத்தில் சோபிக்காததே தோல்விக்கு முக்கிய காரணம். இவ்வாறு ராஜஸ்தான் ரோயல்ஸ் அணியின் தலைவர் ஷேன் வோர்ன் தெரிவித்துள்ளார். இதுகுறித்து ராஜஸ்தான் அணித் தலைவரும், பயிற்சியாளருமான ஷேன் வோர்ன் கூறியதாவது:

தொடர்ந்து இரண்டாவது முறையாக கொல்கத்தா அணிக்கு எதிராகத் தோல்வி அடைந்தது வருத்தம் அளிக்கின்றது. இந்த ஆட்டத்தில் எங்கள் அணியின் துடுப்பாட்டம் மோசமாக இருந்தது. வீரர்கள் ஒரு சிலர் தேவையில்லாத 'ஷொட்' அடித்து சொற்ப ஓட்டங்களில் வெளியேறி ஏமாற்றினர். இது பார்ப்பதற்கு குழந்தைகள் விளையாடும் கிரிக்கெட் போட்டியைப் போல இருந்தது.

ஆனால் இப்போட்டிக்கு முன், எங்கள் வீரர்களின் பயிற்சி சிறப்பாக இருந்தது. இருப்பினும் போட்டியில் எப்படி கோட்டைவிட்டோம் எனத் தெரியவில்லை. காயம் காரணமாக டிராவிட் பங்கேற்காதது பின்னடைவாக அமைந்தது. கடந்த மூன்று தொடர்களில் எங்கள் அணிக்காக விளையாடிய ரவிந்திர ஜடேஜா, போல் வல்த்தட்டி, யூசுப் பதான், முனாப் பட்டேல், ஆரோன் பின்ச் உள்ளிட்ட வீரர்கள் சிலர், இந்த முறை வேறு அணிகளில் உள்ளனர். இவர்கள் இந்த முறை சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி வருகின்றனர். எங்கள் அணியில் உள்ள ஒரு சில வீரர்களை தவிர மற்றவர்கள் புதியவர்கள். எனவே பழைய வீரர்கள், புதியவர்களுக்கு முன் உதாரணமாகத் திகழ வேண்டும் இவ்வாறு ஷேன் வோர்ன் கூறினார். (15)

# கடந்த வருட ஒதுக்கீட்டில் 45 வீதமான பணிகளே பூர்த்தி

## அரச அதிபர் இமெல்டா சுகுமார் தகவல்

யாழ்ப்பாணம், ஏப்.20

யாழ்.மாவட்ட அபிவிருத்திக்கு கடந்த வருடம் ஒதுக்கப்பட்ட நிதியில் 45 வீதமான நிதி ஒதுக்கீட்டுக்கான பணிகள் நடைபெற்றுள்ளன.

மிகுதி வேலைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன என்று யாழ். மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்துள்ளார்.

யாழ்.செயலகத்தில் நேற்று நடைபெற்ற யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் வருடாந்த அபிவிருத்தித் திட்டங்களுக்கான அறிக்கையைச் சமர்ப்பித்து உரையாற்றுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கடந்த வருடம் யாழ்.மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களில் விவசாயம்சார் நடவடிக்கைகளுக்கு 553.922 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டு 325.765 மில்லியன் ரூபா நிதியில் 59 வீதமான பணிகள் பூர்த்தியாகிவிட்டன.

மனிதாபிமானப் பணிகளுக்கு 1,391.472 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டு 729.956 மில்லியன் ரூபா செலவிலான 52 வீதமான பணிகள் பூர்த்தியாகியுள்ளன.

பொருளாதார அபிவிருத்திப் பணிகளுக்கு 161.316 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டு 93.994 மில்லியன் ரூபா செலவிலானான 58 வீதமான பணிகள் பூர்த்தியாகியுள்ளன.

போக்குவரத்துக்கு 2,037.553 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டு 620.055 மில்லியன் ரூபா செலவிலான 30 சதவீதமான பணிகள் பூர்த்தியாகியுள்ளன.

சமூக அபிவிருத்திப் பணிகளுக்கு 1,115.539 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டு 670.156 மில்லியன் செலவிலான 60 சதவீதப் பணிகள் பூர்த்தியாகியுள்ளன.

நிர்வாகக் கட்டமைப்புக்கான அபிவிருத்திப் பணிகளுக்கு 337.945 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டு 103.563 மில்லியன் ரூபா செலவிலான 31 சதவீதப் பணிகள் பூர்த்தியாகியுள்ளன.

கடந்த வருடம் 5,891.314 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டு இதுவரை 2,625.743 மில்லியன் ரூபா செலவிலான 45 வீதமான பணிகள் பூர்த்தியாகியுள்ளதாகவும் தெரிவித்தார். (ஐ-9-14)

## வடக்கு, கிழக்கில் உள்ள தொல்பொருள் பகுதிகள்

# தேசிய மரபுரிமைப் பகுதிகளாக பிரகடனம் செய்வதற்கு ஏற்பாடு

கொழும்பு, ஏப்.20

வடக்கு, கிழக்கில் காணப்படும் தொல்பொருள் ஆய்வுக்குரிய பகுதிகளை தேசிய மரபுரிமைக்குரிய பிரதேசங்களாகப் பிரகடனப்படுத்துவதற்குத் தேசிய மரபுரிமைத்துறை அமைச்சர் டாக்டர் ஜெகத் பாலசூரிய நடவடிக்கை எடுத்து வருகின்றார்.

இந்தச் செயற்பாட்டுக்கு ஜேர்மன் அரசு அனுசரணை வழங்கவிருப்பதாகத் தெரியவருகின்றது.

வடக்கில் ஆதி காலத்தில் ரோம் நகருக்கும் சீனாவுக்கும் இலங்கையில் இருந்து வர்த்தகத் தொடர்புகளைப் பெற வழிவகுத்த துறைமுகங்களாக விளங்கிய பகுதிகள், யாழ்ப்பாணத்தில் உள்ள புராதன கோட்டை, உலகின் முதல்முதல் கட்டப்பட்டதாகக் கருதப்படும் கிரிஹந்து சேய தூபி, திருக்கேதீஸ்வரக் கோயில் ஆகியவவை உலக மரபுரிமைப் பிரதேசங்களாக பிரகடனப்படுத்தப்படவிருப்பதாகத் தெரிகின்றது. வடக்கு, கிழக்கில் உள்ள தொல்பொருள் ஆய்வுக்குரிய இடங்களைக் கண்டறிவதற்கும் அமைச்சு நடவடிக்கை எடுக்க விருக்கின்றது.

இது தொடர்பாக அண்மையில் அமைச்சர் டாக்டர் பாலசூரிய ஜேர்மன் பிரதித் தூதுவர் ஸ்டெபாக் லீக் பார்க்குடன் கலந்துரையாடியுள்ளார். மரபுரிமைப் பிரதேசங்கள் தொடர்பான அறிக்கையொன்றை அமைச்சர் யுனெஸ்கோ தேசிய குழுவிடம் சமர்ப்பிக்கவிருக்கிறார். (ப)

# மூன்று தினங்கள் மின்தடை

யாழ்ப்பாணம்,ஏப்.20

உயரழுத்த மின்மார்க்கங்களில் பராமரிப்பு வேலைகள் மேற்கொள்ளப்படவுள்ளதால் பின்வரும் இடங்களில் மின்சாரம் தடைப்படும் என்று யாழ். பிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

இதன்படி நாளை வியாழக்கிழமையும் எதிர்வரும் 27ஆம் திகதி புதன்கிழமையும் காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை சுன்னாகம், குப்பிளான், மயிலங்காடு, ஏழாலை, காங்கேசன்துறை, உயர்பாதுகாப்பு வலயம் பகுதி ஆகிய இடங்களில் மின்சாரம் தடைப்படும்.

அவ்வாறே எதிர்வரும் 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை உரும்பிராய், கோண்டாவில், மருத்துவபீட பிரதேசம், திருநெல்வேலிப் பிரதேசம், பட்டணப்பகுதி நீங்கலாக யாழ் மாநகர சபைப் பகுதி ஆகிய இடங்களில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று அறிவித்துள்ளார். (த-4)



(48,21,50) அதிபர், யாழ்ப்பாணக் கல்லூரி.

SAN INTERNATIONAL Pvt (Ltd)

எமது சேவை உங்களுக்காக யாழ்.நகரில்...

**Student Visa Arrangements for U.K**

U.K இல் நீண்ட காலமாக வெற்றிகரமாக இயங்கும் English கற்கை நெறிகளுக்கான தனித்துவம் வாய்ந்த கல்லூரியான
Crest School of English இல்

*குறைந்த கட்டணத்தில்

*இறுக்கமான கட்டுப்பாடுகள் அமுலான போதும் இலகுவான முறையில்

அனுமதிகள் பெற்றுத்தரப்படும்.

You can follow these courses in above school.

* General English (Foundation Courses)
* Professional English (Business, Financial, Legal)
* Cambridge Exam Preparation.
* Work Skills and work experience (BTEC Level 3 plus more)
* Communication Skills / Conversational English
* English and Work Experience.
* Courses for Teachers

- O/L உடன் UKBA Highly Trusted Colleges இல் அனுமதிகள்.
- Diploma, Degree Courses இற்கான அனுமதிகள்.
- U.K இல் உள்ள எமது Staff மூலம் நேரடியாக Colleges admissions பெற்றுத்தரப்படும்.
- Filling ஒழுங்குகள் செய்து தரப்படும்.
- பகுதி நேர வேலை வாய்ப்புக்கள்
- Sponsor வசதிகள்
- உணவு மற்றும் தங்குமிட வசதிகள்.

U.K. Qualified Teacher இனால் English Classes நடத்தப்படுகின்றன.

புதுவருடத்தை முன்னிட்டு புதிய பிரிவுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

- Primary & Upper School Students (1 to A/L Students)
- School leavers
- Professionals.
- A/L மாணவர்களுக்கு ஆங்கிலப் பாடநெறி கட்டாயமாக்கப்பட்டுள்ளதால், A/L மாணவர்கள் மீது விசேட கவனம் செலுத்தப்படும்.
- ஒவ்வொரு மாணவர்கள் மீதும் தனிப்பட்ட முறையில் கவனஞ் செலுத்தப்படும்.
- Student Visa மூலம் வெளிநாடு செல்பவர்களுக்கும் பயிற்சி வழங்கப்படும்

இது உங்களுக்கான ஓர் அரிய சந்தர்ப்பம்!

No, 69, Arasady Road, Jaffna,
(Jaffna Hindu Primary School இற்கு அருகில்)
Contact us - 021 222 3440, 0774745642
Our Branch - 29/5, Racca Road, Jaffna.
0778894383

கொவிசெத
உத்தியோகப்பூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 803
சீட்டிழுப்பு திகதி 18.04.2011

எழுத்து: Q
வெற்றி இலக்கங்கள்: 14 20 47 64

| | பொருத்தங்கள் | பரிசுத்தொகை | வெல்லப்பட்டோர் தொகை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | ஆங்கில வழுத்துடன் 4 இலக்கங்கள் சரியாயின் | ரு. 12,999,056.00 | - |
| 1ம் பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | ரு. 1,000,000/= | 01 |
| 2ம் பரிசு | ஆங்கில வழுத்துடன் 3 இலக்கங்கள் சரியாயின் | ரு. 20,000/= | 10 |
| 3ம் பரிசு | 3 இலக்கங்கள் சரியாயின் | ரு. 2,000/= | 221 |
| 4ம் பரிசு | ஆங்கில வழுத்துடன் 2 இலக்கங்கள் சரியாயின் | ரு. 1,000/= | 464 |
| 5ம் பரிசு | 2 இலக்கங்கள் சரியாயின் | ரு. 100/= | 11243 |
| 6ம் பரிசு | ஆங்கில எழுத்துடன் ஒரு இலக்கம் சரியாயின் | ரு. 40/= | 6423 |
| 7ம் பரிசு | 1 இலக்கம் சரியாயின் | ரு. 20/= | 160090 |
| 8ம் பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் சரியாயின் | ரு. 20/= | 25201 |

இம்முறை வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 7,193,040.00

அடுத்த வார சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூபா. 13,258,244.00

வெற்றிப் பெறும் சீட்டுகள் மோதங்களுக்குள் மட்டுமே செல்லுப்படியாகும். ஐந்து இலட்சமோ இதற்குக்கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரிச்சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது. பரிசைப் பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

தேசிய லொத்தர் சபை
234/ 2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி: 2470662, 2470663 அவசர தேவைக்கு: 2473360
இணையதளம்: www.nlb.lk

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## பின்விளைவுகளை மனதிற்கொண்டு செயலாற்றும் பக்குவம் எப்போதுவரும்?

இலங்கையில் இரண்டு வருடங்களுக்கு முன்னர் நடைபெற்ற இறுதிப் போரின் போது, பொது மக்களுக்கு உரியிழப்பு உண்டாக்கியதில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்துக்கும் - அதன் படைகளுக்கும் - பங்குண்டு; அரசுக்கே கூடுதல் பங்குண்டு எனத் தொட்டுக் காட்டியுள்ளது ஐ.நாவின் பொதுச் செயலாளர் நியமித்த மூவர் அடங்கிய நிபுணர் குழு.

அத்தோடு, பொது மக்கள் தங்கியிருந்த பகுதிகள் மீது தாக்குதல் நடத்துவதற்கு முன்னர் அரசாங்கம் விடுத்த அறிவித்தல்களுக்கு நேர்மாறாகப் படைகளின் நடவடிக்கைகள் அமைந்திருந்தன என்றும் நிபுணர் குழு திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கிறது.

ஆனால் -

இந்த நாட்டில் உறுதியற்ற நிலையை உருவாக்க வேண்டும் என்ற வஞ்சனையுடனேயே தன் மீதும், அரசாங்கம் மீதும் நிபுணர் குழு போர்க் குற்றஞ்சாட்டியுள்ளது என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கருத்து வெளிப்படுத்தி உள்ளார். குற்றச்சாட்டுக்களை நிரூபித்தால், தாய் நாட்டுக்காகத் தாம் மின்சாரக் கதிரையில் ஏறவும் தயார் என்றும் ஜனாதிபதி ''பிரகடனம்'' செய்துள்ளார்.

இதேவேளை, நிபுணர் குழுவின் அறிக்கைக்கு ஆட்சேபனை தெரிவித்து மே தினத்தில் பெரும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்படும் என்றும் அவற்றில் மக்கள் பெரும் எண்ணிக்கையில் கலந்து கொள்ள வேண்டும் என்றும் அழைப்பு விடுத்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் கோரிக்கையின் பிரகாரம், நாட்டைப் பிளவுபடுத்துவதற்குத் தாம் அனுமதிக்காததாலேயே, சர்வதேச சமூகத்தினரில் ஒரு பகுதியினர் தம் மீது கோபம் கொண்டுள்ளனர் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதியின் சகோதரரும், பாதுகாப்பு அமைச்சின் செயலாளரும், அரச தரப்பினர் போரை முன்னெடுத்து வெல்வதற்கு உந்து விசையாக இருந்தவருமான கோத்தபாய ராஜபக்ஷ -

நிபுணர் குழுவின் அறிக்கைக்குப் பின்னால் ஒரு நிகழ்ச்சி நிரல் உள்ளது. நிபுணர் குழு விடுதலைப்புலிகளின் ஆதரவாளர்களால் மூளைச் சலவை செய்யப்பட்டுள்ளது என்றும் -

ஐக்கிய நாடுகள் சபை சில நாடுகளால் கடத்தப்பட்டுவிட்டதாகவே தோன்றுகிறது. இலங்கை ஐக்கிய நாடுகள் சபையின் உறுப்பு நாடு. அதற்கு ஐ.நா. பாதுகாப்பு அளிக்க வேண்டும் - என்றும் விளம்பி உள்ளார்.

ஒரு சிறிய பத்திரிகை கூட சரியான தகவல்களை அடிப்படையாகக் கொண்டே தமது அறிக்கையைத் தயாரித்து வெளியிடும். ஆனால் இந்தப் பெரிய அறிக்கை அடிப்படையற்ற தகவல்களை உள்ளடக்கியதாக இருப்பது ஆச்சரியமாக உள்ளது - என்று பிரதி வெளிவிவகார அமைச்சர் நியுமால் பெரேரா மொழிந்துள்ளார்.

இவர்களை விட -

நிபுணர் குழுவின் அறிக்கை பக்கச் சார்பானது. ஒன்றுக்கு மற்றது எதிர்மாறானது, குறைபாடானது. குறிப்பிட்ட அறிக்கையை வாசிக்கும் போது அது எழுந்தமான அடிப்படையில் கிடைத்த அல்லது பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் படையினர் மீது குற்றஞ்சாட்டி வரையப்பட்டுள்ளது என்று - அரச தரப்பைச் சாராத சில தரப்புகளும் நிபுணர் குழுவின் அறிக்கையை ''பிரேத பரிசோதனை'' செய்துள்ளன.

ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகத்துக்கு, இலங்கை விவாகாரத்தில் யோசனை வழங்குவதற்கு நியமிக்கப்பட்ட நிபுணர் குழு, தனது விருப்பு, வெறுப்புக்களுக்கு ஏற்ப, அல்லது சில சக்திகளின் செல்வாக்கினால், இந்த அறிக்கையை புனைந்து இயற்றப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டே தயாரித்திருக்கிறது என்ற தோற்றத்தை உண்டாக்குவதற்கான முயற்சியின் பல வடிவங்களே மேலே தொட்டுக் காட்டப்பட்டவையாகும்.

இத்தனை வியாக்கியானங்களும் விமர்ச்சனங்களும் வெளிப்படுவதற்கு வாய்ப்பு வழங்கியவர்கள் போரினால் பாதிக்கப்பட்ட தரப்பினர் என்பது ஊன்றி எழுதப்படவேண்டிய ஒன்றாகும்.

ஏனெனில் -

போரிலே தமது உறவுகளை இழந்தவர்களில் ஒரு சிறிய எண்ணிக்கையினரே தமது கணவன்மாரும் பிள்ளைகளும் கொல்லப்பட்டதை அரசு நியமித்த நல்லிணக்க ஆணைக் குழு முன்னிலையில் சாட்சியம் அளித்து எழுத்திலும் வழங்கினர்.

சாட்சியம் அளிக்கச் சென்றவர்களில் பெரும்பாலானோர், நேரமின்மையைக் காரணம் காட்டித் தட்டிக்கழிக்கப்பட்டதால் தமது, எழுத்து மூல சாட்சியத்தைக் கையளித்துத் திரும்ப வேண்டியதாயிற்று.

எனினும், ஐ.நா. நிபுணர் குழுவுக்கு, அது கேட்டுக் கொண்டதற்கு இணங்க இங்கிருந்து பலர் தமது உறவுகளுக்கு நேர்ந்த கதியினை மின்னஞ்சல் மூலம் விவரிக்கும் வாய்ப்புக் கிடைத்தது.

அதேபோன்று, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றில் சுட்டிக்காட்டிய விடயங்கள் பலவும் நிபுணர் குழுவின் அறிக்கை மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளதாக அக்கட்சியின் தரப்பில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

உதாரணமாக, வைத்தியசாலைகள் மீதான தாக்குதல்கள் மக்களின் சொத்துக்களை அழித்துச் சேதமாக்கியமை, நிராயுதபாணிகளான மக்களின் நலன்களைப் புறந்தள்ளி இராணுவ நடவடிக்கையை முன்னெடுத்தமை, வெள்ளை வான் கடத்தல்கள் போன்ற விடயங்கள் - விவகாரங்கள் ஏற்கனவே நாடாளுமன்றில் முன்வைக்கப்பட்டவை என்று கூட்டமைப்பினரால் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது.

எனினும், வன்னியில் நடைபெற்ற மனித உரிமை மீறல்கள், மனிதாபிமானத்துக்கு முரணான செயற்பாடுகள் குறித்து தமிழ் அரசியல் கட்சிகள் நல்லிணக்க ஆணைக்குழு முன்னிலையில் இரகசியமான முறையிலாவது சாட்சியம் அளித்திருந்தால், அரச சார்பில் இப்போது முன்வைக்கப்பட்டுள்ள வாதங்கள் அடிபட்டுப் போயிருக்கும்.

பின்விளைவுகளை கருத்திற்கொண்டு மனஉறுதியுடன் செயலாற்றும் பொறுப்பு, எம்மவரிடம் குறிப்பாக அரசியல் தலைவர்களிடம் பிறக்கப் போவது எப்போது...?

# நாளொன்றுக்கு 1.5 கோடி ரூபா இ.போ.சவுக்கு மேலதிக வருமானம்

### புது வருட காலத்தில் பெரும் சாதனை

கொழும்பு, ஏப்.20

பண்டிகைக் காலத்தில் பயணிகளுக்காக நடத்தப்பட்ட விசேட போக்குவரத்துச் சேவையில் ஒரு நாள் வருமானம் ஒன்றரைக் கோடி ரூபாவைத் தாண்டியுள்ளதாக இலங்கைப் போக்குவரத்துச் சபையின் தலைவர் எம்.டீ. பந்துசேன தெரிவித்துள்ளார்.

இது இலங்கை போக்குவரத்துச் சபை தனது வரலாற்றில் சாதனை படைத்துள்ள உச்ச வருமானம் எனவும் அவர் மேலும் கூறினார்.

இலங்கைப் போக்குவரத்துச் சபையின் ஒரு நாள் சாதாரண வருமானம் நான்கு கோடி 10 இலட்சம் ரூபா எனவும் இதற்கென 103 சாலைகளின் கீழ் 4 ஆயிரத்து 800 பஸ்கள் போக்குவரத்தில் ஈடுபடுத்தப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். கடந்த 09 ஆம் திகதியிலிருந்து 14 ஆம் திகதி வரை பண்டிகைக்கால விஷேட பஸ் சேவையில் 500 பஸ்கள் மேலதிக சேவையில் ஈடுபடுத்தப்பட்டன எனவும், அச்சேவைகள் மூலம் 10,11,12 மற்றும் 13 ஆகிய திகதிகளில் ஒருநாள் வருமானம் 5கோடி 50 இலட்சம் ரூபா வரை அதிகரித்திருந்ததாகவும் தலைவர் எம்.டீ. பந்துசேன தெரிவித்தார். (த-22)

# பண்டிகைக் காலத்தில் 'சதொச' வருமானம் 250 கோடி ரூபா

கொழும்பு, ஏப்.20

பண்டிகைக் காலத்தில் தட்டுப்பாடின்றி மக்களுக்கு அத்தியாவசியப் பொருள்களை வழங்கும் திட்டத்தின் கீழ் கூட்டுறவு மொத்த விற்பனை நிறுவனம் (சதொச) பதினாறு தினங்களில் 250 கோடி ரூபாவைத் தாண்டும் அளவுக்கு வருமானம் ஈட்டியுள்ளதாக கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சர் ஜோன்ஸ்ரன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

ஏப்ரல் முதலாம் திகதி தொடக்கம் 16ஆம் திகதி வரையான 16 தினங்களுள் சதொசவின் வருமானம் 250 கோடி ரூபாவைத் தாண்டியுள்ள முதலாவது சந்தர்ப்பம் இதுவாகுமெனவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ் - சிங்களப் புத்தாண்டு காலத்தில் தட்டுப்பாடின்றி சலுகை விலையில் மக்களுக்கு அத்தியாவசியப் பொருள்களை வழங்கும் இத் திட்டம் அமைச்சர் ஜொன்ஸ்ரன் பெர்னாண்டோவின் ஆலோசனைக்கு அமைய நடைமுறைப்படுத்தப்பட்டது.

பண்டிகைக் காலத்தில் அத்தியாவசியப் பொருள்களின் விலைகளை நிலையாக வைத்திருக்க முடிந்தமை பெருவெற்றி எனவும் அமைச்சர் கருத்துத் தெரிவித்தார். (த-22)

# கல்லெறியில் காயமுற்றவர் வைத்தியசாலையில் மரணம்

வலி.வடக்கு, ஏப்.20

பன்னாலைப் பகுதியில் இடம்பெற்ற கல்லெறிச் சம்பவத்தில் படுகாயங்களுக்கு உள்ளாகிய நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர் சிகிச்சை பயனளிக்காத நிலையில் நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை மரணமானார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை பன்னாலையில் உறவினர்களுக்கு இடையே இடம்பெற்ற காணி சம்பந்தமான பிணக்கு வாய்த் தர்க்கமாக மாறி கல்லெறியில் முடிவடைந்தது.

இதனைத் தொடர்ந்து மல்லாகம் சோடாக் கம்பனி வீதியில் தற்காலிகமாக வசித்து வரும் அழகரத்தினம் சிவராசா என்பவர் தலையில் காயமடைந்த நிலையில் தெல்லிப்பழை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

இந்த நிலையில் அவர் நேற்று அதிகாலை மரணமானார். தெல்லிப்பழை பொலிசார் இது சம்பந்தமான விசாரனைகளை மேற்கொண்டுள்ளனர். (த-86)

# 'யாழ்ப்பாணம் சுற்றுலாத்துறை' வழிகாட்டி நேற்று வெளியீடு

யாழ்ப்பாணம், ஏப்.20

'யாழ்ப்பாணம் சுற்றுலாத்துறை' (Tourism Jaffna) என்ற நூல் மாவட்ட செயலகத்தினால் நேற்று வெளியிட்டு வைக்கப்பட்டது.

சுற்றுலாப் பயணிகளாக யாழ்ப்பாணம் வருபவர்களுக்கான வழிகாட்டும் நூலாக இது வெளியிடப்பட்டுள்ளது.

இந்த நூலின் முதல் பிரதியை யாழ். மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் கையளித்து அதனை வெளியிட்டு வைத்தார்.

அதனைத் தொடர்ந்து தமிழ்த் தேசிக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான அப்பாத்துரை விநாயகமூர்த்தி, ஈ.சரவணபவன், சி. சிறிதரன் ஆகியோருக்கும் இந்த நூலின் சிறப்புப் பிரதிகள் அரச அதிபரினால் வழங்கப்பட்டன.

யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்துக்கான மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நேற்று முற்பகல் 10 மணிக்கு இடம்பெற்றது. அந்த நிகழ்வின் ஒரு பகுதியாக இந்த 'யாழ்ப்பாணம் சுற்றுலாத்துறை' என்ற நூல் வெளியிட்டுவைக்கப்பட்டது.

இந்த நூலில் யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள பிரதேச செயலககங்கள் மற்றும் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலுள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள், கட்டடங்கள், தொல்பொருள் சின்னங்கள் ஆகியவற்றின் விவரங்கள் இடம்பெற்றுள்ளன.

ஆங்கில மொழியில் தொகுக்கப்பட்ட இந்த நூல் 27 பக்கங்களைக் கொண்டுள்ளது. வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் மற்றும் சின்னங்களின் அழகிய வர்ணப் படங்களுடன் இந்த நூல் வெளியிடப்பட்டுள்ளது. (த-14-9)

# பாண் விலை அதிகரிக்கும்

பிறிமா, செரண்டிப் ஆகிய நிறுவனங்கள் மாவின் விலையை அதிகரித்துள்ளதால் பாண் உட்பட பேக்கரி உற்பத்திப் பொருள்களின் விலை உயர்வைத் தவிர்க்கமுடியாது. - இப்படி பேக்கரி உரிமையாளர் சங்கத்தின் தலைவர் என்.கே. ஜயவர்தன நேற்றுத் தெரிவித்தார்.

இது தொடர்பாக எமது சங்கம் இன்று அல்லது நாளை கூடி இறுதி முடிவை எடுக்கும் என்றும் அவர் கூறினார். செரண்டிப் நிறுவனம் கோதுமை மாவின் விலையை 3 ரூபாவால் அண்மையில் அதிகரித்தது. இந்த நிலையிலேயே பிறிமா நிறுவனமும் நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் அமுலுக்குவரும் வகையில் 4 ரூபா 10 சதத்தால் மாவின் விலையை அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ-சி)

உதயன்
20 ஏப்ரல் 2011 புதன்கிழமை

# கிழக்கு மாகாணப் புனரமைப்புக்கு 550 மில்லியன் ரூபா உதவி

மட்டக்களப்பு,ஏப்.20

கிழக்கு மாகாணத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசத்தில் வீதிகள், குளங்கள், நீர்ப்பாசன வீதிகள் ஆகியவற்றை புனரமைப்பதற்காக 550 மில்லியன் ரூபாயை பொருளாதார அபிவிருத்தி அமைச்சு வழங்கியுள்ளது.

இது பற்றி ஆராயும் விசேட கூட்டமொன்று கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி நீர்பாசனம், நிர்மாணம், கிராமிய மின்சாரம், நீர்வழங்கல் அமைச்சர் எம்.எஸ்.உதுமாலெப்பை தலைமையில் அவரது அமைச்சக கலந்துரையாடல் மண்டபத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் திட்டப் பணிப்பாளர் எஸ்.கே. லியனகே மற்றும் அதிகாரிகளுடன் கிழக்கு மாகாண அமைச்சின் வீதி அபிவிருத்தி திணைக்களம், நீர்ப்பாசன திணைக்களம் என்பனவற்றின் மாகாண பணிப்பாளர்கள், பொறியியலாளர்கள் எனப் பல அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

இந்த வருடத்தில் இந்தத் திட்டத்திற்கு அமைவாக திருகோணமலை, அம்பாறை மாவட்டங்களுக்கு தலா 150 மில்லியன் ரூபாவும் மட்டக்களப்பு மாவட்டத்துக்கு 250 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது. (ச)

## நீரூற்றி வளர்போம்.....



பங்களாதேஷுக்கு பயணம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, டாக்கா நகரின் சவார் பிரதேசத்தில் மாங்கன்று ஒன்றினை நட்டுவைத்து நீரூற்றுகின்றார். (ச)

## ஹெரோயின் விற்பனை; ஒருவர் கைது

மாத்தளை மாவட்டத்தில் நீண்ட காலமாகக் ஹெரோயின் வியாபாரத்தில் ஈடுபட்டிருந்த தேசிய சேவையாளர் சங்கத்தின் முன்னாள் உதவிச் செயலாளர் ஒருவர் 10 கிராம் ஹெரோயினுடன் கடந்த ஞாயிற்றுக்கிழமை அளவத்துகொட பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவரிடம் மேற்கொண்ட விசாரணைகளின்போது மாதமொன்றுக்கு நான்கு அல்லது ஐந்து தடவைகள் மாத்தளை மாவட்டத்தில் இரகசியமான முறையில் ஹெரோயின் விற்பனை செய்துவந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர். அலவத்துகொட பொலிஸ் பொறுப்பதிகாரி நிஷாந்த ஹெட்டியாராச்சியின் தலைமையில் மேலதிக விசாரணைகள் நடைபெற்று வருகின்றன. (ச-5)

## தவக்காலச் சிந்தனை



### கல்வாரி குன்றில் இறப்பும் - பிறப்பும்

ஒரு நாட்டில் இராணுவத்துக்கும், கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே யுத்தம் நடைபெற்றது. இதனால் பொதுமக்கள் கொல்லப்பட்டனர். பலர் தமது உயிரைக் காத்துக்கொள்ள காடுகள், மலைகள், புதர்கள் போன்ற பல்வேறு இடங்களில் தஞ்சமடைந்தனர்.

ஒரு நாள் இராணுவம் கிளர்சியாளர்கள் தங்கியிருப்பதாக நம்பப்பட்ட ஒரு கிராமத்தைக் குறிவைத்து நகர்ந்து வந்தனர். இதனை அறிந்த மக்கள் தப்பியோட ஆரம்பித்தனர். சிலர் ஒரு பாலத்தின் அடியில் பயத்துடன் பதுங்கியிருந்தனர். அப்பொழுது ஒரு பச்சிளம் குழந்தை அழ ஆரம்பித்துவிட்டது. குழந்தையின் தாயும் அழுகையை நிறுத்த முயற்சித்தும் முடியவில்லை. மற்றவர்கள் குழந்தை தங்களைக் காட்டிக் கொடுத்துவிடுமோ என்று பயந்தனர். அதனால் தாய் தனது கைகளால் குழந்தையின் வாயைப் பொத்தினாள். இராணுவம் அவர்களை கடந்து சென்றபின் தனது குழந்தையைத் தட்டி எழுப்பினாள். அது அழவில்லை. இறந்திருந்தது. வீரத்தாய் தன்னுடன் இருந்த மக்களை காப்பதற்காய் தன் குழந்தையைத் தியாகம் செய்தாள்.

கல்வாரி குன்றில் நடந்ததும் இதுவே. தாய் மரியாள் உலகின் மக்களைக் காப்பாற்ற இறைதிருவுளத்துக்குப் பணிந்து தன் மகனைத் தியாகம் செய்தாள். அம் மாபெரும் தியாகத்தினால் உலகமே சாத்தானின் பிடியிலிருந்து மீட்கப்பட்டது. படைப்பின் தொடக்கத்தில் இறைவன் "ஆகட்டும்" என்றார். உலகம் உண்டாயிற்று. ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன் மரியாள் கபிரியேல் தூதர் முன் "ஆகட்டும்" என்றார். இயேசு உருவானார். கல்வாரி குன்றினிலே மரியாள் மீண்டும் "ஆகட்டும்" என்றார், மீட்பு உருவானது. சிலுவையடியில் தனது வேதனையில் இளைய மைந்தர்களாகிய நம்மை அன்னை மரி ஈன்றெடுத்தாள். இதை சிலுவையினின்று நோக்கிய இயேசு "இதோ உன் மகன், இதோ உன் தாய்" என்று சொல்லி அதை வெளிப்படுத்தினார். மூத்தவரின் இறப்பிலே இளையவர்கள் பிறக்கின்றனர்.

**க.அருள்நேசன்,** குருநகர்.

## பாவனைக்குதவாத அரிசி கைப்பற்றப்பட்டது

அநுராதபுரம் கிழக்கு, நுவரகம் பிரதேசத்தில் பாவனைக்குதவாத 5,000 கிலோகிராம் அரிசியினை அநுராதபுரம் மாநகர சபையினர் கைப்பற்றியுள்ளனர். அண்மையில் அநுராதபுரம் மாவட்டத்தில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஐக்கிய நாடுகள் சபையின் உலக உணவுஸ்தாபனத்தால் ஒரு தொகை அரிசியை விநியோகித்துள்ளது.

இந்த அரிசி வகைகளில் புழுக்கள் இருந்தமை தொடர்பாக நபர் ஒருவர் அநுராதபுரம் மாநகர சபையிடம் தெரிவித்ததையடுத்தே இந்த அரிசி கைப்பற்றப்பட்டது. (ச)

# மரண அறிவித்தல்

## திருமதி இராசையா சந்திரவதனா



ஏழாலை தெற்கு, விழிசிட்டியைப் பிறப்பிடமாகவும் ஏழாலை தெற்கு, களபாவோடையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசையா சந்திரவதனா அவர்கள் கடந்த (17.04.2011) ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசா- தங்கச்சிப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மகளும் காலஞ்சென்ற இராசையா (ஓய்வு பெற்ற புகையிரத பாதுகாவலர்) அவர்களின் அன்பு மனைவியும் சச்சிதானந்தத்தின் அருமைச் சகோதரியும் சந்திரகாந்தன் (கொக்குவில்), ஜெயந்திமாலா (ஜேர்மனி), தயாநிதி (லண்டன்), சிவநிதி (இந்தியா), இந்திரகாந்தன் (கனடா), பத்மநிதி (ஏழாலை), கலாநிதி (ஜேர்மனி), உமாநிதி (பிரான்ஸ்), சிறிகாந்தன் (சுவிஸ்), ஜீவகாந்தன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயும் ஜெயமலர் (கொக்குவில்) மற்றும் காலஞ்சென்றவர்களான இரவீந்திரராஜா, இரவீந்திரன் மற்றும் இராஜேஸ்வரன் (இந்தியா), ரஞ்சிதமலர் (கனடா), காலஞ்சென்ற இராஜரட்ணம் மற்றும் ஜெகதீஸ்வரன் (ஜேர்மனி), காலஞ்சென்ற சோதிராஜா மற்றும் வனஜா (சுவிஸ்), ஸோகலைவாணி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.04.2011) வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக உசத்தியோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தகவல்:*
**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.**

ஏழாலை.
தொ.பே.: 0213735822.

(சி/577737) (38,23,50)

# சூடு கண்ட பின்னும்.....

## கோணல் கோலங்கள்

"சூடு கண்ட பூனை அடுப்பங் கரையை நாடாது" என்று சொல்வார்கள். ஆனால் அதெல்லாம் காலாவதியான விடயமாகிவிட்டதோ என்று எண்ணத் தோன்றுகின்றது. சில நாள்களாக வல்லைவெளியில் தொடர்ச்சியாக நடைபெற்றுவருகின்ற வீதி விபத்துகளே இவ்விதமான முடிவை எடுக்கத் தூண்டுகின்றன.

யாழ்-பருத்தித்துறை வீதி அகலிப்புப் பணிகளின் முதற்கட்ட நிறைவில் நெல்லியடியில் இருந்து வல்லைவெளியின் ஒரு பகுதிவரை 'காப்பெற்' வீதி அமைக்கப்பட்டுள்ளது. அதன் பின்னரே இத்தகைய விபத்துக்கள் அதிகரித்திருக்கின்றன எனக் கூறப்படுகின்றது. வீதி விபத்துக்களைக் குறைக்கும் நோக்கோடு தானே வீதி அகலிப்பும், 'காப்பெற்' வீதிகளும் அமைக்கப்பட்டுள்ளன. அப்படியிருக்கையில் 'காப்பெற்' வீதிக்கும், வீதி விபத்துக்களுக்கும் என்ன சம்பந்தம்?

சம்பந்தம் இருக்கிறது. வாகனங்களின் செலுத்துகைக்கு எந்தவித தொந்தரவும் ஏற்படாது விரைவாகப் பயணம் செய்யும் வசதி 'காப்பெற்' வீதிகளில் உண்டு.

'காப்பெற்' றோட்டில் 'அக்ஸிலேட்டர்' எப்படி தன்ர பாட்டில முறுக்குப்படுகுதெண்டே தெரியாமல் இருக்கு. 'காப்பெற்' றோட்டில இறங்கினவுடனேயே 'ஸ்பீற்றா' ஓடவேணும் போல கிடக்கு. மற்றவங்கள் சுப்பர் கப் மோட்டர் சைக்கிள்ளேயே பறந்து கொண்டு போகேக்க நாங்கள் பல்ஸரில ரயரில கறையான் பிடிக்கிற அளவுக்கு ஸ்லோவா போன என்ன மரியாதை? அதோட 'காப்பெற்'றில எப்படி ஸ்பீற்றா போனாலும் ஒரு குலுக்கல் கூட இல்லை!

மின்னல் வேகத்தில் மோட்டார் சைக்கிளைச் செலுத்துவதில் அலாதிப் பிரியம் கொண்ட இளைஞன் ஒருவனின் அனுபவம் இது. வேகமாகச் மோட்டார் சைக்கிளைச் செலுத்துவதற்கு ஒரு மறைமுகத் தூண்டலை 'காப்பெற்' வீதிகள் ஏற்படுத்திக் கொடுக்கின்றன. அதனால் வழமையாகவே நெருக்கடி மிகுந்த - பள்ளம் திட்டி நிறைந்த- வீதிகளிலேயே தங்கள் மோட்டார் சைக்கிளை விமானத்தின் வேகத்துக்கு ஈடுகொடுக்கும் வகையில் செலுத்தி சாகசம் புரிந்து தம் ஹீரோத்தனத்தை நிரூபிக்க அரும்பாடு படும் இளைஞர்கள், 'காப்பெற்' வீதி கிடைத்தால் விடுவார்களா என்ன?

அவர்களின் வீரவிளையாட்டுக்கு நல்ல உதாரணம் கடந்த வெள்ளிக்கிழமை - 15ஆம் திகதி - வல்லையில் இடம்பெற்ற கோரவிபத்து. நெல்லியடியில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்துகொண்டிருந்த இரு இளைஞர்கள் இம்மை மறுமையில்லா வேகத்தோடு பல்ஸரில் பறந்து வந்தார்கள். புறாப்பொறுக்கிச் சந்தியைக் கடந்து வல்லை வெளிப்பக்கமாக பல்ஸரைத் திருப்பிய போது அது இவர்களின் சொல்வழியைக் கேளாமல் எதிரே நிமிர்ந்து நின்ற உயர்வலு மின்சாரத் தூணோடு மல்லுக்கட்டி - பின்னர் அதே வேகத்தில் தலை சுழன்று - வீழ்ந்தது. பல்ஸர் வந்த வேகமும் இடித்த இடியும் பெரிய லொறி மோதினால் கூட விழ மறுக்கின்ற மின் தூணையே சாய்த்த அதிசயம் அங்கு நிகழ்ந்தது. பல்ஸரில் வந்தவர்கள் மின் கம்பத்தில் மோதுண்டு, இறுதியில் ஒருவர் உயிரிழக்கவும் நேரிட்டது.

இந்தச் செய்திகளையெல்லாம் தெரிந்த பின்னரும், அடுத்து வந்த நாள்களிலும் விபத்துகள் வல்லைவெளியில் தொடரவே செய்கின்றன. அதிவேகமாக வாகனங்களைச் செலுத்துவதே விபத்துக்கள் ஏற்படுவதற்கு மிகமுக்கியமான காரணம். அன்றைக்கு வல்லைவெளியில் மின் தூணை இடித்து வீழ்த்திய பல்ஸர், எதிரே வந்த இன்னொரு மோட்டார் சைக்கிளில் மோதியிருந்தால் அப்பாவியான அந்த மோட்டார் சைக்கிளும் சுக்குநூறாகியிருப்பதுடன், அதில வந்தவர்களும் சிதறியிருப்பர். தலைதெறிக்கும் வேகத்தால் தாமும் விபத்துக்குள்ளாகி மற்றவர்களுக்கும் பாதிப்பை ஏற்படுத்தும் கைங்கரியத்தையே இளைஞர்கள் தொடர்ந்தும் பின்பற்றி வருகின்றார்கள்.

வண்ணத்துப்பூச்சி விளைவு (butter-fly effect) என்று சொல்கின்ற நிகழ்வுகள் இத்தகைய விபத்துக்களால் ஏற்படுவதை இந்த மின்னல்வீரர்கள் உணர வேண்டும். அதாவது, எங்கோ ஒரு மூலையில் செய்யப்படுகின்ற ஒரு காரியம், ஒரு தொடர் சங்கிலியாக நீண்டு சென்று அந்தக் காரியத்தோடு நேரடியாகத் தொடர்பற்றவர்கள் மீதும் தாக்கத்தை உண்டு பண்ணுவதையே இவ்விதம் சொல்வார்கள். உதாரணமாக, அன்றைக்கு மின் தூண் வீழ்ந்ததால் அன்று இரவு 9 மணிவரை - ஏறக்குறைய 6 மணித்தியாலங்கள் - வடமராட்சிப் பகுதிக்கான மின்விநியோகம் முற்றாகத் துண்டிக்கப்பட்டிருந்தது. யாரோ இருவர் செய்த தவறால் ஆயிரக்கணக்கான மக்கள் 6 மணித்தியாலங்கள் மின்சாரம் இல்லாமல் சிரமப்படவேண்டியிருந்தது. மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளுக்கு அன்றைக்கு முட்டுக்கட்டை ஏற்பட்டது.

ஓடுகாலி

வேகம் விவேகமல்ல என்பதை இளைஞர்கள் புரிந்து கொள்ளவேண்டும். அதேவேளை இன்னொரு விடயமும் இங்கு சுட்டிக்காட்டப்பட வேண்டும். தொடர்ந்து விபத்து நிகழும் பகுதியாக அடையாளம் காணப்பட்டுள்ள வல்லை வெளியில் அதைத் தவிர்க்கும் வகையில் வேகக்கட்டுப்பாட்டை அமுல்படுத்த வேண்டும். சாரதிகள் குறித்த வேகக்கட்டுப்பாட்டைப் பின்பற்றுகிறார்களா என்பதைப் போக்குவரத்துப் பொலிஸார் கண்காணிக்கவும் வேண்டும். இதன் மூலம் ஓரளவுக்கேனும் வல்லைவெளி விபத்துகளைத் தவிர்க்க முடியும்.

ஆனால் இதெல்லாம் நடக்கிற கதையா? என்று குடாநாட்டு நிர்வாகத்தைப் பற்றி நன்குணர்ந்தவர்கள் கேட்கிறார்கள். உரியவர்களே! இது உங்களுக்கும் கேட்கிறதா?

# இலங்கை - பங்களாதேஷுக்கு இடையில் 5 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கைச்சாத்து

டாக்கா,ஏப்.20

இலங்கைக்கும் பங்களாதேஷுக்கும் இடையில் ஐந்து புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டுள்ளன. விவசாயம், கல்வி, கால்நடை, தகவல் மற்றும் வர்த்தகத் துறையிலான ஒத்துழைப்புகள் குறித்து இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் அமைந்துள்ளன.

பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசீனாவின் காரியாலயத்தில் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் பங்களாதேஷ் பிரதமர் ஹசீனா ஆகியோர்களின் முன்னிலையில் இந்த ஒப்பந்தங்கள் கைச்சாத்தாகின.

இலங்கை வெளியுறவு அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தமது நாட்டின் சார்பிலும் பங்களாதேஷின் சார்பில் விவசாய அமைச்சர் மதியா சவுத்திரி, கல்வி அமைச்சர் நூருல் இஸ்லாம், மீன்பிடி மற்றும் கால்நடைகள் அமைச்சர் அப்துல் லதீப் பிஸ்வாஸ், தகவல் அமைச்சர் அபுல்கலாம் ஆஸாத் மற்றும் வர்த்தக அமைச்சர் பாரூக் கான் ஆகியோர்கள் கையெழுத்திட்டனர்.

இலங்கையின் ஏற்றுமதி வளர்ச்சி சபை மற்றும் பங்களாதேஷின் ஏற்றுமதி முன்னேற்றச் சபைக்குமிடையில் இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் செயற்படவிருக்கின்றன.

இதற்கு முன்னதாக இரு நாட்டுத் தலைவர்களும் இருதரப்பு விவகாரங்கள் தொடர்பாக ஆலோசனை நடத்தினார்கள். அமைச்சரவை உறுப்பினர்கள், வெளியுறவு செயலாளர்கள், பிரதமரின் பிரதானிகள் மற்றும் ஊடகச் செயலாளர்களும் பிரசன்னமாய் இருந்தனர்.

பயணம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி வெளியுறவு அமைச்சர் டிப்பு மோனியையும் சந்தித்துக் கலந்துரையாடினர். பின்னர் அமைச்சர் தெரிவிக்கையில், கொழும்பும் டாக்காவும் நம்பிக்கைக்குரிய நண்பர்கள், இலங்கை ஜனாதிபதியின் வருகை இரு நாடுகளுக்குமிடையில் உறவுகளை மேலும் வலுப்படுத்தும் - என்றார்

(ப)

# முகாமைத்துவ உதவியாளர் பதவிக்கு 2 ஆயிரத்து எழுநூறு பேர் நியமனம்

கொழும்பு,ஏப்.20

அரச முகாமைத்துவ உதவியாளர் பதவியில் மூன்றாம் தரத்துக்காக 2ஆயிரத்து 700 பேரை நியமனம் செய்ய தேசிய முகாமைத்துவ மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இந்தப் பதவிக்கு 5 ஆயிரம் பேரை நியமிக்க அரசு அங்கீகாரம் அளித்துள்ளது. முதற்கட்டமாக 2 ஆயிரத்து 333 பேர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடமிருந்து நியமனக் கடிதங்களைப் பெற்றுக் கொண்டனர்.

2009ஆம் ஆண்டு நடந்த போட்டிப் பரீட்சையில் சித்தி பெற்றவர்களில் இருந்தே இந்த நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

தபால் விநியோகத்தில் ஏற்பட்ட தாமதங்கள், வதிவிடத்தை உறுதி செய்வதில் ஏற்பட்ட பிரச்சினைகள் உட்படப் பல்வேறு காரணங்களால் தமது நியமனங்களைப் பெற்றுக் கொள்ளத் தவறியவர்களுக்குப் புதிதாக நேர்முகப் பரீட்சையொன்று நடைபெறவுள்ளது.

2010 ஆம் ஆண்டு மற்றுமொரு போட்டிப் பரீட்சையும் நடத்தப்பட்டது. அதில் சித்தியடைந்தவர்களுக்கும் இந்த நியமனம் வழங்கப்படுமென அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

(ச-5)

# நிபுணர் குழு அறிக்கை மீதான ஐ.தே.கட்சியின் நிலைப்பாடு

## இன்றைய கூட்டத்தில் ஆராயப்படும்



கொழும்பு,ஏப்.20

இலங்கை தொடர்பாக ஐ.நா. நிபுணர் குழு வெளியிட்டுள்ள அறிக்கை தொடர்பாக ஐ.தே.கட்சி இன்று கூடி ஆராயவிருக்கின்றது.

கட்சியின் ஊடகக் குழுவும் சிரேஷ்ட உறுப்பினர்களும் சந்தித்து நிபுணர் குழுவின் அறிக்கையை ஆராய்வார்கள் என்று ஐ.தே.கவின் கூட்டு பிரதித் தலைவர் கரு ஜயசூரிய தெரிவித்தார். கட்சியின் அதிகாரபூர்வ நிலைப்பாடு தொடர்பாக இந்தக் கூட்டத்தில் ஓர் ஏகோபித்த முடிவு எடுக்கப்படும் என்றும் கரு ஜெயசூரிய தெரிவித்தார்.

ஆனால், முழு அறிக்கையும் வெளியாகி ஆராயப்பட்ட பின்னரே முறையான அறிக்கையொன்று வெளியிடப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க வெளிநாட்டில் இருப்பதால் இன்றைய கூட்டம் கரு ஜெயசூரியவின் தலைமையிலேயே நடைபெறும் என்று தெரிகிறது. (ப)

# இலங்கைக்கான உதவியை அடுத்த வருடம் அதிகரிக்க உலக வங்கி தீர்மானம்

இலங்கைக்கு வழங்கி வரும் உதவித் தொகையை அடுத்த வருடம் இரட்டிப்பாக்குவதற்கு உலக வங்கி முன்வந்துள்ளது. சர்வதேச நிதி ஒத்துழைப்பு சிரேஷ்ட அமைச்சர் சரத் அமுனுகம, உலக வங்கியின் முகாமைத்துவப் பணிப்பாளர் கலாநிதி ஒக்கொன்ஜோ இவெலாவை வாஷிங்டனில் சந்தித்த போதே இது தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இலங்கையின் அபிவிருத்திப் பணிகளுக்கு உலக வங்கி தொடர்ச்சியாக வழங்கிவரும் ஆதரவுக்கு நன்றி தெரிவித்த அமைச்சர், உலக வங்கியின் ஆதரவுடன் முன்னெடுக்கப்பட்டுவரும் அபிவிருத்திப் பணிகள் தொடர்பில் கலந்துரையாடியுள்ளார்.

பொருளாதார ரீதியில் நாடு முன்னேறிச் செல்வதற்கான திட்டங்களுக்கு உலக வங்கி தொடர்ந்தும் உதவிகளை வழங்கும் எனக் குறிப்பிட்ட ஒக்கொன்ஜோ, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீடுகளை அதிகரிப்பதன் மூலம் நாட்டின் வருமானத்தை அதிகரிக்கும் இலங்கை அரசின் எதிர்காலத் திட்டத்துக்கு உலக வங்கி ஒத்துழைப்பு வழங்கும் என்றும் அமைச்சர் சரத் அமுனுகமவிடம் தெரிவித்துள்ளார்.

இலங்கை பொருளாதார ரீதியில் துரித அபிவிருத்தி அடைந்து வரும் நாடு என்பதை ஏற்றுக்கொண்டிருக்கும் உலக வங்கியின் முகாமைத்துவப் பணிப்பாளர், புனர்நிர்மாண மற்றும் அபிவிருத்திக்கான வங்கியிலிருந்து நிதி உதவிகளைப் பெறுவதற்கான தகுதியைப் பெற்றுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்

இலங்கையில் தற்பொழுது முன்னெடுக்கப்பட்டிருக்கும் அபிவிருத்திப் பணிகளைப் பாராட்டியிருக்கும் உலக வங்கியின் முகாமைத்துவப் பணிப்பாளர் ஒக்கொன்ஜோ இவெலா, அபிவிருத்திகள் மற்றும் திறன்களை இலங்கை ஏனைய தெற்காசிய நாடுகளுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்பதையே உலக வங்கி எதிர்பார்ப்பதாகவும் அமைச்சர் சரத் அமுனுகமவிடம் கூறியுள்ளார்.

(ச)

# தெய்வேந்திரமுனைக்கு விரைவில் பருத்தித்துறையிலிருந்து பஸ்சேவை

## இரு புதிய பஸ்கள் கொள்வனவு

வடமராட்சி, ஏப். 20

வடக்கையும், தெற்கையும் இணைக்கும் விதத்தில் பருத்தித்துறையிலிருந்து தெய்வேந்திரமுனைக்குப் புதிய பஸ் சேவை ஒன்று விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

பருத்தித்துறை இ.போ.ச. டிப்போ 'லீசிங்' திட்டத்தின் கீழ் புதிதாகக் கொள்வனவு செய்யும் இரு புதிய பஸ்களும் இந்தப் புதிய பஸ்சேவையில் ஈடுபடுத்தப்படும் என பருத்தித்துறை இ.போ.ச. டிப்போ முகாமையாளர் எஸ்.குலபால செல்வம் தெரிவித்தார்.

பருத்தித்துறையிலிருந்தும், தெய்வேந்திரமுனையிலிருந்தும் அதிகாலை புறப்படும் இந்தப் புதிய சேவையில் ஈடுபடும் பஸ்கள் அன்றைய தினம் மாலை அந்தந்த இடங்களைச் சென்றடைந்து விடும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மஹிந்த சிந்தனைத் திட்டத்தின்கீழ் இந்தப் புதிய பஸ் சேவை ஆரம்பிக்கப்படவுள்ளது. மத்திய போக்குவரத்துச் சபை பருத்தித்துறை டிப்போவை இந்தச் சேவையை ஆரம்பிக்குமாறு பணித்துள்ளது. இதற்கமைய கொடிகாமம், கிளிநொச்சி, வவுனியா, அநுராதபுரம், புத்தளம், நீர்கொழும்பு, காலி, மாத்தறை ஊடாகச் சென்றுவரும் இந்தப் புதிய பஸ் சேவைக்கு வழங்கப்பட்டுள்ள பாதை இலக்கம் 87/32 ஆகும். (த-236)

# தென்னிலங்கைச் சந்தைகளுக்கு குடாநாட்டிலிருந்து வெங்காயம்

யாழ்ப்பாணம், ஏப்.20

குடாநாட்டில் வெங்காயத்தின் விலை மீண்டும் அதிகரித்துள்ளது. கடந்த சில தினங்களாகச் சந்தைகளில் வெங்காயத்தின் விலை உயர்ந்துள்ளது. கடந்த மாதத்தில் அறுவடை செய்யப்பட்ட வெங்காயம் தினமும் தென்னிலங்கைச் சந்தைகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றமையே இந்தத் திடீர் விலை அதிகரிப்புக்குக் காரணம் என்று விவசாயிகள் தெரிவித்தனர்.

திருநெல்வேலி பிரதான சந்தையில் கடந்த வருடத்தில் ஒருகிலோ 100 ரூபாவாக விற்பனை செய்யப்பட்ட சின்ன வெங்காயம் நேற்று கிலோ 150 ரூபாவாக விலை உயர்ந்து காணப்பட்டது. வெங்காயத்தின் இந்த விலைத் தளம்பலினால் நுகர்வோர் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

குடாநாட்டில் இம்முறை சிறுபோக வெங்காயச் செய்கையிலும் விவசாயிகள் அதிக ஆர்வம் காட்டவில்லை. விதை வெங்காயத்தின் விலை அதிகரிப்பே இதற்குக் காரணம் என்று கூறப்பட்டது.

பயிரிடப்பட்ட குறைந்த அளவிலான வெங்காயமும் தென்னிலங்கைச் சந்தைகளுக்கு ஏற்றுமதி செய்வதால் குடாநாட்டுச் சந்தைகளில் அதன் விலை திடீரென எகிறியுள்ளது. (த-26)

# யாழ்.-காங்கேசன்துறை வீதியில் மதகுகள் புனரமைப்பு ஆரம்பம்

வலி.வடக்கு,ஏப்.20

யாழ்ப்பாணம் - காங்கேசன்துறை வீதி அகலிப்புப் பணிகளின் ஒரு கட்டமாக இணுவிலுக்கும் சுன்னாகத்துக்கும் இடைப்பட்ட பகுதியில் உள்ள மதகுகளின் அகலிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதற்காகப் பெரிய கிடங்குகள் மதகுகளின் குறுக்காக வீதியின் அரைவாசிப் பகுதிக்கு வெட்டப்பட்டுள்ளன.

இந்தக் கிடங்குகள் இருப்பதைப் பொதுமக்கள் மற்றும் வாகனங்களுக்கு அடையாளப்படுத்தும் வகையில் சிவப்பு விளக்குகள் பொருத்தப்பட்டுள்ள போதிலும் குறிப்பிட்ட சமிஞ்சை விளக்குகள் இரவு நேரத்தில் எரியாது காணப்படுகின்றன.

இந்த நிலையில் பாதசாரிகளும் மற்றும் வாகனச் சாரதிகளும் இந்தக் கிடங்குகளில் சிக்குண்டு விபத்துக்களுக்கு உள்ளாகும் சம்பவங்களும் இடம்பெறுகின்றன. (த-86)

## எதிலும் நாங்கள்...



பெண்களின் பங்கு: நல்லூர் பிரதேச செயலகம் சர்வதேச மகளிர் தினத்தையொட்டி நடத்திய போட்டிகளின் பரிசளிப்பு வைபவம் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது. யாழ் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் வெற்றி பெற்ற யுவதி ஒருவருக்குச் சான்றிதழ் வழங்குகின்றார். (த-7)

# விச ஜந்துக்களால் கடியுண்ட மூவர் வைத்தியசாலையில்

தென்மராட்சி,ஏப்.20

விஷஜந்துக்களால் கடியுண்டவர் கடந்த 17 ஆம் திகதி சாவகச்சேரி வைத்தியசாலைக்கு கொண்டுவரப்பட்டுள்ளார்.

கொழும்பிலிருந்து வாகனத்தில்வந்த வேளையில் முகமாலைப் பகுதியில் இயற்கைக் கடன் கழிப்பதற்க்காக பற்றைப்பகுதிக்குச் சென்ற வேளையில் கருங்குளவிகளால் தாக்கப்பட்ட கொழும்பைச் சேர்ந்த பௌசியா (வயது-37) என்பவரும் கொடிகாமம் பெரிய நாவலடிப் பகுதியில் மரத்தில் இருந்து வீழ்ந்த பனையோலையை எடுத்த தனீஸ்குமார் (வயது-10) என்னும் சிறுவனும்

கிளிநொச்சிப் பகுதியில் ஆணியில் தொங்க விட்டிருந்த தொப்பியை எடுத்து அணிந்த வேளையில் அதனுள் இருந்த புலிமுகச் சிலந்தி தலையில் கடித்த மிருசுவில் தவசிகுளத்தைச் சேர்ந்த ஆர்.நிபேன் (வயது-5) ஆகியோரே சாவகச்சேரி வைத்தியசாலையில் சிகிச்சைக்காகக் கொண்டுவரப்பட்டுள்ளனர். (த-200)

# வலி. தென்மேற்கில் வீதிகளை புனரமைக்க 7.5 மில்லியன் ரூபா

யாழ்ப்பாணம், ஏப். 20

இளவாலை, ஆலங்குழாய், உச்சியோடை ஆகிய பகுதிகளில் உள்ள வீதிகளின் புனரமைப்புக்காக 7.5 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஆலங்குழாய் பிரதான வீதி, உச்சியோடை இராஜகாரியர் வீதி, இளவாலை சேமக்காலை வீதி ஆகியவற்றின் புனரமைப்புப் பணிகளுக்காக இந்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தற்போது வலி.தென்மேற்குப் பிரதேச சபைக்கு 'நெல்சிப்' திட்டத்தின் கீழ் வீதிப் புனரமைப்புப் பணிக்காக நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்த நிதி ஒதுக்கீடுகள் கிடைத்தவுடன் அபிவிருத்திப் பணிகள் துரித கதியில் மேற்கொள்ளப்படும் என வலி. தென்மேற்குப் பிரதேச சபையினர் தெரிவித்தனர். (த-313)

# பாஷையூர் மீன்பிடித் துறைமுக அபிவிருத்திப் பணி ஸ்தம்பிதம்

கொழும்புத்துறை, ஏப்.20

பாஷையூர் கடற்றொழில் துறைமுக அபிவிருத்திப் பணிகள் ஸ்தம்பிதம் அடைந்து காணப்படுகின்றன.

இந்தப் பணிகளை ஆரம்பிக்கவென அந்தப் பகுதி கடற்கரையோரங்களில் குவிக்கப்பட்ட பெரிய கற்கள் 6 மாதங்களுக்கும் மேலாக அப்படியே உள்ளன.

இந்தப் பகுதி கடற்றொழிலாளர்களின் கடற்போக்குவரத்தைச் சீர் செய்யவும் வள்ளங்களைப் பாதுகாப்பான முறையில் நங்கூரமிட்டு நிறுத்திவைக்கவும் கடல் பகுதியை ஆழப்படுத்தி துறைமுகத்தைப் புதிதாக அமைக்கும் பொருட்டு இந்தக் கற்கள் கொண்டுவரப்பட்டிருந்தன.

- வீதியோரமாகவும் கடலோரமாகவும் போடப்பட்டுள்ள பெரிய கருங்கற்கள் நீண்டகாலமாக இருப்பது கடற்றொழிலாளர்களின் தொழிற் பாடுகளுக்கும், போக்குவரத்துக்கும் பல சிரமங்களை ஏற்படுத்துகின்றன எனவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

தற்போதுள்ள துறைமுக அணைகள் அமைக்கப்பட்டு நீண்ட காலமாகிவிட்டது. அவை இப்போது சேதமடைந்துள்ளன.

கடல் ஆழமின்மையால் தொழிலை மேற்கொண்டு வரும் வள்ளங்கள், இயந்திரப் படகுகளைத் தொலைவில் நிறுத்தி விட்டு வலைகள், மீன்களை நீண்ட தூரம் சுமந்து வரவேண்டிய இக்கட்டான நிலையில் தொழிலாளர்கள் சிரமப்படுகின்றனர்.

எனவே, இந்த வேலைத் திட்டத்துடன் தொடர்புடையவர்கள் கடற்றொழிலாளர்களின் நன்மை கருதி விரைவில் இந்தப் பணிகளை ஆரம்பிக்க வேண்டுமென இந்தப் பகுதிக் கடற்றொழிலாளர்கள் கேட்டுள்ளனர். (த-135)

# மீளக்குடியமர்ந்துள்ள மக்களுக்கு பவுஸர்கள் மூலம் குடிதண்ணீர்

யாழ்ப்பாணம்,ஏப்.20

மக்கள் மீளக்குடியமர்ந்துள்ள பகுதிகளில் குடிதண்ணீர்ப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்தவற்குப் பவுஸர்கள் மூலம் இலவசமாகக் குடிதண்ணீர் வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

வலி.தென்மேற்குப் பிரதேச சபைக்கு உட்பட்ட மாதகல் கிழக்குப் பிரதேசங்கள், வடலியடைப்பு, சகாயபுரம் ஆகிய பிரதேசங்களுக்கு முதற்கட்டமாக இவ்வாறு குடிதண்ணீர் வழங்கப்படவுள்ளது.

'யுனிசெவ்' பொதுமட்ட அமைப்புக்கள் மற்றும் வலி.தென்மேற்குப் பிரதேச சபை ஆகியன இணைந்து இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்தப் பகுதிகளில் உள்ள மக்களுக்கு பவுஸர் மூலம் 24 மணி நேரமும் குடிதண்ணீரைப் பெறக்கூடிய முறையில் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன எனவும் கூறப்பட்டது. (த-313)

# குடாநாட்டின் பிரதான வீதிகளில் ஒற்றைக் கதவு பெரிய பஸ்கள்

## தனியார் சிற்றூர்த்திச் சங்கங்கள் அனுமதி

வடமராட்சி, ஏப். 20

யாழ்.குடாநாட்டிலுள்ள பிரதான பாதைகளில் பயணிகள் போக்குவரத்துக்கு ஒற்றைக் கதவு கொண்ட பெரிய பஸ்களை தனியார் சிற்றூர்திச் சேவைச் சங்கங்கள் அறிமுகப்படுத்தி வருகின்றன.

தனியார் சிற்றூர்திச் சேவைச் சங்கங்களின் அங்கத்தர்வகள் நடுத்தர மினிபஸ்களையே காலம் காலமாகக் குடாநாட்டுப் பிரதான பாதைகளில் பயணிகள் பஸ் சேவைக்குப் பயன்படுத்தி வருகின்றனர்.

தற்போது இந்தப் பஸ்களுக்குப் பதிலாக ஒற்றைக் கதவு கொண்ட பெரிய பஸ்கள் பயணிகள் சேவைக்காக அமர்த்தப்பட்டு வருகின்றன.

பருத்தித்துறை - யாழ்ப்பாணம், கொடிகாமம்- யாழ்ப்பாணம் ஊர்காவற்றுறை -யாழ்ப்பாணம், காரைநகர் -யாழ்ப்பாணம், குறிகாட்டுவான்-யாழ்ப்பாணம், அச்சுவேலி -யாழ்ப்பாணம் ஆகிய பிரதான பாதைகளில் ஒற்றைக்கதவு கொண்ட பெரிய பஸ்கள் பயணிகள் சேவையில் ஈடுபட்டு வந்துள்ளதால் பயணிகள் நெருக்கடி இன்றிப் பயணம் மேற்கொள்ளக் கூடியதாக இருக்கிறது.

தேசிய போக்குவரத்து ஆணைக்குழு, யாழ்.மாவட்ட சிற்றூர்த்திச் சேவைச் சங்கங்களின் இணையம் ஆகியன யாழ்.மாவட்ட குடாநாட்டுப் பிரதான பாதைகளில் ஒற்றைக் கதவு கொண்ட பெரிய பஸ்களை மாத்திரம் சேவையில் ஈடுபட அனுமதி வழங்கியுள்ளன. இரட்டைக் கதவுகள் கொண்ட பெரிய பஸ்களைச்சேவையில் ஈடுபடுத்த அனுமதி வழங்கவில்லை.

குடாநாட்டில் 'ஏ' ஏபி தர வீதிகள் இருந்தும் இரட்டைக் கதவுகள் கொண்ட பஸ்கள் சேவைக்கு அனுமதிக்கப்படவில்லை. யாழ். மாவட்டம் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் இரட்டைக் கதவுகள் கொண்ட பஸ்கள் பயணிகள் பஸ் சேவைக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. யாழ்.மாவட்டத்தில் பருத்தித்துறை- ஆழியவளை, யாழ்ப்பாணம் - ஆழியவளை ஆகிய பாதையில் மாத்திரம் இரட்டைக் கதவுகள் கொண்ட பஸ் சேவைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. (த-236)

# பெரும்போக நெற் செய்கைக்கு யாழ்ப்பாணத்துக்கே கூடுதல் கடன்

## மத்திய வங்கி தெரிவிக்கிறது

யாழ்ப்பாணம்,ஏப்.20

பெரும்போக நெற் செய்கைக் கான விவசாயக்கடன் வழங்க லில் இலங்கையின் ஏனைய மாவட்டங்களை விட யாழ். மாவட் டம் முதன்மை பெற்றுள்ளதாக இலங்கை மத்திய வங்கியின் வட பிராந்திய முகாமையாளர் இ.சிறிதரன் தெரிவித்தார்.

அவர் இந்த விடயம் தொடர் பாக மேலும் தெரிவிக்கையில்:

2010/2011 ஆம் ஆண்டுக் கான பெரும்போக விவசாயச் செய்கைக்காக யாழ்.மாவட்டத் தில் 14 ஆயிரம் பேருக்கு 1.17 மில்லியன் ரூபா கடன் வழங்கப் பட்டுள்ளது. இந்தக்கடன் தொகை முன்னைய ஆண்டுகளுடன் ஒப் பிடுகையில் இரண்டு மடங்காக அதிகரித்துள்ளது.

இந்தக் கடன் வழங்கலில் இலங்கை வங்கியே அதிகளவி லான கடன்களை மக்களுக்கு வழங்கியுள்ளது. இதற்கு அடுத்த படியாக மக்கள் வங்கி கடன் களை வழங்கியுள்ளது. தனியார் வங்கிகளும் விவசாயக் கடன் களை வழங்கியுள்ளன எனவும் அவர் மேலும் தெரிவித்தார். இவ்வாறு அதிகளவிலான கடன் கள் வழங்கப்பட்டமைக்கான காரணம் தொடர்பில் கேட்ட போது

இதற்கு முக்கியமான கார ணம் ஏ-9 வீதி திறக்கப்பட்ட மையே ஆகும். இதன் மூலம் யாழ்.மாவட்ட விவசாயிகளுக்கான சந்தைப்படுத்தல்வாய்ப்புக்கள்அதி கரிக்கப்பட்டுள்ளன. அதனால் பெருமளவிலான விவசாயிகள் பெரும்போகச் செய்கையில் ஈடு பட்டுள்ளனர் எனத் தெரிவித் தார்.

மேலும் மத்தியவங்கியின் வடபிராந்தியக் கிளை கடந்த வருடம் ஜூன் மாதம் இங்கு ஆரம் பிக்கப்பட்டதன் பின்னர், விவ சாயிகளுக்கான கடன் வழங்கல் களை மேற்கொள்ளுமாறு சகல வங்கிகளையும் ஊக்குவித்தமை யும் இதற்கொரு காரணம் என்று தெரிவித்தார். (ஜ-15)

# 'குமுதினி' நேரமாற்றம்

யாழ்ப்பாணம்,ஏப்.20

குமுதினிப் படகின் சேவை நேற்று முதல் நேரமாற்றம் செய்யப் பட்டுள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகார சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

தினமும் காலை 5.30 மணிக்கு குறிகாட்டுவான் துறைமுகத்தி லிருந்து தனது சேவையை ஆரம் பிக்கும் குமுதினி, காலை 6.30 மணிக்கு நெடுந்தீவுத் துறைமுகத் தைச் சென்றடையும். பின்னர் காலை 7 மணிக்கு அங்கிருந்து புறப்பட்டு 8 மணிக்குக் குறிகாட்டு வானைச் சென்றடையும். பின்பு குறிகாட்டு வானிலிருந்து காலை 9 மணிக்குப் புறப்பட்டு 10 மணிக்கு நெடுந்தீவைச் சென்றடையும். அங்கிருந்து பிற்பகல் 2 மணிக் குப் புறப்பட்டு பிற்பகல் 3 மணிக்கு குறிகாட்டுவானை வந்தடையும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பொதுமக்களின் வசதி கருதியே இந்தச் சேவை அதிகரிப்புச் செய் யப்பட்டுள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்தது. (த-26)

# மழையினால் பயிர்கள் பாதிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.20

குடாநாட்டில் பல பிரதேசங்களிலும் கடந்த சில தினங்களாகப் பெய்து வரும் மழையினால் மரக்கறி மற்றும் புகையிலைப் பயிர்கள் பாதிக் கப்பட்டுள்ளன என விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

மழை கடந்த சில தினங்களாக வலி.கிழக்குப் பகுதியிலேயே கூடுதலாகப் பெய்துள்ளது. இந்த மழையால் இந்தப் பகுதியில் பயிரிடப்பட்டுள்ள மிளகாய், கத்தரி மற்றும் புகையிலைப் பயிர்கள் பாதிக்கப்பட்டுள்ளன என விவசாயிகள் தெரிவித்தனர். (த-26)

# விழிசிட்டி ஞானவைரவர் ஆலயம் பாலஸ்தாபனம்

யாழ்ப்பாணம்,ஏப்.20

தெல்லிப்பழை விழிசிட்டிபுளி யடி ஞானவைரவர் ஆலயத் தைப் புனர்நிர்மாணம் செய்வதற் கான பாலஸ்தாபனம் எதிர்வரும் 24 ஆம்திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு நடைபெற வுள்ளது.

இந்த வருட ஆரம்பத்தில் மீளக் குடியமர அனுமதிக்கப்பட்ட வித் தகபுரம் கிராமசேவையாளர் பிரி வில் உள்ள இந்த ஆலயம் பலத்த சேதமடைந்துள்ளதுடன், ஆலயத் தின் பெறுமதி மிக்க விக்கிரங் களும் காணாமல் போயுள்ளன.

கடந்த மார்ச் மாதம் 23 ஆம் திகதி தொடக்கம் தினமும் ஒரு நேரப் பூசை வழிபாடுகள் இடம் பெற்றுவரும் இந்த ஆலயத் தின் புனரமைப்புப் பணிகளை ஆரம்பிக்க ஆலயபரிபாலன சபையினர் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர்.

இதன் முன்னோடியாக எதிர் வரும் 23 ஆம்திகதி சனிக்கிழமை பூர்வாங்கக் கிரியைகள் ஆரம்பமாகி மறுநாள் ஞாயிற்றுக்கிழமை பாலஸ் தாபனம் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (த-26)

## ஆத்ம சாந்திக்காக...



தாயின் நினைவில்: கடந்த ஞாயிற்றுக்கிழமை சித்திராப்பௌர்ணமி தினத்தை முன்னிட்டு கீரிமலை தீர்த்தக் கரையில் ஆயிரக்கணக்கான மக்கள் உணர்வு பூர்வமாகப் பிதிர்க்கடன் கிரியைகளை முறைப்படி நிறைவேற்றினர்கள். மறைந்த தனது தாயின் ஆத்ம சாந்திக்காகப் பிதிர்க் கடன் செலுத்தும் ஒருவர். (த-14)

# தினமும் 9 தடவைகள் கடல் பாதைச் சேவை

யாழ்ப்பாணம்,ஏப்.20

காரைநகருக்கும் – ஊர்காவற் றுறைக்கும் இடையிலான கடற் பாதைச் சேவை தினமும் ஒன்பது தடவைகளாக அதிகரிக்கப்பட் டுள்ளது.

முன்னர் தினமும் எட்டுத் தடவைகளே இந்தக் கடற்பாதை சேவை இடம்பெற்று வந்தது.

தினமும் காலை 7 மணிக்கு ஊர்காவற்றுறையில் இருந்து ஆரம்பமாகும் இந்தக் கடற் பாதைச் சேவை மாலை 5.15 மணியுடன் நிறைவுபெறும்.

இந்தப் பாதைச் சேவையின் நேரத்தை மாலை 6 மணி வரை நீடிக்குமாறு பயணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (த-26)

# மாதகல் மேற்குப் பிரதேசத்தில் விரைவில் மக்கள் மீளக்குடியமர்வு

யாழ்ப்பாணம்,ஏப்.20

உயர் பாதுகாப்பு வலயமாக வுள்ள மாதகல் மேற்கு ஜே/52 கிராம சேவையாளர் பிரிவில் மீள் குடியமர்த்துவதற்கு நடவடிக் கைகள் விரைவில் நடைபெற வுள்ளன எனச் சண்டிலிப்பாய் பிர தேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

மாதகல் கிழக்குப் பிரதேசத் தில் 156 குடும்பங்கள் அண்மை யில் மீள்குடியமர்வு செய்யப் பட்டன. இதனையடுத்து மாத கல் மேற்குப் பிரதேச மக்கள் தம்மைச் சொந்த இடங்களில் மீள் குடியமர்த்துமாறு பொது அமைப்புக்களிடமும்நாடாளுமன்ற உறுப்பினர்களிடமும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதனை அடுத்து மாதகல் மேற்குப் பிரதேசத்திலும் மக் களை மீள் குடியமர்த்துவதற்கான நடவடிக்கைகள் விரைவில் ஆரம் பிக்கப்படவுள்ளன எனச் சண்டி லிப்பாய்ப் பிரதேச ஒருங்கி ணைப்புக்குழுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

பொது மக்களின் தேவை கருதி சிறார்களின் கல்வித் தேவைக் காகப் பாடசாலை ஒன்றையும் அத்தியாவசியப் பொருள்களின் இலகுவான கொள்வனவுக்காகக் கூட்டுறவுச் சங்கக் கிளை ஒன் றையும் அமைத்த பின்னர் மாத கல் மேற்குப் பிரதேசத்தில் மக் களை மீளக்குடியமர்த்துவதென ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத் தில் தீர்மானிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-313)

# காக்கைதீவுச் சந்தையில் மீன் விற்பனை வீழ்ச்சி

யாழ்ப்பாணம்,ஏப்.20

காக்கைதீவுச் சந்தையில் மீன் வியாபாரம் சடுதியாக வீழ்ச்சி அடைதுள்ளதாக அந்தப் பகுதிக் கடற்றொழிலாளர்கள் தெரிவிக் கின்றனர்.

அதிகளவு கடற்றொழிலாளர் கள் குடியிருக்கும் இந்தப் பிர தேசத்தில், சந்தையில் ஏற்பட் டுள்ள மீன் விற்பனை வீழ்ச்சி யினால் 200 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் தொழில் வாய்ப் புக்களை இழந்து தமது அடிப் படைத் தேவைகளை நிறை வேற்றுவதில் பெரும் சிரமங் களை எதிர்கொள்கின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

வன்னிப் பகுதியில் இருந்து மீளக்குடியமர்ந்துள்ள குடும்பங் களும் இந்தப் பிரதேசத்தில் வசித்து வருகின்றன. இந்த மீன் விற்பனை வீழ்ச்சியால் இந்தக் குடும்பங்களும் பாதிக்கப்பட் டுள்ளன எனவும் கூறப்பட்டது. இந்தப் பகுதியில் அதிகளவு கடற் றொழிலாளர்கள் தொழிலில் ஈடு பட்டுள்ளமையினாலேயே மீன் விற்பனை வீழ்ச்சி கண்டுள்ள தாகத் தெரிவிக்கப்பட்டது. (த-313)

# உல்லாசப் பயணிகள் படகாக 'குமுதினி' மாற்றப்பட்டுள்ளதா?

## நெடுந்தீவு மக்கள் கேள்வி

யாழ்ப்பாணம்,ஏப்.20

நெடுந்தீவுக் கடற் போக்கு வரத்துச் சேவையில் உள்ள குமுதினிப் படகு உல்லாசப் பயணிகளுக்கான படகாக எப் போது முதல் மாற்றப்பட்டுள் ளது என நெடுந்தீவு மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

நேற்றுமுன்தினம் நெடுந் தீவுக்கென உல்லாசப் பய ணத்தை மேற்கொண்ட யாழ்.பல் கலைக்கழக மாணவர்கள் பட கைத் தவறவிட்டனர் எனவும் இதனால் அந்த மாணவர்கள் 25 பேரையும் ஏற்றிக்கொண்டு நேற்று செவ்வாய்க்கிழமை காலை 7 மணிக்குக் குமுதினி படகு நெடுந்தீவுக்குச் சென்ற தாகவும் நெடுந்தீவு மக்கள் தெரிவித்தனர்.

நெடுந்தீவு மக்கள் வெயிலி லும் மழையிலும் திறந்த படகு களில் பயணிக்க குமுதினிப் படகு உல்லாசப் பயணிகளை ஏற்றி இறக்கிக் கொண்டிருப் பதாக அந்தப் பகுதி மக்கள் மேலும் கூறுகின்றனர்.

நெடுந்தீவுப் பயணி ஒருவர் துரதிர்ஷ்டவசமாகப் படகைத் தவறவிட்டால் அவரையும் இவ் வாறு குமுதினி ஏற்றி இறக்குமா எனவும் அவர்கள் கேள்வி எழுப்பு கின்றனர்.

காலை 7 மணிக்கு நெடுந் தீவில் இருந்து பயணிகளுடன் புறப்படவேண்டிய குமுதினிப் படகின் சேவையை ரத்துச் செய்து மேற்படி படகு குறிகாட்டு வானில் இருந்தே சேவையை மேற்கொள்ளும் எனவும் காலை 9 மணிக்குக் குறிகாட்டுவானில் இருந்து அது புறப்படும் எனவும் நேரமாற்றம் செய்யப்பட்டது உல்லாசப் பயணிகளை மகிழ்விப் பதற்கா – எனவும் நெடுந்தீவு மக்கள் கேட்கின்றனர். (த-7)

## சமாதானம் நிலைக்க...



யாகம்: நாட்டில் சமாதானம் நிலைக்க வேண்டி கிளிநொச்சி, வட்டக்கச்சி ஸ்ரீரங்கநாதப் பெருமாள் ஆலயத்தில் சுதர்சன யாகம் இடம்பெற்றது. நாடாளுமன்ற உறுப்பினர்களான ஈ.சரவணபவன், சி.சிறிதரன் ஆகியோர் யாகத்தில் பங்கேற்கின்றனர்.

# உணவுக்கான வேலைத் திட்டத்துக்கான உலருணவு விநியோகத்தில் முறைகேடு

கிளிநொச்சி, கண்டாவளைப் பிரதேசத்தில் உலக உணவுத் திட்டத்தின்கீழ் உணவுக்கான வேலையினைச் செய்த குடும்பங்களுக்கு, உரிய முறையில் உலர் உணவுப் பொருள்கள் கிடைக்கவில்லையெனப் பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்துள்ளனர்.

கண்டாவளை, ஊரியான் கிராமத்தில் மீளக்குடியமர்ந்தப் பட்டுள்ள மக்களுக்கு வழங்கப் பட்டுவந்த உலக உணவுத் திட்டத்தின் கீழான நிவாரண விநியோகம் நிறுத்தப்பட்டது. இந்த நிலையில் மீளவும் உலக உணவுத்திட்டத்தின்கீழ் இலகு வேலைக்கான உணவு நிவாரண விநியோகத்துக்கென மருதங்குளம் வீதி, பழைய கோரக்கன்கட்டு வீதி, 3 ஆம் யுனிற் வீதி என்பனவற்றில் தொடர்ந்து வேலைகள் மேற்கொள்ளப்பட்டு அதன்படி இரு மாத நிவாரணங்கள் வழங்கப்பட்டன.

ஊரியான் கிராமத்தில் மீளக்குடியமர்ந்த 262 குடும்பங்களில் 130 குடும்பங்கள் உணவுக்கான வேலைகளில் ஈடுபட்டுவந்தன. இதில் 100 குடும்பங்கள் தொடர்ந்து 15 நாள்களும் ஏனைய குடும்பங்கள் 15 நாள்களுக்குக் குறைவாகவும் வேலைகளில் ஈடுபட்டன.

இதன்படி கடந்த ஜனவரி, பெப்ரவரி மாதங்களில் மாதாந்தம் 493 குடும்ப அங்கத்தவர்களுக்கு நிவாரணப் பொருள்கள் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினூடாக வழங்கப்பட்டு வந்தன. ஆனால் பங்குனி மாதத்தில் 255 அங்கத்தவர்களுக்கு மட்டுமே நிவாரணப் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன.

இவ்வாறு வழங்கப்பட்ட உணவுப் பொருள் விநியோகத்துக்கான பயனாளிகள் வேலையின் அடிப்படையில் கிராம சேவகரால் தெரிவு செய்யப்படவில்லையெனவும் தொடர்ந்து வேலைகளைச் செய்த குடும்பங்கள் இதனால் பாதிக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ள. (க-6)

# முல்லைத்தீவு மாவட்டத்தில் மீள்குடியமர்வின் பின்னர் அபிவிருத்தி என்பது வெறும் கானல் நீராகவே உள்ளது

*(நேற்றைய தொடர்ச்சி)*

அத்துடன் வறுமைக்கோட்டின்கீழ் வாழ்கின்ற மக்களுக்கான விவசாயக் கடன்களை எல்லோரும் பெறமுடிவதில்லை.

யுத்தம் ஏற்பட்டபோது விவசாயம் அழிவுற்றது. பின்பு மழையால் அழிவுற்றது. தற்போது வயலைப் பண்படுத்த முடியாமலும் விதைநெல் இல்லாமலும் விவசாயிகள் துன்பமடைகின்றனர். வேலி அடைப்பதற்குக் கம்பி இல்லை. அதற்கான கட்டைகளை வெட்ட முடியாது. வேலி அடைப்பதில் சிரமம். அறுவடை செய்த நெல்லை நல்ல விலைக்கு விற்கமுடியாது நட்டத்துக்கே விற்பனை செய்யப்படுகிறது.

அறுவடை காலத்தில் உரிய நேரத்தில் அறுவடை செய்யக் கூடிய அறுவடை இயந்திரங்கள் இன்மையால் தனியார்களிடம் கூடிய கூலி கொடுத்து அறுவடை மேற்கொள்ளப்பட்டது.

நிலம் பண்படுத்தல் விடயத் தில் கமநல சேவை நிலையத்தால் நிர்ணயிக்கப்படுகின்ற கூலியும் தனியார் பெறும் கூலியும் ஒன்றாகவே உள்ளன. அதிலும் விவசாயிகளுக்குச் சலுகை இல்லை.

கமநலச் சேவை நிலையங்களால் கிருமி நாசினி, களை நாசினி என்பன விற்பனை செய்யப்பட்டபோது விலை குறைவாகக் காணப்பட்டது.

**முல்லைத்தீவு மாவட்டத்தில் மீள்குடியமர்ந்த மக்களுக்கான வேலைத்திட்டங்கள் அரசினால் முன்னுரிமைப் படுத்தப்பட்டு ஆரம்ப வைபவங்கள் நடைபெற்ற போதிலும் எந்தவொரு வேலையும் நிறைவேற்றப்படாது காலங்கடந்து செல்வதையே காண முடிகின்றது.**

ஆனால் இப்போது விற்பனை நடைபெறாததால் தனியாரிடம் கூடிய விலை கொடுத்து வாங்க வேண்டியுள்ளது. விவசாய நிலங்களுக்கான பாதைகள், அதுவும் இல்லாத நிலையே காணப்படுகின்றது. இதனால் வேறு ஆள்களின் காணிகளினூடாகச் செல்ல வேண்டியுள்ளது.

இப்படியாக எதுவுமே நிறைவேற்றப்படாத நிலையிலே விவசாயத்தை மேற்கொண்டு கூடிய செலவுடன் குறைந்த வருவாயைப் பெறுகின்றனர்.

கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் நெல் கொள்வனவு செய்யப் படுவதில்லை. அவர்கள் நெல்லைக் கொள்வனவு செய்து சேமிக்க நெற்களஞ்சியம் இல்லை. காலத்துக்குக் காலம் சங்கங்களால் நெல் கொள்வனவு செய்யப்படும் என ஊடகங்கள் மூலமும் அறிவித்தல் மூலமும் தெரிவிக்கப்படுவதே தவிர நடைமுறையில் பூச்சியம் தான்.

**வங்கிச் சேவைகள்**

தற்போது முல்லைத்தீவு அல்லது மாங்குளத்தில்தான் வங்கிகள் உண்டு.

இதனால் மக்கள் பல மணி நேரம் அதற்கு செலவிட வேண்டிய நிலை. பல மைல் சென்று தமது வங்கி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

ஒட்டுசுட்டானிலே இருந்த வங்கியினை மீண்டும் திறப்பதாகக் கூறப்பட்டபோதும், அது நடைபெறவே இல்லை.

தற்போது உதவி அரச அதிபர் பிரிவில் தற்காலிமாக வங்கி ஓரிரு தினங்கள் செயற்பட்டாலும், சகல வசதிகளும் இல்லாத நிலையிலேயே இயங்கி வருகிறது.

இதுவே இன்றைய முல்லைத்தீவு மாவட்டத்தின் பரிதாபகரமான நிலையாகும்.

**இராஜ் தனபால்**

*(முற்றும்)*

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
வெளிவாரிப்பட்டப் பதிவுகள் மற்றும் பரீட்சைகள் அலகு
**வெளிவாரிப் பரீட்சைகள்- 2009**
**பொது மற்றும் சிறப்புக்கலைமாணித் தேர்வு பகுதி - II- 2008 (வெளிவாரி)**

மேற்படி பரீட்சையை 16.05.2011 (திங்கட்கிழமை) தொடக்கம் 31.05.2011 (செவ்வாய்க்கிழமை) வரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும், வவுனியா வளாகத்திலும் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பரீட்சை தொடர்பான நேர அட்டவணைகளையும், பரீட்சை அனுமதி அட்டைகளையும் 10.05.2011 (செவ்வாய்க் கிழமை) தொடக்கம் வெளிவாரிப் பட்டப் பதிவுகள் மற்றும் பரீட்சைகள் அலகிலும், வவுனியா வளாகத்திலும் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விவரங்களுக்கு 0212223612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளவும்.

பதிவாளர். (49,24,26) 18.05.2011

**இறைச்சிக் கோழி விற்பனைக்கு**

உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட புறொயிலர் சுத்தம் செய்தது (1Kg 450/=) கல்லேட் சுத்தம் செய்து காலை 6 மணி தொடக்கம் இரவு 8 மணி வரை பெற்றுக் கொள்ளலாம்.

**நல்லூர் பாம் சென்ரர்**
19, முருகேசர் லேன், நல்லூர்.
தொடர்பு: 0212226944.

**கோழிக்குஞ்சு விநியோகம்**

BAHIRAHA No- 1 புறொயிலர் குஞ்சுகள் 20.04.2011 விநியோகிக் கப்படும்.

**றாஜீவ், நவாலி வீதி, ஆனைக் கோட்டை.**

* பிள்ளையார் கால்நடைத் தீவன விற்பனை நிலையம், பிரதான வீதி, நெல்லியடி -No-27

T.P: 2222867, 0776090926.

**வேலையாள்கள் தேவை**


உடுவிலில் இயங்கிவரும் கோழிப்பண்ணைக்கு தங்கி நின்று வேலை செய்யக்கூடிய ஆள்கள் தேவை.

தொடர்பு: NEW R.S.K. FARM, Uduvil.
T.P. No.0213214741
(3262) (20-23-45)

**மண்ணகப் பிறப்பில் அகவை 60**
**விண்ணகப் பிறப்பில் அகவை 03**

மண்ணில் 12 ★ 04 ★ 1951

விண்ணில் 20 ★ 04 ★ 2008



**அமரர் அருட்பணி**
**M.X. கருணாரெத்தினம் அடிகள்**

நாம் இழந்தது...? எம்
கிடைத்தற்கரிய சொத்தை!
உடன் பிறந்து, உறவு தந்தீர்,
கடமைதனைக் காத்து நின்றீர்
உலக உருண்டை
மிக வேகமாய்
மூன்று ஆண்டுகள் உருண்டோடி விட்டபோதிலும் - நாம்
வேண்டுதல் பல செய்த போதிலும்
ஆறவில்லை எம் துயரம்;
சோரவில்லை எம் இதயம்
தூயனின் வழி நடந்தவனே! உன்
துணை நாடித் தவிக்கின்றோம்
காலத்தால் காவியமானவனே!
கர்த்தருக்குள் நிறைவடைவாய்!

*மாறா அன்புடன் சகோதரன்*
இத்தாலி. அருட்பணி M.B. ஞானரெத்தினம்.

## மரண அறிவித்தல்

**சிவஞானசுந்தரம் முரளிதரன் (அப்பன்)**



காங்கேசன்துறை வீதி, கோண்டாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் நோர்வேயை வசிப்பிடமாகவும் கொண்ட சிவஞானசுந்தரம் முரளிதரன் கடந்த 14.04.2011 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் சிவஞானசுந்தரம் - பஞ்சரத்தினம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான செல்வநாயகம் - நாகேஸ்வரி தம்பதியரின் மருமகனும், சாந்தரூபியின் அன்புக் கணவரும் நரேனின் அன்புத் தந்தையும் தாமரைச்செல்வி (இந்தியா), தமிழ்ச்செல்வி (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் சாந்தினி, சாந்தலிங்கம், சாரதா, காலஞ்சென்ற சாந்தகுமார், சாந்தரூபன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (20.04.2011) புதன்கிழமை இலங்கை நேரப்படி பி.ப.1.00 மணியளவில் நோர்வேயில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கே.கே.எஸ். வீதி,
கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்.
தொ.பே: 0213216571

தகவல்:
சு.சிவஞானசுந்தரம்
(தந்தை)

# கௌரவமான மீள்குடியமர்வு நடைபெறாமையால் கிளிநொச்சி மக்கள் விரக்தியில் ஆழ்ந்துள்ளனர்

## கிராமிய பொது அமைப்புக்கள் தெரிவிப்பு

கிளிநொச்சி, ஏப்.20

கௌரவமான மீள்குடியமர்வு நடைபெறாமை குறித்து மீள்குடியமர்த்தப்பட்ட கிளிநொச்சி மக்கள் விரக்தி அடைந்துள்ளனர் எனக் கிராமியப் பொது அமைப்புக்கள் தெரிவித்துள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தில் மீள்குடியமர்வு நிறைவடையவுள்ளதாகச் செய்திகள் வெளிவந்த நிலையிலேயே கிராமிய பொது அமைப்புக்கள் இவ்வாறு தெரிவித்துள்ளன.

பச்சிலைப்பள்ளியில் பல கிராம அலுவலர் பிரிவுகளிலும் கிளிநொச்சி பரவிப்பாஞ்சான், மருதநகர் போன்ற கிராமங்களிலும் மக்கள் இன்னமும் மீள்குடியமர்த்தப்படவில்லை. மக்கள் மீள்குடியமர்த்தப்பட்ட பகுதிகளிலும் பல தனிநபர் காணிகளிலும் இராணுவத்தினர் முகாமிட்டுள்ளனர். இதனால் பல குடும்பங்கள் உறவினர் மற்றும் நண்பர்களின் வீடுகளில் வசித்து வருகின்றன.

மக்கள் மீள்குடியமர்ந்த ஆரம்பத்தில் 50 ஆயிரம் ரூபா பணமும், வீட்டு, விவசாய உபகரணங்களும் வழங்கப்பட்டன. ஆனால், பின்னர் இந்த உதவிகள் குறைவடைந்தன. பின்னர் குடியமர்ந்தவர்களுக்குத் தகரங்கள் மட்டுமே வழங்கப்பட்டன. தற்போது அவை கூட வழங்கப்படாத நிலையே காணப்படுகின்றது.

மீள்குடியமர்ந்த பெருமளவான மக்கள் அரை நிரந்தர வீடுகளையோ 50 ஆயிரம் ரூபா உதவிப் பணத்தையோ இன்னமும் பெற்றுக் கொள்ளாத நிலையிலேயே காணப்படுகின்றனர். இறுதியாக என்றிப் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட 20 ஆயிரம் ரூபா பெறுமதியான மீள்குடியமர்வுப் பணப் பத்திரங்கள் வெற்றுப் பத்திரங்களாகவே மக்களின் கைகளில் உள்ளன. இதுவரை இவற்றுக்கான நிதி எதுவும் வங்கிகளுக்கு வழங்கப்படவில்லை.

சில இடங்களில் மீள்குடியமர்ந்துள்ளோருக்கு ஐந்து தடிகளும் ஒரு தறப்பாளும் மட்டுமே வழங்கப்பட்டுள்ளன. நிரந்தர வீடுகளும் குறைந்த பட்ச அளவிலேயே வழங்கப்பட்டுள்ளன. இவற்றை அமைப்பதற்கும் நிதி வழங்கும் நிறுவனங்களின் நிபந்தனைகளால் மக்கள் பெரும் அலைச்சலை எதிர்கொள்கின்றனர்.

இந்த வகையில் பெற்றோரை இழந்த பிள்ளைகள், உழைப்பாளரை இழந்த குடும்பங்கள், காணாமல் போனோரின் குடும்பங்கள், புனர்வாழ்வு முகாம்களிலும், சிறைகளிலும் உள்ள குடும்பங்கள் போன்றோருக்கே உலர் உணவு நிவாரணங்கள் நிறுத்தப்பட்ட நிலையில், கௌரவமான மீள்குடியமர்வு நடைபெற்றதாக எவ்வாறு கருத முடியுமெனவும் இந்தக் கிராமிய அமைப்புப் பிரதிநிதிகள் கருத்துத் தெரிவித்தனர். (க-301)

# கிளிநொச்சியில் தையல் பயிற்சி நிலையங்கள் ஆரம்பிப்பு

கிளிநொச்சி, ஏப்.20

கிளிநொச்சி அம்பாள்குளம், மலையாளபுரம் ஆகிய பின்தங்கிய கிராமங்களில் யுத்தத்தால் பெண்களைத் தலைமைத்துவமாக ஏற்றுக்கொண்ட குடும்பத் தலைவிகளுக்கு வலுவூட்டும் வகையில் 2 தையற் பயிற்சி மையங்கள் கடந்த வாரம் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரனின் ஏற்பாட்டில் புலம்பெயர் சமூகத்தின் நிதிப்பங்களிப்புடன் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்தப் பயிற்சி நிலையங்கள் 90 பயிற்சியாளர்களைக் கொண்டு செயற்படுகிறது. இதன் ஆரம்ப நிழ்வுகளில் கலந்துகொண்டு உரைநிகழ்த்திய சிவஞானம் சிறிதன் எம்.பி.-

கையேந்தாத சமூகம் ஒன்றின் எதிர்காலத்துக்கு இத்தகைய பயிற்சி மையங்கள் அடிப்படையாக அமைகின்றன.

இவை போருக்குப் பிந்திய ஆற்றுப்படுத்தல், சுயதொழில் பயிற்சி, குடும்ப வருமான மேம்பாடு, சுயசார்புச் சமூகம், தன்னம்பிக்கை என்பவற்றை அளிக்கின்ற நிலையங்களாகத் திகழும் என்பதுடன், எதிர்காலத்தில் சிறிய அளவிலான ஆடை உற்பத்தி விற்பனை மையங்களாகவும் இவை மாற்றம் பெறவேண்டும் - என்றார்.

இந்த நிகழ்வில் அருட்தந்தை துரைரட்ணம் அடிகளார், கிராம அலுவலர்களான ஜோன் பற்றிஸ், சந்திரபாலன் மற்றும் சிறகுகள் பெண்கள் பண்பாட்டு மன்றத் தலைவி தேவிகா கேதீஸ்வரன், கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர்கள், மாதர் சங்கப் பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

(க-301)

## காலமறிந்த உதவி...



*செழிப்பான கன்றுகள்: எப்.ஐ.ஓ.நிறுவனத்தால் முல்லைத்தீவு மாவட்டம் பண்டாரவன்னிக் கிராம மக்களுக்கு தென்னங்கன்றுகள் விநியோகம் செய்யப்படுகின்றன.* (500)

# மத்திய கல்லூரிக்கு அதிபர் நியமனம்

கிளிநொச்சி, ஏப்.20

இந்த மாதம் 18 ஆம் திகதி முதல் செயற்படும் படியாக கிளிநொச்சி மத்திய கல்லூரிக்கு அதிபர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

முத்துராஜா இரவீந்திரன் என்பவரே இவ்வாறு நியமனம் பெற்றவராவார். விஞ்ஞானப் பட்டதாரியான இவர், இந்தக் கல்லூரியின் பழைய மாணவன் என்பதுடன் கிளிநொச்சி திரேசா பெண்கள் கல்லூரியில் பிரதி அதிபராகக் கடமையாற்றி வந்தார். 18 ஆம் திகதியன்று இவர் கடமையை ஏற்றுக்கொண்ட போது கல்லூரிச் சமூகம் ஒன்று கூடி வரவேற்பளித்தது.

கடந்த எட்டு மாதங்களுக்கு மேலாக அரசியல் காரணங்களுக்காக இழுபறி நிலையில் இருந்த, குறித்த அதிபர் நியமனம் கல்விச் சமூகத்தினாலும் பெற்றோர்களினாலும் ஊடகங்களினாலும் எழுப்பப்பட்ட கடுமையான விமர்சனங்களைத் தொடர்ந்து தற்போது இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(க-301)

# குமுழமுனையில் மீள்குடியமர்பவர்களை நாளை வருமாறு அரச அதிபர் அறிவிப்பு

முல்லைத்தீவு, ஏப்.20

முல்லைத்தீவு மாவட்டம் கரைதுறைப்பற்றுப் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட குமுழமுனை கிழக்கு, குமுழமுனை மத்தி கிராம சேவையாளர் பிரிவுகளில் மக்கள் மீள்குடியமர்த்தப்படவிருக்கின்றனர் எனத் தெரியவருகின்றது.

மேற்படி கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த மக்களில் நண்பர்கள், உறவினர்களுடன் தங்கியுள்ள மீள்குடியமர்வுக்காகச் சொந்த இடத்துக்குச் செல்ல விரும்பும் மக்கள் நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கு குமுழமுனை மகாவித்தியாலயத்துக்கு மீள்குடியமரக்கூடிய ஆயத்தங்களுடன் சமுகமளிக்குமாறு முல்லைத்தீவு அரச அதிபர் அ.பத்திநாதன் கேட்டுக்கொண்டுள்ளார்.

(க)

# படையினரின் பதிவு செய்யும் நடவடிக்கை மீண்டும்

முல்லைத்தீவு, ஏப்.20

முல்லைத்தீவு வவுனிக்குளம் அணைக்கட்டு வீதியூடாகப் பாண்டியன்குளம் செல்லும் மக்கள் இராணுவச் சோதனைச் சாவடியில் பதிவுகளுக்குட்படுத்தப்பட்டு கையொப்பம் பெறப்பட்ட பின்னரே இந்த வீதியூடாகப் பயணிப்பதற்கு அனுமதிக்கப்படுகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு வவுனிக்குளம் அணைக்கட்டு இடது கரை வீதியினூடாக கிடாய்ப்பிடித்தகுளம், குமரிகுளம், செல்வபுரம், பாண்டியன்குளம், நட்டாங்கண்டல், விநாயகபுரம் உள்ளிட்ட மாந்தை கிழக்குப் பிரதேச மீள்குடியமர்வுக் கிராமங்களுக்குச் செல்லும் இந்தப் பிரதான வீதியில் அமைந்துள்ள இராணுவக் காவலரணில் பயணிகள் அனைவரும் மறிக்கப்பட்டு பயணிக்கும் இடம், பயணத்துக்கான நோக்கம் என்பன விசாரிக்கப்பட்டு தேசிய அடையாள அட்டைகள் பார்வையிடப்பட்டு அதன் பின்னர் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு கையொப்பம் பெறப்பட்ட பின்னர் நீண்ட தாமதத்தின் பின்னரே பயணிப்பதற்கு அனுமதிக்கப் படுகின்றனர்.

இதனால் அவசர தேவைகளுக்குச் செல்லும் மக்கள் தமது நேரத்தை வீணாகச் செலவிடுவதுடன், பல்வேறு சிரமங்களையும் எதிர்கொண்டு வருகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (க-6)

# பிரதேச செயலர் தாக்கப்பட்ட சம்பவம்; எட்டுப் பேர் கைது

மன்னார், ஏப்.20

மன்னார்ப் பிரதேச செயலாளர் திருமதி ஸ்ரான்லி டி மெல் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக இதுவரை மொத்தமாக எட்டுப் பேர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர் என மன்னார் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கொடித்துவக்கு தெரிவித்துள்ளார்.

மேற்படி சம்பவம் இடம் பெற்ற கடந்த புதன்கிழமை ஒரு சந்தேக நபரும், மறுநாள் வியாழக்கிழமை மூவரும், நேற்று முன்தினம் திங்கட்கிழமை காலை தலைமறைவாகியிருந்த நான்கு சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டு மன்னார் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்களிடம் உரிய விசாரணைகள் நடைபெற்று வருகின்றன. ஏனைய சந்தேக நபர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டு விசாரணையின் பின்னர் மன்னார் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படுவார்களென்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

(க-601)

# உமையாள்புரம் கிராம மக்கள் வசதியற்ற நிலையில்

கிளிநொச்சி, ஏப்.20

கிளிநொச்சி மாவட்ட உமையாள்புரம் கிராமத்தில் மீள்குடியேறியுள்ள மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கிராமத்தில் இதுவரை சுமார் 180 குடும்பங்கள் மீள்குடியமர்ந்துள்ளன.

ஆனால், இந்தக் குடும்பங்களுக்கான வாழ்வாதார ஆதாரங்கள் எவையும் வழங்கப்படவில்லையென இங்குள்ள மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக இந்தப் பகுதியில் பெரும் குடிதண்ணீர்த் தட்டுப்பாடு நிலவுகின்றது. இதனால் இந்த மக்கள் குடிதண்ணீர் தேடி அலைந்து திரிவதைக் காண முடிகின்றது.

அத்துடன், மருத்துவ வசதிகள், கல்வி வசதிகள் என்பன வற்றிலும் இந்தப் பகுதியில் பெரும் பின்னடைவு காணப்படுகின்றது.

இங்குவாழும் மக்களின் பிரதான தொழிலாகக் கடல்தொழில் காணப்படுகின்றது.

ஆனால், இதிலும் இவர்கள் முழுமையான வருமானத்தைப் பெறமுடியாத நிலையே காணப்படுகின்றது. இதனால் வறுமையில் வாழவேண்டிய நிலைக்கு இவர்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

உரிய அதிகாரிகள் இவர்களின் இத்தகைய பரிதாப நிலையைப் போக்குவதற்கு ஆவன செய்யவேண்டுமெனப் பலராலும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

(க-6)

# அரசுடன் இணைந்து செயற்பட்டால் அபிவிருத்தி இலக்குகளை அடையலாம்

## கிழக்கு சுகாதார அமைச்சர் சுபைர் அழைப்பு

திருகோணமலை, ஏப்.20

மாற்றுக்கட்சிகளில் அங்கம் வகிக்கும் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் அரசுடன் இணைந்து செயற்படுவதன் மூலமே அபிவிருத்திகளை இலகுவாகப் பெற்றுக் கொள்ளமுடியும்.

இவ்வாறு தெரிவித்தார் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் எம். எஸ்.சுபைர்.

மட்டக்களப்பு, பட்டிப்பளை பிரதேச செயலகப்பிரிவில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விதவைகள் மற்றும் விசேட தேவையுடையோருக்கு நிவாரணக் கொடுப்பனவு வழங்கும் நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இவர் தொடர்ந்து உரையாற்றுகையில்:

வறுமைப்பட்ட மக்களின் வாழ்கைத் தரத்தை முன்னேற்றுவதில் ஜனாதிபதி பல்வேறு திட்டங்களை முன்னெடுத்து வருகிறார். ஜனாதிபதியின் அவ்வாறான திட்டங்களுக்கு கிழக்கு மாகாண சபையும் தனது பூரண ஆதரவை நல்கி வருகின்றது.

விதவைகள், விசேட தேவையுடையோர் ஆகியோர் விடயத்தில் எனது அமைச்சு கூடிய அக்கறை காட்டி வருகின்றது. கிழக்கு மாகாணத்தில் சுமார் 50ஆயிரம் விதவைகள் உள்ளனர்.

இவர்கள் விடயத்தில் எவ்வாறான திட்டங்களை முன்னெடுக்க முடியுமென்று அமைச்சின் உயர் அதிகாரிகள் ஆலோசித்து வருகின்றனர்.

குடும்பத்தாதி எனும் வருமானம் பெறக்கூடிய ஒரு திட்டத்தை நடைமுறைப்படுத்தத் திட்டமிட்டுள்ளேன். இதற்கு விதவைகளையே தெரிவுசெய்ய எண்ணியுள்ளேன். அத்துடன் விசேட அம்புலன்ஸ் சேவையொன்றை அறிமுகப்படுத்தியுள்ளேன்.

கிழக்கு மாகாண சபையூடாகவும், மத்திய அரசின் ஊடாகவும் இன, மத, கட்சி பேதமற்ற சேவைகள் இடம்பெற்ற வண்ணமேயுள்ளன.

இவ்வாறான நிலையில் மாற்றுக் கட்சிகளிலுள்ள தமிழ்ப் பிரதிநிதிகள் சமூக நலன் கருதி அரசுடன் இணைந்து செயற்பட முன்வரவேண்டும்-என்றார். (ச)

# சுற்றுப்புறச் சூழலுக்குப் பாதகம் விளைவிப்போர் மீது நடவடிக்கை

நுவரெலியா,ஏப்.20

நுவரெலியா நகரைச் சுற்றியுள்ள பகுதிகளில் சுற்றுச்சூழலுக்குப் பாதகம் விளைவிப்போர் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என நுவரெலியா மாவட்ட அரச அதிபர் டி.பி.ஜி.குமாரசிறி தெரிவித்துள்ளார்.

நுவரெலியா வசந்தகாலத்தையொட்டி உள்நாட்டு, வெளிநாட்டு உல்லாசப் பயணிகள் தங்கும் விடுதிகள், ஹோட்டல்கள் அனைத்தையும் விசேட கண்காணிப்பின் கீழ் கொண்டுவருமாறு அவர் சகல அரச உத்தியோகத்தர்களுக்கும் பணிப்புரை வழங்கியுள்ளார்.

சுற்றுச்சூழலைப் பாதிக்கும் அளவில் நடந்து கொள்வோர்மீது நடவடிக்கை எடுக்குமாறும் அவர் பணித்துள்ளார்.

மத்திய சுற்றுச்சூழல் அதிகாரி மற்றும் மாநகரசபையின் பொதுச் சுகாதார அதிகாரிகள் இணைந்த விசேடகுழு சாதாரண உடையில் நகர் முழுவதும் சுற்றுச் சூழலை மாசடையச் செய்வோரைக் கண்டு பிடிக்கும் கடமையில் ஈடுபட்டுள்ளது என்றும் அரச அதிபர் தெரிவித்துள்ளார். (ச)

# யானை தாக்கி ஒருவர் பலி

பட்டிப்பளைப் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட குழுவினமடு கிராமத்தில் யானை தாக்கி ஒருவர் பலியாகியுள்ளார். நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு இந்த நபர் தனது வீட்டிலிருந்த வேளையில் யானையின் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளார். அத்துடன் இவரது வீடும் யானையின் தாக்குதலில் சேதமாகியுள்ளது.

இந்தப்பிரதேசத்தில் தொடர்ச்சியாக யானைகளின் அட்டகாசம் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

# முதலாளிமார் சம்மேளனத்துடனான அடுத்தகட்டப் பேச்சுக்கள் தொழிலாளர் சம்பள உயர்வை முன்னிறுத்தியதாகவே அமையும்

## இ.தொ.கா.முக்கியஸ்தர் தெரிவிப்பு

நுவரெலியா,ஏப்.20

தோட்டத் தொழிலாளர்களின் வேதன உயர்வு சம்பந்தமாக முதலாளிமார் சம்மேளனத்திற்கும், தொழிற்சங்கங்களுக்கும் இடையில் எதிர்வரும் 29 ஆம் திகதி நடைபெறும் பேச்சுக்களில் வேதன உயர்வு குறித்து ஆராயப்படும் என இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் முக்கியஸ்தர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

அண்மையில் கொழும்பில் இடம்பெற்ற முதற்கட்டப் பேச்சில் தோட்ட முதலாளிமார் சம்மேளனத்துடன், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸும், இலங்கைத் தேசிய தொழிலாளர் சங்கமும், ஏனைய தொழிற்சங்கங்களின் பிரதி நிதிகளும் கலந்துகொண்டனர். வாழ்க்கைச் செலவுகள் உயர்வடைந்துள்ள இந்தநேரத்தில் தொழிலாளர்களின் வேதனம் உயர்த்தப்பட வேண்டியது அவசியமானது என சகல தொழிற்சங்கங்களும் முதலாளிமார் சம்மேளனத்திடம் வலியுறுத்தின என இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தெரிவித்தது.

இந்தமுறை புதிய சம்பள உயர்வு ஒப்பந்தத்தின் போது நாள் சம்பளம் 500 ரூபாவாகவும், அதற்கு மேற்பட்ட கொடுப்பனவுகள் வெவ்வேறாகவும், குறிப்பிட்ட அளவுக்குமேல் பறிக்கும் கொழுந்து ஒரு கிலோவிற்கு 30 ரூபா வீதமும் வழங்கவேண்டும் என வலியுறுத்தப்படும் எனத் தொழிற்சங்கங்கள் தெரிவித்துள்ளன.

ஒரு கொடியில் பூத்த இரு மலர்கள்

2ஆம் ஆண்டு நினைவு 4ஆம் ஆண்டு நினைவு





திருமதி மகாதேவா ஜெயவதனி
ஆசிரியை, மு/உடையார்கட்டு ம.வி.
அன்னை மடியில் : 13.04.1976
ஆண்டவன் அடியில் : 12.05.2009

அமரர்
பொன்னுத்துரை பிரதீப்
அன்னை மடியில் : 25.01.1984
ஆண்டவன் அடியில் : 04.04.2007



ஒரு கொடியில் இரு மலர்களாய் மலர்ந்து சிட்டாய் சிறகடித்து
குடும்பம் எனும் வாழ்வில் ஒளி விளக்கை ஏற்றி
ஊரும் உலகும் போற்ற மழலைச் செல்வங்களோடு
மகிழ்ந்து உலாவிய வேளையில்- காலத்தின் கொடுமையால்
வாழ்ந்த வாழ்வை பாதியிலே முடித்து காலன் அவன் பிடியில் சிக்கி
தூரதேசம் சென்று வீட்டீர் மீள முடியாத் துயரில்
உங்கள் அன்புச் செல்வங்கள் துடியாய்த் துடிக்கிறார்கள்.
உங்களோடு பழகிய உறவுகள், ஆசிரியர்கள், மாணவச்
செல்வங்கள் உமை மறக்க முடியாது நித்தமும் நினைவுகளுடன் வாழ்கின்றனர்.

*அமரர்களின் நினைவுப் பிரார்த்தனை இன்று (20.04.2011) புதன்கிழமை லோட்டன் வீதி, மானிப்பாயில் அமைந்துள்ள அவர்களது தற்காலிக இல்லத்தில் நடைபெறும் என்பதைத் தெரியப்படுத்துகின்றோம்.*

நி.முகவரி :- எழுதுமட்டுவாழ்.
வாழ்விடம் :- தேராவில், உடையார்கட்டு.
த.முகவரி :- லோட்டன் வீதி, மானிப்பாய்.

மகாதேவா, அபிசாந்,
அபிசாலினி, சர்மிலா,சதுர்சனா,
பெற்றோர், உறவுகள்.

(49,24,26)

LAUGFS LANKA GAS PLC
லா.'ஃப்ஸ் லங்கா காஸ்

நிறுவனம் வழங்கும் புத்தாண்டு சலுகை



இச்சலுகை 07.05.2011 வரை

இன்றுமுதல் புதிதாகக் கொள்வனவு செய்யும் **5kg** அல்லது **12.5kg** காஸ் சிலிண்டர் வாங்கினால்

**காஸ்குக்கர் இலவசம்**

குறிப்பு:- எந்தவொரு லாப் காஸ் முகவரிடமும் பெற்றுக்கொள்ளமுடியும்.

பிரதம விநியோகத்தர்:
பிள்ளையார் டிஸ்றிபியூட்டர்
31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 0772640715.

11 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு:
16.05.1950

உதிர்வு:
21.04.2000

திருமதி தர்மராஜா
சண்முகமலர்

திதி: திருதியை
(20.04.2011)



அம்மா நீங்கள் இன்னும் இருந்திருக்கலாம்..
உங்களுக்கு எங்கள் கடமையைச் செய்யும்
நினைவுகளில் எங்கள் கவலைகள்
குறைந்து போகப் பத்து ஆண்டுகள் ஓடியென்ன?
கையெடுத்து வணங்க எண்ணுகையில் கன்னங்கள்
கண்ணீரில் நனைகின்றனவே அம்மா நீங்கள் இன்னும்
எங்களுடன் இருந்திருக்கலாம்!

வே.தர்மராஜா,
கற்பகப்பிள்ளையார் கோயிலடி,
இணுவில் மேற்கு, சுன்னாகம்.

(48,21,50)

குடும்பத்தினர்

# கிழக்கில் ஐந்து கல்வி வலயங்களில் 1131 மேலதிக ஆசிரியர்கள் பணியில்

## நேரசூசி இன்றி இருப்பதால் மாதாந்தம் 17 மில்லியன் விரயம்

அம்பாறை, ஏப்.20

கிழக்கில் திருகோணமலை, பட்டிருப்பு, கல்முனை, அக்கரைப்பற்று, அம்பாறை ஆகிய ஐந்து கல்வி வலயங்களில் 1131 ஆசிரியர்கள் மேலதிகமாகப் பணியாற்றுகின்றனர். நேரசூசியின்றி இவர்கள் பாடசாலைகளில் உள்ளனர்.

இவர்களுக்கு மாதாந்தம் 17 மில்லியன் ரூபா சம்பளமாக வழங்கி அரசால் நிதி வீண் விரயம் செய்.யப்படுகின்றது.

இந்த அதிர்ச்சித் தகவலை வெளியிட்டார் கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் எம்.ரீ. அப்துல் நிஸாம்.

சகல வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் நேற்று அவர் அனுப்பியுள்ள சுற்று நிருபத்தில் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார். இந்தச் சுற்று நிருபத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளமை வருமாறு:

ஜனாதிபதியின் திருகோணமலை விஜயத்தின் போது கிழக்கு மாகாணத்தில் ஆசிரியர் சமமின்மை காணப்படுவதையும், அதனை உடன் சமப்படுத்தி சகல மாணவர்களுக்கும் சம கல்வி வாய்ப்புக் கிடைப்பதை உறுதிப்படுத்துமாறும் கூறினார்.

நாட்டின் சகல மாணவர்களுக்கும் சம கல்வி வாய்ப்பு வழங்கவேண்டும் என்னும் 'மகிந்த சிந்தனை' க்கமைவாக சகல மாணவர்களுக்கும் சம கல்வி வாய்ப்பை உறுதிப்படுத்த கிழக்கு மாகாணத்தின் ஆளுநர், முதலமைச்சர், கல்வி அமைச்சர் ஆகியோரின் வழிகாட்டலுக்கமைவாக இந்தத் திட்டத்தை முன்னெடுக்க வேண்டிய தேவை எழுந்துள்ளது.

ஏனெனில் கிழக்கு மாகாணத்தின் பல பாடசாலைகளில் தேவைக்கும் மேலதிகமாக ஆசிரியர்கள் குவிக்கப்பட்டுள்ள அதே வேளை வேறு பல பாடசாலைகளில் போதிய ஆசிரியர்கள் இன்றி மாணவர்கள் தமது அடிப்படைக் கல்வி உரிமை மறுக்கப்பட்ட நிலையில் துன்பப்படுகின்றனர்.

திருகோணமலை, பட்டிருப்பு, கல்முனை, அக்கரைப்பற்று, சம்மாந்துறை, அம்பாறை ஆகிய வலயங்களில் 1131 மேலதிக ஆசிரியர்கள் நேரசூசி இன்றிக் காணப்படுவதுடன் இவர்களுக்காக மாதாந்தம் 17 மில்லியன் ரூபாய்கள் சம்பளமாக வழங்கி அரசால் நிதி வீண் விரயம் செய்யப்படுகின்றது.

இதேவேளை, மூதூர், கந்தளாய், கிண்ணியா, திருகோணமலை வடக்கு, கல்குடா, மட்டக்களப்பு மத்தி, மட்டக்களப்பு, மகாஓயா ஆகிய வலயங்களில் 872 ஆசிரியர்களுக்கான தேவை இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

எனவே, ஆசிரியர்கள் தேவையினை சமன்செய்ய வேண்டிய பொறுப்பும், அரச நிதி வீண் விரயத்தைத் தவிர்க்கும் கடமையும் மாகாணக் கல்விப் பணிப்பாளருக்கும், வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் உரியது என்பதை உணர்ந்து ஆசிரியர் சமமின்மையை நீக்கும் முதற்கட்ட நடவடிக்கையாகப் பாடரீதியாகக் காணப்படும் மேலதிக ஆசிரியர்களை பாடரீதியாகத் தேவையுள்ள பாடசாலைகளுக்கு இடமாற்றும் திட்டத்தினை அமுல்படுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது - என்றுள்ளது. (ஐ)

## கிளங்கன் மாவட்ட வைத்தியசாலையில் பொலிஸ் பிரிவு திறந்து வைப்பு

கண்டி,ஏப்.19

கிளங்கன் மாவட்ட வைத்தியசாலையில் பொலிஸ் பிரிவு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்தப்பிரிவை ஹற்றன் பொலிஸ் அத்தியட்சகர் ரவி சந்திரசிங்ஹ நேற்றுமுன்தினம் திறந்துவைத்துள்ளார்.

இந்தநிகழ்வில் கிளங்கன் மாவட்ட வைத்திய அதிகாரி நிஹால் வீரசூரிய, நோர்வூட் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சமன்குமார ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இந்திய அரசின் நிதியுதவியில் 150 படுக்கைகளுடன் சகல வசதிகளும் கொண்ட வைத்தியசாலையாக கிளங்கன் மாவட்ட வைத்தியசாலை தரமுயர்த்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நெல்


திருகோணமலை,ஏப்.20

கிண்ணியாப் பிரதேசத்தில் அண்மையில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு கிழக்கு மாகாண சபை விவசாய அமைச்சினால் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மாலை விதை நெல் வழங்கி ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு கிண்ணியா கமநல சேவை நிலையத்திற்கு முன்னால் நடைபெற்றது.

இந்தநிகழ்விற்கு கிழக்கு மாகாணத் விவசாய அமைச்சர் துரையப்பா நவரட்னராஜா பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு விதை நெல்லை வழங்கி வைத்துள்ளார்.

இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண தவிசாளர் எச்.எம்.எம்.பாயிஸ், கிழக்கு மாகாணசபை உறுப்பினர்களானமௌலவி எஸ்.எல்.எம்.ஹஸன், எம்.ஏ.எம். மஹ்ரூப், கிழக்கு மாகாண விவசாயப் பணிப்பாளர் எம்.ஹூஸைன், கிண்ணியாப் பிரதேச உதவிச் செயலாளர் எஸ். கிருணேந்திரன் ஆகியோர் கலந்துகொண்டனர். (ச)

### நோயின்றி வாழ....



அண்மையில் ஏற்பட்ட பெருவெள்ளம் காரணமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் 56 ஆயிரம் குடிதண்ணீர்க் கிணறுகள் பாதிக்கப்பட்டுள்ளன. இந்தக் கிணறுகளை மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகத்தின் ஏற்பாட்டில் சுத்தப்படுத்தும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (ச-21)

## கணினி மயப்படுத்தப்பட்ட அடையாள அட்டை அறிமுகம்

திருகோணமல்லை பொது வைத்தியசாலை ஊழியர்களுக்கு நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை முதல் கணினி மயப்படுத்தப்பட்ட அடையாள அட்டை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த அடையாள அட்டையில் ஊழியர்களின் முழு விவரங்களும் உள்ளடக்கப்பட்டதாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

இதுவரைகாலமும் ஊழியர்களுக்கென சாதாரண அடையாள அட்டையே வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச)

## ஆற்றில் நீராடிய மூவர் மரணம்

மத்திய மலையகத்தில் பதிய பெலெல்ல பெலிஹூல்ஒயா ஆற்றில் நீராடச் சென்ற மூவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதாக பதிய பெலெல்ல பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இளைஞர்கள் இருவரும் யுவதியொருவரும் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர். நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை கொழும்பிலிருந்து உறவினர் வீட்டுக்கு வந்தவர்களே ஆற்றில் நீராடச் சென்றபோது உயிரிழந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)

# நுவரெலியா கல்வித் திணைக்கள ஊழியர்களின் நடவடிக்கை குறித்து தமிழ் ஆசிரியர்கள் அதிருப்தி

நுவரெலியா,ஏப்.20

நுவரெலியா கல்வித் திணைக்களத்திற்குச் செல்லும் தமிழ் ஆசிரியர்கள் தமது கருமங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு அலைந்து திரியவேண்டியுள்ளது என விசனிக்கின்றனர்.

சம்பளம், பதவிநிலை, தரம் போன்ற பிரச்சினைகளுக்கு அதிகாரிகளிடம் முறையிட்டு, அவர்கள் உரிய நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டும் கூட அங்குள்ள சில ஊழியர்கள் அவற்றைச் செய்யாமல் இழுத்தடித்து வருகின்றனர் எனப் பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

சான்றிதழ் தேவை, கடிதம் தேவை, சத்தியக் கடதாசி தேவை என்று கூறியும் தமிழ் ஆசிரியர்கள் அலைக்கழிக்கப்படுகின்றனர் என்றும் விசனிக்கின்றனர்.

சில சமயம் முதலில் கையளித்த சான்றிதழ்களின் பிரதிகளையே மீண்டும் மீண்டும் கேட்கின்றனர் என்றும் ஆசிரியர்கள் தரப்பில் கூறப்படுகின்றது.

இது குறித்து மத்திய மாகாண கல்வியமைச்சு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச)

# நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள குடும்பங்கள் சொந்த இடங்களில் குடியேற்றப்படல் வேண்டும்

திருகோணமலை, ஏப்.20

மூதூர்ப் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட சம்பூர் கூனித்தீவு, சூடைக்குடா, நவரத்தினபுரம் ஆகிய கிராமங்களிலிருந்து 2006 யுத்த நடவடிக்கையின்போது இடம் பெயர்ந்து தற்காலிக நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள ஆயிரத்து 600 குடும்பங்களைச் சேர்ந்த சுமார் ஆறாயிரம் பேரும் சொந்த இடங்களில் மீளக் குடியமர்த்தப்பட வேண்டும்.

மூதூர்ப் பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவர் க.திருச்செல்வம் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

மூதூர்ப் பிரதேச சபையின் முதலாவது அமர்வு செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, உள்ளூராட்சித் தேர்தலில் ஏழு ஆசனங்களுடன் மூதூர் பிரதேச சபையின் நிர்வாகத்தைக் கைப்பற்றியது. அந்தக் கட்சியின் மேலதிக விருப்பு வாக்குகளைப் பெற்ற ஆசிரியர் ஜே.எம்.ஷெரிப் தவிசாளராகப் பதவி ஏற்றார். அவரின் தலைமையிலேயே முதலாவது அமர்வு இடம்பெற்றது.

இலங்கைத் தமிழரசுக் கட்சி மூதூர்ப் பிரதேச சபையில் மூன்று ஆசனங்களைப் பெற்று எதிர்க் கட்சியானது. கட்சியின் சார்பில் கூடுதல் விருப்பு வாக்குகளைப் பெற்ற க.திருச்செல்வம் எதிர்க் கட்சித் தலைவரானார்.

திருச்செல்வம் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியவை வருமாறு:-

மதங்கள் வேறுபட்டிருப்பினும் மொழியால் நாம் அனைவரும் ஒன்றுபட்டுள்ளோம். சகல இன மக்களுக்கும் பாகுபாடற்ற முறையில் சேவையாற்ற வேண்டியது எம்மவரின் கடமையாகும்.

மூதூர்ப் பிரதேச சபையின் எல்லைக்குள் வாழும் மக்களில் ஒரு பகுதியினர் யேரினால் இடம்பெயர்ந்து மணற்சேனை, பட்டித்திடல், கிளிவெட்டி, கட்டைபறிச்சான் ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ள தற்காலிக முகாம்களில் அடிப்படை வசதிகளற்ற நிலையில் வாழ நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர். அவர்களின் வாழ்வில் ஒளிமயம் ஏற்பட வேண்டும்.

இது குறித்து தமிழரசுக் கட்சி, அரசுடன் பேச்சுக்களை நடத்தி வருகின்றது. பிரதேச அபிவிருத்திக்கு அரச துறையினரில் மட்டும் தங்கியிருக்காது தனியார் துறை, வர்த்தகத் துறையினரின் சேவைகளையும் பிரதேச சபை பெறவேண்டும் - என்றார். (ச)

# ஐ.நா.நிபுணர்குழு அறிக்கைக்கு எதிராகப் போராட அனைவரும் அணிதிரளுங்கள்

## சஜித் பிரேமதாஸ அழைப்பு

ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கைக்கு எதிராகக் குரல் கொடுக்க அனைவரும் அணி திரள வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் இணைப் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

இலங்கைப் படையினர் சர்வதேச நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படுவதைத் தடுத்து நிறுத்த அனைவரும் இணைந்து குரல் கொடுக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு -

ஐ.நா. நிபுணர் குழு அறிக்கை இலங்கைப் படையினருக்கு எதிரான வகையில் காணப்படுகிறது.

சிறையில் தண்டனை அனுபவித்து வரும் ஜனநாயகத் தேசியக் கூட்டமைப்புத் தலைவர் சரத் பொன்சேகா விடுதலை செய்யப்பட வேண்டும்.

சர்வதேச அழுத்தங்களுக்கு மத்தியில் இராணுவத்தினர் மீது அரசு காட்டி வரும் ஆதரவை இந்த நடவடிக்கை மூலம் வெளிப்படுத்த முடியும்.

ஒருவரை ஒருவர் குற்றம் சுமத்திக் கொள்வதற்கு இது உரிய தருணமல்ல. அரசும் எதிர்க்கட்சிகளும் வெளிநாட்டு அழுத்தங்களுக்கு எதிராக இணைந்து செயற்பட வேண்டும்.

நிபுணர் குழு தொடர்பில் அரசு குறுகிய கால அடிப்படையிலான வெளியுறவுக் கொள்கைகளைப் பின்பற்றியது. அதன் விளைவை இன்று அனுபவிக்க நேரிட்டுள்ளது. ஐக்கிய நாடுகளின் நிபுணர்குழு தொடர்பான அரசின் நடவடிக்கைகள் கேள்விக் குறியாக அமைந்துள்ளன. நிபுணர் குழு அமைப்பதைத் தடுத்து நிறுத்துவதற்கு அணிசேரா நாடுகளின் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்ள அரசு தவறியுள்ளது.

அரச தரப்பினரைச் சந்திக்க இடமளிக்கப்பட மாட்டாது என அறிவித்து இரகசியமான முறையில் நிபுணர் குழுவிற்கும் அரச பிரதிநிதிகளுக்கும் இடையில் பேச்சு நடத்தப்பட்டது.

அரசியல் நோக்கங்களுக்காகப் படையினரை எந்தச் சந்தர்ப்பத்திலும் நாம் காட்டிக் கொடுத்ததில்லை. இந்தக் கருத்துக்கள் எமது நிலைப்பாடே தவிர கட்சியின் நிலைப்பாடாகக் கருதமுடியாது- என்றார்.

# கப்பம் பெறும் குழுக்கள் தலைதூக்க மஹிந்த அரசின் ஆதரவே காரணம்

## ஐ.தே.க. குற்றச்சாட்டு

கொழும்பு, ஏப். 20

நாட்டில் நடைபெறும் கப்பம் கோரல் சம்பவங்களுக்கு முற்றுமுழுதாக மஹிந்த ராஜபக்ஷவின் அரசே பொறுப்புக்கூற வேண்டும் என்றும் கப்பம் பெறும் குழுக்கள் தலைதூக்க மஹிந்த ராஜபக்ஷ அரசின் ஆதரவே காரணம் என்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் கருஜயசூரிய குற்றம் சாட்டியுள்ளார்.

நாட்டில் நடைபெறும் கப்பம் கோரல் சம்பவங்களில் அமைச்சர்களின் ஆதரவு பெற்ற பாதாள உலகக் கும்பல்களின் உறுப்பினர்களும், சட்டத்தையும் ஒழுங்கையும் பாதுகாக்க வேண்டிய பொலிஸாரும் இணைந்து கப்பம்கோரல் சம்பவங்களில் தொடர்புபட்டிருப்பதற்கு அவர்களுக்கு வழங்கப்படும் அரச ஆதரவே காரணம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

நாட்டில் நடைபெறும் கப்பம் கோரல் சம்பவங்களுக்கு முற்றுமுழுதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அரசே பொறுப்புக் கூற வேண்டும். அதற்கான ஆதாரங்கள் இப்போது வெளிவரத் தொடங்கியிருக்கின்றன.

அண்மைக்காலமாக வெளிவரத் தொடங்கியிருக்கும் மீன்சந்தைக் கப்பம் கோரல்கள், கிராண்ட்பாஸ் கப்பம் கோரல் சம்பவம் என்பன அதற்கான சிறந்த எடுத்துக்காட்டுகளாகும். அவற்றில் சம்பந்தப்பட்டிருப்பவர்கள் அரசின் ஆசியைப் பெற்ற குண்டர்கள் என்பதை முழு நாடுமே அறியும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (சி)

# சிங்கள வலயத்தின் கீழ் தமிழ்ப் பாடசாலைகள்

திருகோணமலை,ஏப்.20

திருகோணமலை மாவட்டத்தில் நான்கு தமிழ்ப் பாடசாலைகள் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள சிங்கள வலயத்தின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.


திருகோணமலை, முதலைக்குளம் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள நான்கு தமிழ்ப் பாடசாலைகள் கடந்த மார்ச் மாத இறுதி வரையில் திருகோணமலை கல்வி வலயத்தின் கீழ் இருந்துள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தமாதம் புதிய சிங்கள கல்வி வலயம் உருவாக்கப்பட்டதில் இந்தப் பாடசாலைகள் நான்கும் சிங்கள நிர்வாகத்தின்கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன.

இந்தத் தமிழ்ப் பாடசாலைகளின் ஆசிரியர்கள், சிங்கள மொழியில் ஆவணங்களைத் தயாரிக்க வலியுறுத்தப்பட்டுள்ளனர்.

அவர்களுக்கான பயிற்சிகள் மற்றும் கருத்தரங்குகள் என்பன சிங்கள மொழியிலேயே மேற்கொள்ளப்படுகின்றமையால் ஆசிரியர்கள் பெரும் சிரமங்களுக்கு முகம் கொடுக்கின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

## சந்திப்பு...



பங்களாதேஷுக்கு உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அந்த நாட்டுப் பிரதமர் ஷேக் ஹசீனாவைச் சந்தித்துப் பேச்சு நடத்தியபோது...

# வாகன விபத்தில் ஒருவர் பலி

கொழும்பு,ஏப்.20

புத்தளம், முந்தல் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கீரியன்கள்ளி பிரதேசத்தில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் பலியானார்; மற்றுமொருவர் காயமடைந்துள்ளார்.

இந்த விபத்துச் சம்பவம் புத்தளம் - முந்தல் வீதியில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்றுள்ளது.

நித்திரை மயக்கத்திலிருந்த லொறியின் சாரதி மரமொன்றுடன் லொறியை மோதியதினாலேயே இந்த விபத்து ஏற்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (ச)

# வடக்கு,கிழக்கு மாகாண எல்லை நிர்ணயக் குழுவில் தமிழ்,முஸ்லிம் பிரதிநிதிகளும் சேர்க்கப்பட வேண்டும்

உத்தேசிக்கப்பட்டுள்ள உள்ளூராட்சித் தேர்தல் திருத்தச் சட்டத்தின் கீழ் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் நியமிக்கப்படவுள்ள எல்லை நிர்ணயக்குழுவில் தமிழ் மற்றும் முஸ்லிம் பிரதிநிதிகளும் சேர்க்கப்பட வேண்டும் என்று தேர்தல் கண்காணிப்பு நிறுவனமான 'பவ்ரல்' அமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது.

அந்த அமைப்பு இது தொடர்பாக மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு-

குழு நிலைக்குச் சென்றுள்ள இந்தச் சட்ட மூலத்தில் சேர்க்கப்பட வேண்டியவை என அது அபிப்பிராயப்படும் பிரேரணைகளை பவ்ரல் அமைப்பு அரசுக்கும், எதிர்க்கட்சிகளுக்கும் அனுப்பியுள்ளது.

இந்தச் சட்ட மூலம் விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையும் கூடிய வாக்கெடுத்தவர் வென்றவர் என்ற பழைய முறையும் சேர்ந்த ஒரு தேர்தல் முறையைக் கொண்டுவரமுனைகிறது. பெருந்தோட்ட சமூகத்தினர் கணிசமான தொகையினர் உள்ள மாவட்டங்களுக்கான எல்லை நிர்ணய சபைகளில் இந்தச் சமூகத்தினின்நலன்களைக் கவனிக்கும் வகையில் அங்கத்தவர்கள் அமைய வேண்டும்.

தேசிய மற்றும் மாவட்ட எல்லை நிர்ணயக் குழுக்களுக்கு அங்கத்தவர்களை நியமிக்கும் போது அல்லது அவர்களைப் பதவி விலக்கும் போது கடைப்பிடிக்க வேண்டிய நியமங்கள் வெளிப்படுத்தப்பட வேண்டும். புதிய முறையின் கீழ் நடைபெறும் தேர்தல் பிரசாரத்தில் வேட்பாளர் ஒருவர் செலவு செய்யக்கூடிய நிதியின் அளவுக்கு எல்லை விதிக்கப்பட வேண்டும். அங்கத்தவர் தெரிவிற்கான வட்டார முறையினால் தேர்தல் வன்முறையையும் வேட்பாளர் ஒருவருக்கான தேர்தல் பிரசாரச் செலவையும் குறைக்க கூடியதாக இது இருக்கும். இப்படி 'பவ்ரல்' அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

# இலங்கையைப் பாதுகாக்க ரஷ்யா, சீனாவை துணைக்கு அழைக்கிறார் விமல் வீரவன்ஸ

இலங்கைக்கு எதிரான ஐ.நா.வின் நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்த ரஷ்யாவும் சீனாவும் முன்வர வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்துள்ளது விமல் வீரவன்சவின் தேசிய சுதந்திர முன்னணி.

தேசிய சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் பியசிறி விஜேநாயக்க நேற்று முன்தினம் கொழும்பில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இந்த அழைப்பை விடுத்துள்ளார்.

ஐ.நா.நிபுணர்கள் குழுவின் அறிக்கையிடம் இருந்து இலங்கையைப் பாதுகாக்க ரஷ்யாவும் சீனாவும் உதவ வேண்டும் என்று அழைப்பு விடுக்கிறோம்.

ஐ.நாவில் ஆதிக்கம் செலுத்தும் அமெரிக்கா, பிரான்ஸ், பிரிட்டன் ஆகியவற்றை முறியடிக்க ரஷ்யாவும் சீனாவும் முன்வரவேண்டும்.

உலக அமைதியை நிலைநாட்ட ஐ.நா.அமைப்புத் தவறிவிட்டது. எனவே, ரஷ்யாவும் சீனாவும் புதிய உலக ஒழுங்கை உருவாக்க முன்வர வேண்டும். ஐ.நா.பொதுச்செயலாளர் பான் கீ மூன் அமெரிக்காவின் கைப்பொம்மையாக உள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவையும் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவையும் அனைத்துலக குற்றவியல் நீதிமன்றத்தில் நிறுத்தும் முயற்சிகளுக்குப் பான் கீ மூன் பயன்படுத்தப்பட்டுள்ளார்.

அவர்கள் அதைச் செய்வதற்கு நாம் அனுமதிக்கப்போவதில்லை. அனைத்துலகக் குற்றவியல் நீதிமன்றத்தில் எமது போர் வீரர்களை நிறுத்துவதற்கு எடுக்கப்படும் எந்தவொரு முயற்சிகளுக்கு எதிராகவும் நாம் போராட்டங்களை நடத்துவோம். எமது சடலங்களின் மீதுதான் அவர்களால் அதைச் செய்ய முடியும்.

நிபுணர்கள் குழுவை பான்கீ மூன் தனக்கு ஆலோசனை கூறுவதற்குத்தான் அமைத்தார். ஆனால் பான்கீ மூன் அதை ஐ.நாவின் அறிக்கையாக வெளியிட்டுள்ளார். 190 இற்கும் அதிகமான நாடுகள் அங்கம் வகிக்கும் ஐ.நா. பொதுச்சபையில் தீர்மானம் நிறைவேற்றப்படாமல் எந்தவொரு குழுவையும் அமைக்கவோ அல்லது பாதுகாப்புச்சபையின் அனுமதி பெறப்படாமல் எந்தவொரு நாட்டின்மீதும் போர்க்குற்றங்கள் தொடர்பான விசாரணை செய்யப்படவோ முடியாது என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.(ச)




வரணி இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழாவுக்கு விருந்தினர்களாகக் கலந்து கொண்ட சாவகச்சேரி கோட்டக் கல்வி அலுவலர் கு.சிவானந்தம் , வரணி ம.வி. முன்னாள் அதிபர் சி.துரைராஜா ஆகியோரை அதிபர் எஸ்.தர்மலிங்கம் மற்றும் ஆசிரியர் மாணவர்கள் ' பாண்ட்' வாத்திய சகிதம் ஊர்வலமாக அழைத்துச் வருகின்றனர். (207)

# அரச ஊழியர்கள் பொதுசன ஊழியராக மக்களுக்குப் பணியாற்ற முன்வரவேண்டும்

## சொலிசிற்றர் ஜெனரல் வேண்டுகோள்

அரச ஊழியராக அன்றிப் பொதுசன ஊழியராக மக்களுக்குச் சேவை செய்யவேண்டும். மக்களுக்குப் பிரச்சினை ஏற்படும் போது பிரச்சினையின் ஒரு பகுதியாக நாம் இருக்கக் கூடாது.

அந்தப் பிரச்சினைக்கான தீர்வின் ஒரு பகுதியாகச் சேவையாற்றவேண்டும் என மேலதிக சொலிசிற்றர் ஜெனரலும் ஜனாதிபதியின் சட்டத் தரணியுமான எ.ஞானதாசன் தெரிவித்தார்.

நீதிமன்ற உத்தியோகத்தர்களுக்காக நடத்தப்பட்ட 10 நாள்கள் செயலமர்வில் பங்குபற்றியவர்களுக்குச் சான்றிதழ் வழங்கும் நிகழ்வின்போது பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்தும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

யாழ்.மாவட்டப் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தின் பிரதான மண்டபத்தில் நேற்று முன்தினம் இந்த நிகழ்வு இடம் பெற்றது.

இதன்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

அரச ஊழியர் என்ற உணர்வை விடுத்துப் பொதுசன ஊழியர் என்ற உணர்வுடன் மக்களுக்கு நம்பிக்கை ஏற்படும் விதமாக இதய சுத்தியுடன் சேவை செய்ய வேண்டும். பொதுமக்களுக்கு வினைத்திறனாகச் சேவையை வழங்கவேண்டும். நேரகாலம் பார்க்காமல் மக்களின் தேவைகளை உணர்ந்து செயற்படவேண்டும்.

மக்களுக்குத் திருப்திகரமான சேவையை வழங்கி இறைவனுக்குக் கணக்குக் காட்ட வேண்டும். நீதிபதிக்கோ அல்லது பதிவாளருக்கோ கணக்குக் காட்டுவதல்ல என்பதனை உணர வேண்டும். பொதுசன ஊழியராகிய நீங்கள் பிரச்சினையின் ஒரு பகுதியாக இருக்கமுடியாது. தீர்வின் ஒரு பகுதியாகவே இருக்க முடியும். பொதுசன உணர்வுடன் சேவை முன்னெடுக்கப்பட வேண்டும்.

வினைத்திறனான சேவை, அர்ப்பணிப்புத் தன்மை, குழுமமாகச் செயற்படுதல் இவை மூலமே மக்களுக்குச் சிறந்த சேவையை வழங்கமுடியும் என்பதை நினைவில் கொள்ளுங்கள் - என்றார். (ஐ-14)

# 60 வருடகாலம் பெறமுடியாத தீர்வை மூன்று வருடங்களில் பெற்றுத் தருவாராம்

## இப்படிக் கூறுகிறார் அமைச்சர் டக்ளஸ்

சண்டிலிப்பாய்,ஏப்.20

எதிர்ப்பரசியல் மூலம் பெறமுடியாத தீர்வை இணக்க அரசியல் மூலம் பெறமுடியும் என்ற நம்பிக்கை எனக்கிருப்பதனால் தான் அரசுடன் இணைந்து செயற்பட்டு வருகிறேன். எனவே, அனைத்து மக்களும் அணி திரண்டு எமது கரங்களைப் பலப்படுத்தினால் 30+30 வருடங்களாகப் பெறமுடியாத தீர்வை மூன்று வருடங்களில் பெற்றுத் தருவோம்.

இவ்வாறு பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத்தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆனைக்கோட்டைச் சந்திக்கு அருகில் உள்ள துரைராசாமண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டு பேசும்போது கூறினார்.

மானிப்பாய்,வட்டுக்கோட்டைத் தொகுதிகளைச் சேர்ந்த மக்கள் பிரதிநிதிகளைச் சந்தித்த அமைச்சர் தொடர்ந்து பேசுகையில் போது மேலும் தெரிவித்தவை வருமாறு:

கடந்த காலங்களில் எமக்குக் கிடைத்த அரிய வாய்ப்புக்களைச் சரியாகப் பயன்படுத்தத் தவறியதனால்தான் தமிழினத்துக்கு இந்த அழிவு ஏற்பட்டது. த.தே.கூ. சுயநலத்துடன் செயற்பட்டுவருகின்றது. ஆனால், எமது கட்சி பொதுநல நோக்குடன் செயற்படுகிறது. அதனால்தான் நாங்கள் நாட்டைவிட்டு வெளியேறாமல் மக்களோடு மக்களாக வாழ்ந்து வருகிறோம்.

1950 ஆம் ஆண்டிலிருந்து 1980 ஆம் ஆண்டுவரை ஜனநாயக வழியில் காலம் வீணாக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து 1980 இல் இருந்து 2009 வரை ஆயுதப் போராட்டம் மூலம் காலம் வீணாக்கப்பட்டது. இதனால் இருந்த உரிமைகளையும் இழந்து பின்தள்ளப்பட்டுள்ளோம். தமிழ் மக்களுக்கு இழந்த உரிமைகளைப் பெற்றுக் கொடுக்க வேண்டும் என்பதற்காகவே அரசுடன் இணைந்து செயற்படுகிறோம்.

### வழக்கு எமக்குச் சாதகமாக வரும்

ஒத்திவைக்கப்பட்ட யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களுக்கான உள்ளூராட்சி மன்றத் தேர்தல் மிக விரைவில் நடைபெறவிருக்கின்றது. எமது கட்சி சார்பில் தாக்கல் செய்யப்பட்ட வேட்புமனு நிராகரிக்கப்பட்டதை எதிர்த்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் தீர்ப்பு மிகவிரைவில் வெளியாக இருப்பதுடன், எமக்குச் சாதகமாகவும் அது அமையவிருக்கிறது. எனவே, 19 உள்ளூராட்சிச் சபைகளின் அதிகாரங்களையும் நாங்கள் கைப்பற்ற வேண்டும். அதற்கு எல்லோரும் பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

அடுத்த மாதம் பிற்பகுதியில் தேர்தல் நடைபெறலாம் என்ற நம்பிக்கை எமக்கிருக்கிறது. தேர்தல் பிரசாரத்துக்கு ஜனாதிபதி உட்பட அமைச்சர்கள் இங்கு வரவிருக்கிறார்கள். எமது இலக்கு அபிவிருத்தியும் அதிகாரப் பகிர்வும்தான்.

பொது நிறுவனங்களால் மேற்கொள்ளப்படும் வாழ்வாதாரத் திட்டங்கள்,அபிவிருத்தி வேலைகள் யாவும் அரச அங்கீகாரத்துடன் தான் இடம்பெறுகின்றன என்பதை மக்கள் அறியவேண்டும் - என்றார். (ஐ-115)

# இயந்திர மயமான வாழ்க்கைச் சூழல் ஆலயம் சென்று வழிபடத் தடையாகவுள்ளது

யாழ்ப்பாணம்,ஏப்.20

இன்றைய இயந்திரமயமான வாழ்க்கைச் சூழல் ஆலயங்களுக்குச் சென்று இறைவனை வழிபட முடியாத சூழலுக்கு எம்மைப் பின்தள்ளி விட்டது.

இதனால் ஆன்மீக ரீதியில் எமது வாழ்க்கையைப் பின்பற்றாமல் பல்வேறு தீய செயல்களைச் செய்யும் நிலைக்கு ஆளாகிக் கொண்டிருக்கின்றோம்.

இவ்வாறு தெரிவித்தார் யாழ். வதிவிடத் துறவி பிரம்மச்சாரி ஜாக்கிரத் சைத்தன்ய சுவாமிகள்.

காரைநகர் வாரிவளவு கற்பக விநாயகர் ஆலயத்தின் பெருந்திருவிழாவில் 'மகோற்சவமும் கொடியேற்றமும்' என்னும் தலைப்பில் ஆன்மீகச் சொற்பொழிவை நிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து ஆன்மீகச் சொற்பொழிவை நிகழ்த்தும் போது தெரிவித்தவை வருமாறு:

"கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்'' என நமது முன்னோர்கள் சொன்னதற்கு இணங்க ஆலயங்கள் சென்று வழிபாடுகள் மேற்கொள்ள வேண்டியது இன்றியமையாத ஒன்றாகும்.

தினமும் ஆலயங்கள் சென்று வழிபட முடியாதவர்களின் நலன் கருதி வருடத்தில் ஒரு தடவை ஆலயங்களில் மஹோற்சவ காலங்களை ஏற்படுத்தியுள்ளார்கள்.

இந்த மஹோற்சவ காலத்தில் ஊர் மக்கள் விரதமிருந்து இறைவனை வழிபடுவர்.

இதன் போது முதல் நாள் திருவிழாவில் கொடியேற்றம் இடம் பெறுகின்றது.

கொடிக்கம்பம், கொடிச்சீலை, கொடிக்கயிறு போன்றன பதி, பசு,பாசம் எனும் உயர்ந்த தத்துவங்களைக் குறிக்கின்றன. கொடியேற்றத்தால் ஒருவித ஆன்மீக சக்தியும் ஊட்டப்படுகின்றது.

கொடிக்கம்பத்தைக் கம்பம் என்றும் மூலஸ்தான இறைவனை விம்பம் என்றும் யாகசாலை இறைவனைக் கும்பம் என்றும் மூன்று விதமாகக் குறிப்பிடலாம்.

இவையனைத்தும் இணைந்து கிடைக்கும் சக்தியைத் தான் தீர்த்தத் திருவிழா அன்று அபிஷேகமாகப் பெறுகின்றோம்.

இவ்வாறு மகோற்சவ காலங்களில் கிடைக்கும் தார்ப்பரியத்தையும், இந்துமதத் தத்துவங்களையும் தெரிந்து கொண்டு ஆலயங்கள் சென்று வழிபடுவதன் மூலம் இறை சக்தியையும் வேண்டிய அருளையும் பெறலாம்- என்றார். (ஐ-313)

# க.பொ.த. (சா/த) பெறுபேறு கிடைக்காதோருக்கு

க.பொ.த(சா/த) -2010 பெறுபேறு இதுவரை கிடைக்காத யாழ்ப்பாணம், தென்மராட்சி, தீவகக் கல்வி வலயங்களைச் சேர்ந்த பாடசாலை மற்றும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளது அடையாளத்தை உறுதிப்படுத்தல் தொடர்பான விசாரணை அமர்வு பரீட்சைத் திணைக்கள அலுவலர்களால் யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியில் எதிர்வரும் 29 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8.30 மணி முதல் இடம்பெறவுள்ளது.

இந்த விடயம் தொடர்பான தனிப்பட்ட கடிதங்கள் பரீட்சார்த்திகளுக்குப் பரீட்சைத் திணைக்களத்தால் அனுப்பப்பட்டுள்ளன.

ஆகவே, கடிதத்தில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களுடன் சமுகமளிக்குமாறு யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுக்கொண்டுள்ளார். (ஐ)

# டீசல் இயந்திரப் பயிற்சி நெறி

யாழ்ப்பாணம்,ஏப். 20

நல்லூர் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட 17 வயது முதல் 25 வயதுவரையான ஆண்டு 10 இல் சித்தியடைந்தவர்களை, டீசல் இயந்திரப் பயிற்சிக்கான விண்ணப்பங்களை நல்லூர் பிரதேச செயலகத்துக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

இலங்கைத் தொழிற் பயிற்சி அதிகார சபையினால் மேற்படி டீசல் இயந்திரத் திருத்துநருக்கான பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

ஆறு மாதங்கள் நடைபெறும் இந்தப் பயிற்சிநெறியின் பின்னர் பயிற்சியாளர்களுக்குத் தேசிய தொழில் தகைமைச் சான்றிதழ் வழங்கப்படும். (ஐ-7)

# நிர்வாகிகள் தெரிவு

நவாலி,ஏப்.20

சண்டிலிப்பாய் பிரதேச செயலகப் பிரிவின் சர்வதேச முதியோர் சங்க அங்கத்தவர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவர் - க.மனுவேற்பிள்ளை, உபதலைவர்- சேவியர் சர்வானந்தா, செயலாளர்- யோசேப் ஜெயராணி, உப செயலாளர்- சே.சுந்தரராசன், பொருளாளர்- இ.சிவயோகன்.

இத்துடன் 7 பேர் கொண்ட நிர்வாக உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (ஐ-100)

* * *

யாழ்ப்பாணம்,ஏப்.20

யா/ செங்குந்தா இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் புதிய நிர்வாகிகள் தெரிவு அதிபர் இ.பாலகுமார் தலைமையில் இடம்பெற்றது.

நிர்வாகிகள் விவரம் வருமாறு:

தலைவர்- இ.பாலகுமார், உபதலைவர்- வ.பரமசிவம், சி.பேரின்பநாதன், செயலாளர்- செ.குகதாஸன், உபசெயலாளர்- சி.பத்மராஜா, பொருளாளர் - சி.இலட்சுமிகாந்தன்.

ஒன்பது பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது. (ஐ)

தருவது வித்தியா

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:**
சொல்வாக்கை காப்பாற்றி செல்வாக்கு பெறும் நாள். ஆடை, அலங்காரப் பொருள்கள் வாங்கலாம். அதிக செலவாகும் என நினைத்த காரியம் ஒன்றுக்கு குறைவாகச் செலவாகலாம். பொதுநலப் பணியாளர்கள் உற்சாகமாகச் செயற்படுவர். வியாபாரிகள் வெளியூர் பயணங்கள் செல்ல நேரிடலாம். நேர்மை, நாணயமாக நடந்து கொள்வீர்கள்.

**இடபம்:**
கவலைகள் நீங்கி மனதில் நிம்மதி குடிகொள்ளும் நாள். புதிய பணவரவுகளால் கையில் பணப்புழக்கம் அதிகரிக்கும். உத்தியோகத்தர்கள் கடுமையான வேலைப்பளுவைச் சந்திக்கலாம். கலைஞர்கள் புதிய தொழில் ஒப்பந்தங்கள் போட மேற்கொண்ட முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. உறவினர்களால் அனுகூலம் பெறலாம்.

**மிதுனம்:**
மதிப்பு, மரியாதைக்கு பாதிப்பு வரும் வகையிலான சம்பவங்கள் நடக்கலாம். பெண்களால் உருவான சிரமங்கள், அன்புத் தொல்லைகளில் இருந்து விடுபடுவீர்கள். பிள்ளைகள் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள். சக ஊழியர்களுக்காக நீங்கள் சில வேலைகளைச் சேர்த்து செய்யலாம். குரு வழிபாட்டின் மூலம் குதூகலம் கூடும்.

**கடகம்:**
வீண் பழிகளைத் தவிர்க்க விழிப்போடு செயற்பட வேண்டிய நாள். நேற்று வந்த பணவரவு ஒன்றுக்கு இன்று திடீர் செலவு ஏற்படலாம். வியாபாரிகள் போட்டி, எதிர்ப்புகளால் மன உளைச்சல்களுக்கு ஆள்படலாம். புதிய சொத்துக்கள் வாங்கப் போட்ட திட்டங்களில் முன்னேற்றம் காணலாம். உறவினர்கள் அன்புத் தொல்லையுண்டு.

**சிங்கம்:**
தடை, தாமதங்களை முறியடித்து எதிலும் வெற்றிக் கொடி நாட்டும் நாள். நண்பர்கள் நலனில் அக்கறை காட்டுவீர்கள். பல மணி நேரமாகும் என நினைத்த வேலை ஒன்று சில மணி நேரங்களில் முடிவுக்கு வரலாம். முக்கியமான வேலை ஒன்றுக்காகச் சிரமப்பட்டாலும், அதனால் ஆதாயம் பெறலாம். சிலரிடம் பெருந்தன்மையுடன் நடந்து கொள்வீர்கள்.

**கன்னி:**
பிடிவாதமான, குதர்க்கமான செயற்பாடுகளால் மற்றவர்களின் அதிருப்திக்கு ஆளாகலாம். பொழுதுபோக்கு உல்லாச விடயங்களில் நாட்டம் செல்லும். உதவுவதாகச் சொன்ன சக ஊழியர்கள் கடைசி நேரத்தில் கையை விரிக்கலாம். அரசியல்வாதிகள் குதர்க்கமான பேச்சுக்களைத் தவிர்க்க வேண்டும். உடல் நலம் இல்லாத உறவினர் ஒருவரை பார்க்கலாம்.

**துலாம்:**
சந்தோஷமான அனுபவங்களால் உற்சாகம் பெருகும். தொழில் ரீதியாக ஒன்றுக்கு மேற்பட்ட வழிகளில் பணவரவுகளை பெறலாம். நண்பர்கள் சிலரை எதிர்பாராமல் சந்திக்கலாம். உங்களின் குடும்பப் பெருமை பற்றி மற்றவர்களிடம் பேசுவீர்கள். மற்றவர்கள் சிரமமாக நினைக்கும் வேலை ஒன்றை நீங்கள் எளிதாக செய்து முடிப்பீர்கள்.

**விருச்சிகம்:**
உற்சாகம், தெம்பு குறைந்து சோர்வு, சோம்பல் அதிகரிக்கும் நாள். கணவன், மனைவி இடையே சிறு வாக்குவாதங்கள் ஏற்படலாம். மற்றவர்களை நம்பி பணப் பொறுப்புகளை ஒப்படைக்க வேண்டும். குறைந்த செலவில் முடியும் என நினைத்த வேலை ஒன்றுக்கு அதிகமாகச் செலவாகலாம். தெய்வ வழிபாட்டில் நாட்டம் செல்லும்.

**தனுசு:**
அலைச்சல் இல்லாமல் இருந்த இடத்தில் இருந்தே சில வேலைகளை முடித்துக் கொள்வீர்கள். உங்களிடம் வாக்குக் கொடுத்த நண்பர்கள் அதைக் காப்பாற்றிப் பெருமைப்பட வைப்பர். பல நாள்களாக உங்களின் வீட்டிற்கு வராத உறவினர் ஒருவர் வரலாம். எதிர்பாராத வகையில் சில விடயங்கள் உங்களுக்குச் சாதகமாக நடக்கலாம்.

**மகரம்:**
மலை போல தோன்றிய பிரச்சினை ஒன்று பனி போல விலகி விடும். கணவன், மனைவி இடையே அன்னியோன்யம் அதிகரிக்கும். மற்றவர்கள் செய்த தவறுக்கும் நீங்கள் பொறுப்பேற்கலாம். அரசியல்வாதிகள் போட்டிகளைச் சந்திக்கலாம். தொழில் ரீதியாக வரவேண்டிய பணவரவுகள் வரலாம். நீண்டநாளைய ஆசை ஒன்று நிறைவேறும்.

**கும்பம்:**
மனதில் இனம்புரியாத பயம் குடிகொள்ளலாம். பலர் பங்கேற்கும் நிகழ்ச்சிகள், கூட்டங்களில் நீங்களும் கலந்துகொள்ளலாம். மற்றவர்கள் உங்களைப் பார்த்து பொறாமைப்படும் வகையிலான சம்பவங்கள் நடக்கலாம். தொழில் நிமித்தம் பிரிந்திருந்த குடும்ப உறுப்பினர்கள் மீண்டும் ஒன்று சேரலாம். கனவுகளால் தொல்லையுண்டு.

**மீனம்:**
நடந்து முடிந்த சம்பவம் ஒன்றுக்காக மனவருத்தம் அடைவீர்கள். வேண்டாத சிலரால் பிரச்சினைகளை சந்திக்கலாம். வழக்கு விவகாரங்களில் எச்சரிக்கை அவசியம். சிலரிடம் கடனாக வாங்கிய பணத்தை உடனே திருப்பிக் கொடுக்க நேரிடலாம். திட்டமிட்ட வேலை ஒன்றை நாளை செய்யலாம் என மாற்றி வைப்பீர்கள். வெறுப்பு உண்டாகும்.

# காணாமற்போன கடற்படை சிப்பாய்கள்! அவிழும் மர்ம முடிச்சு



இலங்கைக் கடற்படையின் நான்கு சிப்பாய்கள் முல்லைத்தீவுக் கடலில் திடீரென மாயமாக மறைந்தமை, அதன் பின்னர் சில தினங்கள் கழித்து இராமேஸ்வரம் மீனவர்கள் நால்வர் இலங்கையின் நெடுந்தீவுக்கு அருகே காணாமற் போனமை போன்ற சம்பவங்கள் இலங்கையிலும் தமிழகத்திலும் மிகுந்த பரபரப்பான செய்திகளாக அடிபட்ட போதிலும், தமிழகத் தேர்தல் சூட்டுக்கு மத்தியில் அந்த விவகாரங்கள் அப்படியே அமுங்கித் தான் போயின.


ஆனாலும், இந்த மர்ம மறைவுக்குப் பின்னால் கட்டவிழும் மிகப்பெரும் இராஜதந்திர நெருக்கடி அப்படி ஒன்றும் குறைத்து மதிப்பிடத்தக்கதல்ல என்பதுதான் இதில் கவனிக்கப்பட வேண்டிய விவகாரமாகும்.

ஒருபுறம், இலங்கை - இந்திய கடற்படைகள் திருகோணமலைக் கடற்பிராந்தியத்தில் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் கூட்டுக் கடற்படை ஒத்திகை நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்குத் தயாராகின்ற அளவுக்கு இரு நாடுகளுக்கும் இடையில் ஒத்திசைவு இருப்பதாகக் காட்டப்படுகின்ற போதிலும், திரைமறைவில் இடம்பெறுகின்ற சம்பவங்களும் அரங்கேறும் நிகழ்ச்சிகளும் இரு தரப்பினருக்கும் இடையில் பெரும் பனிப்போர் தீவிரமடைந்து வருவதையே காட்டுகின்றன என்கின்றனர் விடயமறிந்த தரப்பினர்.

தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்பிராந்தியத்துக்குள் அத்துமீறிப் பிரவேசித்து மீன்பிடிப்பில் ஈடுபடுகின்றனர் என்று தெரிவித்து, அவர்களுக்கு எதிராக அடாவடித்தனமான வன்முறைப் போக்கை இலங்கைக் கடற்படை தொடர்ந்து கடைபிடிக்கத் தொடங்கியமையை அடுத்து, கடல் எல்லை விவகாரம் தொடர்பாக இலங்கை - இந்திய அதிகாரத்தரப்புகளுக்கு இடையில் தீவிரமடையத் தொடங்கிய பூசல் இப்போது உச்சக்கட்டத்தைத் தொட்டிருக்கின்றது.

கடந்த மார்ச் 29ஆம் திகதி முல்லைத்தீவுக்கு வடக் கேயுள்ள சுண்டிக்குளம், கடற்படைத் தளத்திலிருந்து வழக்கம்போல 'டிங்கி' படகு ஒன்றில் இலங்கைக் கடற் படையின் நான்கு சிப்பாய்கள் ரோந்து நடவடிக்கை களுக்காகப் புறப்பட்டுச் சென்றனர் என அந்தக் கடற் படைப் பதிவுகள் கூறுகின்றன.

அந்தச் சமயத்தில், முன்னிரவு வேளையில் அத்தளத்தின் கட்டளை அதிகாரியான லெப்டினன்ட் விக்கிரமகுணரத்ன என்ற கடற்படை அதிகாரி தளத்திலேயே இருந்திருக்கின்றார். அவர் முகாமில் உள்ள தமது விடுதியில் அன்று இலங்கை - நியூசிலாந்து அணிகளுக்கு இடையில் நடைபெற்ற உலகக்கிண்ணக் கிரிக்கெட்டின் அரையிறுதி ஆட்டத்தைத் தொலைக்காட்சியில் ரசித்துக்




கொண்டிருந்தார் என்று கூறப்படுகின்றது.

எல்லாம் வழக்கம்போல நடைபெற்றிருக்குமானால் அடுத்த நாள் 30ஆம் திகதி விடிவதற்கு முன்னராக அந்த நான்கு கடற்படைச் சிப்பாய்களும் ரோந்து முடித்து தமது 'டிங்கி'ப் படகுடன் முகாம் திரும்பியிருக்க வேண்டும். அவர்கள் திரும்பவுமில்லை. அவர்களிடமிருந்து இன்று வரை எந்தத் தகவலுமில்லை.

அதற்கு அடுத்த நாள் மாலையில் சிப்பாய்கள் இல்லாமல் அவர்கள் பயணித்த டிங்கிப்படகு மட்டும் சுண்டிக்குளத்துக்கு அப்பால் கரை ஒதுங்கியிருக்கின்





றது. நான்கு சிப்பாய்கள் வசமும் இருந்த நான்கு ரி56 ரக இயந்திரத்துப்பாக்கிகளில் மூன்று டிங்கிக்குள் அப்படியே காணப்பட்டன. ஒன்றை மாத்திரம் காண வில்லை. அதேசமயம் அந்த டிங்கிப் படகில் பொருத் தப்பட்டிருந்த 'அவுட் போட்' மோட்டரும் படகுக்குள் மேலதிகமாக ஒரு பரலில் வைக்கப்பட்டிருந்த இரு நூறு லீற்றருக்கும் அதிகமான டீசலும் கூடக் காணாமற் போயிருந்தன.

சிப்பாய்கள் மர்மமாக மறைந்தமையை அடுத்து இலங்கைத் தரப்பில் இருந்து இரண்டு விதமான வெளிப்பாடுகள் உடனடியாக வெளிப் பட்டன.



முல்லைத்தீவுப் பிரதேசத்தை அண்டிய நிலப்பரப் பில் இராணுவத் தினர் சுற்றிவளைத்துத் தேடுதல்க ளைத் தீவிரப்படுத்தினர். ஒவ்வொரு பிரதேசத்தையும் துருவித் துருவிச் சோதனையிட்டனர். அகப்பட்ட தமிழ் இளைஞர்களை நோண்டி நுங் கெடுக்கவும் ஆரம்பித்தார்கள். இது - யுத்தத்தின் பின் எஞ்சியிருக்கக் கூடியவர்கள் எனக் கருதப்படும் கடற்புலிகளின் கைவரிசையாலேயே சிப்பாய்கள் காணாமற்போயிருக்க லாம் என்ற சந்தேகம் பாதுகாப்பு அதி கார பீடத்துக்கு எழுந்ததை வெளிப் படுத்தும் விடயமாக அமைந்தது.

அதேசமயம், சிப்பாய்கள் காணா மற்போன விவகா ரம் தொடர்பில் கொழும்பில் சிங்கள ஊடகங்களுக்குத் தகவல் கசியவிட்ட இலங்கைப் பாது காப்பு அதிகார வர்க்கம், அந்த விவகாரத்தில் இந்தியா வின் மறைமுகச் செயற்பாடு சம்பந்தப்பட்டுள்ளது என்ற சந்தேகத்தைக் கிளப்பவும் தயங்கவில்லை.

அதன் விளைவாகத்தான் ஏற்கனவே காணாமற் போன இலங்கையின் நான்கு கடற்படையினருக்கும் சமமான எண்ணிக்கையுடைய இராமேஸ்வரம் மீனவர்கள் நெடுந்தீவுக்கு அருகே மர்மமாக மறையச் செய்யும் நடவடிக்கை அடுத்த சில தினங்களில் எடுக்கப்பட் டிருக்கலாம் என இந்தியப் புலனாய்வாளர்கள் இப்போது சந்தேகப்படுகின்றனர்.

இப்படி இப்பிரதேசத்தில் இலங்கை இந்தி யத் தரப்புக்கள் நேரடியாக இல்லாவிட்டாலும் மறைமுகமாக ஆளாளுக்குக் கறுவிக் கொண்டு நிழல் யுத்தம் நடத்திக் கொண்டிருக்கையில் மறு புறத்தில் சிப்பாய்கள் காணாமற்போன விடயத்தில் மர்ம முடிச்சு அவிழும் சூழல் ஏற்பட் டிருப்பதாக இப்போது தெரிய வருகின்றது.

சம்பந்தப்பட்ட நான்கு சிப்பாய்களும் அவர்களது படகை நெருங்கி வந்த மற்றொரு படகில் ஏறியதை சில இந்திய மீனவர்கள் கவ னித்திருக்கின்றனர் என்ற ஒரு தகவலும் வெளியாகியிருக்கின்றது.

அதேவேளை சிப்பாய் கள் பயணித்த அந்த டிங்கிப் படகில் மோதல்கள் இடம் பெற்றமைக் கான அடையாளம் ஏதுமில்லை. அத்தோடு இருநூறு லீற்றருக்கும் அதிகமான டீசல் கொண்ட பரலை டிங்கிப் படகில் இருந்து இன்னொரு படகுக்கு தூக்கி, ஏற்றி, மாற்றுவது என்பது இழுபறி, மோதல்களுக்கு மத்தியில் இலகுவானதல்ல. ஒரு துளி டீசல் கூட சிந்தா மல், முட்டி மோதா மல் டீசல் பரல் ஏற்றப்பட் டிருக்கின்றது. 'அவுட்போட்' மோட்டார் கழற்றி எடுத்துச் செல்லப்பட்டிருக்கின்றது.

அத்துடன் ரி- 56 இயந் திரத் துப்பாக்கிகள் எடுத்துச் செல்லப்படவில்லை. அந்தப் பட குக்கு வந்த வேற்று ஆள்களுக்கு அந்த துப்பாக் கிகள் தேவையற்றவை என்பதையே காட்டு

**இலங்கை இந்தியத் தரப்புக்கள் நேரடியாக இல்லாவிட்டாலும் மறைமுகமாக ஆளாளுக்குக் கறுவிக் கொண்டு நிழல் யுத்தம் நடத்திக் கொண்டிருக்கையில் மறு புறத்தில் சிப்பாய்கள் காணாமற்போன விடயத்தில் மர்ம முடிச்சு அவிழும் சூழல் ஏற்பட்டிருப்பதாக இப்போது தெரியவருகின்றது.**

வதாகப் புலனாய்வாளர்கள் கருதுகின்றனர்.

இந்த விஷயங்களை நுணுக்கமாக ஆராய்ந்த விசாரணையாளர்களுக்கு மற்றொரு தகவலும் மூக்கில் வியர்க்க வைத்திருக்கிறது.

இந்தக் கடற்படைச் சிப்பாய்கள் காணாமல் போன விடயத்தை மேற்படி சுண்டிக்குளம் கடற்படைத் தளத்தின் கட்டளை அதிகாரி 24 மணி நேரம் கழித்துத்தான் மேலிடத்தின் கவனத்துக்குக் கொண்டு வந்திருக்கின்றார் என்பதுதான் அது.

இதனையடுத்து அந்தக் கட்டளை அதிகாரி கைது செய்யப்பட்டு திருகோணமலைக் கடற்படை முகாமுக்குக் கொண்டு செல்லப் பட்டார். உரிய முறையில், இரகசியமான வகையில் அவர் விசாரிக்கப்படுகின்றார் என்று கூறப்படுகின்றது.

முல்லைத்தீவுக் கடலில் மிகப் பெரிய கடத் தல் காவியம் ஒன்று கடற்படையின் சில அதி காரிகளின் அனுசரணையோடு தொடர்ந்து வெற்றிகரமாக அரங்கேறி வந்ததாகவும், அதுபற்றிய உண்மைகளை வெளியே தெரிய விடக் கூடாது என்று அவற்றை அறிந்திருந்த நான்கு சிப்பாய்களும் கூண்டோடு காணாமற் போகச் செய்யப்பட்டனர் என்றும் இப்போது தகவல்கள் கசியத் தொடங்கியுள்ளன.

இந்தியாவின் சில முக்கிய புள்ளிகளுக்கும் இந்தக் கடத்தல் வலைப்பின்னலுடன் தொடர் புகள் இருப்பதாகச் சந்தேகிக்கப்படுவதாகவும் கூறப்படுகின்றது. இத்தகைய மறைமுகக் கைங்கரியங்களுக்கு அவ்வப்போது இடைஞ் சலாக வரும் அப்பாவி இந்திய மீனவர்களே இடையிடையே பலிக்கடாக்களாக்கப்படுகின்ற னர் என்றும் இந்தியப் புலனாய்வுத் தரப்புக்கள் இப்போது கருதுகின்றன.

இந்த 'ஹை-கிளாஸ்' கடத்தல் நடவடிக்கை யின்போது என்னென்ன பொருள்கள் கடத்தப் படுகின்றன? எங்கிருந்து அவை எங்கு போகின் றன? என்ற விடயங்கள் எல்லாம் இனிமேல் தான் அம்பலத்துக்கு வரும்.

எது எப்படியோ, அப்பாவி இந்திய மீனவர் களின் உயிருடன் விளையாடிக் கொண்டு, நாட்டின் பாதுகாப்பு என்ற வேடத்தில் கடத்தல் போன்ற அட்டூழியங்களில் ஈடுபடுவது மன்னிக்கப்படவே முடியாத குற்றம் என்பதில் மாற்றுக் கருத்து இருக்க முடியாது.

நன்றி: சூரியகதிர்

# நமக்குத் தெரியவில்லை!



ஓர் உயரமான மரத்தின் உச்சியில் ஒரு பறவை கூடு கட்டியிருந்தது. அது ஒரு இராஜாளிப் பறவையின் கூடு. அந்தப் பறவை தனது கூட்டில் முட்டை இட்டிருந்தது.

ஒருநாள் அந்த மரத்திலே தாவிக் குதித்து விளையாடிய குரங்குக் குட்டி கண்ணில் அந்த முட்டை தென்பட்டது. அது சும்மா இருக்குமா? விளையாட்டாக ஒரு முட்டையை எடுத்துக் கீழே குப்பை மேட்டிலிருந்த கோழி முட்டைகளுடன் வைத்து விட்டுப் போய்விட்டது.

கோழிக்கு வித்தியாசம் ஒன்றும் புரியவில்லை. தன்னுடைய முட்டைகளோடு சேர்த்து அந்த முட்டையையும் அடை காத்தது.

கொஞ்ச நாளில் குஞ்சுகள் பொரித்தன. இராஜாளிப் பறவையினுடைய குஞ்சும் அந்தக் கோழிக்குஞ்சுகளோடு சேர்ந்து வளர்ந்து வந்தது.

மற்றக் கோழிக்குஞ்சுகள் போலவே இதுவும் குப்பையைக் கிளறி புழு பூச்சிகளைச் சாப்பிட்டது. காக்கைகள் தூக்க வந்தால் மற்றக் கோழிக்குஞ்சுகள் போலவே இதுவும் பயந்து போய் தாய்க்கோழியின் சிறகுகளுக்குள் ஒளிந்து கொள்ளும். இப்படிக் கொஞ்சக்காலம் போய்விட்டது.

குஞ்சுகள் எல்லாம் வளர்ந்து கோழிகளாகிவிட்டன. சில சேவல்களாகி விட்டன. ஒன்று மட்டும் ராஜாளியாகவே இருந்தது.

ஆனால் ஒரு விசயம். தான் ராஜாளி என்பது இந்தப் பறவைக்குத் தெரியாது. தன்னையும் ஒரு கோழி என்றே அது நினைத்துக் கொண்டிருந்தது. அப்படி நினைத்துக் குப்பை மேட்டைக் கிளறிக் கொண்டிருந்தது.

ஒரு நாள் சாயந்தரம் இந்த ராஜாளிப் பறவை வழக்கம் போல மேய்ந்து கொண்டிருக்கும் போது வானத்தை அண்ணாந்து பார்த்தது. அப்போது வானத்தின் உயரத்தில் கூட்டமாக இராஜாளிப் பறவைகள் உல்லாசமாக வட்டமடித்துப் பறந்து கொண்டிருந்தன. அதைப் பார்த்த இராஜாளிக் குஞ்சுக்கு மனதிற்குள் ஏக்கமாகப் போய்விட்டது. அப்போது அதுக்கு ஆண்டவன் மேல் கோபம் ஏற்பட்டது.

''ஆண்டவனுக்கு என்மேல் ஏன் இந்த ஓரவஞ்சனை? என்னையும் ஒரு ராஜாளியாகப் படைத்திருந்தால் நானும் கூட இந்தநேரம் ஆகாயத்தில் உல்லாசமாகப் பறந்து கொண்டிருப்பேன்'' என்று நினைத்து வருத்தப்பட்டது.

''ஒருவகையில் பார்த்தால் நாம் கூட இந்த ராஜாளிப் பறவை மாதிரித்தான் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்'' என்கிறார் உளவியல் நிபுணர் எம் ஸ்காட்பெக்.

எம்மால் எவ்வளவு வேலை செய்ய முடியும் என்று நினைத்துக் கொண்டிருக்கிறோமோ அதைவிடப் பல மடங்கு வேலை செய்ய முடியும். பலமடங்கு வேகமாகவும் செய்ய முடியும் என்கிறார் அவர். நம்முடைய முழுமையான பலம் என்ன என்பது நமக்குப் புரிவதில்லை.

ஒருத்தன் இருந்தான். அவனுக்கு கோழியைக் கண்டால் பயம். ஏனென்றால் அவனுக்கு மனதுக்குள் தான் ஒரு புழு என்ற நினைப்பு. அதனால் கோழி எதிரில் வந்தால் இவன் நடுங்க ஆரம்பித்து விடுவான்.

அவன் ஒரு மனநோய் வைத்தியரிடம் போய் தன் பிரச்சினையைச் சொன்னான். வைத்தியர் இவனைத் தங்க வைத்து ஒரு வாரம் வைத்தியம் செய்தார். அதற்குப் பின்னர் இவனைப் பார்த்து ''இனி மேல் நீ வீட்டுக்குப் போகலாம். நன்றாக ஞாபகம் வைத்துக் கொள். இனிமேல் நீ புழு் இல்லை...! மனிதன். தைரியமாகப் புறப்படு என்று விடைகொடுத்து அனுப்பி வைத்தார்.

அவன் புறப்பட்டுப் போனான். பாதி வழி போயிருப்பான் எதிரில் ஒரு கோழி வந்து கொண்டிருந்தது. அவ்வளவுதான் உடம்பு நடுங்க ஆரம்பித்து விட்டது. நேராக வைத்தியரிடம் ஓடினான்.

வைத்தியர் ''ஏன் ஓடி வந்து விட்டாய்?'' என்று கேட்டார். அதற்கு அவன் ''எதிரில் ஒரு கோழி வந்து கொண்டிருக்கிறது'' என்றான்.

''நான் தான் சொன்னேனே நீ புழு இல்லை; மனிதன் என்று. நீ புழு இல்லை என்பது இன்னும் உனக்குப் புரியவில்லையா?'' என்று கேட்டார் வைத்தியர்.

''நான் புழு இல்லை என்பது எனக்குத் தெரியும். ஆனால் இது அந்தக் கோழிக்குத் தெரியுமா என்று தெரியவில்லையே?'' என்றான்.

ஒவ்வொருவரும் தமது தகுதி நிலைகளை அறிந்து செயற்பட்டால் தான் அவர்கள் தங்கள் குறிக்கோளில் வெற்றியடைவர்கள்.

கோ. சுவாமிநாதன்.

# பிறந்திருக்கும் 'கர' வருடம் - 2011 உங்களுக்கு எப்படி..?




பிறந்திருக்கும் 'கர' ஆண்டில் உங்கள் சுக ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் குரு பகவானால் தாயின் வழியில் நன்மைகள் உண்டாகும். உங்களை விட்டு விலகியிருந்த தாய் வழி உறவினர்கள் மீண்டும் வந்து இணைவார்கள். அவர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்து, உங்கள் நன்மதிப்பை உயர்த்திக் கொள்வீர்கள்.

சர ராசியில் சஞ்சரிக்கும் குரு பகவானால் அதிகமான பயணங்களை மேற்கொள்ள நேரிடும். எந்த வயதினருக்கும் புதிதாக ஒரு கல்வியோ, கலையோ பயில வாய்ப்புண்டாகும். சிலருக்கு வெளியூர் சென்று படிக்கும் வாய்ப்புகளும் கிடைக்கும். செய்தொழிலில் வளர்ச்சி உண்டாகும். பழைய வாகனங்களை விற்றுவிட்டு புதிய வாகனங்களை வாங்குவீர்கள். அதேநேரம் உடல் நலத்தில் கவனமாக இருக்கவும். சரியான நேரத்தில் உணவு உட்கொண்டு, ஒவ்வாத உணவுகளைத் தவிர்த்தாலே போதும்; நோய் வராமல் பாதுகாத்துக் கொள்ளலாம். நண்பர்களிடம் கோபப்படாமல் நடந்துகொண்டு அவர்களின் உறவைத் தக்க வைத்துக் கொள்ளவும்; அது தக்க சமயத்தில் உதவும்.

இந்த ஆண்டு கேது பகவான், உங்களின் பூர்வபுண்ய, புத்திர, புத்தி ஸ்தானத்தில் சஞ்சரிப்பதால் ஆரோக்கியமான எண்ணங்கள் சிறகடித்துப் பறக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி பொங்கும். உங்களின் மனதில் சிலரது போக்கினால் வருத்தங்கள் ஏற்பட்டாலும் அதை வெளியில் காட்டிக் கொள்ளாமல் செயற்படுவீர்கள். எப்போதோ உங்களுக்கு உதவியவர்களுக்கு நீங்கள் மனமுவந்து உதவும் காலகட்டம் இது. சுதந்திரமாகச் சிந்தித்துத் தனித்துச் செயற்படுவீர்கள்.

லாப ஸ்தான ராசியில் சஞ்சரிக்கும் ராகு பகவானால் உங்களைவிட்டு எதிரிகள் விலகுவார்கள்; புதிய உறவுகள் மலரும். அவர்கள் உங்கள் செயல்களுக்கு அரணாகத் திகழ்வார்கள். சிலர் புதிய திட்டங்களை நடைமுறைப்படுத்துவார்கள். வருமானம் பெருகும். இதனால் புதிய சேமிப்புத் திட்டங்களிலும் ஈடுபடுவீர்கள். அதேநேரம் எவரிடமும் உங்கள் ரகசியங்களைப் பகிர்ந்து கொள்ள வேண்டாம்.

இந்த ஆண்டு ஐப்பசி மாதம், 28ஆம் திகதி வரை உங்களின் பாக்யஸ்தான ராசியில் சஞ்சரிக்கும் சனி பகவானால் உங்கள் எண்ணங்கள் அனைத்தும் நிறை வேறும். அனைத்து விடயங்களையும் நல்ல கண்ணோட்டத்துடன் காண்பீர்கள். பங்கு வர்த்தகத்தில் லாபம் குவியும். அந்த லாபத்தை எதிர்காலத்திற்காகச் சேமிப்பீர்கள். ஆடம்பரச் செலவுகளைக் குறைத்துக்கொள்வீர்கள். தந்தை வழியில் சில அனுகூலங்களைக் காண்பீர்கள். உங்களை எதிர்த்தவர்கள் அடங்குவார்கள்.

ஐப்பசி மாதம், 29ஆம் திகதிக்குப் பின்னர் ஆண்டு இறுதி வரை உங்களின் தொழில் ஸ்தானத்தில் குரு பகவானின் பார்வையில் சஞ்சரிக்கிறார் சனி பகவான். இதனால் தொழிலில் ஏற்பட்ட இடையூறுகள் விலகும். எதிர்பாராத இடங்களிலிருந்து பண வரவு உண்டாகும். மனதில் அமைதி நிலவும். நிம்மதியாக உறங்குவீர்கள். உடல் உபாதைகள் முழுமையாகத் தீர்ந்துவிடும். குடும்பத்திலும் மருத்துவச் செலவுகள் ஏற்படாது. வெளியூரிலிருந்து மகிழ்ச்சிகரமான செய்திகள் வந்து சேரும். ஆன்மிகச் சிந்தனையுடன் வாழ்க்கையை நடத்துவீர்கள்.

**உத்தியோகத்தர்கள்:**
விரும்பிய பணி உயர்வு கிடைக்கும். இதனால் ஊதியம் உயரும். மேலதிகாரிகள் உங்களை நம்பிப் புதிய பொறுப்புகளை ஒப்படைப்பார்கள். உடலில் இருந்த சோர் வும், மனதிலிருந்த குழப்பமும் மறையும். இதனால் உங்கள் தோற்றத்தில் பொலிவு உண்டாகும். சக ஊழியர்கள் உங்களிடம் பகை மறந்து நட்புப் பாராட்டுவார்கள். அலுவலகத்தில் சிறப்பான பயிற்சிகளைக் கற்றறிந்து வெற்றியடைவீர்கள்.

**தருபவர் – வித்தியா**

**விவசாயிகள்:**
விளைச்சல் அதிகரிக்கும். வங்கிகளிடமிருந்து கடன் கிடைக்கும். நீர் வரத்து நன்றாக இருப்பதால் விவசாயத்தில் உற்சாகமாக ஈடுபடுவீர்கள். புதிய குத்தகைகளில் லாபம் கொட்டும். சேமிப்பு உயரும். பால் வியாபாரத்தாலும், கால்நடைகளாலும் நன்மை உண்டாகும். நிலம் சம்பந்தப்பட்ட வழக்குகள், உங்களுக்குச் சாதகமாக முடியும்.

**பெண்கள்:**
குடும்பத்தாரிடம் விட்டுக் கொடுத்து நடந்து கொள்ளவும். அனைவரையும் அனுசரித்துச் செல்லவும். நன்கு யோசித்த பிறகே முக்கிய முடிவுகளை எடுக்கவும். ஆடம்பரச் செலவுகளைத் தவிர்த்து சேமிப்புகளில் கவனம் செலுத்தவும். கடுமையான சொற்களை உதிர்க்காமல் நிதானமாகப் பேசவும்.

**மாணவர்கள்:**
படிப்பில் ஏற்படும் இடையூறுகளைச் சமாளிக்கும் ஆற்றலைப் பெறுவீர்கள். தெளிவான மனதுடன் படித்து நல்ல மதிப்பெண்களை அள்ளுவீர்கள். நண் பர்களும் உங்களுக்கு உதவிகரமாக இருப்பார்கள். அதேசமயம் விளை யாட்டுகளில் எதிர்பார்த்த வெற்றிகளைப் பெற முடியாமல் போகும்.




'கர' வருடத்தில் உங்களின் தைரிய ஸ்தான ராசியில் சஞ்சாரம் செய் யும் குரு பகவானால் உங்கள் சகோதர, சகோதரிகளிடம் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் மறைந்து ஒற்றுமை வளரும். அவர்களுடன் சேர்ந்து இனிய பயணங்களைச் செய்வீர்கள். உங்களின் ஆற்றல் அதிகரிக்கும். பகைவர்களை வெற்றி கொள்வீர்கள். உடல் நலம் சீராகும். வருமானம் சிறப்பாக இருக்கும். உங்களின் பெருந்தன்மையை அனைவரும் பாராட்டுவார்கள். அதேநேரம் ஆடம்பரக் கேளிக்கை களுக்காக செலவு செய்வதைக் குறைத்துக் கொள்ளவும். சில நேரங்களில் யோசிக் காமல் பேசி வம்பில் மாட்டிக் கொள்ள நேர லாம். மறைமுக எதிரிகளிடம் கவனமாக இருக் கவும். உங்கள் ரகசியங்களை எவரிடமும் பகிர்ந்துகொள்ள வேண்டாம். உங்களின் பதவியால் சில ஆதாயங்கள் கிடைத்து, மகிழ்ச்சி உண்டாகும். இதன் மூலம் பொது நலக் காரியங்களுக்குச் செலவு செய்வீர்கள்.

இந்த ஆண்டு உங்களின் சுக ஸ்தான ராசியில் சஞ்சரிக்கும் கேது பகவானால் திட்டமிட்ட வேலைகளைத் பிற்போட வேண்டிய சூழ்நிலை, சில நேரங்களில் உருவாக லாம். எனவே உங்கள் காரியங்களில் கவனமாக இருக்கவும். நேர்மையான எண்ணங்களால் உங்களின் வாழ்க்கைத்தரம் உயரும். அலுவலகத்தில் புதிய பொறுப்புகளை ஏற்று நடத்த நல்ல வாய்ப்பு உருவாகும். இதனால் மனதில் இருந்த காரணமில்லாத வருத்தங்களும், குழப்பங்களும் மறையும்.

தொழில் ஸ்தான ராசியில் சஞ்சரிக்கும் ராகு பகவானால் உங்கள் பணிகளை விரைவில் செய்து முடிப்பீர்கள். சமூகத்தில் உங்களின் மதிப்பு, மரியாதை உயரும். உங்களின் எண்ணங்களும், செயல்களும் உங்களுக்கு வாழ்வில் உயர்ந்த இடத்தைப் பெற்றுத்தரும். கடினமாக உழைக்க வைக்கும் ராகு பகவான், அதற்கேற்ற பெரும் பலனைத் தருவதற்கும் தயங்கமாட்டார். அதேநேரம் ஓய் வெடுக்க முடியாமல் போவதால் உடலில் சோர்வு உண்டா கும். எனவே சரியான நேரத்தில் ஆகாரத்தை உட்கொண்டு உடல் வலிமையை தக்க வைத்துக் கொள்ளவும். இந்த ஆண்டு ஐப்பசி மாதம், 28ஆம் திகதி வரை அட்டம ராசியில் சஞ்சரிக்கும் சனி பகவான், உங்களின் உடல் ஆரோக்கியத்தில் சிறு பாதிப்புகளை ஏற்படுத்த முயல்வார். ஆயின் கவலைப்படத் தேவையில்லை. அந்த பாதிப்புகளில் இருந்து சனி பகவானே உங்களை விடுவிப்பார். வாகனங்களுக்கு பராமரிப்புச் செலவுகள் செய்ய நேரிடும். தவிர்க்க இயலாத காரணங்களால் சகோதர, சகோதரிகளுக்குப் பணம் செலவழிப்பீர்கள். ஆயின் புதியவர்களின் நட்பால் கைப்பொருளை இழக்க நேரிடும் என்பதால் அதிக அறிமுகமில்லாதோரிடம் கவனமாக இருக்கவும்.

ஐப்பசி மாதம், 29ஆம் திகதிக்குப் பின்னர் ஆண்டு இறுதி வரை உங்களின் பாக்ய ஸ்தான ராசியில் குரு பகவானின் பார்வையில் உச்சம் பெற்று சஞ்சரிக்கிறார் சனி பகவான். இதனால் சுக போக வசதிகளை அனுபவிப்பீர்கள். பயணங்களில் அதிர்ஷ்ட தேவதை தரிசனம் தருவாள். இதனால் பொருளாதார வளமும், சேமிப்பும் உயரும். அரச உதவிகளும் கிடைக்கும். உங்களின் ஆசைகள் ஒன்றன் பின் ஒன்றாகப் பூர்த்தியடையும்.

**உத்தியோகத்தர்கள்:**
அலுவலகப் பணிகள் சிறப்பாக முடியும். எதிர்பார்த்த பதவி உயர்வும், ஊதிய உயர்வும் பெறுவீர்கள். சிலருக்கு விரும்பிய இடமாற்றங்களும் கிடைக்கும். சக ஊழியர்களின் ஆதரவாலும், நட்பாலும் அலுவலகத்தில் உங்களின் அந்தஸ்து உயரும். சில முக்கியப் பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வு காண்பீர்கள். மற்றபடி உங்கள் வேலைகளை முன் கூட்டியே யோசித்துச் செய்தால் பிரச்சினைகளைத் தவிர்க்கலாம்.

**விவசாயிகள்:**
லாபம் அதிகரிக்கும். அதனால் கொள்முதல் வியாபாரத்தில் அதிக கவனம் செலுத்தவும். விவசாயக் கூலி வேலை செய்வோரோடு அனுசரித்துச் செல்லவும். அரசு மானியங்கள் உதவிக்கு வரும்; பழைய கடன்களும் வசூலாகும்.

**பெண்கள்:**
மன நிம்மதியைக் காண்பீர்கள். தர்ம காரியங்களிலும், தெய்வ வழிபாட்டிலும் ஈடுபடுவீர்கள். புதிய சொத்துக்கள் வாங்குவதற்கான ஆரம்பகட்ட வேலைகளைத் துவக்குவீர்கள். குடும்பத்தினருடன் சந்தோஷமாகப் பொழுதைக் கழிப்பீர்கள். கணவருடனான ஒற்றுமை அதிகரிக்கும். குடும்பப் பொறுப்புகளை திருப்திகரமாக நிறைவேற்றி மகிழ்ச்சி அடைவீர்கள்.

**மாணவர்கள்:**
உற்சாகமான மனநிலையுடன் கல்வியில் ஈடுபடுவீர்கள். உடல் வலிமை பெற தக்க பயிற்சிகளில் ஈடுபடவும். எதிர்காலத் திட்டங்களுக்காக அடித்தளம் போடுங்கள். உங்களின் தன்னம்பிக்கை படிப்படியாக உயரும்.




பிறந்திருக்கும் 'கர' வருடத்தில் உங்களின் தனம், வாக்கு, குடும்ப ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் குரு பகவானால் உங்கள் குடும்பத்தில் மகிழ்ச்சி பொங்கும். சரளமான பண வரவால் சந்தோஷம் அடைவீர்கள். நம்பிக்கையுடன் உங்கள் பணிகளில் ஈடுபடுவீர்கள். நண்பர்களுக்கும் உற்றார் உறவினர்களுக்கும் தேவையான உதவிகளைச் செய்து மன நிறைவு அடைவீர்கள். குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகள் நடக்கும். மழலைச் செல்வம் இல்லாதவர்களுக்கு அந்தப் பாக்கியம் கிடைக்கும். உங்களின் முழுமையான திறமையை வெளிப்படுத்தி வெற்றி பெறுவீர்கள். பழைய கடன்களும் வசூலாகும். உங்கள் எதிரிகளின் பலம் குறையும். வீடு, வாகனம் வாங்கும் யோகம் உண்டாகும். தர்ம காரியங்களில் ஈடுபடுவீர்கள். சிந்தனையில் தெளிவு உண்டாகும். இந்த ஆண்டு உங்களின் தைரிய ஸ்தான ராசியில் சஞ்சரிக்கும் கேது பகவானால் சகோதர, சகோதரிகள் மற்றும் நண்பர்கள் மூலமாக நன்மை அடைவீர்கள். புதிய சொத்துக்களை வாங்குவீர்கள். ஆன்மிகப் பெரியோர்களைச் சந்தித்து அவர்களின் ஆசிகளைப் பெறுவீர்கள். உங்கள் தோற்றத்தில் பொலிவு உண்டாகும். புத்திசாலிகளின் நட்பைப் பெற்று பலனடைவீர்கள். பாக்ய ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் ராகு பகவானால் மன உறுதி உண்டாகும். கவலைகள் மறைந்து மகிழ்ச்சி பிறக்கும். ஏற்றுமதி - இறக்குமதி வியா பாரங்கள் சூடுபிடிக்கும். தூர தேசத்திலிருந்து மகிழ்ச்சி தரும் செய்திகளைக் கேட்பீர்கள். வெளிநாட்டுப் பயணங்களைச் செய்வீர்கள். சேமிப்பு விடயங்களில் முன் னேற்றத்தைக் காண்பீர்கள். வெளிவட்டாரத்தில் உங்கள் செல்வாக்கு உயரும். உங்களைப் பற்றி அவதூறாகப் பேசியவர்களைக் கண்டறிந்து அவர்களுக்கு உண்மை நிலையைப் புரியவைத்து, நட்பைத் தக்க வைத்துக் கொள்ளும் சந்தர்ப்பம் ஏற்படும். வருடத்தின் ஐப்பசி மாதம், 28ஆம் திகதி வரை உங்களின் சப்தம ராசியில் சஞ்சரிக்கும் சனி பகவான், பெற்றோர் மற்றும் நண்பர்கள் வழியில் ஏற்பட்ட மன வருத் தங்களை முற்றிலும் நீக்குவார். குறைந்த அளவு முதலீட்டிலும் அதிக லாபத்தை அள்ளுவீர்கள். எண்ணங்களுக்குத் தகுந்த செயல் வடிவம் கொடுப்பீர்கள். எதிரிகளால் தொல்லைகள் ஏற்படாது. உடல் உபாதைகள் ஏதேனும் இருப்பின், இக்கால கட்டத்தில் நீங்கும்.

ஐப்பசி மாதம், 29ஆம் திகதி முதல் ஆண்டு இறுதி வரை அட்டம சனி பகவானாக சஞ்சரிக்கிறார் சனி பகவான். ஆயினும் அவர் குரு பகவானின் பார்வையைப் பெற்று சஞ்சரிக்கிறார். இதனால் வீண் வழக்குகளிலிருந்து விடுபடுவீர்கள். அலைச்சல்களுடன் நடந்த செயல்கள் நல்லபடியாக முடிவடையும். வெளியில் கொடுத்திருந்த பணம் திரும்பவும் கைக்கு வந்து சேரும். சென்ற இடத்திலெல்லாம் பிரச்சினையைச் சந்தித்தவர்கள்கூட இந்தக் காலகட்டத்தில் விரும்பி வரவேற்கப்படுவார்கள். சிலர் மனம் விரும்பிய வீட்டிற்குக் குடி புகுவார்கள். தக்க சமயத்தில் உயர்ந்தவர்களின் நட்பைப் பெற்று கௌரவக் குறைவு ஏற்படாமல் காக்கப்படுவீர்கள். களவு போயிருந்த பொருள்கள் திரும்பவும் கிடைக்கும். உறுதியின்றிச் செய்த வேலைகளில் ஒரு பற்று ஏற்பட்டு அவை உடனடியாக நடந்தேறும். ''என்ன நடக்குமோ?'' என்று பயந்த விடயங்கள்கூட மகிழ்ச்சிகரமாக முடிவடையும்.

**உத்தியோகத்தர்கள்:** பதவி உயர்வு தேடி வரும். வருமானம் சீராக இருக்கும். விரும்பிய இடமாற்றங்களும் கிடைக்கும். மேலதிகாரிகளின் அன்பும், ஆதரவும் கிடைக்குமென்றாலும் அவர்களிடம், மரியாதைக்குரிய தொலைவில் இருந்து பழகுவது நல்லது. சக ஊழியர்களுடன் நல்ல நட்பு தொடர்வதால் உங்களின் வேலைகள் குறித்த காலத்திற்குள் நிறைவேறிவிடும். உங்களின் வேலைத் திறனைக் கூட்டிக்கொள்ள புதிய அலுவலகப் பயிற்சிகளை மேற்கொள்வதற்கான வாய்ப்புகள் கிடைக்கும்.

**விவசாயிகள்:** நீர்வரத்து நன்றாக இருக்கும். எனவே குறித்த காலத்தில் விதைத்து அறுவடை லாபத்தை அள்ளுங்கள். விளை பொருள்களின் விற்பனை மிகவும் நன்றாகவே இருக்கும்.

**பெண்கள்:** குடும்பத்தில் அமைதி நிலவும். வெளியூர் மற்றும் வெளி நாட்டிலிருந்து இன்பகரமான செய்திகள் வந்து சேரும். கணவரிடம் அனுசரித்து நடந்து கொள்வீர்கள். கணவரின் உறவினர்களோடு வீண் வாக்குவாதங்களில் ஈடுபட வேண்டாம்.

**மாணவர்கள்:** படிப்பில் வெற்றி வாகை சூடுவீர்கள். வாக்கு ஸ்தானத்தில் குரு பகவான் சஞ்சரிப்பதே அந்த வெற்றிக்குக் காரணம். மேலும் உங்கள் ஞாபக சக்தியும், அறிவாற்றலும் பெருகும். அதேநேரம் விளையாடும் நேரங்களில் கவனமாக இருக் கவும். பெற்றோர்களின் ஆதரவுடன் உங்களின் எதிர்காலக் கல்வித் திட்டங்களைச் செவ்வனே நிறைவேற்றிக் கொள்வீர்கள்.

# புதுமைகள் பலபுரிந்து மக்களை வாழவைக்கும் அனலைதீவு அரிஹர புத்திர ஐயனார் ஆலயம்

(சென்றவாரத் தொடர்ச்சி)

ஆகம விதிப்படி அமைக்கப்பட்ட இந்த ஆலயத்தில் ஐந்து அடுக்குகளைக் கொண்ட கோபுரம் அமைக்கும் பணி 2003 இல் இடம்பெற்றது. ஆலயத்தில் உள்ள தூபி மூன்று அடுக்குகளைக் கொண்டது. இதில் ஐயனார் ஆலயத்துக்கே உரிய சிற்பங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

அரிஹரபுத்திர ஐயனாரின் அற்புதங்கள் அளப்பெரியது என்கிறார்கள் அனலைதீவு மக்கள். பூசைகள் இடம்பெற்று அவை முடிவடைந்த பின் பூசகர் சென்றுவிடுகிறார். எனினும் அர்த்தசாமத்தில் மணியோசை கேட்பதையும் தேவ பூசைகள் இடம்பெறுவதையும் பலர் அவதானித்ததுண்டு என்கிறார்கள்.

மழையின்றிக் கடும் வரட்சியினால் பயிரினங்கள், கால்நடைகள் பாதிக்கப்பட்டு மக்கள் துன்பத்துக்கு உள்ளாகும் போதெல்லாம் ஐயனாரை வேண்டி வழிபாடு செய்யப்படுகின்றது. அதன் பின்னர் உடனடியாகவே ஐயனாரின் அருட்காட்சம் ஏற்படுகிறது எனவும் நம்பிக்கையுடன் அந்தப் பகுதி மக்கள் கூறுகிறார்கள்.

கால்நடைகளுக்கு நோய்கள் வரும் போது அவற்றின் கழுத்தில் பணம் கட்டி நேர்த்தி வைப்பதாகவும் நோய் தீர்ந்து விடுவதாகவும் அந்த வழக்கம் இப்போதும் இருப்பதாகவும் கூறப்படுகின்றது.


1627 பெப்ரவரி 22 ஆம் திகதியளவில் இந்து சமுத்திரத்தில் எழுந்த புயலுடன் கூடிய கடற்கொந்தளிப்பின் போது ஐயனாரிடம் மக்கள் சரணடைந்தனர். அவர்களுக்கு நேர இருந்த பெரிய அழிவுகளை ஐயனாரே தடுத்து நிறுத்திக் கொண்டார் எனவும் பண்டைய மக்கள் தெரிவித்தனர் எனச் செல்லப்படும் தகவல்கள் இன்றும் நிலைத்துள்ளன. இந்தச் சம்பவம் குறித்து ''வடமலைகள் கிடுகிடுக்க என ஆரம்பித்து திடுதிடென யானை மீது ஐயனார் தோன்றி விடுவிடென வெடி வைக்க அஞ்சியே கடலும் விசை கெட்டு அலை கெட்டு ஓய்ந்திட்ட தன்னே'' என்ற வரகவி முத்துக்குமாரசுவாமிப் புலவரின் பாடல் ஒன்று உண்டு. (கி.பி 1740-1821)

ஆரம்பத்தில் ஒரு சிறிய குடிசையில் இருந்த இந்த ஆலயம் இன்று பிரமாண்டமான வளர்ச்சி கண்டுள்ளது. இந்த ஆலய வளர்ச்சிக்காக இந்த ஊரைச் சேர்ந்த பலரும் உதவியுள்ளனர்.

கோயிலை அமைக்க எண்ணிய வேளை ஆலயத்தின் பின்புறம் உள்ள தீர்த்தக் கரையில் இரண்டு பெரிய தேக்குமரங்கள் கரை ஒதுங்கின எனவும் மக்கள் அதனைப் பயன்படுத்தி ஆலயத்தை விஸ்தரித்தனர் எனவும் சொல்லப்படுகின்றது. வளர்ச்சியடைந்து வரும் இந்த ஆலயத்தில் வைரக்கற்கள் பதிக்கும் திருப்பணி இடம்பெற்றதுடன், தினசரி நித்திய, நைமித்திய பூசைகளும் நடைபெறுகின்றன.

தல விருட்சமாகவுள்ள கூழா மரம் 385 வருடங்களுக்கு முற்பட்டது. அதன் காலம் அதனை நட்டவரின் விவரங்களை அங்குள்ள மக்களாலேயே நிச்சயப்படுத்த முடியாமல் உள்ளது.

ஆலய வீதிகளில் வேம்பு, நாவல், அரசு போன்ற மரங்கள் உள்ளன. அவையும் பல வருடங்கள் பழைமை வாய்ந்தவையாகும். சேது தீர்த்தம் சங்கமமாகும் இந்த ஆலய தீர்த்தப் பகுதி தீராத



நோய்களையும் பாவவினைகளையும் தீர்க்கும் புனிதம் நிறைந்தது என மக்கள் நம்பு கிறார்கள். ஒவ்வொரு வருடமும் ஆடி மாத பூர்வபக்க சஷ்டித் திதியில் ஆரம்பமாகும் உற்சவம் பூரணை வரை பத்துத் தினங்கள் இடம்பெறுகின்றது. ஐயனார் கோயில் உற்சவம் ஆரம்ப மாகிறது என்றால் ஊரே விழாக் கோலம் பூண்டுவிடும்.

அனலைதீவு மக்கள் மட்டுமன்றி, தீவுப்பகுதி மக்களும் வழிபாட்டுக்காக அங்கே கூடுகிறார்கள். அதுமட்டுமல்லாது, புலம்பெயர்ந்த அனலைதீவு மக்களும் அங்கே திரள்கிறார்கள். புதிய அன்னதான மடம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. ஐயனாரைத் தரிசித்து அன்னதானத்திலும் கலந்து கொள்வதை ஒரு பேருவகையாகவே மக்கள் நினைக்கின்றனர்.

ஆலயத்தின் புதிய தேர் 1980 இல் அமைக்கப்பெற்றது. 27 அடுக்குகளைக் கொண்டு ஐயனார் குறித்த கதைகளை எடுத்துக் காட்டும் சித்திரத் தேராக விளங்கும் இது, எமது நாட்டு ஆலயங்களில் உள்ள சிறந்த தேர்களில் ஒன்றாகவும் உள்ளது. இந்தப் புதியதேர் இன்னும் 800 ஆண்டுகளுக்கு நிலைத்து நிற்கக் கூடியது எனவும் கூறப்படுகின்றது.

இன்னும் எத்தனையோ தலைமுறைக்கு

**லக்ஸ்மன்**

அனலைதீவு ஐயனாரின் அற்புதங்களைப் பறைசாற்றும் ஒன்றாக இந்தத் தேர் பல நூற்றாண்டுகளை எதிர்கொள்ளப் போகின்றது என்ற பெருமிதம் அனலைதீவு எங்கும் நிமிர்ந்து நிற்கின்றது. அரிஹர புத்திர ஐயனார் எங்களின் காவல் தெய்வம். அதனால் எங்களுக்குக் குறையில்லை என்கிறார்கள் சைவப் பாரம்பரியம் மிக்க அந்த மக்கள். *(முற்றும்)*

# கடற்றொழிலுக்குச் சாதகமான உள்ளார்ந்த வளங்கள் நிறைந்த காரைநகர்ப் பிரதேசம்

**டர்னிகன்**

(சென்றவாரத் தொடர்ச்சி)

கடற் தொழிலானது பருவங்கள், காலநிலை மாற்றங்களுக்கு ஏற்ப மாற்றமடைகிறது. குறிப்பாக சோளக்காற்று வீசும் காலங்களில் அதிக அளவில் கடலுணவுப் பொருள்கள் கிடைப்பதில்லை. ஆனால் வட கீழ் பருவப் பெயர்ச்சி காலங்களில் இங்கு அதிகஅளவு மீன்கள் பிடிக்கப்படுவதோடு மீனவர்களும் அதிக அளவு வருமானம் பெறுகின்றனர்.

காரைநகர்ப் பிரதேசத்தில் ஆரம்ப காலங்களில் மரபு ரீதியான முறையிலேயே கடற்றொழில் மேற்கொள்ளப்பட்டு வந்தது. இதனால் நீண்ட தூரத்தில் ஆழ் கடலில் மீன்பிடிப்பது சிரமமாக இருந்தமையால் காலப்போக்கில் 1971 -1975 ஆம் ஆண்டுக் காலப்பகுதிகளில் வெளிநாட்டு நிறுவனமாகிய சீ - நோர் நிறுவனத்தின் உதவியுடன் கண்ணாடி இழைப்படகுகள், இயந்திரப் படகுகள் என்பன அறிமுகப்படுத்தப்பட்டு நவீன தொழில்நுட்ப அறிவு வழங்கப்பட்டு மீன்பிடித் தொழில் முன்னேற்றம் அடைந் தது.



இங்கு பிடிக்கப்பட்ட மீன்கள் இந்த நிறுவனத்தினால் கொள்வனவு செய்யப்பட்டுத் தகரங்களில் அடைத்தும் ஐஸ் போடப்பட்டும் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. இந்த நிறுவனத்தினால் இறால் பதனிடுதல் தொழிலும் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு வந்தது. சீ-நோர் நிறுவனம் இயங்கிய காலத்தில் கடற்றொழிலாளர் குடும்பங்களில் பெரும்பாலானோர் வேலை வாய்ப்பைப் பெற்றிருந்தனர். இதனால் வறுமையில் வாழ்ந்த மீனவக் குடும்பங்கள் பொருளாதார ரீதியில் முன்னேற்றம் அடைந்தன.

காலப்போக்கில் துரதிர்ஷ்டவசமாக ஏற்பட்ட யுத்த சூழ்நிலை காரணமாக சீ-நோர் நிறுவனம் செயல் இழந்தது. கடற்படையினரின் கட்டுப்பாடுகள் அதிகரிக்கப்பட்டன. மீன்பிடித்தடை அமுலுக்கு வந்தது. இத்தகைய காரணங்களினால் இந்தப் பிரதேசத்தில் உள்ள மக்களில் பெருமளவான கடல் தொழிலாளர்கள் தமது தொழில்களை இழந்து மிகவும் வறுமை நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

காரைநகர்ப் பிரதேசத்தில் கடல் தொழிலுக்குச் சாதகமான உள்ளார்ந்த வளவாய்ப்புகள் பல காணப்படுகின்றன. இங்கு கரையோர மீன்பிடித் தொழிலுக்குப் பெரிதும் அவசியமான கரைவலை, களங்கண்டி வலை, கரப்புவலை போன்றவற்றுக்குப் பயன்படுத்தப்படுகின்ற பூவரசம் தடி, பனையின் குருத் தோலை, தென்னம் தும்பில் இருந்து தயாரிக்கப்படும் கயிறு என்பன இங்கு பெற்றுக்கொள்ளக் கூடிய உள்ளார்ந்த வளங்களாகும். தற்போது கட்டுமரங்களும் பாய்மரங்களும் இங்கு பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இத்தகைய கட்டுமரங்களும் பாய்க்கலங்களும் உள்ளூரில் கிடைக் கக்கூடிய முள்முருங்கு போன்ற மரங்களில் இருந்து தயாரிக்கப்படுகின்றன. கரைவலை, கலைவலை போன்றனவும் உள்ளூரில் கிடைக்கக்கூடிய மூலப் பொருள்களின் உதவியுடன் தயாரிக்கப்படுகின்றன.

கடலில் இருந்து பெற்றுக்கொள்ளக் கூடியனவாகப் பின்வரும் கடல் உணவு வகை களைக் குறிப்பிடலாம். ஆழம் குறைந்த கடற்பரப்பில் இருந்து இறால், நண்டு, கௌிறுமீன், திரளிமீன், சூடைமீன், கணவாய், கயல்மீன் போன்ற சிறிய மீன் இனங்கள் பெருமளவில் பிடிக்கப்படுகின்றன. ஆழம் கூடிய பகுதிகளில் இருந்து பிடிக்கப்படுகின்ற மீன்களாக திருக்கை மீன், சுறாமீன், பாரை மீன், விளைமீன், கணவாய், மணலை மீன், சிறையால் மீன், முரல் மீன் போன்றவற்றைக் குறிப்பிடலாம். கோடை காலத்தில் பெருமளவில் பிடிக்கப்படும் பாரைமீன், விளைமீன் என்பன கரு வாடு போடுவதற்குப் பயன்படுத்தப்படுகின்றன.

**கடலுணவு - சந்தை வாய்ப்புகள்**

இங்கு பிடிக்கப்படும் மீன்கள் உள்ளூரிலும் வெளியூர்களிலும் சந்தைப்படுத்தப்படுகின்றன. *(தொடரும்)*

**காணி விற்பனைக்குண்டு**

கச்சேரி-நல்லூர்றோட்டில் (மாநகரசபை அருகில்) சுற்று மதில், நன்னீர் கிணற்றுடன் 2 பரப்புக் காணி உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:
021 2226944, 0772557605



**German Institute**

German Swiss மொழிகள் தமிழ் மொழி பெயர்ப்புடன் Germanyயிலிருந்து வந்த ஆசிரியரால் நடத்தப்படுகின்றது. Embassyல் கேட்கப்படும் A1 Certificate க்கு ஏற்றவாறு:
No: 10, Palaly Road Jaffna. T.P: 0771604823



**வீடு விற்பனை**

கொழும்புத்துறை றோட்டில் கணக்கர் சந்திக்கு அருகில் சகல வசதிகளுடன் கூடிய 4 பரப்புக் காணியில் அமைந்த வீடு விற்பனைக் குண்டு.

தொடர்பு: 0776146434


## ஆலயத்துக்கு வசந்த மண்டபம்

கொழும்புத்துறை மேற்கு வதரிபீட விநாயகர் ஆலயத்துக்குப் புதிய வசந்த மண்டபம் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. அண்மையில் இதற்கான அடிக்கல் நடப்பட்டு கட்டடப் பணிகள் துரித கதியில் நடைபெற்று வருவதாக ஆலய நிர்வாக சபையினர் தெரிவித்தனர். (த-135)

## இடமாற்றம் பெற்ற ஆசிரியர்கள் கவனத்துக்கு

வன்னி வலயப் பாடசாலைகளில் இருந்து வடமராட்சி வலயத்துக்கு இடமாற்றம் பெற்றுவரும் ஆசிரியர்கள் நாளை வியாழக்கிழமை மு.ப. 9 மணிக்கு வடமராட்சி வலயக் கல்வி அலுவலகத்துக்குச் சமுகமளிக்குமாறு வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (த)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலியும்

## 75 ஆவது பிறந்தநாள் நினைவும்



மனிதருக்குள்:
1936.04.20

கர்த்தருக்குள்:
2010.04.18

**அமரர் சின்னத்தம்பி பாலசிங்கம்**

டானியல்
(இளைப்பாறிய அதிபர், எக்காளத் தொனி பூரண சுவிசேஷ சபை)

ஓராண்டு வந்ததுவோ!
ஓயவில்லைக் கண்ணீர்!
சீரான வாழ்வு சீர்குலைந்து போச்சுதிங்கே
ஆராலும் ஆற்ற முடியா - எம் கண்ணீரை
பேரோடு பெருமித்து -
கர்த்தருக்குள் நிலை பெற்று நிழலாய்
நீர் இருக்க கர்த்தரை வேண்டுகின்றோம்

(48,23,26)

பிரிவால் துயருறும்:
மனைவி-பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள். பூட்டப்பிள்ளைகள்.

74/9, இராமநாதன் வீதி,
நாயன்மார்கட்டு, யாழ்ப்பாணம்.

## முதலாம் ஆண்டு நினைவலைகள்

மனம் மகிழ
25
07
1984



மனம் நெகிழ
30
04
2010

திதி: 20.04.2011

**செல்வன் ஞா.சிந்துசன்**

(உரிமையாளர், வெற்றிக்கனி அழகு பொருள் வாணிபம் -
நெடுங்குளம் - வவுனியா)

சிந்து.... சிந்து... நீ எங்கே?
எம் நெஞ்சம் வெம்பித் துடிக்கிறதே
சிந்து... நீ எங்கே..?
உன் பூ முகம் காண, புன்னகை பூத்த மொழி கேட்க
ஏங்குகிறதே எம் உள்ளம்
உன் துளிர் விடும் காலமதில் - எமை தவிக்கவிட்டு
விழி மூடிப் போனதுமேன்....
ஆண்டு ஒன்றென்ன, ஆயிரம் தான் சென்றாலும்
ஆறாது நம் துயரம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!


இன்று (20.04.2011)
நெளுக்குளம், வவுனியாவில்
உள்ள எமது இல்லத்தில்
நடைபெறும் ஆத்ம சாந்திப்
பிரார்த்தனையிலும்
தொடர்ந்து இடம்பெறும்
மதியபோசனத்திலும் கலந்து
கொள்ளுமாறு அன்புடன்
அனைவரையும்
அழைக்கின்றோம்.

உன்பிரிவால் ஏங்கித் தவிக்கும்
தாய், தந்தை, சகோதரர்கள், உறவுகள், நண்பர்கள்
இ.ஞானசிங்கம்,
இல.225, நெளுக்குளம், வவுனியா.

இல.18/1, தர்மபுரம்,
கிளிநொச்சி.

(48,23,24)

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
22.11.1987

மறைவு
20.04.2009

**செல்வன் பாலசுப்பிரமணியம் நகுலேஸ்வரன்**
**(நகுலேஸ்)**

ஆண்டுகளிரண்டு ஓடி மறைந்தாலும்
உங்கள் நினைவு என்றென்றும் இருக்கும்
கருணை நிறைந்த உங்கள் முகம்காண
நித்தம் நித்தம் ஏங்குகின்றோம்.

நி.மு: சோலைநகர், புதுமுறிப்பு,
கிளிநொச்சி.
த.மு: புது வீதி, காரைநகர்.

(31,78) (21,50)

**குடும்பத்தினர்.**

## 2 ஆம் ஆண்டு நினைவலைகள்

இறப்பு: 20.04.2009



**கந்தையா இலங்கநாதன்** | **இலங்கநாதன் இராசகிளி** | **இலங்கநாதன் நந்தினி**

பண்பின் சிகரமாய் பாசத்தின் உறைவிடமாய்
அன்பின் திருவுருவாய் கருணையின் கடலாய் வாழ்ந்தீர்களே!
"தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று" என
ஊர் போற்ற வாழ்ந்தீர்கள்
இன்று நீங்கள் எம்மைப் பிரிந்து ஈராண்டு சென்றாலும் - எங்கள்
இதயத்தில் என்றும் இருப்பீர்கள்- உங்கள்
ஆத்ம சாந்திக்காக ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்

மயிலியதனை, தொண்டமானாறு.

(48,24,26)

மகன்: இ.நவராசன் (ஜேர்மனி)



# யாழ்ப்பாணம் சத்திரம் அருள்மிகு ஸ்ரீ ஞானவைரவர் தேவஸ்தானம் மகா கும்பாபிஷேக சிறப்புமலர்

## 20.04.2011



### பேரானந்தம்மிக்க பெருவாழ்வைப் பெறுவோம்






இற்றைக்கு ஏறத்தாழ 150 வருடங்கள் பழைமை வாய்ந்ததும் புராதனமும் சிறப்பும் கூடிய யாழ். மாநகரத்தில் சத்திரம் எனும் பதியில் ஞான வைரவர் எனும் நாமம் கொண்டு பல வர்த்தகப் பெருமக்களைத் தன் வசம் ஈர்த்து திருவருள் நிறையபெற்ற எம்பெருமான் தான் உறையும் இடத்தை முன்னரே நினைந்து மாட்டுத் தொழுவமாக வைத்துப் பேணிச் சுத்திகரித்த பின்னர் சிறிய கோயில் கொண்டு உறைந்து 1998இல் கும்பாபிஷேகம் நிகழ்த்தப்பெற்று மீண்டும் பல தனவான்களுடைய பெரும் முயற்சியால் இன்று அழகான கட்டட நிர்மாண வர்ண வேலைப்பாடு, சுதைகள் மண்டபங்களுடன் கூடிய ஒரு பெரிய கோயிலாகக் காட்சியளிப்பது வணிகப் பெருமக்கள் செய்த ஒரு பெரும் புண்ணியமாகும்.

மேலும் எப்பெருமான் அனைவருக்கும் ஞானமாகிய அறிவைக் கொடுத்து அதன் மூலம் அடியவர்கள் பெரும் தனவான்களாகவும், அறிவாளிகளாகவும், சிறந்த மக்கட் பேறுகளையும் பெற்ற ஒரு பேரானந்தம்மிக்க பெருவாழ்வைப் பெறுவதற்கு ஸ்ரீ ஞான வைரவப் பெருமானைப் பிரார்த்திப் போமாக.

*பிரதிஷ்டா பிரதம குரு,*
**சிவஸ்ரீ நாகேந்திரம் பாலசுப்பிரமணிய சிவாச்சார்யார்.**
*ஆலய நித்திய குரு*
**சிவஸ்ரீ பால ஸ்ரீஸ்கந்தராஜக் குருக்கள்.**

### செஞ்சொற்செல்வரின் செய்தி



யாழ்ப்பாணப் பட்டணத்துக் காவல் தெய்வமாக விளங்கும் சத்திரத்து ஞான வைரவப் பெருமான் மகாகும்பாபிஷேகம் குறித்து வாழ்த்துவதில் அகமகிழ்கிறேன். கடையிற் சுவாமி முதல் பல சித்தர்கள், மகான்கள் தங்கியிருந்து நல்லுபதேசம் செய்த யாழ். சத்திரத்தடியில் எழுந்தருளி அருள்பாலிக்கும் வைரவப் பெருமானின் சிறப்புப் பலரும் அறிந்ததே. பெருங்கடைத்தெரு வர்த்தகர்கள், நாளாந்த தொழில் செய்து வாழும் தொழிலாளர்கள் தினமும் பிரார்த்திக்கும் உன்னத தெய்வம். இப்புனித தலத்தின் மேன்மையைக் காக்கும் வகையில் அன்பர்கள் ஒன்று கூடித் திருப்பணிகள் நிறைவேற்றி மகாகும்பாபிஷேகம் நிறைவேற்றுவது பாராட்டுக்குரிய விடயமாகும்.

சைவமக்கள் கடவுள் வழிபாட்டுக்குக் கொடுத்த மகத்துவம் என்றும் வீண் போகாது. ஞான வைரவப் பெருமானின் திருவருளால் யாழ்ப்பாண நகரம் தெய்வீகப் பொலிவுடன் நிறைவாகத் திகழப் பிரார்த்தித்து அமைகிறேன்.

''யாவர்க்குமாம் இன்னுரைதானே''

**ஆறு. திருமுருகன், தலைவர் -**
*ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை.*

### அருளாசிச் செய்தி



இன்று பெருஞ்சாந்தி என அழைக்கப்படும் மகாகும்பாபிஷேகம் காணும் யாழ்ப்பாணம் சத்திரம் ஸ்ரீ ஞான வைரவப் பெருமான் புதுமையும் மகிமையும் பொலிந்த அருள்தெய்வமாவார்.

எல்லோரையும் காத்துரட்சிக்கின்ற எம் பெருமானுக்கு இன்று நடைபெறுகின்ற மகா கும்பாபிஷேகமானது சிறப்புற்று நிறைவுற நல்லைக் குருமணியின் திருவடி பணிந்து எல்லாம்வல்ல நல்லைக் கந்தப் பெருமானின் பாதபங்கஜம் தொழுது உளமாரப் பிரார்த்தித்து அருளாசி நல்குவதில் பேருவகை அடைகின்றோம்.

இன்று நல்விழாக்காணும் பூப்படைபொலிகின்ற ஸ்ரீ ஞான வைரவப் பெருமானின் பாதக் கமலங்களை வழுத்தி வாழ்த்துகின்றோம். இந்தக் கும்பாபிஷேக விழா கோலாகலமாக நிகழ்ந்து அனைத்து மக்களும் சுகமே வாழவேண்டுமென்று பிரார்த்திக்கின்றோம்.

'என்றும் வேண்டும் இன்ப அன்பு'

*ஆதீனக் குருமுதல்வர்,*
**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்,**
*நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம், யாழ்ப்பாணம்.*

### அருள் ஞான வைரவரே..! அமைதியைத் தாரீர்!!

உலகெலாம் நிறைந்து விளங்குகின்ற எல்லாம்வல்ல ஸ்ரீ ஞானவைரவப் பெருமான் யாழ்ப்பாணம் சத்திரத்தடியிலே எழுந்தருளி வழிபடும் அடி யார்க்கெல்லாம் வரங்களையீந்து நல்வாழ்வு நல்கி அருள்பாலித் துக்கொண்டிருக்கின்றார்.

அந்த அடியார்களுக்கும் ஞானவைரவப் பெருமானுக்கு பெருஞ்சாந்தி எனப்படும் மஹாகும்பாவிஷேகம் இன்று வெகு சிறப்பாக இடம்பெறவுள்ளதை எண்ணும் போது மனம் இன்பப் பக்தியுணர்வினால் உந்தப்பட்டு இறும்பூதெய்துகின்றது.

காவற்தெய்வமாக மிளிர்கின்ற ஸ்ரீ ஞானவைரவப் பெருமான் எங்களையெல்லாம் துன்பத்தினின்றும் காத்தருளி ரட்சித்து அருள்புரிகின்ற இந்தப் பொன்னான நன்னாளிலே அனைத்து மக்களும் ஆனந்த மேலீட்டினால் பக்திப் பரவசத்துடன் உளங்கனிந்து நல்வாழ்க்கைக்கு அடிகோல வேண்டுமென்று உளமாரப் பிரார்த்தித்து ஆசி நல்குவதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றோம்.

''நம்பினார் கெடுவதில்லை நான்கு மறைத்தீர்ப்பு''

*அருள் கொழிக்கும் வைரவர் பக்தன்*
*இராசையா ஸ்ரீதரன்.*

### ஸ்ரீ சதுர் கால வைரவாஷ்டோத்ரம் தியானம்

அயன் தலைகொய்து கொண்டாய்
அரி உடல் உரி அணிந்தாய்
வெயில்விடும் சூலம் ஏந்தி
வெகுளியின் வடிவாய் நின்றாய்
வையிரவா கடைக்கண் பார்ப்பாய்
வளமெல்லாம் வாழ்வில் சேர்ப்பாய்
துயர்பகை நோய் வராமல்
தொழுதெழும் எம்மைக் காப்பாய்.

க.கு.கந்தையாபிள்ளை,
318, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

### ஆலய வரலாறு

இற்றைக்கு நூற்றாண்டுக்கு முன்பு கடையிற் சாமியார் என்பவர் சத்திரம் அமைத்து வெளியூரில் இருந்து வருபவர்களுக்கு அமுது வழங்கி உணவுகள், தேநீர், சிற்றுண்டி வகைகளைகொடுத்து தங்குவதற்கான வசதிகள் யாவும் செய்துவந்தார். அத்தோடு முனிவர்கள், சித்தர்கள் தங்கிச்செல்வதற்கும் சத்திரம் அமைத்து அவர்களை அனுசரித்து வந்தவேளையில் சத்திரத்துக்கு அருகில் வைரவர் சூலம் வைத்து வழிபாடும் செய்துவந்தார். அத்தோடு சத்திரச் சூழலில் சத்திரத்துக்கு அருகே கொட்டில் அமைத்து சிறுகடைகள் உருவாக்கி வளர்ச்சி அடைந்து, தற்போது ''மேற்கு மாக்கற்'' எனப் பெயர் பெற்று வளர்ச்சியடைந்தது மட்டுமல்லாமல் வைரவர் கோயிலையும் சிறிய கோயிலாக அமைத்து 1998 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் முதல் கும்பாபிஷேகம் ஆ.சி. பரமசாமி என்பவரின் முயற்சியால் நடைபெற்றது.

இன்று சத்திரச்சந்தி எனவும் அதற்கு சந்தியில் அமைந்திருக்கும் கிணறு சான்று பகருவதுமட்டுமல்லாமல் இப்பொழுதும் நல்ல தண்ணீர்த்தாகம் தீர்த்துக்கொண்டு இருப்பதை நாம் காணக்கூடியதாக உள்ளது.

கடையிற் சாமியாரின் தொன்றுதொட்ட சேவை வளர்ச்சி அடைந்தமைக்கு இவ் ஆலயம் சான்று பகருகின்றது.

தற்போது இக்கோயிலைச் சுற்றியுள்ள வர்த்தகர்களின் பெரும் முயற்சியால் புதுப்பொலிவுபெற்று வளர்ச்சி அடைவதற்கு ஆ.சி. பரமசாமி என்பவரின் பெருமுயற்சி என்றால் வியப்பில்லை. இந்தக் கோயில் மேலும் மேலும் வளர்ச்சி அடைந்து வருகின்றது.

வர்த்தகப் பெருமக்களின் முயற்சியால் கோயிலுக்கு நிர்வாகசபை அமைத்து நிர்வாகத்தாரின் விடமுயற்சியினால் சத்திரம் ஸ்ரீ ஞான வைரவர் ஆலயம் புதுப் பொலிவு பெற்று இன்று (20.04.2011) கும்பாபிஷேகம் நடைபெறுவதில் நாம் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றோம்.

ஸ்ரீ ஞானவைரவர் தேவஸ்தான நிர்வாக சபை.

### தலைவரின் ஆசிச்செய்தி

எங்களுக்கெல்லாம் காவல் தெய்வமாக எழுந்தருளி வீற்றிருக்கின்ற ஸ்ரீ ஞானவைரவப் பெருமானுடைய அழகிய ஆலயத்தைப் புதுப்பொலிவுடன் அமைத்து எம்பெருமான் நல்லருள் பாலிக்க இன்று மகா கும்பாபிஷேகம் நடைபெறுகின்றது.

யாழ்ப்பாணம் சத்திரம் ஸ்ரீ ஞானவைரப் பெருமானுக்கு ஓர் அழகிய ஆலயம் அமைக்கவேண்டுமென்று பல வருடங்களுக்கு முன் எடுத்த தீர்மானத்தின்படி, பல்வேறு அடியார் பெருமக்களது பூரண ஒத்துழைப்போடு இன்றைய பஞ்ச குண்டபடி புனருத்தாரண அஷ்டபஞ்தன பிரதிஷ்டா மகாகும்பாபிஷேகம் சிறப்போடு நடைபெறுகின்றது.

இன்றைய நல்ல நாளான விசாக நட்சத்திரத்திலே மிதுன லக்கின சுப முகூர்த்தத்தையே சுபதினமாகக் கொண்டு எம்பெருமானுக்கு நடைபெறுகின்ற பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் சிறப்புற வாழ்த்துகின் றோம்.

''வரமீகுந்தருள்வாய் வைரவப் பெருமானே''

தலைவர் - ஸ்ரீ ஞானவைரவர் தேவஸ்தானம்.

**தர்சினி அமுதம்**
வெற்றிலைக் கடை
கோயிலுக்குத் தேவையான அர்ச்சனைப் பொருள்கள் மற்றும் அபரக்கிரியைச் சாமான்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.
உரிமையாளர்:
இல.89 சி.சிவராசா,
மேற்கு மாக்கற்,
யாழ்ப்பாணம்.
90, ஆ.சி. பரமசாமி
மேற்கு மாக்கற்
யாழ்ப்பாணம்.
T.P. No. 021 2225733

**வேணி களஞ்சியம்**
பல்பொருள் வாணிபம்
இல.65 கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

**சித்தி விநாயகர் களஞ்சியம்**
கோயிலுக்குத் தேவையான வாசனைத் திரவியங்கள், பனை ஓலையிலான பொருள்கள், கயிறு வகைகள், பிளாஸ்ரிக் வகைகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.
உரிமையாளர் - நித்தியானந்தம்
மேற்கு மாக்கற், யாழ்ப்பாணம்.

**வரன் வெற்றிலைக் கடை**
பனை ஓலை உற்பத்திப் பொருள்கள் மற்றும் வாசனைத் திரவியங்கள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.
உரிமையாளர் - த.கேதீஸ்வரன்.
இல.95, 96 மேற்கு மாக்கற், யாழ்ப்பாணம்.

**இலங்கைராசா வெற்றிலைக் கடை**
கோயிலுக்குத் தேவையான அர்ச்சனைப் பொருள்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.
இல. 67, மேற்கு மாக்கற், யாழ்ப்பாணம்.
T.P 021 222 5255

**அன்னை நாகா பூட்சிற்றி**
இல.175, கே. கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

**மணியம் கபே**
இல. 309, கஸ்தூரியார் வீதி,
யாழ்பாணம்.

**றுகுணாஸ் ரேடிங்**
பலசரக்கு மாளிகை
284, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே:021 222 2538

**குணசேகரம் பாய்க்கடை**
பனை உற்பத்திப் பொருள்கள்,
பிளாஸ்ரிக் வகைப் பொருள்கள்
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.
No.86, மேற்கு மாக்கற், யாழ்ப்பாணம்.

**லிங்கஜன் ஸ்ரோர்ஸ்**
பலசரக்குப் பொருள்களை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.
இல.282, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

**வைகுந்தன் களஞ்சியம்**
பல்பொருள் வாணிபம்
இல. 280, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

**அம்பிகை களஞ்சியம்**
பல்பொருள் வாணிபம்,
101, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

**நாகதர்சினி சிற்றுண்டி அகம்**
இல. 57, மேற்கு மாக்கற்,
யாழ்ப்பாணம்.

**தி. தெய்வேந்திரம் ஸ்ரோர்ஸ்**
இல.62, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

**ராம் சுப்பசிற்றி** 306, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.



**Jegatha**
Mobile World
ஜெகதா மொபைல் உலகம்
Dealers in Mobile Phones & Accessories
No.60, Hospital Road, Jaffna.
Tel : 021 222 8761



# நைஜீரியாவில் நடந்த ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ஜோனாதன் அமோக வெற்றி

## 2ஆவது தடவையாக ஆட்சி அமைக்கிறார்

பால் ஒபியா அபுஜா, ஏப். 20

ஆபிரிக்காக் கண்டத்திலுள்ள எண்ணெய் வள நாடான நைஜீரியாவில் ஜனாதிபதித் தேர்தல் நடந்தது. இதில் ஜனாதிபதி பதவி வகிக்கும் குட்லக் ஜோனாதன் (வயது - 64) என்பவரும், முன்னாள் சர்வாதிகாரியும், எதிர்க்கட்சித் தலைவருமான முகமது புகாரி (வயது - 59) என்பவரும் போட்டியிட்டனர்.

தேர்தலில் பதிவான வாக்குகள் ஞாயிற்றுக்கிழமை எண்ணப்பட்டன. முடிவை அந்த நாட்டு மக்கள் மிகவும் ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருந்தனர்.

தற்போதைய ஜனாதிபதி ஜோனாதன் அமோக வெற்றி பெற்றார் என அறிவிக்கப்பட்டார். அவருக்கு 60.02 சதவீதம் வாக்குகள் கிடைத்துள்ளன. இவரை எதிர்த்துப் போட்டியிட்ட முகமது புகாரிக்கு 30 சதவீத வாக்குகளே கிடைத்தன.

நைஜீரியாவில் மொத்தம் 36 மாகாணங்கள் உள்ளன. அவற்றில் 23 மாகாணங்களில் இவர் வெற்றிபெற்றுள்ளார். எதிர்க்கட்சி வேட்பாளரான புகாரிக்கு 10 மாகாணங்களில் மட்டுமே கூடுதல் வாக்குகள் கிடைத்துள்ளன.

தற்போது வெற்றிபெற்றுள்ளதன் மூலம் குட்லக் ஜோனாதன் 2ஆவது தடவையாக மீண்டும் ஆட்சி அமைக்கிறார். எதிர்வரும் மே மாதம் 29ஆம் திகதி அவர் ஜனாதிபதியாகப் பதவி ஏற்க உள்ளார்.

அவரது பதவிக் காலம் 4 ஆண்டுகளாகும். ஒரு கோடியே 50 இலட்சம் மக்கள் தொகை கொண்ட நைஜீரியாவில் பல ஆண்டுகளாக இராணுவ ஆட்சி நடந்தது. 1999ஆம் ஆண்டு தான் இங்கு ஜனநாயக ஆட்சி மலர்ந்தது.

அங்கு 2003ஆம் ஆண்டு முதன் முதலாக ஜனாதிபதித் தேர்தல் நடந்தது. தற்போது 3ஆவது முறையாக ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்றுள்ளது. முன்பு ஜனாதிபதி பதவி வகித்தவர் நோய்வாய்ப்பட்டு இறந்து விட்டார்.

அதைத் தொடர்ந்து குட்லக் ஜோனாதன் புதிய ஜனாதிபதியாகப் பதவியேற்றார். பதவிக் காலம் முடிந்ததைத் தொடர்ந்து மீண்டும் நடந்த தேர்தலில் போட்டியிட்டு அவர் வெற்றி பெற்றுள்ளார். (ஏ)



நைஜீரியாவில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் முன்னாள் ஜனாதிபதி குட்லக் ஜோனாதன் தமது வாக்கைப் பதிவு செய்கிறார். இவர் இந்தத் தேர்தலில் வெற்றி பெற்றுள்ளார். (ஏ)

# கடற்கொள்ளைத் தடுப்புக் குறித்து துபாயில் 50 நாடுகள் மாநாடு

துபாய், ஏப். 20

உலகில் முதன்முறையாக கடற்கொள்ளையைத் தடுப்பது, அதனால் ஏற்படும் பொருளாதாரப் பிரச்சினை ஆகியவை குறித்த மாநாடு ஒன்று துபாயில் திங்கட்கிழமையும், செவ்வாய்க்கிழமையும் என இரு நாள்கள் நடக்க உள்ளது.

இந்த மாநாட்டை ஐக்கிய அரபு நாடுகள் அரசு ஏற்பாடு செய்துள்ளது. இதில், 50 நாடுகளின் அதிகாரிகள், தொழிலதிபர்கள், 30 நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள், 25 நாடுகளின் மூத்த பிரதிநிதிகள், ஐ.நா. மற்றும் சர்வதேச கடல்சார் கூட்டமைப்பின் அதிகாரிகள், கடல்சார் பாதுகாப்பு நிபுணர்கள் என பலர் கலந்து கொள்கின்றனர்.

இந்த மாநாட்டில், கடற்கொள் ளையைத் தடுக்கவும், அவர்கள் வசம் உள்ளவர்கள், அவர்களது குடும்பத்தாரின் நிலைவரம் குறித்தும் சர்வதேச நாடுகளின் அரசுகளும், தொழிலதிபர்களும் இணைந்து நடவடிக்கைகள் எடுப்பது குறித்து விவாதிக்கப்பட உள்ளன.

# ஏமன் ஜனாதிபதி பதவி விலகல்: பேச்சில் எதிர்க்கட்சிகள் பங்கேற்பு

சனா, ஏப். 20

ஏமன் ஜனாதிபதி அலி அப் துல்லா சலே பதவி விலகுவது குறித்த பேச்சுக்களில் எதிர்க்கட்சிகள் கலந்துகொள்ளத் தீர்மானித்துள்ளன. ஏமனில் ஜனாதிபதி சலே பதவி விலகக்கோரி கடந்த இரு மாதங்களாக மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

சலே இன்னும் மூன்று மாதங்களுக்குள் பதவி விலகவேண்டும், பதவி விலகிய பின்னர் அவர் மீது குற்ற விசாரணை எதுவும் மேற்கொள்ளப்படமாட்டாது ஆகிய சில ஆலோசனைகளை அமெரிக்காவின் உந்துதலின் அடிப்படையில், வளைகுடா கூட்டுறவுச் சபை முன்வைத்தது.

இந்தச் சபையில் சவூதி அரேபியா, ஓமன், பஹ்ரைன், கட்டார், குவைத், ஐக்கிய அரபு நாடுகள் ஆகியவை உள்ளன. இவை அனைத்தும் அமெரிக்க ஆதரவு நாடுகள் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த ஆலோசனைகளை, ஏமன் எதிர்க்கட்சிகள் எதிர்த்தன. சலே உடனடியாகப் பதவி விலக வேண்டும் என்று வலியுறுத்தின. சவூதி தலைநகர் ரியாத்தில் நடக்கும் ஜி.சி.ஓ. கூட்டத்தில் கலந்துகொண்டு, ஜனாதிபதி சலே பதவி விலகுவது குறித்த பேச்சுக்களில் கலந்துகொள்ள மூன்று எதிர்க்கட்சிகள் தீர்மானித்துள்ளன.

சலேவுக்கு எதிரான எதிர்க் கட்சிகளின் கூட்டணியான 'ஜொயின்ட் மீட்டிங் பார்ட்டிஸ்' அமைப்பின் தலைவரும், மூன்று எதிர்க் கட்சிகளின் தலைவர்கள்மூன்று பேரும் ரியாத்துக்குச் சென்று, பேச்சுகளில் கலந்துகொள்ளப் போகின்றனர் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன. ஆனால், இத்த கவலை மற்றொரு எதிர்க்கட்சித் தலைவர் மறுத்துள்ளார். (ஏ)

# மரண அறிவித்தல்



## கனகசபை நடராஜா
(சட்டத்தரணி)

கள்ளியங்காட்டைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கனகசபை நடராஜா (சட்டத்தரணி) நேற்று (19.04.2011) செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கமலாதேவியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான கனகசபை- மாணிக்கம் தம்பதியரின் மகனும், தாமோதரம்பிள்ளை-செல்லம்மா தம்பதியரின் மருமகனும் கனகசபேசன் (ஜேர்மனி), ஞானசபேசன் (கனடா), ஆனந்தசபேசன் (ஆசிரியர், சென்.ஜோன்ஸ் கல்லூரி), செல்வ அம்பிகை (விரிவுரையாளர், யாழ்.பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் தாரணி (ஜேர்மனி), திருநங்கை (கனடா), சிவப்பிரியா (ஆசிரியை, சென்.ஜோன்ஸ் கல்லூரி), நந்தகுமரன் (உதவிப் பொறியியலாளர், ரெலிக்கொம், வவுனியா) ஆகியோரின் அன்பு மாமனும் .றஜீவன், திவ்யா, சேந்தினி, இளநிலா, அபிசாலினி, திவ்யன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கள்ளியங்காடு G.P.S வீதியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் இன்று (20.04.2011) புதன்கிழமை நண்பகல் 12 மணிக்கு நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஞா.பா.ச.வீதி,
கள்ளியங்காடு, யாழ்ப்பாணம்.
தொ.பே: 0212230400 (3319)(39-50-23)

*தகவல்:*
ஆனந்தசபேசன் (மகன்),
செல்வ அம்பிகை (மகள்).

- தபால் மூலம் -
ஆறு மாத கால டிப்ளோமா
Course Length - Six Month
APRIL. 2011 TO SEPT.2011
தமிழ் மொழி மூலம்

| | |
|---|---|
| Dip. in Psychology | - உளவியல் டிப்ளோமா |
| Dip. in Office Administration | - காரியாலய நிர்வாக டிப்ளோமா |
| Dip. in Human Resources Management | - மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Civil Engineering | - சிவில் எஞ்ஜினியரிங் டிப்ளோமா |
| Dip. in Business Management | - வியாபார முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Banking Management | - வங்கி முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Sales & Marketing Management | - விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் மு. டி. |
| Dip. in Health & Hospital Management | - சுகாதாரம் மற்றும் வைத்தியசாலை மு. டி. |
| Dip. in Nursing Administration | - தாதியர் நிர்வாக டிப்ளோமா |
| Dip. in Educational Management | - கல்வி முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Montessori | - மொண்டிசூரி டிப்ளோமா |

கற்கை முடிவில் பரீட்சை நடைபெறும் பிராந்திய நிலையங்கள்
• கல்முனை • மட்டக்களப்பு • திருகோணமலை • புத்தளம் • வவுனியா • மன்னார் • யாழ்ப்பாணம் • கண்டி • கொழும்பு • ஹட்டன் • அனுராதபுரம் • நுவரெலியா

மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவம் பெற உங்களது பெயர், முகவரி, தெரிவுசெய்த கற்கைநெறி என்பனவற்றை கீழ் உள்ள கையடக்க தொலைபேசிக்கு SMS செய்து பெற்றுக்கொள்ளலாம்.
Mobile: 0777 140 844, 071 803 48 48
விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி
Country Co-ordinator
MARUTHUR . A. HASSEN
(B.Sc. Psychology, M.Sc. Psychology)
ALL INDIA INSTITUTE OF MANAGEMENT STUDIES
24, 1ST FLOOR, SUPERMARKET COMPLEX, MAIN STREET, SAINTHAMARUTHU-07.
Web: www.aiimas.com, www.iimat.com, www.aicomas.org
Tel: 067 2222917, 067 3671749, 067 3679688, 071 803 4848
விண்ணப்ப முடிவுத் திகதி : 28.04.2011

வீடு வாடகைக்கு
இல.324, மானிப்பாய் வீதியில் சகல வசதிகளும் கொண்ட தனி வீடு வாடகைக்குண்டு. தொடர்பு:- 0773924614

T.V மலிவு விற்பனை
புதிய, பாவித்த Sony Wega Flat 21"25"29" T.V கள், Rs.13000/= முதல், Box வகைகள் DVD RX Radio cassette என்பன மிக மலிவு விலையில் விற்பனைக்குண்டு. தொடர்பு:- 0771393670, 0778449829
இ.மகேஸ்வரன் (அப்பளக்கொம்பனி)
சீனிப்புளியடி ஆரம்பப் பாடசாலை அருகில்,
K.K.S வீதி, இணுவில்.

பணிப்பெண் தேவை
வீட்டில் தங்கியிருந்து வீட்டு வேலை செய்யக்கூடிய 30 வயதுக்கு மேற்பட்ட பணிப்பெண் தேவை.
சம்பளம் ரூபா 10,000/=
தொடர்பு:- 0750405723

# கடாபி படைகளின் குண்டுவீச்சு நீடிப்பு: 21 பேர் உயிரிழப்பு; 100 பேர் காயம்!

திரிபோலி,ஏப்.20

லிபியாவின் மிஸ்ரட்டா நகரின் மீது கடாபிப் படைகள், கொத்து வெடி குண்டுகளைத் தொடர்ந்து வீசி வருவதால், அங்கு பீதி நிலவுகிறது. பாதிக்கப்பட்ட மக்களுக்குப் போதுமான மருத்துவ வசதிகள் செய்து கொடுக்க முடியாத அவல நிலை ஏற்பட்டுள்ளது.

லிபியாவின் மிஸ்ரட்டா நகரின் மீது கடந்த இரு நாளகளாக, கடாபிப் படைகள் கொத்து வெடிகுண்டுகள், கொத்து ரொக்கெட்டுகள் ஆகியவற்றை குடியிருப்புப் பகுதிகள் மீது வீசி மக்களைக் கொன்று வருகின்றன.

ஞாயிற்றுக்கிழமை நடந்த கொத்து குண்டு வீச்சில் 21 பேர் பலியாயினர். 100 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

இதுகுறித்து எதிர்த்தரப்பு செய்தித் தொடர்பாளர் ஒருவர் கூறியவை வருமாறு:-

கடாபிப் படைகளின் தாக்குதலால் பாதிக்கப்பட்டவர்களுக்குத் தேவையான மருத்துவ வசதிகள் இங்கில்லை. வெளியில் இருந்துவரும் உதவிகள் போதவில்லை. வைத்தியசாலைகள் அனைத்தும் கடாபிப் படைகள் வசம் இருக்கின்றன.

இவ்வளவு நடந்தும் நேட்டோ படையின் பதில் தாக்குதல் நடந்ததாகவே தெரியவில்லை. கடந்த நான்கு நாள்களாக நேட்டோ படைத் தாக்குதல் நிகழவில்லை - என்றார்.

மிஸ்ரட்டா நகருக்கு வெளியிலிருந்து உதவிகள் வரக்கூடிய துறை முகப் பகுதி மற்றும் சிறிய, பெரிய தொழிற்சாலைகள் இயங்கும் தொழிற்பேட்டைப் பகுதிகளில் கடாபிப் படைகள் கொத்து வெடிகுண்டுகளை வீசித் தாக்கி வருகின்றன. இதனால், காயமடைந்தோருக்கான உதவிகள் வெளியிலிருந்து கிடைப்பதில் சிக்கல் நிலவுகிறது.

கடாபி அரசு அதிகாரிகளுடன், ஐ.நாவின் மனிதாபிமான விவகாரங்கள் மற்றும் அவசர உதவி ஒருங்கிணைப்புக்கான சார்பு பொதுச் செயலர் வெலரி அமோஸ் நடத்திய பேச்சுகளில் முக்கிய முடிவுகள் எதுவும் எட்டப்படவில்லை.

பெங்காசியில் அவர் திங்கட்கிழமை அளித்த பேட்டியில், ''போரால் பாதிக்கப்பட்ட மக்களை பாதுகாப்பான இடங்களுக்குக் கொண்டு செல்வது, தேவையான மருத்துவ வசதிகளைச் செய்து கொடுப்பது இதற்காகவாவது தற்காலிக போர் நிறுத்தத்தை மேற்கொள்ள வேண்டும் என்ற எனது கோரிக்கைக்கு அவர்கள் செவி சாய்க்கவில்லை'' என்றார்.

கொத்து வெடிகுண்டுகளின் தாக்குதல் தொடர்வதால் மிஸ்ரட்டா நகர்வாசிகள் பெரும் பீதியில் உள்ளனர். ஞாயிற்றுக்கிழமை அந்நகரின் துறைமுகப் பகுதியில் 250 பேர் கூடி, தங்களைப் பாதுகாப்பான இடங்களுக்குக் கொண்டு செல்ல வேண்டும் என்று கோரி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அஜ்தாபியாவிலும் திங்கட்கிழமை கடும் மோதல் தொடர்ந்தது. அந்நகரின் கிழக்குப் பகுதியிலுள்ள பெங்காசிக்குச் செல்லும் நுழைவாயில் வரை கடாபிப் படைகள் ஊடுருவி விட்டன.

எதிர்த்தரப்பு வசம் உள்ள கிழக்குப் பகுதியில், எண்ணெய் நிறுவனங்களின் உற்பத்தி ஆரம்பிக்கும்வரை எண்ணெய் விற்பனை மேற்கொள்ளப்படமாட்டாது என்று, 'தேசிய கவுன்சில்' அரசின் எண்ணெய் வளத்துறை அதிகாரி தெரிவித்துள்ளார்.

சமீபத்தில், கிழக்குப் பகுதியிலுள்ள எண்ணெயை, கட்டார் நாட்டுடன் மேற்கொண்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் விற்ற இடைக்கால அரசு, அதன் மூலம் 540 கோடி ரூபா ஈட்டியது. இப்பணத்தில்தான் கிழக்குப் பகுதி மக்களுக்கான உணவு, எரிபொருள் மற்றும் போருக்கான ஆயுதங்கள் வாங்கப்பட்டன.

சமீபத்தில் கிழக்குப் பகுதியிலுள்ள எண்ணெய் நிறுவனங்கள் மீது நிகழ்ந்த தாக்குதலில் ஏற்பட்ட சேதங்கள் குறித்தான மதிப்பீடு நடந்துகொண்டிருப்பதால், அது முடியும் வரை எண்ணெய் விற்பனை இருக்காது என்று எதிர்த்தரப்பு தெரிவித்துள்ளது.

## துப்பாக்கிச் சூட்டில் ஆர்ப்பாட்டக்காரர்கள் 13 பேர் பலி

டமாஸ்கஸ்,ஏப்.20

சிரியாவில் ஞாயிற்றுக்கிழமை ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது பொலிஸார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில், 13 பேர் பலியாயினர். இதனால், அங்கு மக்களின் போராட்டம் மேலும் தீவிரமடைந்துள்ளது.

சிரியாவில் அமுலிலுள்ள அவசர நிலை பிரகடனம், ஒரு வாரத்தில் இரத்துச் செய்யப்படும் என கடந்த 16ஆம் திகதி ஜனாதிபதி பஷர் அல் அசாத் அறிவித்தார்.

அதை ஏற்காத மக்கள், 17ஆம் திகதி நாடு தழுவிய ஆர்ப்பாட்டங்களுக்கு அழைப்பு விடுத்திருந்தனர். ஹோம்ஸ் நகரில் நடந்த ஆர்ப்பாட்டத்தில், மக்கள் மீது பாதுகாப்புப் பொலிஸார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில், 13 அப்பாவி மக்கள் பலியாயினர்.

அவர்களின் இறுதிச் சடங்கு திங்கட்கிழமை நடந்தது. இந்நிலையில், ''சிரியா நகரங்களில் செய்தித் தொடர்பாளர்கள் இயங்க முடியாத நிலை இருப்பதால், அவற்றில் என்ன நடக்கின்றது என்று சரிவரத் தெரியவில்லை'' என 'அல் ஜசீரா' செய்தியாளர் ஒருவர் கூறினார்.

இறுதிச் சடங்கைத் தொடர்ந்து சண்டைகள் நிகழக்கூடும் என்ற பீதியில் மக்கள் இருக்கின்றனர் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.



ஹங்கேரிக்கு இரண்டு நாள்கள் அரசுமுறை பயணமாக வந்த ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ-மூன்(இடது) புதபெஸ்ட் நாடாளுமன்றத்துக்கு முன் உள்ள டனுபே நதிக்கரையில் ஹங்கேரி ஜனாதிபதி போல் செக்மிட்டை சந்தித்துப் பேசுகிறார்.

## பாகிஸ்தான் திரும்ப முஷாரப் முடிவு

பாகிஸ்தான் முன்னாள் ஜனாதிபதி பர்வேஸ் முஷாரப் மீண்டும் பாகிஸ்தானுக்குத் திரும்ப முடிவு செய்துள்ளார்.

தனது உயிருக்கு அச்சுறுத்தல் இருந்தபோதிலும் அவற்றை உதறித் தள்ளிவிட்டு பாகிஸ்தான் திரும்பப்போகிறார் என அவர் அறிவித்துள்ளார். முன்னாள் இராணுவத் தளபதியான முஷாரப், இராணுவ ஆட்சி மூலம் ஜனாதிபதியாகப் பதவிக்கு வந்தவர். பின்னர் மக்களாட்சி ஏற்பட்ட பின்னர் அங்கிருந்து வெளியேறி லண்டனில் வசித்து வருகிறார்.

அனைத்து பாகிஸ்தான் முஸ்லிம் லீக் என்ற கட்சியை ஏற்படுத்தியுள்ள அவர், தனது கட்சித் தொண்டர்களுக்கு விடியோ மூலம் உரையாற்றினார். அப்போது தான் பலதடவைகள் சாவின் விளிம்பிலிருந்து தப்பினார் என்றும், எனவே இது போன்ற பயங்கரவாதக் குழுக்களின் மிரட்டலுக்கு அஞ்சப் போவதில்லை என்றும் அவர் கூறினார்.

விரைவிலேயே தான் பாகிஸ்தான் திரும்பவுள்ளார் என்றும், தன்மீது உள்ள அன்பை வெளிப்படுத்தும் வகையில் கட்சியினர் விமான நிலையத்துக்குப் பெருந்திரளாக வரவேண்டும் என்றும் அவர் கூறினார்.

லாகூரில் கட்சி அலுவலகம் திறக்க முடிவுசெய்து அதற்காக அவர் லண்டனிலிருந்து திரும்ப திட்டமிட்டுள்ளார். ஆனால் அவர் எப்போது பாகிஸ்தான் திரும்புவார் என்பது இரகசியமாக வைக்கப்பட்டுள்ளது.

2013ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் பங்கேற்க வசதியாக நாடு திரும்பியவுடன் தீவிர அரசியலில் ஈடுபட முஷாரப் திட்டமிட்டுள்ளார்.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் தனது கட்சி மிகச் சிறந்த கட்சியாக அமையும் என்று குறிப்பிட்ட அவர், தனது கட்சியில் அதிக எண்ணிக்கையில் இளைஞர்கள் சேர்கின்றனர் எனக் குறிப்பிட்டுள்ளார்.

## ஏமன் ஜனாதிபதி சலே பதவி விலகல் குறித்த பேச்சு தோல்வியில் முடிவு

### ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது துப்பாக்கிச் சூடு

சனா,ஏப்.20

ஏமன் ஜனாதிபதி அலி அப்துல்லா சலே பதவி விலகுவது குறித்த பேச்சுகள் திங்கட்கிழமை தோல்வியில் முடிந்தன.

ஏமனில் பல்வேறு இடங்களில் திங்கட்கிழமை நடந்த ஆர்ப்பாட்டத்தின்போது, மக்கள் மீது பொலிஸார் துப்பாக்கிச்சூடு, கண்ணீர்ப்புகை குண்டு வீச்சு பிரயோகம் நடத்தினர். இதில், பலர் காயமடைந்தனர்.

''ஏமன் ஜனாதிபதி அலி அப்துல்லா சலே உடனடியாகப் பதவி விலக வேண்டும்'' என்று மக்கள் போராடி வருகின்றனர். அவர்களுக்கு ஆதரவாக எதிர்க் கட்சிகளும் களத்தில் குதித்துள்ளன.

சலே உடனடியாகப் பதவி விலகும்படி, கடந்த 3ஆம் திகதி வலியுறுத்திய வளைகுடா கூட்டுறவு கவுன்சில் அமைப்பு (ஜி.சி.சி.), 10ஆம் திகதி தன் நிலையிலிருந்து பின்வாங்கியது.

ஜனாதிபதி சலே, தன் அதிகாரத்தை துணை ஜனாதிபதி அப்துரபூ மன்சூர் ஹாதியிடம் ஒப்படைக்கும்படி ஆலோசனை கூறியது. ஏமன் விவகாரத்தில் ஜி.சி.சி. தலையிடுவதை, ஏமன் எதிர்க்கட்சிகள் கண்டித்தன. ஜி.சி.சியில் ஓமான், கட்டார், பஹ்ரைன், சவூதி அரேபியா, ஐக்கிய அரபு நாடுகள் ஆகியவை மட்டுமே உள்ளன. ஏமன் கிடையாது என்பது குறிப்பிடத்தக்கது.

திங்கட்கிழமை ஜனாதிபதி சலே பதவி விலகுவது குறித்த பேச்சு சவூதி தலைநகர் ரியாத்தில் நடந்தது. ஜி.சி.சியும், ஏமனின் மூன்று எதிர்க்கட்சிகளும் கலந்துகொண்டன. பேச்சுகளில் சலேயின் பதவி விலகல் வலியுறுத்தப்படவில்லை என்று தெரிகிறது.

பேச்சு முடிந்த பின், செய்தியாளர்களிடம் பேசிய ஏமனின் ஆறு எதிர்க்கட்சிகளின் கூட்டணித் தலைவர் முகமது சலீம் பசந்த்வா, ''எங்கள் நிலைப்பாட்டில் எவ்வித மாற்றமும் இல்லை'' என்று திட்டவட்டமாகத் தெரிவித்துவிட்டார்.

பேச்சுகள் ஆரம்பிக்கும் முன், ஏமன் தலைநகர் சனாவில் பல்லாயிரக்கணக்கானோர் பங்கேற்ற பேரணி நடந்தது. அதைக் கலைப்பதற்காக பொலிஸார் துப்பாக்கிச்சூடு, கண்ணீர்ப்புகை குண்டு வீச்சு ஆகியவற்றை நடத்தினர். இதில், 100இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

தமாட் நகரில் ஜனாதிபதி ஆதரவாளர்கள் தாக்கியதில், 30 பேர் படுகாயமடைந்தனர். அல்-ஹூதைதா நகரில் நடந்த போராட்டத்தின் மீதும் பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்தியதில் 12 பேர் காயமடைந்தனர்.

## கடற்கொள்ளைத் தடுப்புக்கு அரபு எமிரேட் நிதியுதவி

டுபாய், ஏப். 20

கடற்கொள்ளையை தடுப்பது குறித்த மாநாடு, டுபாயில் திங்கட்கிழமை ஆரம்பமாகியது. இந்த மாநாட்டில், 50இற்கும் மேற்பட்ட நாடுகளின் பிரதிநிதிகள் பங்கேற்றுள்ளனர்.

கடற்கொள்ளைத் தடுப்புக்காக 6.30 கோடி ரூபா நிதியுதவி அளிப்பதாக, ஐக்கிய அரபு எமிரேட் வாக்குறுதி அளித்துள்ளது.

'உலக அளவிலான சவால்கள், மண்டல பொறுப்புகள்: கடற்கொள்ளை தடுப்புக்கான பொது ஒன்றிணைவு' என்ற தலைப்பில், டுபாயில், கடற்கொள்ளை தடுப்பு குறித்த மாநாடு திங்கட்கிழமை ஆரம்பமாகியது.

இதில், 50 நாடுகளின் பிரதிநிதிகளும், கப்பல்துறை தொழிலதிபர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

மாநாட்டில் பேசிய சர்வதேச கடல்சார் குழுவின் இயக்குநர் பொட்டங்கல் முகுந்தன் கூறுகையில், ''கடந்த மூன்று மாதங்களில் பதிவு செய்யப்பட்ட கடற்கொள்ளை எண்ணிக்கை, இதுவரை இல்லாத அளவிற்கு மிக அதிகளவில் உள்ளது.

இந்தாண்டின் முதல் மூன்று மாதங்களில், சோமாலியா கடற்கரைப் பகுதியில் மட்டும் 97 தாக்குதல்கள் நடந்துள்ளன. கடந்தாண்டில் 62 தாக்குதல்கள் நடந்தன. உலகளவில், 18 கப்பல்கள் கடத்தப்பட்டு அவற்றிலிருந்த 344 பேர் சிறைபிடிக்கப்பட்டுள்ளனர்.

45 கப்பல்கள் தீ வைத்துக் கொளுத்தப்பட்டுள்ளன'' என்றார்.

கடற்கொள்ளையைத் தடுப்பதற்காக, நேட்டோ கப்பற்படைகள் ரஷ்யா, சீனா, இந்தியா, ஈரான் ஆகிய நாடுகளின் கப்பல்களோடு ரோந்து வருகின்றன.

எனினும், கைதுசெய்யப்பட்ட கடற்கொள்ளையர்களை விசாரிப்பது போன்ற பல்வேறு விடயங்களில் நடைமுறை சிக்கல்கள் ஏற்படுகின்றன.

# ஈழத் தமிழர் படுகொலையைக் கண்டித்து நெல்லையில் இளைஞர் தீக்குளித்து மரணம்



இலங்கைத் தமிழர் விவகாரத்தில் இலங்கை அரசு நடந்து கொள்ளும் விதத்தைக் கண்டித்து இந்திய தமிழ்நாடு நெல்லை மாவட்டத்தைச் சேர்ந்த பொறியியலாளர் ஒருவர் தீக்குளித்து தற்கொலை செய்து கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நெல்லை மாவட்டம் கலிங்கப்பட்டியை அடுத்த சீகம்பட்டியைச் சேர்ந்த ராமசுப்புவின் மகன் கிருஷ்ணமூர்த்தி வயது (25) என்னும் இளம் பொறியியலாளரே இவ்வாறு தற்கொலை செய்துள்ளார்.

இலங்கைத் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டது அவரது மனதைப் பாதித்தது. சமீபத்தில் இணையத்தளத்தில் இலங்கை தமிழர்கள் கொடூரமாகப் படுகொலை செய்யப்பட்ட படங்கள் வெளியாகின.

இதனைப் பார்த்த கிருஷ்ணமூர்த்தி மனமுடைந்தார். பின்னர் விடுமுறை எடுத்துவிட்டு சொந்த ஊரான சீகம் பட்டிக்கு வந்துவிட்டார். அங்கு வந்தும் தனது நண்பர்களிடம் இலங்கை தமிழர்களை அநியாயமாகக் கொன்றுவிட்டார்களே என்று கூறி அழுது புலம்பினார்.

நேற்றுமுன்தினம் காலை கிருஷ்ணமூர்த்தி தனது உடலில் பெற்றோல் ஊற்றி தீ வைத்துக் கொண்டார். உடல் கருகிய அவரை கோவில்பட்டி அரசு ஆஸ்பத்திரியில் சேர்த்தனர். கிருஷ்ணமூர்த்தி தீக்குளித்ததற்கான காரணம் குறித்து அவரிடம் வாக்குமூலம் பெறுவதற்கு பொலிஸார் முயன்றனர்.

ஆனால் அவரால் பேச முடியவில்லை. நேற்று முன்தினம் மாலை கிருஷ்ணமூர்த்தி சிகிச்சை பலனின்றி இறந்தார். அவரது உடல் பிரேத பரிசோதனை செய்யப்பட்டு உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. உறவினர்கள் நேற்றுமுன்தினம் இரவே கிருஷ்ண மூர்த்தி உடலை தகனம் செய்தனர்.

இதேவேளை நேற்றுக்காலை கிருஷ்ண மூர்த்தி வீட்டில் ஒரு கடிதம் சிக்கியது. அதனை அவரது பெற்றோர் பார்த்தபோது:

அந்தக் கடிதத்தை கிருஷ்ண மூர்த்தியே எழுதியிருந்தது தெரிய வந்தது. அந்தக் கடிதத்தில் இலங்கை தமிழர்களுக்காக தற்கொலை செய்து கொள்கிறேன் என்று கூறி எழுதியிருந்தார்.

இது குறித்து கிருஷ்ண மூர்த்தியின் பெற்றோர் ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோவுக்குத் தெரிவித்தனர்.

உடனே அவர்

## வைகோ நேரில் சென்று அஞ்சலி

நேற்றுக்காலை சீகம்பட்டியில் உள்ள கிருஷ்ணமூர்த்தி வீட்டுக்கு விரைந்தார். அங்கு அலங்கரிக்கப்பட்டு வைக்கப்பட்டிருந்த கிருஷ்ணமூர்த்தியின் படத்திற்கு மலர்தூவி அஞ்சலி செலுத்தினார்.

இலங்கையில் தமிழர்கள் பாதுகாப்பற்ற நிலையில் இருப்பதைக் கண்டித்தும், இலங்கை அரசின் அடக்குமுறையைக் கண்டித்தும் தீக்குளிப்பதாக அவர் கடிதம் எழுதி வைத்துள்ளதாகக் கூறப்பட்டுள்ளது.

இதன்பின்னர் வைகோ செய்தியாளார்களிடம் கூறியதாவது:

குருவிகுளம் அடுத்த சீகம் பட்டி கிராமத்தை சேர்ந்த பொறியியலாளர் கிருஷ்ண மூர்த்தி இலங்கை தமிழர்களுக்காக தீக்குளித்து தற்கொலை செய்து கொண்டார்.

இது தொடர்பாக அவர் எழுதி வைத்துள்ள கடிதம் கிடைத்துள்ளது.

ஆனால் பொலிஸார் இலங்கை தமிழர்களுக்காகத் தீக்குளித்துத் தற்கொலை செய்ததை மறைத்து, அவரால் எதுவும் பேச முடியவில்லை என்று வழக்குப் பதிவு செய்துள்ளனர். கிருஷ்ணமூர்த்தி தீக்குளித்து உயிருக்கு போராடிய போது அவரது தாய் சுப்புலட்சுமி காப்பாற்ற முயன்றுள்ளார். இதனால் சுப்புலட்சுமிக்கும் உடலில் பலத்த காயம் ஏற்பட்டது.

அவருக்கு மதுரை தனியார் ஆஸ்பத்திரியில் சிகிச்சை அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இலங்கை தமிழர்களுக்காக கிருஷ்ணமூர்த்தி தற்கொலை செய்துள்ளது மிகப்பெரிய தியாகம்.

இலங்கையில் நடந்த போர்க் குற்றங்கள் குறித்து ஐ.நா.சபைச் செயலாளர் பான்கீமூன் நேரில் சென்று விசாரிக்க இலங்கை அரசு அனுமதிக்கவில்லை.

மேலும் ஐ.நா. சபையே இலங்கை படுகொலை குறித்து விசாரணை நடத்தி இது போர் குற்றம் என்று அறிக்கை வெளியிட்டுள்ளது.

இலங்கையில் போர் நடக்கும்போது சர்வதேச விதிமுறைகளை மீறி ஆஸ்பத்திரிகள் மீதும் குண்டுகள் வீசப்பட்டுள்ளன. செஞ்சிலுவைச் சங்கத்தைத் தடுத்து நிறுத்தியுள்ளனர். முள்ளிவாய்க்கால் பகுதியில் நடந்த இறுதிப்போரில் விடுதலைப் புலிகளின் முக்கிய தலைவர்கள் கொடூரமாக கொலை செய்யப்பட்டுள்ளனர்.

பெண்களை பாலியல் பலாத்காரம் செய்துள்ளனர். ஐ.நா. சபையில் இலங்கைக்கு இந்தியா ஆதரவாக நடந்து கொண்டுள்ளது. சர்வதேச குற்றவாளியான ராஜபக்ஷ தண்டிக்கப்பட வேண்டும்.

இலங்கைக்கு இந்தியா உதவுவது தலைகுனிவாக உள்ளது. இலங்கையுடனான உறவை இந்தியா முறித்துக் கொள்ள வேண்டும். இல்லாவிடில் தமிழர் படுகொலையில் இலங்கைக்கு ஆதரவு என்ற நிலையாவது கைவிட வேண்டும். இல்லையென்றால் தமிழர் படுகொலைக்கு இந்தியா ஆதரவு என்ற நிலை ஏற்பட்டு விடும். சமீபத்தில் கிரிக்கெட் போட்டியில் இந்தியாவிடம் இலங்கை தோற்றது.

இதனால் மீன் பிடிக்கச் சென்ற தமிழக மீனவர்கள் 4 பேரை இலங்கை கடற்படையினர் பிடித்து கொன்று கடலில் வீசியுள்ளனர். பலியான மீனவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினேன்.

அப்போது அங்குள்ள பொதுமக்களும், மீனவர்களும் ம.தி.மு.க.வின் உண்மைநிலையைப் பாராட்டினார்கள்.

நான் தேர்தலில் ஏன் போட்டியிடவில்லை என்று யாரும் கேட்கவில்லை. இதன் மூலம் அரசியல் பொதுவாழ்க்கையில் எங்களுக்கே வெற்றி இவ்வாறு வைகோ கூறினார்.

2 ஆவது பிறந்தநாள் வாழ்த்துக்கள்

பண்டத்தரிப்பில் வசிக்கும்
சுரேன் – சுஜித்தா
தம்பதியரின் செல்வப்
புதல்வன்
சு. சர்மிலன்
தனது இரண்டாவது பிறந்த
தினத்தை இன்று (20.04.2011)
புதன்கிழமை தனது இல்லத்தில்
வெகு விமரிசையாகக்
கொண்டாடுகின்றார்.
இவரை அப்பா, அம்மா, அண்ணா,
அக்கா, அம்மம்மா, அப்பப்பா,
அப்பம்மா, மாமா, மாமி,
பெரியப்பா, பெரியம்மா, சித்தி,
சித்தப்பா அனைவரும் பல்லாண்டு
காலம் பல்கலையும் பெற்றுப்
பெருவாழ்வு வாழ
வாழ்த்துகின்றனர்.
மேலும் பிற்பகல் 3 மணிக்கு எமது
இல்லத்தில் நடைபெறும் பிறந்தநாள்
வைபவத்தில் அன்புள்ளங்கள்
அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு
அன்புடன் வேண்டுகின்றோம்.



மிலன் மோட்டோர்ஸ்,
பிரான்பற்று, பண்டத்தரிப்பு.

அன்புடன்,
அம்மா, அப்பா.

(3326-31-23-50)



ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 742 திகதி 18-04-2011

வெற்றி எண்கள்
15 29 33 56 V (ஆங்கில எழுத்து)

ஜக்பொட் பரிசு ரூ. 10,596,430/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | - | 10,596,430/= | - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 02 | 400,000/= | 800,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 11 | 2,000/= | 22,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 305 | 1,000/= | 305,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 484 | 1,000/= | 484,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 12115 | 60/= | 726,900/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 5700 | 40/= | 228,000/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 143013 | 20/= | 2,860,260/= |
| | | மொத்தம் ரூ. | 5,426,160/= |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 08 | 50,000/= | 400,000/= |

ரூபா.50,000 வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| மாத்தளை | 600982278-7-17 |
| மாத்தறை | 600980026-0-00 |
| பதுளை | 600984220-4-34 |
| கொழும்பு | 600985230-4-04 |
| மொனராகலை | 600980893-7-47 |
| மட்டக்களப்பு | 600987051-6-26 |
| திருகோணமலை | 600980821-7-47 |
| கம்பஹா | 600988685-1-31 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 5,826,160 /=

இந்த வியாழக்கிழமை சுப்பர் ஜக்பொட்
ரூ. 10,985,440 /=

செம்மஞ்சள் நிற டிக்கட்டுகள்
2011 ஏப்ரல் 21 ஆம் திகதி வியாழக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை,
யூனியன் பிளேஸ், கொழும்பு - 02.
தொ.பே: 2333546/7

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்

# கடலுக்குச் செல்லும் தமிழக மீனவரின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும்

## மத்திய, மாநில அரசுகளிடம் மார்க்சிஸ்ட் கட்சி கோரிக்கை

சென்னை, ஏப். 20

கடலில் மீன்பிடிக்கச் செல்லும் மீனவர்களுக்கு மத்திய, மாநில அரசுகள் உரிய பாதுகாப்பு வழங்க வேண்டும் - என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் ஜி.ராமகிருஷ்ணன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதுகுறித்து திங்கட்கிழமை அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கபட்டிருப்பவை வருமாறு -

கடலில் மீன்பிடிக்கச் செல்லும் மீனவர்கள் படுகொலை செய்யப்படுவதும், ஒவ்வொரு முறையும் பாதுகாப்பு வழங்குமாறு மத்திய அரசுக்கு கடிதம் எழுதிவிட்டு கடமை முடிந்துவிட்டதாக முதல்வர் கூறுவதும் தொடர்கதையாக உள்ளன.

ஏப்ரல் 2 ஆம் திகதி இராமேஸ்வரத்திலிருந்து மீன்பிடிக்கச் சென்ற விக்டர், மாரிமுத்து, அந்தோனிராஜ், ஜான்பால் ஆகியோர் கொல்லப்பட்டுள்ளனர்.

கடலில் மீன் பிடித்து அதில் கிடைக்கும் வருவாய் மூலமே வாழ்க்கையை நடத்த முடியும் என்ற நிலையில் கடலுக்குச் செல்லும் மீனவர்களுக்கு எவ்வித பாதுகாப்பும் இல்லாத நிலை தொடர்வது மீனவர்கள் மத்தியில் அச்சத்தையும், மக்கள் மத்தியில் ஆத்திரத்தையும் ஏற்படுத்தியுள்ளன.

எனவே, இந்தக் கொலைகள் குறித்து உரிய விசாரணை நடத்தி, உண்மையை மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டிய பொறுப்பு மத்திய அரசுக்கு உள்ளது.

கடலில் மீன் பிடிக்கச் செல்லும் மீனவர்களுக்கு உரிய பாதுகாப்பு வழங்குவதை உறுதிப்படுத்தும் வகையில் மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

- இப்படி அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நாகையில் பிடிபட்ட யாழ். மீனவர்கள்



நாகப்பட்டினம், ஏப்.20

நாகைகடற்பகுதியில் சிறைப்பிடிக்கப்பட்ட இலங்கை மீனவர்கள் நேற்றுமுன்தினம் சர்வதேச கடல் எல்லையில் இலங்கைக் கடற்படையிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இலங்கை, வல்வெட்டித்துறையைச் சேர்ந்த மீனவர்கள் கேசவரூபன் (வயது - 21), செந்தூரான் (வயது - 24), பத்மராஜா (22) ஆகிய மூவரும், ஏ.கே.71 என்ற பைபர் படகில் கடந்த மாதம் 22 ஆம் திகதி வேதாரண்யம் கடற்பகுதியில் மீன்பிடித்துக் கொண்டிருக்கும்போது இந்தியக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு வேதாரண்யம் கடலோரக் காவல் படையினரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

பிடிபட்ட மீனவர்கள், திருத்துறைப்பூண்டி கோர்ட்டில் ஆஜர்படுத்தப்பட்டு திருச்சி மத்திய சிறையில் அடைக்கப்பட்டனர். எல்லை தாண்டிய மீனவர்களை கடந்த.24 ஆம் திகதி நீதிமன்று விடுதலை செய்தது. வேதாரண்யம் கடலோரக் காவல் படையினர் வசம் இருந்த மீனவர்கள் மூன்று பேர் மற்றும் அவர்களது படகையும் நேற்றுமுன்தினம் காலை கடலோரக் காவல்படை பொலிஸார் மற்றும் அதிகாரிகள் குழுவினர், இந்தியக் கடற்படையினரிடம் ஒப்படைத்தனர்.

இந்தியக் கடற்படைக்குச் சொந்தமான, 'விக்ரம்-32' கப்பல் மூலம், சர்வதேச கடல் பகுதிக்கு அழைத்துச் செல்லப்பட்ட மீனவர்கள் மாலை 3.30 மணிக்கு இலங்கை கடற்படையினரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

## சந்திப்பு.....



முர்சிதாபாத்தில் சுகாதாரத்துறை அமைச்சர் குலாம்நபி ஆசாத் தேர்தல் பிரசாரத்தின்போது ஆதரவாளர்களை சந்தித்துப் பேசுகின்றார்.

# மும்பைக் கடலில் ஊடுருவ தீவிரவாதிகள் முயற்சி



மும்பைக் கடற் பகுதியில் ஆயுதங்கள் மற்றும் வெடிபொருள்களுடன் தீவிரவாதிகளின் கப்பல் ஒன்று ஊடுருவ முயற்சிப்பதாக உளவுத்துறைக்கு இரகசியத் தகவல் கிடைத்தது. இதையடுத்து மும்பைக் கடலோர காவல் படையினர் உஷார்படுத்தப்பட்டனர்.

தீவிரவாதிகள் ஊடுருவி பெரிய அளவில் தாக்குதல் நடத்திவிடக்கூடாது என்ற முன் எச்சரிக்கையுடன் நேற்று முன்தினம் மும்பைக் கடற் பகுதியில் தீவிர தேடுதல் வேட்டை நடத்தப்பட்டது.

மத்திய உளவுத்துறை, தீவிரவாத எதிர்ப்புப் படை, அதிரடிப்படை, கடலோரக் காவல் படை, கடற்படை, மும்பைப் பொலிஸார் ஒருங்கிணைந்து இந்த அதிரடி வேட்டையை நடத்தினார்கள்.

இதன்போது மும்பைக் கடல் பகுதியில் சந்தேகப்படும்படி சென்று கொண்டிருந்த டென்மார்க் கப்பல் ஒன்றைப் பார்த்தனர். அந்தக் கப்பலை பாதுகாப்புப் படையினர் மடக்கிப் பிடித்தனர். டெனீசியா சன்ரைஸ் என்ற பெயருடன் வந்திருந்த கப்பலில் 8 பேர் இருந்தனர். அவர்களிடம் விசாரணை நடத்திய போது, அவர்கள் தாங்கள் வியாபாரிகள் என்று தெரிவித்தனர்.

இதையடுத்து கப்பலில் சோதனை நடத்தப்பட்டது. ஆனால் கப்பலுக்குள் எந்தவித ஆயுதமும் இல்லை. எனினும் பாதுகாப்புப் படையினர் அவர்களை மும்பைத் துறைமுகத்துக்குக் கொண்டு வந்து மேலும் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

மும்பைக் கடற் பகுதியில் ஊடுருவ தீவிரவாதிகள் கப்பலில் வருவதாக உளவுத் துறையினர் கூறினாலும், அந்தக் கப்பல் கடலில் எந்தப் பகுதியில் வருகிறது என்ற தகவலை வெளியிடவில்லை.

இதனால் மும்பை கடல் பகுதியில் கடலோர காவல் படையினர் ரோந்துப் பணியைத் தீவிரப்படுத்தி உள்ளனர். மும்பைக் கடற் பகுதியில் கண்காணிப்பில் ஈடுபட கடற்படை சார்பில் அதிகளவான கப்பல்கள் அனுப்பப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (வ)

# இலங்கையில் இனப்படுகொலை பொருளாதாரத் தடை விதிக்குக!

## இந்திய அரசிடம் இந்து மக்கள் கட்சி கோரிக்கை

தமிழர்களை இனப்படுகொலை செய்துள்ள இலங்கை அரசு மீது இந்தியா பொருளாதாரத் தடை விதிக்க வேண்டும்.இவ்வாறு இந்து மக்கள் கட்சித் தலைவர் அர்ஜுன் சம்பத் கூறியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டவை வருமாறு:

சிங்களக் கடற்படையினரால் இந்தியக் குடிமக்களான தமிழக மீனவர்கள் 600 இற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளனர். தமிழர்களை படுகொலை செய்த இலங்கை அரசு போர்க் குற்றவாளி என ஐ.நா. மன்றம் குற்றம் சுமத்தி உள்ளதால் இலங்கையுடனான உறவை மத்திய அரசு துண்டித்துக் கொள்ள வேண்டும். இலங்கை அரசு தமிழர்களை இனப்படு கொலை செய்யும் உள்நோக்கத்துடன் போரை நடத்தியது.

மனித உரிமை மீறல் குற்றங்களைச் செய்துள்ளது. மனிதாபிமானமற்ற முறையில் சர்வதேச போர் சட்ட விதிகளை மீறி இரண்டு லட்சம் தமிழ் மக்களைப் படுகொலை செய்துள்ளது.

இந்தக் காரணங்களால் இலங்கை அரசு போர்க் குற்றவாளி என்று ஐ.நா. சபையில் அறிக்கை தெளிவுபடுத்தி உள்ளது.

போர்க் குற்றங்கள், சதிச் செயல்களில் ஈடுபட்ட இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷ, அவரது உறவினர்கள், இலங்கை இராணுவ அதிகாரிகள் ஆகியோர் மீது சர்வதேச நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்து உரிய தண்டனை பெற்றுத்தர முயற்சிகளை மனித உரிமை ஆர்வலர்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

அண்மையில் உலகக் கோப்பைக் கிரிக்கெட் போட்டியில் இந்தியா இலங்கையை வென்றதைத் தொடர்ந்து இலங்கைக் கடற்படையினர் தமிழக மீனவர்களைப் படுகொலை செய்துள்ளனர்.

இந்தியாவை எதிரி நாடாகக் கருதிச் செயற்படும் இலங்கை அரசுடனான தூதரக உறவை இந்தியா துண்டிக்க வேண்டும்.

ஐ.நா. அறிக்கையின் அடிப்படையில் இலங்கை மீது பொருளாதாரத் தடை விதிக்க வேண்டும்.

இந்த கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழகம் முழுவதும் மாவட்டம் தோறும் மத்திய அரசு அலுவலகம் முன்பு கோரிக்கை ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்று அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார். (வ)

# சோனியாவுக்கு எதிரான வழக்கு நிராகரிப்பு

காங்கிரஸ் தலைவி சோனியா காந்தியின் மதம் என்ன என்று தகவல் அறியும் சட்டத்தின் கீழ் தகவல் தர முடியாது என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

இது தொடர்பாகத் தாக்கல் செய்யப்பட்ட மனு நிராகரிப்பட்டுள்ளது. அரியாணா மாநிலப் பொலிஸ் டி.ஜி.பியாக இருந்தவர் பி.சி.வாத்வா. இவர் மக்கள் தொகைக் கணக்கெடுப்புத் துறையின் பதிவாளர் ஜெனரல் அலுவலகத்துக்குத் தகவல் அறியும் சட்டத்தின் கீழ் மனு ஒன்றை அனுப்பினார்.

அதில் மக்கள்தொகைக் கணக்கெடுப்பு ஆவணங்களில் இருந்து காங்கிரஸ் தலைவி சோனியா காந்தி மற்றும் அவரது மகள் பிரியங்கா, மகன் ராகுல் காந்தி ஆகியோரது மதம் என்ன என்ற விவரத்தைத் தெரிவிக்க வேண்டும் என்று கேட்டுள்ளார்.

இந்தத் தகவலைத் தெரிவிக்க அரசு மறுத்தது. இதனையடுத்து உச்ச நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்தார். அந்த மனுவை விசாரித்த நீதிபதிகள் ஆர்.வி. ரவீந்திரன், ஏ.கே.பட்நாயக் ஆகியோர் கொண்ட குழு நேற்று முன்தினம் தீர்ப்பளித்தது.

இதில் மதம் என்ன என்ற விவரத்தை வெளியிடுவது என்பது ஒருவரது தனிப்பட்ட சுதந்திரத்தில் தலையிடுவதாகும். எனவே சோனியா மற்றும் அவரது குடும்பத்தினர் என்ன மதத்தைப் பின்பற்றுகிறார்கள் என்ற விவரத்தைத் தர உத்தர விட முடியாது. இந்த மனுவை நிராகரிப்புச் செய்கிறோம் என்று கூறினார். (வ)

## தென்மராட்சி மேற்கு ப.நோ.கூ.சங்கம், கைதடி

### வருடாந்தப் பொதுக்கூட்டம் பிற்போடப்பட்டுள்ளது

எதிர்வரும் 23.04.2011ஆம் திகதி நடைபெற விருந்த வருடாந்தப் பொதுச்சபைக் கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளது.

இக்கூட்டம் எதிர்வரும் 15.05.2011ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப.9 மணிக்கு நடைபெறும் என்பதனை அறியத் தருகின்றோம். கூட்ட நிகழ்ச்சி நிரல் சகல பொதுச்சபை உறுப்பினர்களுக்கும் அனுப்பி வைக்கப்படும்.

தலைவர். (39-23-24) செயலாளர்.



තල් සංවර්ධන මණ්ඩලය
பனை அபிவிருத்திச் சபை
**Palmyrah Development Board**

## BID NOTICE

**Renovation of Palmyrah Research Institute Building for Palmyrah Development Board at Kaithady - Jaffna**

1. The Chairman of the Palmyrah Development Board now invites sealed bids from eligible and qualified bidders for "Renovation of Palmyrah Research Institute Building for Palmyrah Development Board, Jaffna" as described below and estimated to cost of Rs.13.26 million

   The construction period is 180 Days.

2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure.

3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall be registered in the field of building construction for grade M5/C6 or above with the Institute for Construction Training and Development (ICTAD)

4. Interested bidders may obtain further information from the Department of Building (Central), Beach Road, Jaffna or The Chairman, Palmyrah Development Board (Jaffna) and inspect the bidding documents at the same address on any working day from 8.30 hrs to 16.15 hrs. Contact numbers are Phone: 021 222 2034 Facsimile: 021 222 4154 & Building Department No: 021 222 2781.

5. A complete set of bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to The Chairman, Palmyrah Development Board, NHDA Building, Kandy Road, Jaffna from 27th April 2011 until 10th May 2011 from 8.30 hrs to 16.15 hrs upon payment of non refundable fee of Rupees One Thousand (Rs.1000/=).

6. Bids shall be delivered or send by registered post to The Chairman, Palmyrah Development Board, NHDA Building, Kandy Road, Jaffna before 10.00 hrs on 20th May 2011. Bids will be opened soon after closing at the office of The Chairman, Palmyrah Development Board, NHDA Building, Kandy Road, Jaffna in presence of bidders' representatives who choose the attend.

7. Bidders are advised to enter "NHDA Building, Kandy Road, Jaffna" Premises at least 1 hour before the scheduled time for tender closing, due to security checking.

8. All bids shall be accompanied by a Bid Security obtain for a reputed bank in Sri Lanka
   * In the form included in the Section 09 of the Bidding document.
   * In favour The Chairman, Palmyrah Development Board
   * For an amount of Rupees Two hundred and sixty five thousand (Rs.265,000.00)
   * Valid up to 7th August 2011

Pasupathy Seevarathnam,
Chairman.
Palmyarah Development Board. (C/577745)(31)


## சொற்பொழிவு

வடமராட்சி,ஏப்.20

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு 'தேவிபாகவதம்' என்னும் தலைப்பில் தொடர் சொற்பொழிவு இடம் பெறும்.

இச்சொற்பொழிவை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் அ.குமாரவேல் நிகழ்த்துவார்.

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை வாரந்தோறும் நடத்திவரும் ஆன்மீக நிகழ்வு வரிசையில் இச்சொற்பொழிவுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (த-236)

## அத்தியடி பிள்ளையாருக்கு இராஜகோபுரம்

கொழும்புத்துறை,ஏப்.20

யாழ். அத்தியடி ஸ்ரீ சிதம்பர நடராச வீரகத்திப் பிள்ளையார் கோயிலுக்கான இராஜகோபுரப் பணிகள் அமைப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

5 அடுக்குகளைக் கொண்ட இந்த இராஜகோபுரம் உள்ளூர், வெளிநாட்டு அன்பர்களின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அடுத்த வருடத் திருவிழாவுக்கு முன்னர் வேலைகள் பூர்த்தி செய்யப்படவுள்ளதாகவும் ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்தனர். (த-135)

## விளையாட்டு விழா

வலி.வடக்கு,ஏப்.20

திருநெல்வேலி சிறுவர் பூங்கா முன்பள்ளியும் குழந்தைகள் காப்பகமும் இணைந்து நடத்தும் விளையாட்டு விழா பணிப்பாளர் பி.தனபாலன் தலைமையில் முன்பள்ளி மைதானத்தில் எதிர்வரும் 23ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உடற்கல்விப் பணிப்பாளர் கே.கணேசநாதனும் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி ஜீ.கணேசநாதனும் கலந்து கொள்ளவுள்ளார்கள். (த-86)

## கோப்பாய் பிரதேச ஒருங்கிணைப்புக் கூட்டம்

யாழ்ப்பாணம்,ஏப்.20

கோப்பாய் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நாளை வியாழக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் தலைமையில் இடம்பெறவுள்ளதாக கோப்பாய் பிரதேச செயலர் ம.பிரதீபன் தெரிவித்துள்ளார். (த-15)

## விசேட கூட்டம்

யாழ்ப்பாணம்,ஏப்.20

கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைந்த மாதிரிப் பண்ணையாளர் சிக்கன கடன் கூட்டுறவுச் சங்கத்தின் விசேட பொதுக் கூட்டம் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு கிளிநொச்சி பிரதி விவசாயப் பணிப்பாளர் அலுவலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்துக்கு சகல அங்கத்தவர்களையும் தமது அங்கத்துவத்தை உறுதிப்படுத்தும் ஆவணங்களுடன் சமுகமளிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ற-450)


## வீடுவாடகைக்கு

யாழ்ப்பாணத்தில் சகல வசதிகளுடன் கூடிய வீடு ஒன்று சிறிய குடும்பம் ஒன்றுக்கு வாடகைக்கு வழங்கப்படும்.
தொடர்புகளுக்கு:
0212223440, 0778894383, 0774745642



## தவறிவிட்டது

C.C.T.M.S லேன், கொக்குவில் மேற்கைச் சேர்ந்த இந்திரராசு தர்ஷிகா என்பவரது தே.அ.அ.(926641441V) திருநெல்வேலி இலங்கை வங்கிக்கு முன்பாகத் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்குறிப் பிட்ட முகவரியில் ஒப்படைத்துதவவும் அல்லது 0778697 296 என்னும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.


## குருதிக்கொடை நிகழ்வு

மந்திகை,ஏப்.20

யாழ்ப்பாணம் ஆரியகுளத்தடியில் அமைந்துள்ள புதிய உயர் கல்லூரியில் எதிர்வரும் 23ஆம் திகதி சனிக்கிழமை குருதிக் கொடை வழங்கும் நிகழ்வு இடம்பெறவுள்ளது.

இக்குருதிக்கொடை வழங்கும் நிகழ்வில் மாணவர்களை இணைந்து கொள்ளுமாறு இந்த நிகழ்வின் ஒருங்கிணைப்பாளர் அறிவித்துள்ளார். (த-237)


## புத்தாண்டுச் சிறப்புச்சலுகை

**Computer Express**
Institute of Information Technology

எமது நிறுவனத்தில்...
எந்தவொரு கணனி கற்கை நெறிகளையும் கற்க விரும்பும் கணனி ஆர்வலர்களுக்கு பதிவுக்கட்டணமின்றி கற்பதற்கான ஓர் அரிய சந்தர்ப்பம்!!!

பாடநெறிக்கட்டணம் 1000/= மட்டுமே!!!

No.15 ,Sirampiyady lane, off Stanly Road, (Cosy Hotel 2nd floor) Jaffna.
0774907444, 021 222 8250, 0777222422

இச்சலுகை 30-04.2011 மட்டுமே பதிவுகளுக்கு முந்துங்கள்

Batch I - 20-04-2011- 9Am or 3Pm
Batch II - 22-04-2011 - 9Am or 3Pm
Batch III - 23-04-2011 - 11Am or 2Pm
Batch Iv - 24-04-2011 -11Am or 2Pm



## பொதுமக்களுக்கு ஓர் அறிவித்தல்

இதன் பின் காணப்படும் ஆதன இடாப்பில் நன்கு விவரிக்கப்பட்டிருக்கும் ஆதனம் யாழ்ப்பாணம் முஸ்லிம் வட்டாரத்தில் வசித்து தற்காலம் தெஹிவளை, கௌடாணை றோட், இல.37/1 என்னும் முகவரியில் வசிக்கும் (1) முகம்மது சுல்தான் ஹமீது அலி பெண் ஜெகனாறா, யாழ்ப்பாணம், ஐதுறூஸ் மக்காம் வீதி, இல.42 (2). V.M.M. அபுஸாலிஹ் ஹாஜியாரின் மனைவி மற்றும் பிள்ளைகள் (3). யாழ்ப்பாணம், முஸ்லிம் வட்டாரம், செய்யது அஹம்மது கரீம் கைம்பெண் மஹ்றூம் நாச்சியாவின் பிள்ளைகள் (4). கொழும்பு ஸ்ரேஸ் றோட் ஹமீதா உவைஸ் ஆகிய எங்களுக்கு மட்டுமே கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தத்துவ வழக்கு இலக்கம்-23283/T இல் ஏற்படுத்தப்பட்ட இணக்கப்பாட்டின் பிரகாரம் நிறைவேற்றப்பட்ட கொழும்புப் பிரசித்த நொத்தாரிஸ் M.தசூக்கி முகம்மது அவர்கள் முன்பாக முடிந்த 2322ஆம் இலக்கச் சாதனத்தின்படி சொந்தமும் உரிமையுமாக இருக்கிறபடியாலும் குறித்த சாதனத்தில் சொல்லப்பட்டவர்களைத் தவிர வேறு எவருக்கும் அவ்வாதனத்தில் எதுவித நயம் உரித்துச் சோந்தையும் கிடையாதென்றும் குறித்த ஆதனத்தை அல்லது அதன் எப்பாகத்தை எவரும் அறுதிவாங்கவோ ஈடு ஒற்றி குத்தகை போன்ற எச்சாதனத்தாலும் பாரம் பராதீனம் செய்யவோ கையகப்படுத்தவோ அவ்வாறு முயற்சி மேற்கொள்ளவோ வேண்டாமென இத்தால் எச்சரிக்கை செய்யப்படுகிறார்கள். மீறுவோர் மீது தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதையும் அறிந்து கொள்ளவும்.

### மேற்சொல்லப்பட்ட ஆதன இடாப்பு

யாழ்ப்பாணம் மாவட்டம், தீவுப்பகுதி, அல்லைப்பிட்டிக் கோவிற்பற்று, அல்லைப்பிட்டி இறை 'தேவகாடும் ஊரிப் புலமும் ஊரிப்பிட்டியும்' என்னும் பெயர் கொண்டவாதனம். இதன் விசாலம் 24 ஏக்கர், 3றூட், 10பேச் (ஏ24 றூ3-பே.10) இதற்கெல்லை கிழக்கு ஒழுங்கை, வடக்கு யாழ்ப்பாணம் ஊர்காவற்றுறை றோட்டு, மேற்கு அல்லைப்பிட்டி றோட்டு, தெற்கு அரசாங்கத்துக்குரிய காணி. இதடங்கலும் இதைச் சேர்ந்தவைகளும். இது யாழ்ப்பாணம் காணிக்கந்தோரில் C285/189இல் பதியப்பட்டுள்ளது.

2011ஆம் ஆண்டு மார்ச் மாதம் 28ஆம் திகதி.

V.M.M.அபுஸாலிஹ் ஜகுபாறுஸ் ஸக்காப்.
மேற்படி ஆதனத்தின் கூட்டுடைமையாளர்.

(சி/577741) (38)


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும்



திருமதி
**வேலுப்பிள்ளை செல்லம்மா** (சரஸ்வதி)

தோற்றம்:
22 ★ 02 ★ 1924

மறைவு:
21 ★ 03 ★ 2011

கடந்த 21.03.2011 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவியின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (20.04.2011) புதன்கிழமை காரைநகர் புனித தீர்த்தக்கரையில் இடம்பெறும். அதைத் தொடர்ந்து ந.ப. 12 மணிக்கு எமது இல்லத்தில் மதிய போசனமும் நடைபெறும். இந்த நிகழ்வுகளில் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்.

நி.மு. பூதனடைப்பு, காரைநகர்.
த.மு. 'சிவமஹால்' வட்டு கிழக்கு, வட்டுக் கோட்டை.

# யாழ். வலய மட்ட வலைபந்தாட்டம்; கொக்குவில் இந்து கிண்ணம் சுவீகரித்தது

யாழ். வலய மட்ட பாடசாலைகளுக்கு இடையிலான 17 வயதுப் பிரிவுப் பெண்களுக்கான வலைபந்தாட்டப் போட்டியின் இறுதியாட்டத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரி சம்பியன் ஆனது. கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்துப் புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரி மோதியது.

கொக்குவில் இந்துக் கல்லூரி அணி, தன்னை எதிர்த்து விளையாடிய புத்தூர் சோமஸ்கந்தக் கல்லூரி அணியை 18:07 என்ற புள்ளிஅடிப்படையில் வெற்றிகொண்டது.

மூன்றாம் இடத்திற்கான ஆட்டத்தில் யாழ். இந்து மகளிர் கல்லூரி அணியை எதிர்த்து வேம்படி உயர்தர மகளிர் கல்லூரி அணி மோதியது.

யாழ். இந்து மகளிர் கல்லூரி அணியினர் எதிர்த்து விளையாடிய வேம்படி உயர் தர மகளிர் கல்லூரி அணியை 20: 19 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி கொண்டு மூன்றாமிடத்தைத் தனதாக்கிக் கொண்டது. (ஐ-23)

# மென்பந்து சுற்றுப் போட்டி கப்பினஸ் சம்பியனானது



யாழ்ப்பாணம், ஏப். 20

பாஷையூர் வசீகரா விளையாட்டுக் கழகம் நடத்திய உள்ளூர் அணிகளுக்கு இடையே 6 பேர் பங்குபற்றும் 5 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட மென்பந்துச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டத்தில் பாஷையூர் கப்பினஸ் அணியினர் வெற்றி பெற்றனர்.

இந்த மென்பந்துச் சுற்றுப்போட்டி நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை பாஷையூர் புனித அந்தோனியார் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்றது. இதில் பாஷையூர் கப்பினஸ் அணியை எதிர்த்து பாஷையூர் கோல்டன்ஸ்ரார் அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய கப்பினஸ் அணியினர் 5 பந்துப் பரிமாற்றம் நிறைவில் நான்கு இலக்கைஇழந்து 79 ஓட்டங்களைப் பெற்றனர்.

திலீபன் ஆட்டம் இழக்காமல் 25 ஓட்டங்களையும் டெனோஷன் 19 ஓட்டங்களையும் கலிஸ்ரர் 9 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

கோல்டன் ஸ்ரார் அணி வீரர்களான விஜித் 20 ஓட்டங்களுக்கு ஓர் இலக்கினையும், சுரேன் 5 ஓட்டங்களுக்கு ஓர் இலக்கினையும், ரமணன் ஒன்பது ஓட்டங்களுள் ஓர் இலக்கினையும் கைப்பற்றினர்.

80 ஓட்டங்களை பெற்றால் வெற்றியென பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கோல்டன்ஸ்ரார் அணி யினர் 5 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் எதுவித இலக்கையும் இழக்காமல் 71 ஓட்டங்களை மட்டுமே பெற்றனர்.

அஜந்தன் ஆட்டம் இழக்காமல் 32 ஓட்டங்களையும், சுரேன் ஆட்டம் இழக்காமல் 33 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றுக் கொடுத்தனர்.

சிறந்த தொடர் ஆட்ட நாயகன், அதிகூடிய ஆறு ஓட்டங்களைப் பெற்ற வீரருக்குரிய விருது ஆகியவற்றை கோல்டன்ஸ்ரார் அணிவீரன் சுரேன் பெற்றுக் கொண்டார். ஆட்ட நாயகனாக கப்பினஸ் அணி வீரன் திலீபன் தெரிவு செய்யப்பட்டார். (ஐ-23)

# யாழ். பல்கலை. விளையாட்டுப் பிரிவில் இன்று முதல் இருநாள் பயிற்சி முகாம்

## தமிழகப் பேராசிரியர்கள் பங்கேற்பு

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக விளையாட்டு விஞ்ஞான அலகின் ஏற்பாட்டிலான ''சுகாதாரமான வாழ்விற்கு உடல் ஆரோக்கியம்'' சம்பந்தமான இரண்டு நாள் பயிற்சி நெறி இன்று காலை 9 மணி முதல் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக கைலாசபதி கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக விளையாட்டு விஞ்ஞான அலகின் இணைப்பாளர் பேராசிரியர் எம். நடராஜசுந்தரம் தலைமையில் இடம்பெறும் பயிற்சிக் கருத்தரங்கில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியை வசந்தி அரசரெட்ணமும், சிறப்பு விருந்தினர்களாக யாழ். பல்கலைக் கழக கணித புள்ளி விவரத் திணைக்களத் தலைவர் கலாநிதி எஸ். ஸ்ரீசற்குணராசா, வர்த்தக வங்கியின் வடபிராந்திய முகாமையாளர் எஸ். பி. ரஜீவன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்தப் பயிற்சிக் கருத்தரங்கை இந்தியாவில் இருந்து வருகை தந்துள்ள அண்ணாமலைப் பல்கலைக்கழக உடற்கல்வி விளையாட்டு விஞ்ஞான அலகின் பேராசிரியர் வி. கோபிநாத், கலாநிதி எம். இளையராஜா ஆகியோர் நடத்தவுள்ளனர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விளையாட்டு விஞ்ஞான அலகு மாணவர்கள், யாழ். மாவட்ட விளையாட்டு அலுவலர்கள், பயிற்றுநர்கள் உட்பட ஏனைய விளையாட்டுத்துறை சார்ந்தவர்களும் கலந்து கொள்ளவுள்ளார்கள். (ஐ-86)

# கிறிஸ்தவக் கல்லூரி சம்பியன்

யாழ்ப்பாணம், ஏப்.20

யாழ்.வலய மட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான 19 வயதுப் பிரிவுப் பெண்களுக்கான வலைபந்தாட்டப் போட்டியின் இறுதியாட்டத்தில் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி அணி சம்பியனானது.

கடந்த வாரம் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற வலைபந்தாட்ட இறுதியாட்டத்தில் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி அணியை எதிர்த்து யாழ்.இந்து மகளிர் கல்லூரி அணி மோதிக் கொண்டது.

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி அணி தன்னை எதிர்த்து விளையாடிய யாழ். இந்து மகளிர் கல்லூரி அணியை 20:16 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி கொண்டு வலயமட்ட சம்பியனாகியது. (ஐ-23)

## மரண அறிவித்தல்

### இராமநாதன் சிவசோதி [பொன்னன்]



குப்பிளானைப் பிறப்பிடமாகவும் சுவிஸ் பேர்னை வசிப்பிடமாகவும் கொண்ட இராமநாதன் சிவசோதி அவர்கள் 17.04.2011 ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார், இராமநாதன் வாலாம்பிகை தம்பதியரின் அன்பு மகனும் கதிரேசப்பிள்ளை-தங்கரத்தினம் (ஆசிரியர் - ஏழாலை) தம்பதியரின் அன்பு மருமகனும், சாந்தகுமாரியின் அன்புக் கணவரும் லவேனன், லகினா ஆகியோரின் அன்புத் தந்தையும், பரம்சோதி (இலங்கை), சாந்தா (இலங்கை), விஜயா (கனடா), மோகன் (சுவிஸ்), சுமதி (கனடா), ரஜனி (சுவிஸ்), கலைச்செல்வி (சுவிஸ்),சச்சிதானந்தம் (லண்டன்), மீனலோஜினி (சுவிஸ்), ஆகியோரின் அன்புச் சகோதரரும் விஜயகுமாரி (இலங்கை),வசந்தகுமாரி (கனடா), நாகேஸ்வரி (இலங்கை), ஞானம் (இலங்கை), பாலச்சந்திரன் (கனடா), ரதி(சுவிஸ்), காலஞ்சென்ற பஞ்சலிங்கம், கணேஸ்(சுவிஸ்), கண்ணன் (சுவிஸ்), வசந்தி (லண்டன்), கதிர்காலலிங்கம் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்ற செல்வநாயகம், சண்முகம், பத்மநாதன் ஆகியோரின் அன்புப் பெறாமகனும், காலஞ்சென்றவர்களான கண்மணி, திருபுரைநாதன் மற்றும் வைத்திநாதன் (பேர்லின்), சின்னம்மா (இலங்கை) ஆகியோரின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று (20.04.2011) புதன்கிழமை சுவிஸ் பேர்னில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தொடர்புகளுக்கு:-
சாந்தி-சுவிற்ஸர்லாந்து - +41319718464
மோகன்-சுவிற்ஸர்லாந்து- +41794226066
சச்சி - சுவிற்ஸர்லாந்து - +41767637550
கண்ணன் - சுவிற்ஸர்லாந்து - +41767252537
நாதன் - ஜேர்மனி - +493060250777
கண்ணன் - சுவிற்ஸர்லாந்து - +4176561760
கணேஷ்- சுவிற்ஸர்லாந்து - +41783036707
விஜயபாலச்சந்திரன் - கனடா

தகவல்:-
மனைவி, பிள்ளைகள்,
சகோதரங்கள்,
கதிரேசுபிள்ளை தங்கரத்தினம்
(தாய், ஓய்வுபெற்ற ஆசிரியர்,
மயிலங்காடு, ஏழாலை)

(3325)(41,23,50)

## கணக்கியல் சேவைகள்

வியாபார நிறுவன உரிமையாளர்களே! உங்களுடைய பொறுப்புக்கள் சிலவற்றுக்கு நாம் உதவுகின்றோம்.

* மாதாந்த/ வருடாந்த இலாப நட்டக் கணக்குத் தயாரித்தல்.
* வங்கிக் கடன் சம்பந்தமான திட்ட அறிக்கைகள் தயாரித்தல்.
* ஊழியர் சேமலாபநிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதி சம்பந்தமான விடயங்கள்.
* இறக்குமதி சம்பந்தமான விடயங்கள்.
* புதிய வியாபாரங்கள் தொடங்குவது சம்பந்தமான ஆலோசனைகள்.

30 வருடத்துக்கு மேற்பட்ட கணக்காளரின் சேவைக்கு எம்மை அழையுங்கள்.

0773144861 அல்லது 021 225 5137 (41)

## தேவை

தங்கியிருந்து வேலை செய்ய ஆள் தேவை.
21.04.2011 அன்று 11AM - 3PM நேரில் வரவும்.
கிறீன் இன் ரெஸ்ரோறன்ற், கண்டி வீதி, கண்டிக்குளி,
யாழ்ப்பாணம். 021 222 3898, 0772 719039 (41)

## விற்பனைக்கு

பண்டத்தரிப்பு, சித்தன்கேணி பிரதான வீதியில் இந்துக் கல்லூரிக்கு அருகில் வீடும் காணியும் விற்பனைக்கு உண்டு.

T.P. 0776312118
M.SARAVANAMUTHU

(41)

## அறைகள் (ROOMS) வாடகைக்கு

யாழ்ப்பாணம், மானிப்பாய் வீதி, முஸ்லிம் பள்ளிக்கு முன் அறைகள் ஆண்களுக்கு மாத்திரம் மாதாந்த அடிப்படையில் வாடகைக்கு உண்டு.

தொடர்பு:- 0773087110 (41)

## காணி விற்பனைக்கு

கொக்குவில் மேற்கு, சேச் லேன், முதலி கோயிலடியில் ஒரு பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (கே.கே.எஸ். வீதியில் இருந்து 200 மீற்றர் தூரம்)

தொடர்பு:- 0774536301 (41)

## தவறிவிட்டது

16/1, கண்ணகிபுரம் உவர்மலை திருகோணமலையைச் சேர்ந்த வைரவநாதன் முருகானந்தம் என்பவரது தே.அ.அ (790160827) மற்றும் சாரதி அனுமதிப்பத்திரம் A005313152 என்பன ஓமந்தைக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 0776153204 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். (41)

## தொழிலாளர் தேவை

எமது மன்றத்தில் அங்கத்துவம் வகிக்கின்ற தொழிற்சாலைகளில் வேலை செய்வதற்கு தொழிலாளர்கள் (ஆண்கள்) தேவை. தொழில் பயிலுநர்களாகவும் இணைத்துக்கொள்ளப்படுவர்.

ஆர்வமுள்ளோர் விண்ணப்பங்களை எதிர்வரும் 05.05.2011 ஆம் திகதிக்கு முன்னர் எமது அலுவலகத்துக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கவும்.

தலைவர்,
யாழ்ப்பாணம் வர்த்தக தொழிற்றுறை மன்றம்,
175, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம். (41)

## முல்லைத்தீவு மாவட்ட வறிய பல்கலைக்கழக மாணவர்களுக்கான நிதி உதவிக் கொடுப்பனவு

மேற்படி முல்லைத்தீவு மாவட்டத்தில் மீளச் செயற்படுத்தப்பட்டுள்ள கல்வி மேம்பாட்டுத் நிதியத்தினால் முல்லைத்தீவு மாவட்ட வறிய பல்கலைக்கழக மாணவர்களுக்கான நிதி உதவிக் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

எனவே சம்பந்தப்பட்ட மாணவர்கள் முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் உரிய விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுப் பூர்த்தி செய்து எதிர்வரும் 30.04.2011ஆம் திகதிக்கு முன்னர் இந்தச் செயலகத்தில் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

அ.பத்திநாதன்,
அரச அதிபர்/ தலைவர்,
முல்லைத்தீவு மாவட்ட கல்வி மேம்பாட்டு நிதியம்,
முல்லைத்தீவு மாவட்டம். (41)

## மரண அறிவித்தல்

### தர்மலிங்கம் பரமேஸ்வரன் (ஈசன்)



புங்குடுதீவு, 4ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் முதலாம் வட்டாரம், முள்ளிய வளையை வதிவிடமாகவும் தற்போது புங்குடுதீவில் வசித்தவருமான தர்மலிங்கம் பரமேஸ்வரன் கடந்த (18.04.2011) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தர்மலிங்கம் மற்றும் மகாதேவி தம்பதியரின் கனிஷ்ட புத்திரனும், யோகேஸ்வரன், ராசேஸ்வரன், காலஞ்சென்ற புவனேஸ்வரன் மற்றும் தினேஸ்வரன், ஜெயந்தன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.04.2011) புதன்கிழமை பி.ப. 2 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கேரதீவு இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

4ஆம் வட்டாரம்,
நுனுக்கல், புங்குடுதீவு. (3344)

தகவல்:
குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி



யா/ மெலிஞ்சிமுனை றோ.க.த.க வித்தியாலய ஆசிரியை செல்வி எலிசபேத் மரலின் தியாகராஜா அவர்களின் அன்புத் தாய்

**அல்போன்ஸ் விக்டோரியா தியாகராஜா**

அவர்கள் இறைபதமடைந்த செய்தி கேட்டு ஆறாத்துயர் அடைவதுடன் அன்னாரது பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ்.மெலிஞ்சிமுனை
றோ.க.த.க. வி. ஊர்காவற்றுறை. (3342)

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பாடசாலைச் சமூகம்.

## கண்ணீர் அஞ்சலி



### அமரர் எந்திரிக் றோசலின்

(சுன்னாகம் கிழக்கு, சுன்னாகம்)

வட இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர் சங்கங்களின் ஒன்றியத்தின் தலைவரான பொன்னுத்துரை கெங்காதரன் அவர்களின் அன்புச் சகோதரி எந்திரிக் றோசலின் அவர்கள் 17.04.2011 ஆம் திகதி மரணமடைந்துள்ளார்.

அன்னாரின் துயரத்தில் நாமும் கலந்துகொள்வதுடன் அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் உற்றார், உறவினர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தினைத் தெரிவிப்பதோடு, அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

மன்னார் மாவட்ட
தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம்,
மன்னார் மாவட்டம். (3338)

## அங்கத்தவர் சேர்த்துக் கொள்ளல்

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களை நிரந்தர வதிவிடமாகக் கொண்ட சகல பாரவூர்தி உரிமையாளர்களும் வடபிராந்திய பாரவூர்தி கூட்டுறவுச் சங்கத்தின் அங்கத்துவம் பெற்றே சேவையில் ஈடுபட வேண்டும். இதனை மீறுவோர் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இவ்வகையில் இதுவரை அங்கத்துவம் பெறாத அனைவரும் பின்வரும் ஆவணங்களைச் சமர்ப்பித்து 30.04.2011 இற்குள் தமது அங்கத்துவத்தை உறுதிசெய்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

01.மீள்குடியமர்வு பதிவு அட்டை
02.பாரவூர்தி ஆவணங்கள்
03.உரிமையாளரின் தேசிய அடையாள அட்டை
04.அங்கத்துவப் பணம்

இயக்குநர் சபைத் தீர்மானப்படி
அ. கேதீஸ்வரன். தலைவர்.
பாரவூர்திச்சங்கம். (c/577744)

## புதிய கல்வி அதிகாரி நியமனம்

வடமராட்சி, ஏப்.20

கரவெட்டி கோட்டக்கல்வி அலுவலகத்தின் புதிய கல்வி அதிகாரியாக வல்வெட்டித்துறை சிதம்பராக்கல்லூரி அதிபராகக் கடமையாற்றிய சி. நற்குணலிங்கம் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் நேற்றுப் பிற்பகல் தனது கடமையை பொறுப்பேற்றுக்கொண்டார்.

கோட்டக்கல்வி அதிகாரியாக முன்னர் கடமையாற்றிய எஸ். தபேந்திரராஜா ஓய்வு பெற்றதையடுத்து நற்குணலிங்கம் புதிய கோட்டக்கல்வி அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார். (த-236)

## தென்மராட்சியில் எல்லே போட்டி

தென்மராட்சி, ஏப்.20

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் 19 வயது ஆண், பெண் எல்லே அணிகளுக்கு இடையிலான சுற்றுப்போட்டிகள் இன்றும் நாளையும் நடைபெறும்.

சந்திரபுர ஸ்கந்தவரோதய மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெறும்.

ஆண் பிரிவுகளுக்கான போட்டிகள் இன்று புதன்கிழமையும் பெண்களுக்கான போட்டிகள் நாளை வியாழக்கிழமையும் நடைபெறும். (ஐ-207)

## அடிப்படையிலிருந்து ஆங்கிலம்

மிக விரைவாக கே.யூ வின் தனிப்பட்ட கல்வி முறைமூலம் உங்களைஆங்கிலம் அறிந்தவர்களாக்குகிறோம்.விபரங்கள் நேரில்.

Ku's Spoken English© (No Grammar) ESOL 1 ESOL 3 ESOL 2 G.C.E O/L

இலக்கண வேதனையற்ற மிகவும் இலகுவான, வீடியோ,ஓடியோ முறை மூலம் ,தனிப்பட்ட முறையில் கல்வி.-UK Visa English Specialists

UK Settlement Visa English

சர்வதேச ஆங்கில பரீட்சைகளில் பரீட்சகராக பணியாற்றிய வெளிநாட்டிலிருந்து வருகை தந்துள்ள விரிவுரையாளர் மூலம் வகுப்புக்கள்.

விபரங்களுக்கு: 077-6458253

City Guilds
நொலிட்ஜ் யூனிவேர்ஸ்
இல 75.கோவில் வீதி,யாழ்ப்பாணம்.
(லாவா வைத்தியசாலை மேல்மாடி)



அதிநவீன மல்ரி மீடியா வகுப்பறைகள் குழுவாக அல்லது தனியாக கற்கும் வசதி

## வியாபாரமொன்றிற்காக முதலீடு செய்யமுடியுமா?

எமது நிறுவனம் குடிநீர், பழவகை பானங்கள் மற்றும் நுகர்வோர் பொருட்களை உற்பத்தி செய்யும் முதல் தரமான நிறுவனமாகும்.

எமது வியாபாரத்தின் உற்பத்தித் தேவைகள் மற்றும் வியாபாரச் சந்தையின் கோரிக்கைகளின் பேரில் பிளாஸ்டிக் போத்தல் உற்பத்தியை ஆரம்பம் செய்வதற்கான பின்னணிகள் சகலதையும் செய்துள்ளோம்.

அதற்காக நிதி ரீதியான பங்களிப்போ, நிதி ரீதியான பெருமதிகளையுடைய காணியொன்றைப் பெற்றுத் தரமுடியுமானால், உங்களுக்கு அந்த வியாபாரத்தில் முதலீட்டாளராகவோ அல்லது பங்குதாரராகவோ ஆக முடியும். மிகவும் குறுகிய காலத்திற்குள் அதன் பிரதிபலன்களைப் பெற்றுக் கொள்ளமுடியும்.

விசாரணைக்கு
Mr.Prince - 0776-424393
General Manager - 0778-092044

## வீடு விற்பனைக்கு

K.K.S றோட், கொக்குவில் இந்துக் கல்லூரிக்கும் தாலடிச் சந்திக்கும் இடைப்பட்ட பகுதியில் பிரதான வீதியில் 2¼ பரப்பில் அமைந்த ஐந்து அறைகள், குசினி, ஹோல், தனியான கிணற்றுடன் அமைந்த கல்வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: தொ.பே:-0778449687.

## விற்பனைக்கு

மிக நல்ல நிலையில் உள்ள Sony Candy Cam டிஜிற்றல் வீடியோ கமெரா போட்டோ எடுக்கும் வசதி, Memory Card உடன் விற்பனைக்குண்டு. வீடியோக்கடை, செய்தியாளர்கள், நாடக ஆற்றுகைக் கலைஞர்களுக்கு மிகவும் உகந்தது. தொடர்பு:- 0776120597.

## உடனடி வேலை வாய்ப்பு

யாழ்ப்பாணத்தில் இயங்கிக் கொண்டிருக்கும் D.M.I. Multi National Company க்கு முகாமைத்துவ பயிற்சிக்காக பின் வருவோர் தேவை -
Supervisor, Asst.manager, Manager
(12 பேர் மட்டும்)
6 மாத காலப் பயிற்சியும் இதன் போது 15,000/- 25,000/- வரை பெற முடியும். O/L, A/L தகைமையுடையோர் விண்ணப்பிக்கலாம். தங்குமிட வசதி இல்லை.
மேலதிக விவரங்களுக்கு: 0775566224, 0776219536.

## பிறந்தநாள் வாழ்த்து



இன்று (20.04.2011) புதன்கிழமை தனது 29 ஆவது அகவையை தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடும் எமது ஆருயிர் நண்பனான

**ஆஞ்சலோ தோமஸ்மூர்**

செல்வங்கள்பலவும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்: நண்பர்கள்,
ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ். (c/577746)

## உவகையுடன் வாழ்த்துகின்றோம்



உயர்கல்விப் பீடமாம் யாழ். பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக 01.04.2011 இல் பதவியேற்று மகளிருக்கே மாண்பு சேர்த்த மாதரசி முதுநிலைப் பேராசிரியர்

**வசந்தி அரசரட்ணம்**

அவர்கள் உயர்வானசேவையை உன்னதமாய் ஆற்றிடவே உளம் மகிழ்ந்து உவகையுடன் வாழ்த்துகின்றோம்.

சாவகச்சேரி. (1658)

சாவகச்சேரி நகர்,
மாதர் கிராம
அபிவிருத்திச் சங்கம்.

## யாழ். கிறீன் கிங்ஸ் சனசமூக நிலையம்

கிறீன் கிங்ஸ் விளையாட்டுக் கழகத்தின் 46ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு நடத்தும் மாபெரும் சைக்கிள் ஓட்டப்போட்டி

இடம்:- மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணம்.
காலம்:- 25.04.2011 திங்கட்கிழமை.
நேரம்:- காலை 6.00AM.

ஆரம்பிக்கப்படும் இடம்: - பிரதான வீதி, பஸ்ரியன் சந்தி, யாழ்ப்பாணம்.
(சென். சாள்ஸ் மகா வித்தியாலயத்தின் அருகில்.)

தொடர்பு கொள்ள வேண்டிய இலக்கம்:-
1) 0770789693, 2) 0776139784, 3) 0773282786. (3340)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி இரத்தினம் கோகிலாம்பிகை



கோயில் குடியிருப்பு, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இரத்தினம் கோகிலாம்பிகை நேற்று (19.04.2011) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

3ஆம் ஒழுங்கை, கச்சாய் வீதி,
கோயில் குடியிருப்பு, சாவகச்சேரி.

தகவல்:
குடும்பத்தினர். (இ/577448)

### கந்தையா பாலசிங்கம்



(ஓய்வு பெற்ற பாதுகாப்பு உத்தியோகத்தர், இலங்கை மின்சாரசபை, கன்னாகம்.)

சாவகச்சேரி, நுணாவிலைப் பிறப்பிடமாகவும், குப்பிளான் வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா பாலசிங்கம் கடந்த (17.04.2011) ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-அன்னம்மா தம்பதியரின் மூத்த புதல்வனும், ஞானம்மாவின் அன்புக் கணவரும், சிவபாக்கியம், குணசிங்கம், காலஞ்சென்ற சின்னத்தம்பி மற்றும் புஸ்பரத்தினம், காலஞ்சென்ற சீவரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான தம்பிநாதர்- தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், சிவஞானவதி (லண்டன்), சிவஞானரதி (சுவிஸ்) காலஞ்சென்ற சிவஞானேஸ்வரி மற்றும் சிவஞானசோதி (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், பாக்கியநாதன் தனசிங்கம், சந்திரகுமார் ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களான சிவக்கொழுந்து, கந்தசாமி, நேசம்மா மற்றும் தவமணி, சிவலிங்கம் (சுவிஸ்) சிவசுப்பிரமணியம் (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனரும் சங்கீதா, சத்தியா, சரூபன், சருகா, ஜோதிகா, ஜனனி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(20.04.2011) புதன்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக குப்பிளான் காடாகரம்பை இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

முத்தர் வளவு,
குப்பிளான் வடக்கு,
குப்பிளான். (3343)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்.

# இலங்கை மீதான....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மருத்துவமனைகளையும் இலக்குவைத்துத் தாக்குதல் நடத்தின என்பது நம்பகத்தன்மை மிக்க குற்றச்சாட்டுக்கள் தான் என ஐ.நா. நிபுணர் குழு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தக் குற்றச்சாட்டுக்கள் உண்மையென உறுதிப்படுத்தப்படுமெனில் அவை போர்க் குற்றம் மற்றும் மனித குலத்திற்கு எதிரான குற்றங்களாகவே இருக்கும் என்பதையும் நிபுணர் குழு சுட்டிக்காட்டியுள்ளது.

2009ஆம் ஆண்டு விடுதலைப் புலிகளுக்கு எதிரான வலிந்த தாக்குதல்கள் இடம்பெற்ற வேளையில் ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான பேச்சாளராக இருந்த கோல்டன் வைஸ், குறிப்பிட்ட இந்தச் சம்பவங்களை 1995ஆம் ஆண்டு பொஸ்னியாவில் நிகழ்ந்த புகழ்பெற்ற சேர்பேனிக்கா படுகொலையுடன் ஒப்பிட்டார்.

''இதுதான் இலங்கையின் சேர்பேனிக்கா'' என கோல்டன் வைஸ் சனல் 4 தொலைக்காட்சிக்குத் தெரிவித்தார்.

போரின் போது பொதுமக்களைப் பாதுகாப்பதற்கு ஐக்கிய நாடுகள் சபை தவறிவிட்டது என்றும் நிபுணர் குழு தனதறிக்கையில் கூறியிருக்கிறது.

போரின் இறுதி நாள்களில் ஐ.நாவினால் சேகரிக்கப்பட்ட பொதுமக்கள் இழப்பு விவரங்கள் மக்களுக்குத் தெரியப்படுத்தப்பட்டிருக்க வேண்டும் என்றும் அந்த அறிக்கை கூறுகிறது. அவ்வாறு இழப்பு விவரங்களை ஐ.நா. வெளியிட்டிருந்தால் பொதுமக்கள் உயிர்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற வாதம் வலுப்பெற்றிருக்கும் என்று குழுவின் அறிக்கை தொடர்ந்து குறிப்பிடுகிறது.

ஆனால் போரின் இறுதி நாள்களில் தங்களது மனிதாபிமான நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாத நிலையில் அங்கிருந்த ஐ.நா. பணியாளர்கள் இருந்தார்கள் எனவும் தொண்டு நிறுவனங்களும் ஐ.நா அமைப்புக்களும் போர் இடம்பெற்ற பகுதிகளுக்குச் செல்வதற்கு இலங்கை அரசு அனுமதிக்கவில்லை என்றும் கோல்டன் வைஸ் 'சனல்-4' தொலைக்காட்சிக்குத் தெரிவித்தார்.

இலங்கையில் அப்போதிருந்த ஐ.நாவின் கட்டமைப்பில் தானும் ஓர் அங்கமாக இருந்தார் என்ற வகையில், தற்போது அந்தக் கட்டமைப்புக்கு எதிராக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்களில் தனக்கான பங்கினைத் தான் ஏற்றுக்கொள்கிறார் என்றும் கோல்டன் வைஸ் கூறுகிறார்.

இடம்பெற்றுவிட்ட இந்தக் குற்றங்களுக்கு ''இலங்கை அரசின் மூத்த தலைவர்களே முழுப்பொறுப்பு'' எனவும் அவர் தொடர்ந்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க் குற்றங்கள் தொடர்பில் ஒரு தீர்ப்பாயம் ஒன்று அமைக்கப்படும் எனக் கருதுகிறேன். இலங்கையில் நடந்தது என்ன என்பதை வல்லரசு நாடுகள் அனைத்தும் புறந்தள்ளிவிடமுடியாத தொரு நிலைமை ஏற்பட்டிருப்பதாகவே நான் கருதுகிறேன்.

போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பான தனது அழுக்குகளை இலங்கை அரசு இதுவரை நன்கு மூடி மறைத்திருக்கலாம். ஆனால் நிபுணர்கள் குழுவின் அறிக்கையானது நிலைமையினைத் தலைகீழாக மாற்றியிருக்கிறது. குழுவின் பரிந்துரைகளுக்கு அமைய விரைவில் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும் என நான் நம்புகிறேன்.

இறுதியில் போர்க்குற்ற விசாரணைகள் முன்னெடுக்கப்படும் என நம்புவோம். போர்க் குற்ற விசாரணைகள் முன்னெடுக்கப்படுமிடத்து அந்த விசாரணைகள் ராஜபக்ஷ குடும்பத்தினரைச் சுற்றியே இருக்கும் என நான் நம்புகிறேன். ஏனெனில் வலிந்த தாக்குதல்களுக்கான முடிவுகளை எடுத்தவர்கள் அவர்கள் தான் என்றார் கோல்டன் வைஸ். (உ)

## கண்ணீர் அஞ்சலி



புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட

**தர்மலிங்கம் பரமேஸ்வரன்**

அவர்கள் திடீரென அகாலமரணமானதையிட்டு ஆழ்ந்த அதிர்ப்தியும் கவலையும் அடைகின்றோம். அன்னார் காரைநகர் கலாநிதி விளையாட்டுக்கழக வளர்ச்சிக்குத் தனது பங்களிப்புக்களை வழங்கி நட்பிற்கோர் நண்பனாக உதவி செய்வதில் உத்தமனாக பழகி எம்மைவிட்டு பிரிந்த செய்தி இடியாகி போனது! நண்பா வாழும் வயதில் வாழாது சென்ற னையோ? உன் ஆத்மா வானுறையும் தெய்வத்தில் இணைய வேண்டுகின்றோம். உற்றாருக்கும் உறவினருக்கும் நண்பர்களுக்கும் எமது ஆழ்ந்த அனு தாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

ஓம் சாந்தி!

காரைநகர் கலாநிதி விளையாட்டுக்கழகம் காரைநகர்.

(சி-577750)

## மரண அறிவித்தல்கள்

### கந்தர் ஆழ்வாப்பிள்ளை (பெரியதம்பி)

துன்னாலை மேற்கு ,கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிட மாகவும் கொண்ட கந்தர்ஆழ்வாப்பிள்ளை கடந்த (17.04.2011) ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னார்வள்ளியம்மையின் அன்புக் கணவரும் ,மணிசேகரன் (UK), மாலதி(இத்தாலி) ஆகியோரின் அன்புத் தந்தையும் செல்வமதி (UK), கமலேஸ்வரன் (இத்தாலி) ஆகியோரின் மாமனும் நிவேந்தன்(UK)), துஷ்யந்தா(UK)), லவிசணன்(UK)), குகதீஸ்வரன்(இத்தாலி), சனுஜா(இத் தாலி) ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(21.04.2011) காலை 8 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் வேரகொண்டை மாயனத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

துன்னாலை மேற்கு, கரவெட்டி,
T.P 0776592208 (c/577751)

தகவல்: மனைவி

### திருமதி கணபதிப்பிள்ளை கனகம்மா



நெடுந்தீவு மேற்கு 3 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி கணபதிப்பிள்ளை கனகம்மா நேற்று (19.04.2011) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அம்பலம்-பொன்னு தம்பதியரின் ஒரே மகளும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம்-பத்தினிப்பிள்ளை தம்பதியரின் அருமை மருமகளும், கணபதிப்பிள்ளையின் அன்பு மனைவியும் முத்துக்குமாரு(ஒட்டன்குளம்), ஜெயரட்ணம்(கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் சாரதாதேவி(சரோ), அருட்குமார்(சுகந்தன்) ஆகியோரின் பாசமிகு தாயும் கணபதிப்பிள்ளை, சிவனஜினி, ஆகியோரின் மாமியும் சரிதா, சாணுஜன், சஜீஸா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.04.2011) புதன்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பனங்காமுனை இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

3ஆம் வட்டாரம் நெடுந்தீவு.
தொ.பே.0215683107 (3348)

தகவல்: குடும்பத்தினர்.

## ஐ.நாவுக்கு எதிராக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசு விடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஐ.நாவைக் கண்டிக்கும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பேரணிகளிலும் கலந்து கொள்ளுமாறும் சமயத் தலைவர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர் என்று தெரியவருகிறது. (ஓ-ஐ)

## ஐ.நா. அறிக்கைக்கு...

(முதலாம்பக்கத் தொடர்ச்சி)

யின்போது விடுதலைப் புலிகள் நடந்துகொண்ட விதம் ஆகியன தொடர்பான விரிவான தகவல்கள் உள்ளடக்கப்படும்.

நிபுணர் குழு அறிக்கையில் குற்றஞ்சாட்டப்படுள்ள அனைத்து விடயங்களுக்கும் பதில் அளிக்கும் வகையில் இந்த அறிக்கை தயாரிக்கப்படுவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, நிபுணர் குழுவின் அறிக்கையை ஐ.நா. சபை வெளிநாட்டு, உள் நாட்டு அரச சார்பற்ற நிறு வனங்களுக்கும் வழங்கியுள்ளது எனவும் தகவல்கள் வெளியாகி உள்ளன.

## 4 மீனவர்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

''கடந்த சில மாதங்களாக இலங்கை அரசுடன் நாம் தொடர்ச்சியான தொடர்புகளைக் கொண்டிருக்கிறோம். மீன்பிடி தொடர்பாக இரு நாடுகளுக்கும் இடையில் ஒருங்கிணைந்த வேலைத் திட்டம் தொடர்பாக பேச்சுக்களும் நடத்தப்பட்டன...... எந்தவகை சூழ்நிலையிலும் மீனவர்களைக் கையாள்வதற்கு பலாத்காரம் ஒரு வழி முறை ஆகாது'' என்றார் அவர்.

சென்னையில் புத்தக வெளி யீட்டு விழா ஒன்றில் கலந்து கொள்வதற்கான வந்திருந்த போது அவர் செய்தியாளர்களிடம் பேசினார்.

''இந்த நான்கு மீனவர்களும் தமது உயிர்களை இழந்தது துர திர்ஷ்டவசமானது. யாழ்ப்பாணத் தில் இருந்து மீனவர் ஒருவரின் உடல்கூறு பரிசோதனை அறிக் கைக்காகக் காத்திருக்கிறோம். இந்த மரணங்கள் எப்படி நிகழ்ந் தன என்பதை சரியாக அறிய முடியாதுள்ளது. மாநில அரசின் பதிலுக்காகக் காத்திருக்கிறோம். சில தகவல்கள் மட்டுமே தற்போது உள்ளன'' என்றார் நிருபமா. (உ)

**வீடு விற்பனைக்கு**

நாவலர் வீதியில் பிறவுண் வீதிக்கும், கஸ்தூரியார் வீதிக்கும் இடையில் அமைந்துள்ள சகல வசதிகளுமுடைய வீடும் வளவும் விற்பனைக்குண்டு. தரகர் தேவையில்லை.
தொடர்பு: 0774927421

**Wanted**

யாழ்.நகரில் இயங்கும் தொலைத் தொடர்பு நிலையத்துக்கு (Internet Cafe and Communication) முன் அனுபவம் உள்ள அல்லது பழக விரும்பும் பெண்கள் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும். T.P: 0772833601, 0777512981 (3349)

## கண்ணீர் அஞ்சலி



கிளி.முருகானந்தா மகா வித்தியாலய ஆசிரியர் இ.முகுந்தன் அவர்களின் அன்புத் தந்தை

**சின்னையா இராமச்சந்திரன்**

அவர்கள் நேற்று (19.04.2011) செவ்வாய்க்கிழமை காலமானதையிட்டு எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கிளி.முருகானந்தா மகாவித்தியாலயம், முரசுமோட்டை.
(3346)

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், ஊழியர்கள்.

## மரண அறிவித்தல்



### A.S.S. இராமச்சந்திரன்

மாலு சந்தியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா இராமச்சந்திரன் நேற்று (19.04.2011) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையாபத்தர் - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும் இரத்தினத்தின் பிரியமான கணவரும் முகுந்தன் (ஆசிரியர், கிளி/முருகானந்தா ம.வி.), ராதா (Fina-nce Company, Nelliady) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்றவர்களான கமலாதேவி, நவரட்ணதேவி, சரோஜினிதேவி மற்றும் வசந்தாதேவி, ராசகோபால், அனுசியாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.04.2011) புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் ஆலங்கட்டை இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மாலுசந்தி,
அல்வாய் கிழக்கு,
அல்வாய். (சி-577753)(20-27)

தகவல்: குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### அழகரத்தினம் சிவராசா (இரத்தினம்)



பன்னாலையைப் பிறப்பிடமாகவும் சோடா கொம்பனி லேன், மல்லாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட அழகரத்தினம் சிவராசா கடந்த (18.04.2011) திங்கட் கிழமை அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற அழகரத்தினம் மற்றும் பொன்னுப்பிள்ளை தம் தியரின் அன்பு மகனும் அருணாசலம் - அன்னலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும் பரமேசுவரியின் அன்புக் கணவரும் சிவாஜினி, சிவகுமார் (லண்டன்), சிவகரன் (லண்டன்), சிவரஞ்சினி, சிவமலர், சிவரூபன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் குணசிங்கம், விஜியதேவி (லண்டன்), ஸ்ரீரஜனி (லண்டன்), பகீரதன் ஆகியோரின் அன்பு மாமனும் தனுஷா, தனுஷன், அபிஷா (லண்டன்), ஆர்த்திகா (லண்டன்), அபிசயனி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று( 20.04.2011) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் நல்லடக்கத்துக்காக பிற்பகல் 2 மணியளவில் மல்லாகம் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சோடா கொம்பனி லேன்,
மல்லாகம். (3345)(20-27)

தகவல்: சிவகுமார் (மகன் -பெரியதம்பி).

உதயன்
தொடர்புகளுக்கு

ஆசிரியபீடம் : 021-2229933
தொலைநகல்: 021-2229944
செய்தி/படங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: admin@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com




அனைத்து மாவட்டங்களிலும் மழை பெய்வதற்கான சாத்தியம் உள்ளது.

# பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் கூட்டங்களுக்கு கூட்டமைப்பு எம்.பிக்கள் அழைக்கப்படாதது ஏன்?

## யாழ். செயலகத்தில் கேள்வி எழுப்பினார் சரவணபவன் எம்.பி.

யாழ்ப்பாணம், ஏப். 20

பிரதேச செயலகங்களில் நடைபெறுகின்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அழைக்கப்படாதது ஏன்?

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் இவ்வாறு கேள்வி எழுப்பினார்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் யாழ். செயலகத்தில் நேற்று நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலே அவர் மேற்கண்டவாறு கேள்வி எழுப்பினார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

யாழ். மாவட்டத்தின் அபிவிருத்திக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 35 மில்லியன் ரூபா நிதியை ஒதுக்கியுள்ளனர்.

இந்த நிலையில் பிரதேச ரீதியாக நடைபெறுகின்ற அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து ஆராய்வதற்கான ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டங்கள் பிரதேச செயலகங்கள் ரீதியாக நடைபெற்று வருகின்றன.

ஆனால் அந்தக் கூட்டங்களுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அழைப்பு விடுக்கப்படுவதில்லை. இதனால் அபிவிருத்தி குறித்து எதுவும் தெரியாத நிலை காணப்படுகின்றது.

அண்மையில் காரைநகர் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்துக்கு மட்டும் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. அந்தப் பிரிவுப் பிரதேச செயலரால் எமக்கு அழைப்பு விடுக்க முடியுமானால் மற்றவர்களால் அது முடியாமல் போனது ஏன்?

எமது நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அழைப்பு விடுக்கப்படக் கூடாதென்று யாராவது அழுத்தம் கொடுக்கிறார்களா? என்ற சந்தேகம் தான் எமக்கு ஏற்படுகின்றது.

இனிவரும் காலங்களில் இத்தகைய தவறுகள் இடம்பெறாமல் இருக்க யாழ். மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றும் கேட்டுக் கொண்டார்.

இதற்குப் பதில் அளித்த யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின் இணைத் தலைவர் பாரம்பரிய மற்றும் சிறுகைத்தொழில்துறை அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா,

நாடாளுமன்ற உறுப்பினரின் கோரிக்கை கருத்தில் எடுக்கப்பட்டு இனிவரும் காலங்களில் அவ்வாறு நடைபெறாமல் இருக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

இதேவேளை -

கிளிநொச்சி மாவட்டத்தில் நடைபெறகின்ற பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டங்களுக்கும் அந்த மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் அழைப்பு விடுவிக்கப்பட வேண்டும் என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் கோரிக்கையை முன் வைத்தார். (த-9-14)

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை கூட்டங்களுக்கு அழைக்காதீர்கள்

## பிரதேச செயலர்கள் மீது டக்ளஸ் காட்டம்

யாழ்ப்பாணம், ஏப். 20

தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் இன்று நடைபெற உள்ள பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்துக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அழைப்பு விடுக்கக் கூடாது என்று பிரதேச செயலருக்கு உத்தரவிட்டுள்ளார் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா.

இந்த உத்தரவை அவர் விடுப்பதற்கு முன்னதாக யாழ். செயலகத்தில் நடைபெற்ற மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களையும் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களுக்கு அழைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்ற சாரப்பட பகிரங்கமாகத் தெரிவித்திருந்தார்.

கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவான் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இருப்பினும், அந்தக் கூட்டம் முடிந்த பின்னர் பிரதேச செயலர்களைத் தனியே சந்தித்த அமைச்சர், பிரதேச அபிவிருத்திக் கூட்டங்களுக்கு அவர்களுக்கு அழைப்பு அனுப்ப வேண்டாம் என்று கேட்டுக் கொண்டார்.

அமைச்சரின் முன்னுக்குப் பின்னான இந்த முரண்பாட்டால் சிக்கலுக்குள் அகப்பட்டுக் கொண்டவர் தென்மராட்சி பிரதேச செயலரே. மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் அமைச்சர் தெரிவித்த கருத்தை உண்மை என்று நம்பிய இவர், இன்று நடைபெற இருக்கும் தமது பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்துக்கான அழைப்புக் கடிதங்களை அவசர அவசரமாகச் சேர்ப்பித்திருந்தார்.

ஆனால், அமைச்சர் பின்னர் தான் பகிரங்கமாகச் சொன்னது ''ஊருக்கு முன்னான வேஷம்'' என்பதை வெளிப்படுத்தியதால் அனுப்பப்பட்ட அழைப்புக் கடிதங்களை என்ன செய்வது என்று தெரியாமல் திணறிப் போனார் தென்மராட்சி பிரதேச செயலர்.

நிலைமை இவ்வாறு இருந்தபோதும் பிரதேச அபிவிருத்தியில் தமக்கு அக்கறை இருப்பதால், அந்தக் கூட்டத்துக்கு நிச்சயம் செல்வோம் என்று தெரிவித்தார் கூட்டமைப்பு உறுப்பினர் ஒருவர். நாடாளுமன்ற உறுப்பினர்களை ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்துக்கு வரவிடாமல் தடுக்கும் அதிகாரம் அமைச்சருக்கு இல்லை என்பதையும் அவர் குறிப்பிட்டுக்கூறத் தவறவில்லை.

அரசியல் காழ்ப்புணர்ச்சி மற்றும் கூட்டமைப்பினர் மீதான அச்சம் காரணமாகவே இவ்வாறு அபிவிருத்திக் கூட்டங்களில் இருந்து கூட்டமைப்பினரை ஒதுக்கி வைக்கவும் அனைத்து அபிவிருத்திகளையும் தான் ஒருவனே சொந்தக் காசில் செய்வதாகக் காட்டிக் கொள்ளவும் அமைச்சர் முயற்சி செய்கிறார் என்றும் அந்த உறுப்பினர் தெரிவித்தார். அமைச்சரின் இந்தக் கபடத்தனமான நடவடிக்கைகளுக்கு கூட்டமைப்பு ஒருபோதும் இடமளிக்காது என்றும் அவர் கூறினார். (உ-ஐ-15)

## வடமராட்சி வடக்கு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஏப். 20

வடமராட்சி வடக்கு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நாடாளுமன்ற உறுப்பினர் சில்வெஸ்திரி அலன்ரின் தலைமையில் நாளை வியாழக்கிழமை மு.ப. 10 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்துக்கு பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா பிரதம விருந்தினராக கலந்து சிறப்பிக்கவுள்ளார். எனவே பிரதேச திணைக்களத் தலைவர்களும், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளும் இதில் கலந்துகொண்டு ஒத்துழைக்குமாறு பிரதேச செயலர் ஆர்.வரதீஸ்வரன் கேட்டுள்ளார். (ஒ)

# யாழ். ஆஸ்பத்திரி சிற்றூழியர் 30 பேருக்கு நிரந்தர நியமனம்

யாழ்ப்பாணம், ஏப்.20

யாழ். போதனா வைத்திய சாலையில் தற்காலிகமாக கடமையாற்றிவரும் சிற்றூழியர்களில் 30 பேருக்கு சுகாதார அமைச்சினால் நிரந்தர நியமனம் வழங்கப்படவுள்ளது.

இந்த நியமனம் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் மதியம் யாழ். போதனா வைத்திய சாலையில் நடைபெற்றது.

இவர்களுக்கான நியமனக் கடிதங்கள் வழங்கும் நிகழ்வில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் வைத்திய சாலைப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி பவானி பசுபதிராஜா, பிரதிப் பணிப்பாளர் வைத்திய நிபுணர் ஸ்ரீபவானந்தராஜா, சத்திரசிகிச்சை நிபுணர் என். ரவிராஜ் ஆகியோர் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (ஒ-4)

# ஆங்கிலப் பயிற்சி நெறிக்கான தெரிவுப் பரீட்சை

வடமாகாணக் கல்வித் திணைக்களம் யாழ். பல்கலைக்கழகத்துடன் இணைந்து தெரிவுசெய்யப்பட்ட ஆங்கில ஆசிரியர்கள் அல்லாத ஆங்கில ஆசிரியர்களுக்கு பத்துமாத பயிற்சி நெறிக்கான தெரிவுப் பரீட்சையை நடத்தவுள்ளது.

இந்தப் பரீட்சை எதிர்வரும் 30 ஆம் திகதி சனிக்கிழமை நல்லூர் ஸ்தான சி.சி.த.க. பாடசாலை, கிளிநொச்சி மகா வித்தியாலயம், வவுனியா சைவப்பிரகாச மகா வித்தியாலயம், மன்னார் சென். சேவியர் பெண்கள் கல்லூரி ஆகிய நிலையங்களில் முற்பகல் 9.30 மணி தொடக்கம் 11.30 மணி வரை நடைபெறவுள்ளது.

விண்ணப்பித்த ஆசிரியர்கள் பரீட்சைக்கு அன்றைய தினம் அருகிலுள்ள நிலையங்களுக்குச் சென்று பரீட்சைக்குத் தோற்றுமாறும், இப் பயிற்சி நெறியில் பங்கு கொள்ளவிரும்பும் வேறு ஆசிரியர்களும் இத் தெரிவுப் பரீட்சைக்குத் தோற்ற முடியும் என்று மாகாண கல்வித் திணைக்களம் அறிவித்துள்ளது. (ஒ-எ)

# நிகழ்வுகள்

### கண்காட்சியும் கலை நிகழ்வும்

யாழ்ப்பாணம்,ஏப்.20

மிதிவெடிச் செயற்பாட்டின் விழிப்புணர்வுக்கும் உதவிக்குமான சர்வதேச தினத்தை முன்னிட்டு நடத்தப்படும் மாபெரும் கண்காட்சி மற்றும் கலை, விளையாட்டு நிகழ்வுகளும் இன்று புதன்கிழமையும் நாளை வியாழக்கிழமையும் முற்பகல் 10 மணிக்கு யாழ். இந்துக்கல்லூரியில் நடைபெறவுள்ளன. (ற-313)

### புகைப்படக்கலை கருத்தரங்கு இன்று

யாழ்ப்பாணம், ஏப்.20

யாழ்.பல்கலைக்கழக கலைப்பீடத்தின் நுண்கலைப் பிரிவினதும், கலைவட்டத்தினரதும் ஏற்பாட்டில் இலங்கையின் புகைப்படக்கலை தொடர்பான கருத்தரங்கு இன்று பிற்பகல் 3.30 மணிக்கு புதிய கலைப்பீடக் கட்டடத் தொகுதியில் நடைபெறவுள்ளது.

இந்தக் கருத்தரங்கில் இலங்கையின் பிரதான புகைப்படக் கலைஞர்களுள் ஒருவரான மெனிக்கா வன்டெர் போட்டன் புகைப்படக் கலை தொடர்பாக கருத்துரை வழங்குவார். (ஒ-10)

### கிளை திறப்பு நிகழ்வு

யாழ்ப்பாணம், ஏப்.20

செலிங்கோ லைவ் நிறுவனத்தின் மானிப்பாய்க் கிளை திறப்பு விழா நாளை வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்கு செலிங்கோ லைவ் நிறுவனத்தின் யாழ். முகாமையாளர் ஏ.அசோக் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு விருந்தினராக செலிங்கோ லைவ் நிறுவனத்தின் சிரேஷ்ட உதவிப் பொது முகாமையாளர் என்.வை. சோமத் கலந்து கொள்வார்.

இந்தக் கிளையை செலிங்கோ லைவ் நிறுவனத்தின் சிரேஷ்ர வர்த்தக அபிவிருத்தி முகாமையாளர் ரி. விஜயகாந் திறந்து வைக்கவுள்ளார். (ற-7)

### தமிழ்ச் சங்கத்தின் கூட்டம்

கிளிநொச்சி,ஏப்.20

கிளிநொச்சி மாவட்ட தமிழ்ச்சங்கத்தின் பொதுக் கூட்டம் நாளை வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது என சங்கத் தலைவர் அறிவித்துள்ளார். (ற)

# வன்னியில் இறுதிக் கட்ட யுத்தத்தில் 40 ஆயிரம் பேர்வரை பலியாகினர்

## கசிந்த அறிக்கையின் பாகங்கள் சரியானவையே என உறுதிப்படுத்துகிறது ஐ.நா.

கொழும்பு, ஏப். 20

இறுதிக்கட்டப் போரில் பொதுமக்கள் நாற்பதாயிரம் பேர் வரையிலானோர் கொல்லப்பட்டிருக்கலாம் என ஊடகங்களில் கசிந்துள்ள ஐ.நா. நிபுணர் குழு அறிக்கை தெரிவிக்கிறது.

ஊடகங்களில் வெளியாகியுள்ள அறிக்கையின் உள்ளடக்கங்கள் சரியானவைதான் என்பதை ஐ.நா. அதிகாரிகள் தமக்கு மின்னஞ்சல் மூலம் உறுதிப்படுத்தியுள்ளனர் என பி.பி.ஸி. தெரிவித்துள்ளது.

இதுகுறித்து பி.பி.ஸி. தெரிவித்தவை வருமாறு -

ஐ.நா. நிபுணர் குழுவின் முழுமையான அறிக்கை இதுவரை அதிகாரபூர்வமாக வெளியிடப்படாதுள்ளது.

அந்த அறிக்கையின் பாகங்களை கசிந்துள்ளதாகக் கூறி குறிப்பாக அரசசார்புச் செய்தி நாளிதழ்கள் கட்டம் கட்டமாக அவ்வறிக்கையின் தகவல்களை வெளியிட்டு வருகின்றன.

இலங்கையில் நடைபெற்ற இறுதிக்கட்டப் போரின்போது, போர்க்குற்றங்கள் மற்றும் மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் என்று கூறும் அளவுக்கு சர்வதேச சட்டங்களை மீறும் வகையிலான பெரும் குற்றச்செயல்கள் இடம்பெற்றுள்ளன என ஐ.நா. நிபுணர் குழு கண்டறிந்துள்ளது என இலங்கையில் அண்மையில் கசிந்த ஐ.நா. குழுவின் அறிக்கையுடைய சுருக்கங்கள் சுட்டிக்காட்டியிருந்தன.

அதற்கு இலங்கை அரச தரப்பிலிருந்தும், அங்குள்ள பெரும்பான்மைக் கட்சிகளிடமிருந்தும் பலத்த எதிர்ப்புக் கிளப்பியிருந்தது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஐ.நா. நிபுணர் குழு அறிக்கையை வரவேற்பதாக தமிழோசையிடம் தெரிவித்திருந்தது.

இதற்கிடையே, இவ்வாறு வெளியாகியுள்ள அறிக்கையின் உள்ளடக்கங்கள் சரியானவைதான் என்பதை ஐ.நா. அதிகாரிகள் பி.பி.ஸிக்கு மின்னஞ்சல் மூலம் உறுதிப்படுத்தி விட்டுள்ளனர்.

கசிந்துள்ள ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கையில் வெளியாகியுள்ள முக்கிய விடயங்கள் வருமாறு -

இறுதிப் போரில் கொல்லப்பட்டவர்களின் சரியான எண்ணிக்கையை உறுதிபடக் கூற முடியாதுள்ளது. ஆயினும் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 40 ஆயிரம் பேர் என்று பல்வேறு வழிகளிலும் கிடைத்த தகவல்களின் அடிப்படையில் மதிப்பிடப்பட்ட எண்ணிக்கையை நிராகரித்துவிட முடியாது என்று ஐ.நா. சுட்டிக்காட்டியுள்ளது.

முழுமையான விசாரணைகளின் மூலமே கொல்லப்பட்ட மக்களின் மொத்தக் கணக்குப் பற்றிய முடிவொன்றுக்கு வரமுடியும் என்பதையும் ஐ.நா. நிபுணர் குழு குறிப்பிட்டுள்ளது.

வன்னியில் போரின்போது அங்கு சிக்கியிருந்த மக்களின் எண்ணிக்கை எத்தனை என்பது தெரியாத நிலையில், அந்த எண்ணிக்கை மூன்று லட்சத்து 30 ஆயிரம் வரை இருக்கலாம் என்றளவில் கணிக்கப்பட்டிருந்தது.

அத்தோடு போர் வலயத்திலிருந்து வந்த மக்களை பிரித்து அவர்களை முகாம்களுக்கு அனுப்பிய நடைமுறை வெளிப்படையாக நடைபெறாத காரணத்தினால் அங்கிருந்து எத்தனை பேர் வந்தார்கள் என்ற விபரங்கள் இல்லை.

இறுதிக்கட்டத்தில் விடுதலைப் புலிகளும் கட்டாயப்படுத்தி ஆட்களைப் படையில் சேர்தததால் புலிகளின் எண்ணிக்கை பற்றிய விவரங்களும் இல்லை.

அதுமட்டுமன்றி பெருமளவிலான கொல்லப்பட்ட மக்களின் இறப்புகள் எதுவும் பதியப்படாமலேயே அவர்கள் புதைக்கப்பட்டுவிட்டார்கள் என்று ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கையிலிருந்து கசிந்த விவரங்கள் தெரிவிக்கின்றன.

ஐ.நா. இதுவரை வெளியிடாது வைத்திருந்த புள்ளிவிவரங்களின் படி, ஆகஸ்ட் 2008 முதல் மே 2009 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் பொதுமக்கள் 7,721 கொல்லப்பட்டும் 18,479 பேர் காயமடைந்தும் உள்ளனர் எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

ஆனால் 2009 பெப்ரவரியில் ஐ.நா. அதிகாரிகள் உயிர்ச் சேதங்கள் பற்றிய கணக்கெடுப்புகளை மேற்கொள்ள முயற்சித்த போதிலும் அதன் பின்னர் போர் வலய மக்களை சென்றடைவதற்காக வழிகள் இல்லாமையால் அந்த முயற்சிகளும் கைகூடவில்லை எனவும் ஐ.நா. தெரிவித்துள்ளது.

# சங்கரைக் கொன்றவரின் மனைவிக்கு வழங்கப்பட்ட வாகனம் பறிப்பு!

தமிழீழ விடுதலைப் புலிகளுடனான நேரடிச் சமரின்போது கொல்லப்பட்ட லெப்டினன்ட் கேணல் லலித் ஜெயசிங்கவின் மனைவிக்கு வழங்கப்பட்டிருந்த வாகனம் பாதுகாப்பு அமைச்சின் பணிப்புக்கு அமையப் பறிக்கப்பட்டிருப்பதாக இராணுவத் தலைமையகத்திற்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

போர் உக்கிரமடைந்திருந்த வேளையில் இராணுவத்தின் சிறப்புப் படைப்பிரிவில் மேஜர் நிலை அதிகாரியாகச் செயற்பட்ட லெப்.கேணல் லலித் ஜெயசிங்கவை விடுதலைப் புலிகளின் முதல்நிலைத் தளபதிகளைக் கொல்லும் நோக்கில் அவர்களின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள் ஊடுருவிச் செல்லுமாறும் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா பணித்திருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள் ஊடுருவிச் சென்றிருந்த லெப். கேணல் லலித் ஜெயசிங்க தலைமையிலான அணியினரே புலிகளின் வான் அணியின் தலைவர் கேணல் சங்கர் மற்றும் கடற்புலிகள் அணியைச் சேர்ந்த லெப். கேணல் கங்கைஅமரன் உள்ளிட்ட புலிகளின் தளபதிகள் பலரைக் கொலை செய்திருந்தார் என இராணுவத்தின் சிறப்புப் படையைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

லெப். கேணல் ஜெயசிங்க ஒட்டுசுட்டான் பகுதியில் விடுதலைப் புலிகளால் சுற்றிவளைக்கப்பட்டு சுட்டுக்கொல்லப்பட்டிருந்தார். போர் முடிவுக்கு வந்து விட்டதாக நாடாளுமன்றில் மகிந்த ராஜபக்ஷ அறிவித்த பின்னர், லெப். கேணல் ஜெயசிங்கவின் தாயாரும் மனைவியும் முதன் முதலில் கௌரவிக்கப்பட்டிருந்தனர். லலித் ஜெயசிங்க போரில் கொல்லப்பட்ட போது அவரது மனைவி ஆறு மாதக் கர்ப்பிணியாக இருந்துள்ளார்.

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவே இந்த விதவைக்கு குறிப்பிட்ட வாகனம் ஒன்றை வழங்கியிருந்தார். இராணுவத்தினருக்கான நிதியிலிருந்து 29 இலட்சம் ரூபாவையும்

இவருக்கு வழங்கியிருந்தார். (ஒ-10) *(தமிழ் சி.என்.என்.)*

# வீட்டில் புகுந்து கொள்ளையிட்ட பிள்ளையான் குழு

கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் அல்லது பிள்ளையான் தலைமையிலான துணை ஆயுதக் குழுவினர் அங்கு பல கொள்ளைகளில் ஈடுபட்டு வருவதாகக் கூறப்படுகின்றது.

ஏப்ரல் மாதம் 13ஆம் திகதி மட்டக்களப்பு மாவட்டம் காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ஆரையம்பதி மேற்கு காட்டுமாவடி பகுதியில் இந்தக் குழுவினர் ஒரு வீட்டிலிருந்து 1.5 மில்லியன் ரூபா பெறுமதியான நகைகளை கத்தியைக் காட்டி மிரட்டிக் கொள்ளையடித்துள்ளனர்.

அச்சம் காரணமாக இந்த வீட்டு உரிமையாளர் மோகன் எங்கும் இது பற்றி புகார் செய்யவில்லை. நான்கு மாதங்களுக்கு முன் புலியடியில் உள்ள இவரின் சகோதரி வீட்டிலும் 5 மில்லியன் ரூபா

பெறுமதியான நகைகள் சூறையாடப்பட்டன. பிரசாந்தன் என்பவரே இவ்வாறான கொள்ளை களில் ஈடுபடுவதாகப் பிரதேச வாசிகள் தெரிவித்துள்ளனர்.

*(தமிழ் சி.என்.என்.)*


# வவுனியா முகாம்களில் இருந்து 100 குடும்பங்கள் வெளியேற்றம்

வவுனியா பூந்தோட்டம் மற்றும் சிதம்பரபுரம் நலன்புரி நிலையங்களிலிருந்து கடந்த இரண்டு மாதங்களில் 100இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வெளியேறிச் சென்றுள்ளதாக வவுனியா அரச அதிபர் பி.எஸ்.எம். சாள்ஸ் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு வெளியேறிச் சென்றுள்ள மக்கள் அவர்களின் சொந்த மாவட்டங்களில் பதிவுகளை மேற்கொண்டு தங்களுக்குத் தேவையான நிவாரணப் பொருள்களை அந்தந்த மாவட்டங்களிலேயே பெற்றுக்கொள்ள வேண்டுமெனவும் அவர் கூறினார்.

வவுனியா பூந்தோட்டம் மற்றும் சிதம்பரபுரம் நலன்புரி நிலையங்கள் மூடப்படவுள்ளதால் அங்கு தங்கியுள்ள மக்களை கடந்த பெப்ரவரி மாதம் 15ஆம் திகதிக்கு முன்னதாக அவரவர் சொந்த இடங்களுக்கு செல்ல வேண்டுமென கடந்த 6 மாதங்களுக்கு முன்னரே கடித மூலம் அறிவிக்கப்பட்டதாக வவுனியா அரச அதிபர் திருமதி பி.எஸ்.எம். சாள்ஸ் தெரிவித்திருந்தார்.

ஜனாதிபதி செயலணிப் பிரிவு இதற்கான அறிவித்தலை மாவட்ட செயலகத்திற்கு விடுத்துள்ள நிலையிலேயே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் வவுனியா அரச அதிபர் முன்னர் குறிப்பிட்டிருந்தார். (ஒ-10) *(தமிழ் வின்)*



இணையச் செய்திகள்

# இலங்கைக்கு ஆதரவு வழங்க அமெரிக்கா வலியுறுத்து

அமெரிக்க நாடாளுமன்றத்தைச் சேர்ந்த முக்கிய உறுப்பினர்கள் சிலர் அமெரிக்காவிற்கும் இலங்கைக்கும் இடையிலான உறவை வலுப்படுத்த வேண்டும் என்று தமது சக நாடாளுமன்ற உறுப்பினர்களை வலியுறுத்தியுள்ளனர்.

ஏப்ரல் மாதம் 15ஆம் திகதி கிறிஸ் ஹொலன், ரொபர்ட் அடேர்ஹோல்ட் ஆகிய நாடாளுமன்ற உறுப்பினர்களே தமது நாடாளுமன்ற சகாக்களுக்கு எழுதியுள்ள கடிதத்தில் வலியுறுத்தியுள்ளனர். (தமிழ்சிஎன்என்)

# சீன எல்லைக்கு அருகில் நேற்று இந்திய ஹெலி விபத்தில் சிக்கியது

## 17பேர் கருகிப் பலி; 6 பேர் காயம்

இந்தியாவின் அருணாச்சலப் பிரதேச மாநிலத்தில் நேற்று இடம்பெற்ற ஹெலிகொப்டர் விபத்தொன்றில் 17 பேர் உடல் கருகிப் பலியாகியுள்ளனர்.

பறந்து கொண்டிருந்த இந்த ஹெலிகொப்டர் தீப்பற்றிக் கொண்டதால் துண்டு துண்டாகச் சிதறி வீழ்ந்தது. இவ்விபத்தில் மேலும் 6 பேர் காயமடைந்துள்ளனர். குவாஹெட்டி நகரிலுள்ள கோபிநாத் போர்டோலோய் சர்வதேச விமான நிலையத்திலிருந்து தாவாங் நகரை நோக்கி சென்றுகொண்டிருந்த ஹெலிகொப்டரே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது.

சீன எல்லைக்கருகிலுள்ள தாவாங் மாவட்டத்தில் அண்மைக்காலத்தில் இடம்பெற்ற இரண்டாவது ஹெலிகொப்டர் விபத்து இதுவாகும். கடந்த வருடம் நவம்பர் மாதம் 19 ஆம் திகதி ஹெலிகொப்டர் ஒன்று பறக்க ஆரம்பித்து சில நிமிடங்களில் விபத்துக்குள்ளானதால் 12 பேர் பலியானார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-10)

## பற்றுச் சீட்டுக்கள், பதிவுகள் இன்றி இயங்கும்

# மருத்துவ நிலையங்கள் மீது இனிமேல் கடும் நடவடிக்கை

மருத்துவரின் மருந்துச் சிட்டையின்றி மருந்துகளை விற்பனை செய்யும், அதிக விலைக்கு மருந்துகளை விற்பனை செய்யும் மருந்து விற்பனை நிலையங்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என சுகாதார அமைச்சு நேற்று தெரிவித்துள்ளது.

இப்புதிய விதிகளை பின்பற்றாத மருந்தகங்களுக்கு 3 லட்ச ரூபா அபராதம் அல்லது ஒரு வருடகால சிறைத்தண்டனை விதிக்கப்படும் என அமைச்சு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இது தொடர்பான சட்ட மூலத்தை திருத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தேசிய ஔடத ஒழுங்குபடுத்தல் அதிகார சபைத் தலைவர் டாக்டர் ஹேமந்த பெனராகமவுக்கு சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன உத்தரவிட்டுள்ளார்.

(ஒ-10)(தமிழ் மிரர்)

# மிதிவெடி விழிப்புணர்வுக்காக கண்காட்சி, பேரணி யாழ். நகரில்

## இன்றும் நாளையும் ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஏப்.20

மிதிவெடி செயற்பாட்டு விழிப்புணர்வுக்கும் உதவிக்குமான சர்வதேச தினத்தை முன்னிட்டு கண்காட்சி நிகழ்வுகள் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் இன்று காலை 9 மணிக்கு ஆரம்பமாகின்றன.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் கலந்து கொள்ளவுள்ளார். மற்றும் யுனிசெப், யு.என்.டி.பி பிரதிநிதிகளும் இந்ந நிகழ்வில் பங்குபற்றவுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து இந்துக் கல்லூரி மைதானத்தில் விளையாட்டு நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. கண்காட்சி மாலை 5 மணிவரையும் இடம்பெறும்.

கண்காட்சியில் மிதிவெடி அபாயங்களில் இருந்து பாதுகாத்துக் கொள்வது எவ்வாறு என்பது தொடர்பில் படங்கள் மூலமான விளக்கங்களும் அளிக்கப்படவுள்ளன. மேலும் வடபிராந்தியத்தில் மிதிவெடியகற்றல் செயற்பாட்டில் ஈடுபடுகின்ற சகல நிறுவனங்களும் இதில் பங்கெடுப்பதுடன் தமது செயற்பாடுகள் தொடர்பான பரிபூரண விளக்கங்களையும் வழங்கவுள்ளனர்.

அத்துடன் கண்ணிவெடி அகற்றுவதற்குப் பயன்படுத்தப்படும் இயந்திரப் பொறிகள் கனரகவாகனங்கள், இராணுவத்தின் மிதிவெடி அகற்றல் பிரிவின் உபகரணங்கள் என்பனவும் இதில் காட்சிப்படுத்தப்படவுள்ளன.

நாளை இரண்டாம் நிகழ்வுகள் ஊர்வலத்துடன் ஆரம்பமாகவுள்ளன. காலை 8.30 மணிக்கு யாழ். நகர மத்திய பேருந்து நிலையத்திலிருந்து ஆரம்பமாகும் அமைதி ஊர்வலம் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியை வந்தடையும்.

தொடர்ந்து மு.ப. 10 மணிக்கு யாழ் இந்துக் கல்லூரியின் குமாரசாமி மண்டபத்தில் பிரதான நிகழ்வுகள் ஆரம்பமாகவுள்ளன.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், யாழ். மாவட்ட கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க மற்றும் தேசிய கண்ணிவெடி செயற்பாட்டுப் பணிப்பாளர் மொண்டி ரணதுங்க ஆகியோருடன் கண்ணிவெடி அகற்றல் செயற்பாட்டு நிதி வழங்குனரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்த நிகழ்வில் முக்கிய விசேட அம்சமாக கண்ணிவெடிகளினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான வாழ்வாதாரக் கொடுப்பனவுகளும் வழங்கப்படவுள்ளன. (ஜ-15)

# பெண்களுடன் சேஷ்டையில் ஈடுபட்ட இரு இளைஞர் யாழ். ஆஸ்பத்திரியில்

## யாழ். நகரில் நேற்றிரவு சம்பவம்

யாழ்ப்பாணம், ஏப்.20

இரவு வேளை வீட்டினுள் புகுந்து பெண்களுடன் சேஷ்டை விட முயன்ற இளைஞர்கள்இருவர், வீட்டிலிருந்த ஏனையவர்களால் தாக்கப்பட்ட நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். அத்துடன் குறித்த இரு இளைஞர்களையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சுண்டுக்குளி வீதியில் நேற்று இரவு 7.45 மணியளவில் குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:-

குறித்த இரு இளைஞர்களும் வீட்டினுள் புகுந்து பெண்களுடன் அடாவடித் தனத்தில் ஈடுபட்டுள்ளனர். இது குறித்து பொலிஸாருக்குத் தகவல் பறந்தது. பொலிஸார் வருவதற்கு முன் வீட்டில் இருந்த ஏனையவர்களால் குறித்த இரு இளைஞர்களுக்கும் ''முறையான மரியாதை'' வழங்கப்பட்டு விட்டது.

அதே சமயம் சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸாருடனும் பிரஸ்தாப இளைஞர்கள் முறுகத் தொடங்கிவிட்டனர். அதனைத் தொடர்ந்து அவர்களும் ' உபசரித்து'' இருவரையும் பொலிஸ் நிலையத்துக்கு இழுத்துச் சென்றனர்.

தாக்கப்பட்ட பெண்ணொருவரும் மற்றும் குறித்த ' மைனர் ' களும் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

யாழ்ப்பாணம் இரண்டாம் குறுக்குத் தெருவைச் சேர்ந்த எட்வேட் நாதன் தினேஸ் (வயது-27), வேம்படி வீதியைச் சேர்ந்த சோ. ரவிக்குமார் (வயது- 24) ஆகிய இரு இளைஞர்களே வைத்தியசாலையில் நேற்றுச் சேர்க்கப்பட்டனர். (ஒ-15-4)

## இராஜதந்திர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டிஷ் வெளிவிவகார அமைச்சர் டேவிட் மிலிபேனட், ஐ.நா. சபையின் பாதுகாப்பு சபைக்குச் சென்றார். எனினும் ஐ.நா. சபையின் பாதுகாப்பு சபையில் அவர் தோல்வியடைந்தார். அதன் பின்னர் ஐ.நா. மனித உரிமைகள் அமைப்பின் மூலம் அவர்கள் மற்றுமொரு முயற்சியை மேற்கொண்டனர்.

இதன்போது எமக்கு எதிராக கொண்டு வரப்பட்ட யோசனை தோல்விகண்ட அதேவேளை, எமக்கு ஆதரவாக முன்மொழியப்பட்ட யோசனை மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட்டது. ஐ.நா. சபையினுள் மேற்கொள்ளக்கூடிய சட்டரீதியான இராஜதந்திர நடவடிக்கைகள் அனைத்திலும் இலங்கை அரசு விடுவிக்கப்பட்டுள்ளது.

# இந்துக் கல்லூரி ஆசிரியை வல்லுறவின் பின்னர் கொலை

## பிரேத பரிசோதனையில் திடுக்கிடும் தகவல்

யாழ்ப்பாணம், ஏப்.20

சில்லாலை சந்தைப் பகுதியைச் சேர்ந்த இளம் ஆசிரியை பாலியல் பலாத்காரத்தின் பின்னரே மூச்சுத்திணறலால் மரணமடைந்துள்ளார் என்று யாழ். போதனா வைத்தியசாலையின் பிரேத பரிசோதனை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

யாழ். இந்துக் கல்லூரியின் உடற்கல்வி ஆசிரியையான செல்வராஜா அனுஷா (வயது-27) என்ற இந்த யுவதி கடந்த 8 ஆம் திகதி பாடசாலையில் இருந்து வீடு திரும்பிய பின்னர் வீட்டில் எவரும் இல்லாத நிலையில் சாறியினால் கழுத்தில் சுருக்கிட்ட நிலையில் மீட்கப்பட்டார்.

கால்கள் இரண்டும் மடங்கி வளைந்த நிலையில் நிலத்தில் பட்டும் படாமலும் சடலம் காணப்பட்டது. அத்துடன் கழுத்தில் போடப்பட்ட சுருக்கு இறுக்கமாக அன்றி, இளகிய (தொய்ந்த) நிலையில் காணப்பட்டது.

இதனால் இவர் கொலை செய்யப்பட்ட பின்னர் தூக்கில் போடப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகம் உறவினர்களால் எழுப்பப்பட்டிருந்தது.

இந்த நிலையில் சடலத்தின் பிரேத பிரிசோதனை அறிக்கையில் சட்டவைத்திய அதிகாரி இச் சந்தேகத்தை உறுதிப்படுத்தியுள்ளார். கொலை செய்யப்பட்டுள்ளமைக்கான, இம் சைக்குள்ளான அடையாளங்கள் - சான்றுகள் உடலில் அதிகம் காணப்படுகின்றன என மர்ண விசாரணை குறிப்பிடுகிறது.

உடம்பின் பல்வேறு இடங்களிலும் நகக் கீறல் காயங்களும் காணப்படும் அதே சமயம் குறித்த ஆசிரியை பாலியல் பலாக்காரத்துக்கு உட்படுத்தப்பட்டுள்ளார் என்பதற்கான அறிகுறிகளும் தென்படுகின்றன என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யுவதிக்கு மூச்சுத்திணறல் மூலமே மரணம் ஏற்பட்டிருக்க வேண்டும் என்று வைத்திய அறிக்கையில் உறுதிப்படுத்தப்பட்டுள்ள போதும், அது எத்தகைய நிலைமையில் நிகழ்ந்தது என்பது குறித்து அதில் விவரிக்கப்படவில்லை. (ஒ-15)

## ஐ.நா. பாதுகாப்புச்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பத்திரிகைகளில் கசிவதற்கு முன்னரே இந்த விவகாரம் ஐ.நா. பாதுகாப்புச் சபைக் கூட்ட நிகழ்ச்சி நிரலில் சேர்த்துக் கொள்ளப்பட்டுவிட்டது.

அறிக்கை ஊடகங்களில் கசிந்ததைத் தொடர்ந்து பாதுகாப்புச் சபையில் அதுவே பிரதான கலந்துரையாடல் விடயமாகி விட்டது என்று பல்வேறு தரப்புக்கள் தன்னிடம் தெரிவித்ததாக 'இன்னர் சிற்றி பிரஸ்' தெரிவிக்கிறது.

அறிக்கையைக் கசியவிட்டது இலங்கை அரசுதான் என்பதே பாதுகாப்புச் சபையின் உள்ளே பேச்சு என்றும் அந்தத் தரப்புக்கள் 'இன்னர் சிற்றி பிரஸி'டம் தெரிவித்துள்ளன.

அதேவேளை, நிபுணர் குழுவின் அறிக்கை முழுமையாக வெளியாகாத நிலையில் அரைகுறை அறிக்கையை வைத்து விவாதம் நடத்துவதில் பயனில்லை என்று பாதுகாப்புச் சபையின் உறுப்பினர்கள் சிலர் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இதற்கிடையே, பாதுகாப்புச் சபையில் இலங்கை விவகாரம் விவாதிக்கப்படுவதற்கு ரஷ்யா தொடர்ந்தும் எதிர்ப்புத் தெரிவித்து வருகிறது.

திங்களன்று நடைபெற்ற கூட்ட நிகழ்ச்சி நிரலில் இலங்கை விவகாரம் சேர்க்கப்பட்ட முறைகளில் பல்வேறு சிக்கல்கள் இருப்பதாக ஒழுங்குப் பிரச்சினைகளை அது கிளப்பியது என்று 'இன்னர் சிற்றி பிரஸ்' தெரிவித்தது.

எனினும் ஐவரிகோஸ்ட் நாட்டு விவகாரத்தில் ரஷ்யாவின் எதிர்ப்பையும் புறந்தள்ளி ஐ.நா. பொதுச் செயலாளர் நடவடிக்கை எடுத்திருந்தார் என்பது கவனத்துக்கு உரியது. 2009ஆம் ஆண்டும் இலங்கைக்கு எதிராக ஐ.நா. பாதுகாப்புச் சபையில் விவாதிக்கப்பட வேண்டும் என்று எழுப்பப்பட்ட கோரிக்கைகளை ரஷ்யா பலமாக எதிர்த்திருந்தது. (உ)

**உடனடி வேலை வாய்ப்பு**

வாழ்க்கையில் முன்னேறும் இளைஞர், யுவதிகளுக்கு ஓர் அரிய வாய்ப்பு.

மாதாந்தம் 20, 000/= சம்பாதிக்க விருப்பம் உள்ளதா? அப்படியானவர்களே எமக்குத் தேவை?

(3321) தொடர்புகளுக்கு: 0217903283

## மரண அறிவித்தல்

### திருமதி நாகரத்தினம் மகேஸ்வரி



சங்கானை, சிலம்புப்புளியடியைப் பிறப்பிடமாகவும், மூளாய் மேற்கு, கம்மாளையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகரத்தினம் (சின்னராசா) மகேஸ்வரி நேற்று (19.04.2011) செவ்வாய்க்கிழமை மாலை 4.30 மணியளவில் இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சங்கானை சிலம்புப்புளியடி சபாபதி-செல்லம்மா தம்பதியரின் மகளும் காலஞ்சென்ற மூளாய் மேற்கு, கந்தையா நாகரத்தினம் (சின்னராசா) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சங்கானை சபாபதி செல்வரத்தினத்தின் சகோதரியும் காலஞ்சென்றவர்களான திருமதி தனலட்சுமி செல்வரத்தினம், மூர்த்தி, தெய்வேந்திரம் மற்றும் திருமதி தங்கமலர் இராஜேந்திரம் (மாங்குளம்), திருநாவுக்கரசு, காலஞ்சென்ற குமாரவேலு மற்றும் விஜயதாசன் (ஜேர்மனி) ஆகியோரின் தாயும் செல்வரத்தினம், அம்மாப்பிள்ளை, இராஜேந்திரம் (மாங்குளம்), ஜெயராணி, ஹார்டின் (ஜேர்மனி) ஆகியோரின் மாமியும் கஜேந்திரன் (ஆர்.ஜி. ரேடர்ஸ், யாழ்.) கவிதா, ரவீந்திரன் (கனடா), சர்வேஸ்வரி, சதீஷன், நிஷாந்தினி, அனுஷன், சற்குணராசா, சாரதா, சந்திரகுமார், பேரின்பம், மார்க் (ஜேர்மனி), ஜென் (ஜேர்மனி), திருமதிகள் சற்குணராஜா சுதர்ஷினி, சந்திரகுமார் ஜீவிதா ஆகியோரின் பேர்த்தியும் செல்வி சற்குணராசா டினுஷாவின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.04.2011) புதன்கிழமை காலை 9 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் மூளாய் பித்தனை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கம்மாளை,
மூளாய் மேற்கு. (3350)

தகவல்:
குடும்பத்தினர்.

**தொழிற்பயிற்சிகள்**

* Mobile Phone Repairing காலம்:-3 மாதம்
* Electronics
* Radio, T.V. DVD, Receiver மற்றும் இலத்திரனியல் பொருள்கள் திருத்துதல் பயிற்சியளிக்கப்படும். காலம்:-10 மாதம்
* ஏயர் கொண்டிசனிங்

சகல குளிர்சாதனங்கள் திருத்துதல் A/C சேவிஸ், பொருத்துதல் திருத்தம் செய்தல் பயிற்சியளிக்கப்படும். காலம்:-6 மாதம்

*பயிற்சிகள் ஆரம்பம்:- 24.04.2011*

சேர விரும்புவோர் நேரில் தொடர்புகொள்ளவும்.

JAFFNA TECHNICAL INSTITUTE

NO.45, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். T.P:- 0718561654.

கிளை NEW ASIAN CENTER NO.56/15B, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். T.P:- 0779254078.

வெளிமாவட்ட மாணவர்கள் தங்குவதற்கு வசதிகள் செய்து கொடுக்கப்படும். (577738)

**பழைய மாணவர் சங்கம்**
**யா/ யூனியன் கல்லூரி**
**தெல்லிப்பழை**

பொதுக்கூட்டம் - 2011

மேற்படி எமது கல்லூரியினது பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 08.05.2011 ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் தலைவர் M. சாந்தசீலன் தலைமையில் நடைபெறும். அனைத்துப் பழைய மாணவர், மாணவிகளையும் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

* பிரேரணைகள் சமர்ப்பிக்க விரும்புவோர் 04.05.2011 இற்கு முன்னர் சங்க முகவரிக்கு அனுப்பிவைக்கவும்

பழைய மாணவர் சங்கம்,
யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை. (சி/577743)

N.B. பாலேந்திரன்,
செயலாளர்.

**விசேட கருத்தரங்கு**

ஏப்ரல் 30ஆம் திகதி நடைபெறவுள்ள பட்டதாரிகளை ஆள் சேர்ப்பு செய்வதற்கான போட்டிப் பரீட்சை வழிகாட்டல் வகுப்பு.

பொது அறிவு நுண்ணறிவு — P உமாசங்கர் கமல்தாசன் — கட்டணம் 300/=

ஆரம்பம்:- 24.04.2011 (Sun-8.30-4.30Pm)

Note:- கையேடுகள் வழங்கப்படும். அனுமதிகளை இன்று முதல் பதிவுசெய்யவும்.

நாவலர் / பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

**வாடகைக்கு**

யாழ்.நகரில் ஆஸ்பத்திரி வீதியில் முதலாம் மாடியில் நான்கு அறைகளுடன் கூடிய புதிய கட்டடம் வியாபாரக் காட்சியறை அல்லது அலுவலகம் அல்லது NGO என்பவற்றுக்கு உகந்தது.

தொடர்புகளுக்கு - 0775487146

**காணி வாடகைக்குத் தேவை**

A 9 வீதியில் கச்சேரியை அண்டிய பகுதியில் 3 அல்லது அதற்கு மேற்பட்ட அளவு வெறுங்காணி நீண்டகால வாடகைக்குத் தேவை.

(3337) தொடர்புக்கு: 0774120524

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 20.04.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# ஸ்டெம்ஸ் செல் மூலம் சிறுநீரகம் தயாரிப்பு

ஸ்டெம்ஸ் செல் மூலம் சிறுநீரகம் தயாரித்து விஞ்ஞானிகள் சாதனை. ஸ்டெம்ஸ் செல்கள் மூலம் உடல் உறுப்புகளில் ஏற்படும் நோய்கள் குணப்படுத்தப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் தற்போது அவற்றின் மூலம் மனித சிறுநீரகத்தை விஞ்ஞானிகள் தயாரித்துள்ளனர். ஸ்கொட்லாந்தில் உள்ள எடின்பர்க் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் ஜாமி டேவிஸ் தலைமையில் நிபுணர்கள் இந்த ஆய்வை மேற்கொண்டுள்ளனர்.

சிறுநீரகம் பாதிக்கப்பட்டு அது தேவைப்படுவோரின் ஸ்டெம்ஸ் செல்கள் சேகரிக்கப்பட்ட பின்னர் அவை சோதனைக் குழாய் முறையில் சிறுநீரகமாக ஆய்வு கூடத்தில் வளர்க்கப்பட்டது.

இந்த சிறுநீரகமானது 1/2 சென்டி மீற்றர் அளவுக்கு வளர்ந்துள்ளது. அவற்றை மனித உடலில் பொருத்தி முழு வளர்ச்சி அடைந்த சிறுநீரகமாக்க முடியும் எனவும் விஞ்ஞானிகள் நம்புகின்றனர்.

அது மருத்துவ உலகில் மிகப்பெரிய சாதனையாக கருதப்படுகிறது. ஏனெனில் சிலருக்கு மற்றவர்களிடம் இருந்து தானமாகப் பெறப்படும் சிறுநீரகம் ஒத்துக் கொள்வதில்லை என்றால் மாற்று சிறுநீரகம் பொருத்தப்பட்டவர் உயிரிழக்கும் சூழ்நிலை ஏற்படுகிறது.

ஆனால் இந்த முறையில் தயாரித்து பொருத்தப்படும் சிறுநீரகம் எந்த பாதிப்பையும் ஏற்படுத்துவதில்லை. ஏனெனில் இந்த சிறுநீரகம் பாதிக்கப்பட்டவரின் உடலில் இருந்து ஏற்கனவே சேகரித்து வைக்கப்பட்டிருந்த ஸ்டெம்ஸ் செல்கள் மூலம் தயாரிக்கப்பட்டது என நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.






# பழச்சாற்றின் மகத்துவங்கள்

இயற்கை நமக்கு அளித்த மகத்துவங்கள் ஏராளம். ஒவ்வொரு பழத்திலும் நோய்களுக்கான மருத்துவ குணங்கள் உள்ளடங்கியுள்ளன.

**தர்பூசணிப் பழச்சாறு:** கோடையின் கொடுமையிலிருந்து விடுபட நினைப்பவர்கள் இப்பழத்தை உண்பது இயல்பு. சாறு எடுத்து உண்பதன் மூலம் கல்லடைப்பு என்னும் நோயுடன் சிறுநீர் வெளியேறும் போது தோன்றும் பல்வேறு குறைபாடுகள் நீங்குகின்றன.

நீரிழிவு வியாதியும் கட்டுப்படும். தர்பூசணிப்பழச் சாறுடன் தேன் கலந்து உண்டு வர காய்ச்சல் குணமாகும். இந்தச் சாறுடன் சம அளவு மோர் கலந்து அருந்தினால் காமாலை குணமாகும்.

**அத்திப் பழச்சாறு:** அத்திப்பழத்தைப் பிரித்துப் பார்த்தால் அத்தனையும் பழுது என்று பழமொழி இருந்தாலும் கூட அத்திப்பழத்தை உபயோகிக்கலாம். அத்திப் பழத்தை சேகரித்து,,சாறு பிழிந்து சுவைக்காகத் தேங்காய் பாலும் தேனும் கலந்து அருந்தலாம். இச்சாறு எலும்பு முறிவு உள்ளவர்களுக்கு மிக்க பலனைத் தரும்.

அத்திப்பழமும், தேனும் கலந்து உப்புடன் சேர்த்து உண்ணுவதன் மூலம் ஆரம்ப கால சிதைவுகளை சரி செய்யலாம். ஆஸ்துமா நோய், நரம்புத் தளர்ச்சி, மூளை வளர்ச்சி குறைவு ஆகியவை இச்சாறு அருந்துவதால் குணமாகும்.

**அப்பிள் பழச்சாறு:** அப்பிள் பழச்சாறு உடற் சோம்பல், உடற்களைப்பு, வேளையில் ஆர்வமின்மை போன்றவற்றைக் குணமாக்கும் தன்மையுள்ளது. அப்பிள் பழச்சாறுடன் தேனும் தூளாக்கிய ரோஜா இதழ், ஏலம் ஆகியவற்றை கலந்து அருந்தினால் இரத்த சோகை குணமாகும்.

மேலும் கர்ப்பிணி பெண்கள் இச்சாற்றை அருந்தினால் பிரசவத்தின் போது இழக்கும் சக்தியை பெறலாம். குழந்தைகளுக்கு அப்பிள் சாறை கொடுப்பதன் மூலம் உடல் வளர்ச்சி, உடற்பலம் பெருகும்.

**திராட்சைச் சாறு:** திராட்சைச் சாறைத் தொடர்ந்து அருந்தி வர இரத்த அழுத்த குறைவு, நரம்புத் தளர்ச்சி, குடற்புண், காமாலை, வாயுக் கோளாறுகள், மூட்டுவலி ஆகியவை குணமாகும். திராட்சைச் சாறுடன் தேன் கலந்து உண்டுவர இரத்த விருத்தியுண்டாகி உடற்பலம் உண்டாகும். நீரிழிவு வியாதிக்கு சீனி சேர்க்காத சாறு மிகவும் சிறந்தது.

**தோடம் பழச்சாறு :** தொண்டையில் உள்ள புற்றுநோயினால் எந்த உணவும் உட்கொள்ள இயலாத நிலையிலுள்ளவர்களுக்குத் தோடம்பழச்சாறு அருமருந்தாகும். மற்றைய உணவு உட்கொள்ளாத வகையில் உள்ளவர்கள் இச்சாற்றைத் துளித் துளியாக அருந்தி உடல் நலம் பெறலாம். இச்சாற்றை அருந்துபவர்களுக்கு உடலில் உள்ள நோயினை எதிர்க்கும் சக்தி அதிகமாகிறது.

எளிதில் சாமிபாடு அடையக்கூடியது. இதய நோய்கள் எளிதில் குணமாகும். தோடம்பழச்சாறுடன் இளநீர் கலந்து அருந்துவதால் சிறுநீர் தாராளமாக வெளியேறி சிறுநீரகக் குறைபாடு குணமாகும். குழந்தைகளுக்கு கொடுப்பதன் மூலம் குடற்பலம் பெருகும். இந்தச் சாறுடன் எலும்பிச்சம் சாறு கலந்தும் அருந்தலாம்.

**எலும்பிச்சம் சாறு:** பாத்திரங்களில் உள்ள அழுக்கை நீக்க மட்டும் எலும் பிச்சை பயன்படுவதில்லை. நமது உடலில் உள்ள அழுக்குகளை அகற்றவும் பயன்படுகிறது. எலும்பிச்சம் சாறு அத்துடன் தேன் கலந்து அல்லது வெல்லம் கலந்து ஒரு பழத்திற்கு அரை லீற்றர் தண்ணீர் கலந்து அருந்த வேண்டும்.

தொடர்ந்து அருந்துவதால் மூல நோய்கள், வயிற்றுக்கடுப்பு, உறவுப் பந்தத்தால் வரும் நோய்கள் ஆகியவை குணமாகும். ஆனால் அளவுக்கதிகமாக இதை அருந்தும்போது குடல் தன் பலத்தை இழக்க நேரிடும்.

வெள்ளை வெங்காய சாறுடன் கலந்து அருந்துவதால் மலேரியா நோய் குணமாகும். வெள்ளை வெங்காயத்துடன் கற்பூரம் கலந்து அருந்த எலும்பிச்சம் சாறுடன் அருந்துவதால் கொலராநோய் குணமாகும்.

உடல் களைப்புகள், கை, கால்களில் வீக்கம் வலி ஆகியவை இருந்தால் எலுமிச்சைச்சாறுடன் விளக்கெண்ணெய் கலந்து தேய்த்து வர வலியிலிருந்து மீளலாம். பழுத்த வாழைப்பழத்துடன் எலுமிச்சைச் சாறும் தேனும் கலந்து குழைத்து உண்ண மலக்குடலில் உள்ள குறைகள் நீங்கி பல நோய்கள் வராது தடுக்கலாம்.

**தக்காளிச் சாறு:** தக்காளிச் சாற்றை நாள்தோறும் காலைவேளையில் உண்டுவர உடல் வலிமை அதிகமாவதுடன் வேண்டாத சதைகளும் குறையும். நீரிழிவு வியாதியும் கட்டுப்படும். சாறுடன் தேன் கலந்து உண்டுவர இரத்தம் சுத்தமாகும். தோல் நோய்கள் குணமாகும்.

மேலும் தக்காளி ஏழைகளின் அப்பிள் என்ற அழைப்படுவதற்கு ஏற்ப பல விதமான நோய்களை குணமாக்கும். அப்பிளில் இருக்கும் சத்தைவிட சற்று அதிகமான சத்துடன் விலை மலிவாகக் கிடைக்கும்.



# இலகுவில் கொண்டு செல்லக்கூடிய குளியல் தொட்டி



இலகுவில் கொண்டுசெல்லக் கூடிய குளியல் தொட்டி டென்மார்க்கில் ஸ்கூடர்பெக் என்பவரால் வடிவமைக் கப்பட்டுள்ளது.
இலகுவாக எங்கும் இழுவை வண்டிமூலமோ, வாகனத் திலோ கொண்டுசெல்லக்கூடியது.
இது ஆடைகள் தயாரிக்கப் பயன்படுத்தப்படும் மெல்லிய இழையங்களினால் உருவாக்கப்பட்ட எடை குறைந்த குளியல் தொட்டியாகும். இந்தத் தொட்டியில் நீராடுவதற்கு மின்சாரக் குழாய் அமைப்போ அல்லது கொதித்த நீரோ தேவையில்லை. நீரால் தொட்டியை நிரப்பியதும் பற்றவைக்கப்பட்ட ஒரு சில மரத்துண்டுகளைச் சூடேற்றும் சுருள் வட்டத்துக்குள் போடுவது மாத்திரமே செய்யவேண்டிய ஒரேயொரு வேலையாகும். தற்சமயம் இவ்வகைத் தொட்டிகள் ஐரோப்பிய நாடுகளிலும் மற்றும் அமெரிக்காவிலும் புழக்கத்திலுள்ளன.
இதன் விலை இலங்கை ரூபாவில் 6 லட்சம் ஆகும்.

# சிகரெட் குடிக்கும் இரண்டு வயதுப் பாலகன்



ஒவ்வொரு குழந்தைக்கும் முன்மாதிரி அவர்களின் தந்தை தான் என்பார்கள். அது நல்ல செயல்களுக்கு மட்டுமல்ல தீய செயல்களுக்கும்தான் என்பதைச்சில குடும்பத்தில் பெரியவர்கள் புரிந்து கொள்வதில்லை.

குழந்தைகளுக்கு முன்னால் பெரியவர்கள் செய்யும் ஒவ்வொரு செயலும் அவர்கள் மனதில் ஆழமாகப் பதிந்து கொள்ளும் என்பதை சில மூளை வளர்ச்சி குன்றிய பெரியவர்கள் புரிந்து கொள்வதில்லை.

சீனாவில் ஒரு தந்தையின் செயலைப் பின்பற்றும் பால் மணம் மாறாத குழந்தையின் செயலைப் பாருங்கள். இவ்வாறான செயல்களை வெறுமனே பார்த்துச் சிரித்துவிட்டுச் செல்லாமல் மனதில் பதித்துக் குழந்தைகள் முன்னால் செய்யும் செயல்களைக் கொஞ்சம் யோசித்தே செய்ய வேண்டும்.

# காற்றில் இயங்கும் காரை கண்டுபிடித்து தமிழக மாணவர் சாதனை

சுற்றுச்சூழலுக்கு மாசு ஏற்படாத வகையில் காற்றில் இயங்கும் காரை இந்தியாவில் உள்ள தமிழகக் கல்லூரி மாணவர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

பெற்றோல் விலை உயர்வு, அதிக விலை, சுற்றுச்சூழல் மாசுபடுதல் உள்ளிட்ட பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் வகையில் இந்தக் காரை அவர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

இதுகுறித்து மாணவன் மதன்குமார் கூறியதாவது- ''நானும், என்னுடன் மெக்கானிக்கல் எந்திரவியல் பொறியியல்துறை இறுதியாண்டு படிக்கும் சக நண்பர்கள் நான்கு பேரும் படிப்பால் நமது வாழ்க்கைத் தரம் உயருவது மட்டுமின்றி, இந்தச் சமுதாயத்துக்காக எதையாவது செய்ய வேண்டும்'' என்ற எண்ணத்தில் இருந்தோம்.

இன்று உலகம் முழுவதிலும் மக்களைப் பெரிதும் பாதித்து வருவது சுற்றுச்சூழல் மாசுபாடு தான். மாசுபாட்டைக் குறைக்க நமது பங்களிப்பும் இருக்க வேண்டும் என்று முடிவு செய்தோம். இதற்காக காற்றில் இயங்கும் காரை மிகக் குறைந்த விலையில் தயாரிப்பதற்கான முயற்சியைக் கடந்த ஆண்டு டிசெம்பர் இறுதியில் தொடங்கினோம். இதற்கு கல்லூரிப் பேராசிரியர் மிகவும் உறுதுணையாக இருந்தார்.3 மாதம் இடைவிடாத முயற்சியின் காரணமாக ரூ.35 ஆயிரம் செலவில் ஒருவர் மட்டும் அமர்ந்து செல்லும் விதத்தில் ஒரு காரை வடிவமைத்தோம்-என்றார்.

# நோயற்ற நல்வாழ்வுக்கு குரக்கன் உணவு






எமது முன்னோர் கையாண்டு வந்துள்ள உணவுப் பட்டியல் இன்று பெறுமதியற்றதாகப் போயுள்ளது. அவர்கள் நோயற்ற சுகதேகிகளாக நீண்ட ஆயுளுடன் வாழ்ந்துள்ளனர் என்பது கண்கூடு. இன்றும்கூட நூறு வயதை எட்டும் மூத்த தலைமுறையைச் சேர்ந்த முதியோரை எமது குடாநாட்டில் மட்டுமல்ல, நாட்டின் பல பிரதேசங்களிலும் காணமுடிகிறது. இவர்கள் ஆரம்பகால உணவுப் பட்டியலை அனுசரித்து வருவதை எம்மால் தெரிந்துகொள்ள முடிந்துள்ளது. குறிப்பாக உடல்நலத்தைப் பேணும் சத்துமிக்க தானிய வகைகளே அவர்களது உணவுப் பட்டியலில் உள்ளடங்கியிருப்பது கண்டறியப்பட்டுள்ளது. அந்த வகையில் அவர்களது உணவுப் பட்டியலில் குரக்கன் விசேட இடத்தைப் பிடித்துக் கொண்டுள்ளது. இன்றும்கூட நீரிழிவு நோயாளர்களுக்கு மருத்துவர்கள் குரக்கன் தானிய உணவுவகைகளை உண்ணுமாறு கூறுகின்றனர்.

குரக்கன் உலர் வலையத்தில் செழிப்பாக வளரும் தானியப் பயிராகும். அத்தோடு அது மாப்பொருள் செறிந்த இலாபகரமான செய்கைப் பயிருமாகும். எமது முன்னோர்களின் மாச்சத்து நிறைந்த தானிய மொன்றாகக் குரக்கனைப் பயன்படுத்தி வந்துள்ளமை தெரியவந்துள்ளது.

இன்று குரக்கன் சாப்பாடு என்றால் முகச்சுளிப்பையே காணமுடிகிறது. குரக்கன் சாப்பாடு என்றால் ஐயோ வேண்டாம் என்று சொல்பவர்கள் தான் இன்று எம்மத்தியில் அதிகமாகக் காணப்படுகின்றனர்.மருத்துவ விஞ்ஞானப் பரிந்துரைகளில் ஏராளமான நோய்களைக் கட்டுப்படுத்தும் நல்லதொரு சஞ்சீவியாகியிருப்பதும் இந்தக் குரக்கன் தானியமேயாகும். அதில் அடங்கியுள்ள விசேட குணநலன்கள் காரணமாகக் குரக்கனால் தயாரிக்கப்பட்ட பல்வேறு விதமான உணவு வகைகள் இன்று சந்தையில் உள்ளன. இன்று மிக இலகுவாகவே சந்தைகளில் பொதி செய்யப்பட்ட குரக்கன் மாவை பெற்றுக்கொள்ள முடிகிறது. அதாவதுகுரக்கன் மாவினால் தயாரிக்கப்பட்ட பாண், கேக் வகைகள், பிஸ்கேற் வகைகள் தாராளமாகவே சந்தையில் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன.

(தொடரும்)

# வியக்க வைக்கும் கடல்வாழ் உயிரினங்கள்







கடலுக்கடியில் நாம் இதுவரை காணாத பல உயிரினங்கள் வாழ்ந்து வருகின்றன.

இந்தவகை உயிரினங்களைப் புகைப்படமெடுப்பதைச் சில புகைப்படக் கலைஞர்கள் தங்களது செயலாக எண்ணிச் செயற்படுகின்றனர்.

இவர்கள் தங்களது உயிரையும் பொருட்படுத்தாமல் ஆபத்துக்கள் நிறைந்த கடலுக்கடியில் சென்று துணிகரமாக இவற்றைப் பிடிக்கின்றனர்.

# இயந்திரப் பறவை



இந்தப் பறவை முற்றிலும் மனிதனால் உருவாக்கப்பட்டது.

பார்ப்பதற்குச் சாதாரண பறவை போலவே காணப்படுகின்றது. மனிதனுடைய வளர்ச்சிக்கு இதுவும் ஓர் எடுத்துக்காட்டாக அமைகிறது.

## போரின் புரட்சி

ஒருவனுக்குப் புரட்சி
ஒருவனுக்கு தன்
உரிமைக்கான கோட்பாடு
ஒருவனுக்கு ஆயுதம்
விற்பதற்கான களம்
ஒருவனுக்கு ஆயுதம்
தயாரிப்பதற்கான காரணம்
ஒருவனுக்குத் தன்
கோட்பாட்டை மற்றவன்
மீது திணிப்பதற்கான
வழிமுறை
இன்னுமொருவனுக்கு
பணம்
பணம் குவிப்பதற்கான
பட்டறை
பொதுமகனுக்கோவெனில்
அது ஒரு பலிபீடம்
உயிர்களைப் பறிக்கும்
பலிக்களம்

-ரம்யன்